2949

T. N. L. A. Debates

Official Report

VOL XXVIII NO 3

15th May 1986

D
VR11,31 N86
N86.28.3
136494

வெளியீடு 25-7-1987] [Issued 25-7-1987

2949

1078/87.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 15, 1986—தொகுதி XXVIII எண் 3
Thursday, 15th May 1986—Volume XXVIII No. 3

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009,
Legislative Assembly Department, Fort St. George
Madras-600009.

விலை ரூ. 3 (Price Rs. 3/-

V211, 31 N86
N86-28-3
தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136494
சென்னை-600 008.

உள்ளடக்கம்.

15—5—1986


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : | 485—510 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | |
| 2 கவன ஈர்ப்புகள் : | |
| (1) சிவகங்கை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன் வெடிகுண்டுகள் வெடித்துள்ளது .. | 510—511 |
| (2) தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பால் பதனிடும் ஆலையில் ஏற்பட்ட அமோனியா வாயு கசிவு .. .. .. .. .. | 511—512 |
| (3) தர்மபுரி மாவட்டம், தொட்டம்பட்டி லாஸ்கோர் ஸ்டீல் பாக்டரி மூடியிருப்பது குறித்து .. .. .. .. | 512—515 |
| (4) பெரியார் மாவட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமை .. .. .. | 516 |
| (5) சென்னை குடிசைப் பகுதிகள் சிலவற்றில் ஏற்பட்ட தீ விபத்து .. .. .. | 516—517 |
| (6) சென்னை, அம்பத்தூர் இந்தியா போர்ஜ் நிறுவனத்தை மீண்டும் திறப்பது குறித்து | 517—518 |
| (7) புதுக்கோட்டை, மச்சுவாடி குடிசைப்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து .. .. | 518—519 |
| (8) கொடைக்கானலில் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவது குறித்து | 519—520 |
| (9) விவசாயத் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்படியான வழக்குகளை விசாரிக்க அண்ணா, மதுரை, திருச்சி மாவட்டங்களுக்கான ஒரே ரெவின்யூ கோர்ட் திருச்சியில் அமைந்துள்ளது .. .. | 520—521 |
| (10) அரசுப் பணிகளில் தற்காலிகமாக பணியாற்றியவர்களை நிரந்தரமாக்குவது .. | 521—523 |
| (11) தமிழகத்தின் பல பகுதிகளில் நிலவும் வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறையைப் போக்குதல் .. | 523—526 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| (12) | குற்றாலம் மலைப்பகுதியில் பன்றிகளால் விவசாய நிலத்திற்கு ஏற்படும் சேதம். | 526—527 |
| (13) | சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரின் இல்லம் தாக்கப்பட்டுள்ளது குறித்து | 527—530 |
| (14) | திருச்சி பாலக்கரையில் திரையரங்கு ஒன்று இடிந்து விழுந்ததால் பலர் காயமுற்றுள்ளது குறித்து | 530—533 |
| (15) | வேலூர் மின் திட்டம். கந்திலிப் பகுதியில் துணை மின் நிலையம் ஒன்றை அமைத்தல் குறித்து | 533—534 |
| (16) | உசிலம்பட்டி தாலுகா, தொட்டப்ப நாயக்கனூர் கிராமத்தில் கூடுதல் மின் மாற்றி நிறுவுதல் | 534—535 |
| (17) | வேலூர் சர்க்கரை ஆலையில் கரும்பு அரைப்பதில் ஏற்படும் தாமதம் குறித்து | 535—536 |
| (18) | எண்ணூர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட தீ விபத்து | 536—537 |
| (19) | பாரதிதாசன் பல்கலைக் கழகத்துத் தேர்வு வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியானதால் தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது குறித்து | 537—538 |
| (20) | தஞ்சை, ஈச்சங்கோட்டை அரசு மேல் நிலைப்பள்ளிக் கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது குறித்து | 538—540 |
| (21) | தஞ்சை, பந்தநல்லூர் அரசினர் மேல் நிலைப் பள்ளிக் கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது குறித்து | 540—542 |
| (22) | சென்னை பல்கலைக்கழக பி.ஏ. இறுதித் தேர்வுக்கான ஆங்கில வினாத்தாளில் பாடத்திட்டத்திற்குப் புறம்பாக வினாக்கள் உள்ளது | 542—544 |
| (23) | கம்பம், தேனி போன்ற இடங்களில் ஏலக்காய் உற்பத்தி செய்யும் விவசாயிகள் நிலைமை | 544—546 |
| (24) | உசிலம்பட்டி தாலுகா, விக்கிரமங்கலம் கிராம மேல்நிலைக் குடிநீர் தொட்டி செயல்படாதது | 546—547 |



| | | பக்கங்கள். |
|---|---|---|
| (25) | கூடலூர் பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர் வழங்குதல் .. .. .. | 547—549 |
| (26) | குமரி மாவட்ட கடற்கரைக் கிராமங்களின் குடிநீர்ப் பிரச்னை .. .. | 549—550 |
| (27) | காவேரிப்படுகை விவசாயிகளுக்கு தமிழ் நாடு வாணிபக் கழகம் வழங்கும் இலவச உரக் கூப்பன்கள் .. .. .. | 550—552 |
| (28) | சென்னை கொசப்பேட்டை வி. வி. கோயில் தெருவில் தண்ணீர்த் தட்டுப்பாடு | 552—554 |
| (29) | ஆத்தூர் நகராட்சிப் பகுதியில் உள்ள குடிநீர்த் தட்டுப்பாடு .. .. | 554—555 |
| (30) | விருதுநகர் நகராட்சியில் தண்ணீர்த் தட்டுப்பாடு .. .. .. | 556—557 |
| (31) | பொன்னேரி மாவட்ட முன்சிப் தாக்கப் பெற்றுள்ளது குறித்து .. .. | 557—560 |
| (32) | திண்டுக்கல்லில் தோல் பதனிடும் தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் குறித்து .. .. .. | 560—563 |
| (33) | இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்ட கிராமங்களில் காலரா நோய் காணப்படுவதாகக் கூறப்படுவது .. | 563—565 |
| (34) | கேரளாவில் உள்ள மலபார் சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகையால் வாளையார் பகுதி விவசாய நிலங்கள் பாதிக்கப் படுவது .. .. .. | 565—566 |
| (35) | வைகை நதியில் மதுரை நகர சாக்கடை நீர் கலப்பது குறித்து .. .. | 566—568 |
| (36) | சேலம், ஆத்தூரில் ஏற்பட்ட லாரி விபத்து .. .. .. | 568—570 |
| (37) | சென்னை 44-வது வட்டம் டாக்டர் அம்பேத்கார் நகரில் டான்பாஸ்கோ ஸ்தாபனம் கட்டிவரும் வீடுகள் குறித்து .. | 570—572 |
| (38) | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை | 572—573 |
| (39) | நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்டு வரும் நட்டம் குறித்து .. .. | 573—575 |

| | பக்கங்கள். |
|---|---|
| (40) கீழ்பவானி அணையிலிருந்து கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் விடுவது குறித்து .. | 575—577 |
| (41) உடுமலைப்பேட்டை பிரதானக் கால்வாய் பாசனப்பகுதிக்கு முறைப்படி தண்ணீர் வழங்குவது குறித்து .. .. | 577—579 |
| (42) கோவை மாவட்டத்தில் கூட்டுறவுக் கடனை ஒத்திவைத்தல் குறித்து .. | 579—581 |
| (43) தஞ்சை மாவட்டத்தில் செயல்படும் பயிர் ஈட்டுறுதித் திட்டம் குறித்து .. | 582—585 |
| (44) சேலம், தர்மபுரி மாவட்டங்களில் நோயினால் கால்நடைகள் பாதிக்கப்படுவது .. | 585 |
| (45) தென் ஆற்காடு மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் ஊதியத் தொகை .. .. .. | 585 |
| (46) நீலகிரி மாவட்டத்தில் பருவமழை தவறியதால் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டிருப்பது .. .. .. | 585—586 |
| (47) சேலம், ஆத்தூர் வட்டத்தில் பருவமழை தவறியதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது .. .. .. | 586 |
| (48) கோவை கழிவுநீர் பண்ணைக்காக நில ஆர்ஜிதம் செய்யப்படுவது குறித்து .. | 586—587 |
| (49) தர்மபுரி மாவட்டத்தில் சில நடுவர் நீதி மன்றங்களில் நடுவர் இல்லாதிருப்பது குறித்து .. .. .. | 587 |
| (50) உத்திரமேரூர் தொகுதியில் சாயநூல் பட்டறையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் குறித்து .. .. .. | 588 |
| (51) தாம்பரம் டி.பி. சானட்டோரியம் குறித்து | 588 |
| (52) உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்துவது குறித்து | 588 |
| (53) திருச்சி சாராயக்கலவை தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் குறித்து | 589 |
| (54) தாம்பரபரணி ஆற்றில் கே.டி.சி. கழகப் பணிமனை கழிவுநீர் கலப்பது குறித்து... | 589 |



| | பக்கங்கள். |
|---|---|
| (55) பாலாற்றில் தோல் தொழிற்சாலை கழிவு நீர் கலப்பது குறித்து .. .. | 589 |
| (56) கூடலூர் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதி .. .. .. | 589—590 |
| (57) புதுக்கோட்டை, பூம்புகார் நிறுவனம் மூடப்பட்டுள்ளது குறித்து .. .. | 590—591 |
| (58) தஞ்சை ராஜா மருத்துவமனையில் ஆப்பரேஷன் செய்ததில் ஏற்பட்ட கோளாறு | 591 |
| (59) புதுக்கோட்டை காவேரி நூற்பாலைத் தொழிலாளர்கள் போராட்டம் .. | 591 |
| **அரசினர் தீர்மானங்கள்:** | |
| (அ) விதி 33-ஐத் தளர்த்தல் .. .. | 592 |
| (ஆ) பேரவையை ஒத்திவைத்தல் .. .. | 672 |
| **அரசினர் சட்ட முன்வடிவுகள்:** | |
| (அ) கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986. .. .. | 592—599 |
| (ஆ) கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு 1986. .. .. | |
| (இ) கதர் கிராமத் தொழில் வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு 1986. .. .. | 599—608 |
| (ஈ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986. .. .. | 608—630 |
| (உ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986. .. .. | 630 |
| (ஊ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு 1986. .. .. | 631 |
| (எ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986. .. .. | 632 |
| (ஏ) பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986. .. .. | 632—633 |
| (ஐ) பொது விற்பனை வரி (ஏழாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986. .. .. | 633—634 |

பக்கங்கள்.

(ஓ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1986. 634—635

(ஔ) உணவகங்கள் மற்றும் தங்கு விடுதிகளின் ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1986 635

5. அறிவிப்புகள் :

(அ) கதர் கிராமத் தொழில் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு 1986 (ஆ.இ.) 599

(ஆ) கூட்டத் தொடரில் நடைபெற்ற அலுவல்கள் 671—676

6. அரசினர் தனித் தீர்மானங்கள் :

(அ) மற்றும் (ஆ) நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1986, வரைவு அறிக்கைகள் 636—663

(இ) மின்சார வாரியம் கடன் வாங்குவதற்கான வரம்பு அதிகரிப்பு 663—670

7. தகவல் கோரல் :

கார்த்திகேயன் குழு அறிக்கை வெளியிடுதல் குறித்து 670—671

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் 677



2949

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, மே 15, வியாழக்கிழமை.

வைகாசி 1, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து ''.

எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ணவேண்டும். அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக் கூடாது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 789, 790 மற்றும் 791 ஆகியவை மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க முதலில் எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.

### குறைந்த எடை பட்டுச் சேலைகள்.

789—(*வினா எண் 6409):— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டினரைக் கவரும் வகையில் எடை குறைந்த பட்டுச் சேலைகளைத் தயாரிக்க அரசு திட்டம் தீட்டியுள்ளதா ?

(ஆ) அது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) தற்பொழுது வெளிநாட்டினரைக் கவரும் வகையில் குறைந்த விலையில் பட்டுச் சேலைகளைத் தயாரிக்கும் முயற்சிகளில் பட்டு கூட்டுறவு சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

(ஆ) விலை குறைக்கும் வகையில் குறைந்த எடை உள்ள பட்டு புடவைகளும், ஜரிகை எந்தளவுக்கு குறைக்க முடியுமோ அந்த ளவுக்கு குறைக்கவும் திட்டமிடப்பட்டு சேலைகள் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் எகிப்திய அழகி கிளியோபாட்ராவிற்கு, நம் நாட்டி லுள்ள பட்டுச் சேலைகளை, ஒரு தீப்பெட்டியிலே வைத்து அடைத்து அதை அந்த அம்மையார் அணி வதற்காக அனுப்பியதாகக் கேள்வி. இப்போது ஏன் அது தரம் குறைந்துவிட்டது? இப்போது அந்தமாதிரி பட்டுத் துணி தயாரிப் பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப் புடவைகள், பட்டு வேஷ்டிகள் தரமாகத்தான் நெய்யப்படுகின்றன. வெங்கடாசலபதிக்குக் கூட, சேலத்திலிருந்துதான் நெய்யப்பட்டு, அனுப்பப்படுகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சினிமாக்களில் அதாவது நியூஸ் வருகிறது. இந்த 'கோல்கேட் பேஸ்ட்டை இந்த நடிகை உபயோகப்படுத்தியதனால் தான் பல் நன்றாக இருக்கிறது. சோப்-இந்த சோப்பை இந்த நடிகை உபயோகப்படுத்துகிறார், அதை உபயோகப்படுத்தினால் அது உடலுக்கு நல்லது என்று விளம்பரப்படுத்துகிறார்கள். அதே மாதிரி, கோ-ஆப்டெக்ஸில் தயாரிக்கப்படுகின்ற சேலைகள், பட்டுத் துணிகளை எல்லாம் ஒரு விளம்பரப் படமாக எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் கூட, 'சிந்துபைரவி, என்ற புடவையை அறிமுகப்படுத்தினோம். ஏற்கனவே கூட, இது மாதிரி சினிமா நட்சத்திரங்கள் உபயோகப்படுத்துகிற புட வைகள் என்று கூட விளம்பரம் செய்து இருக்கிறோம். இதற்காக தனியாக ஒரு திரைப்படமே தயாரிக்கப்பட்டிருக்கிறது. 'சூஸ்மென்' என்பது அந்தத் திரைப்படத்தின் பெயர்.

**சென்னிமலை நெசவாளர்களுக்கு வீடுகள்.**

**790—*(வினா எண் 8069) திரு. கா. செ. பழனிச்சாமி:** மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சென்னிமலையில் நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** (அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே சென்னிமலையில் நெசவாளர்களுக்கு 332 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**திரு. கா. செ. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னிமலையில் 5000 கைத்தறி நெச வாளர்களுக்கு மேலாக இருக்கிறார்கள். 40-க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. வீடுகளினுடைய தேவை அதிகமாக இருக்கின்றது. அங்கே 'வெப்பிலி-க்கு அரு காமையில் 20 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதனை தற்போது தனியார்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஆகவே, அந்த இடத்திலே வீடு கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தில், சம்பந்தப் பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிலங்களை இலவசமாக அளித்தால்தான் அரசு வீடு கட்டிக் கொடுக்க முயலும்.

**திரு. கா. செ. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களிடத்திலே கூலிக்கு நெசவுத் தொழில் செய்கின்ற நெசவாளர்கள் அந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள். இங்கே நான் குறிப்பிட்ட நிலமானது அரசுக் குச் சொந்தமான புறம்போக்கு நிலமாக இருக்கிறது. அதனை தனியார்கள் தற்போது அதிகமாக ஆக்கிரமித்து வருகிறார்கள். ஆகவே, அந்த நிலத்தை அரசு எடுத்துக் கொண்டு அந்த இடத் தில் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட துணை இயக்கு நரிடம் சொல்லி இது மாதிரி நிலத்தை ஒதுக்க ஏற்பாடு செய் தால் அரசு வீடு கட்டிக் கொடுக்க முன் வரும்.

**விசைத்தறியில் லுங்கிகள் தயாரித்தல்.**

**791—*(வினா எண் 9345) திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைத் தறிகள் மூலம் 40 அங்குல அகலத்திற்கு மேல் லுங்கிகள் நெசவு செய்யக்கூடாது என்கின்ற விதிகளை மீறி 50 மற்றும் 54 அங்குல அகலத்திற்கு மேலும் லுங்கிகள் நெசவு செய்யப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** (அ) இல்லை

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. கே. பாலாஜி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அனுமதி பெற்ற விசைத் தறிகளும் இருக்கின்றன, அனுமதி பெறாத விசைத் தறிகளும் இருக்கின்றன. அவர்கள் இன்றைக்குக் கரை போட்ட வேட்டிகளையும், லுங்கிகளையும் நெய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் கைத்தறியில் தயாரிக்கபடும் லுங்கிகள் ஏராளமாகத் தேங்கியிருக்கின்றன. காரணம், கைத்தறியில் நெய்யபடும் லுங்கியின் விலை, விசைத் தறி மூலம் நெய்யப்படும் லுங்கியைவிட பத்து ரூபாய் அதிகமாக இருப்பதால் அவர்களோடு இவர்களால் போட்டி போட முடியவில்லை. அப்படித் தயாரிக்கின்ற விசைத் தறியாளர்களின் மீது கடுமையான நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு. பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் அரசு முயற்சி செய்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நியமிப்பதற்கு மைய அரசின் உதவியை கோரியிருக்கிறோம்.

**வேடசந்தூர் மின் கோட்டப் பொறியாளர் அலுவலகம்.**

**774—(*வினா எண் 1425) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டத்தின் பகுதிகளுக்கு உரிய மின் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகம் திண்டுக்கல்லில் அமைத்துள்ளதை மாற்றி வேடசந்தூரில் அமைக்க கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?



**மாண்புமிகு திரு. ச். இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல்லில் இயங்கும் கோட்டப் பொறியாளர் அலுவலகமும், வேடசந்தூர் வருவாய்ப் பிரிவும் வேடசந்தூருக்கு மாற்றுவது குறித்து பெறப்பட்ட மனு பரிசீலிக்கப்பட்டு, நிர்வாகக் காரணங்களால் இக்கோரிக்கை செயல்படுத்த முடியாததால் கைவிடப்பட்டது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நிர்வாகக் காரணங்களால் கைவிடப்பட்டது என்பதற்கு எந்தவிதமான அடிப்படை நியாயமும் கிடையாது. காரணம், வேடசந்தூர் தொகுதியில் இருக்கின்ற மூன்றில் இரண்டு பகுதி கிராமங்களையும், திண்டுக்கல் நகரத்திலே இருக்கின்ற மூன்றில் ஒரு பகுதியையும் இணைத்து திண்டுக்கல் டி. இ. நார்த் என்றும், நகரத்திலே மூன்றில் இரண்டு பகுதிகளையும் வேடசந்தூர் தொகுதியிலேயே சில ஊர்களையும் சேர்த்து கொண்டு டி.இ. சவுத் என்றும் வைத்துக் கொண்டார்கள். உண்மையிலேயே சொல்லப்போனால் அந்த அலுவலகம், அதிகாரிகள் திண்டுக்கல் நகரத்திலே இருக்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக அதை வைத்துக் கொண்டார்கள். அதையெல்லாம் விட மேலாக, மாண்புமிகு அமைச்சரவர்கள் இரண்டு ஆண்டுக்காலத்திற்கு முன்பாக, இதே அவையிலேயே நிச்சயமாக, அவசியமாக, உறுதியாக இந்த இரண்டு அலுவலகங்களும் வேடசந்தூருக்கு மாற்றபடும் என்று தெளிவாக வாக்குறுதியைக் கொடுக்கிறேன் என்று தெளிவான வாக்குறுதியைக் கொடுத்தார்கள். இப்படி அமைச்சர் வாக்குறுதி கொடுத்து, துறை நிறைவேற்றவில்லை என்றால் அதற்கான நடவடிக்கை இருக்கிறதா? அதன் மீது நடவடிக்கை எடுக்க அமைச்சர் இருக்கிறாரா என்ற விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அஷ்யூரன்ஸ் கமிட்டியில் புல் அப் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற முறையில் அந்த உறுதி தரப்பட்டது. அது, தள்ளினும் தள்ளாமை என்ற முறையில் தள்ளப் பட்டதே தவிர, வேறல்ல, மீண்டும் அதைப் பரிசீலனை செய்யலாம்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு செய்தியையும் அமைச்சரவர்களுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். 1982 ஆம் ஆண்டு உண்மையிலேயே இந்தக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை

வேடசந்தூருக்கு மாற்ற வேண்டுமென்று வாரியமே உத்தரவு போட்டிருக்கிறது. அந்த உத்தரவிலே வருவாய்த்துறையும், கோட்டப் பொறியாளர் அலுவலகமும் ஒரேயிடத்தில் இயங்க வேண்டும், எனவே வேடசந்தூரிலே இருக்கின்ற வருவாய்த் துறையுடன் இணையும் வகையில் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை மாற்ற வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறது துறை என்று உத்தரவே போட்டார்கள். ஆனால் அந்த உத்தரவைச் சரி செய்வதற்கு இந்த அலுவலகத்தை அங்கே மாற்றுவதற்குப் பதிலாக, வேடசந்தூரில் இருந்த வருவாய்த்துறை அலுவலகத்தையும் தூக்கி திண்டுக்கல்லுக்கு மாற்றி விட்டார்கள். இப்படிப் பட்ட தவறை மின்சார வாரியம் செய்திருக்கிறது. அருள் கூர்ந்து அமைச்சரவர்கள் இந்தத் தவறைத் திருத்த அரசாங்கத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. அதிகாரப் பற்றற்றவர்களைவிட, அதிகாரிகள் எவ்வளவு திறமைசாலிகள் என்பது இதிலிருந்து தெரிகிறது. ஆகவே, வசதியைத் தேடி, திண்டுக்கல்லுக்கு வந்து விட்டதாகப் புலன் ஆகிறது. இதைப்பற்றி நிச்சயமாக மீண்டும் பரிசீலனை செய்யப்படும்.

**பாண்டியாறு, புன்னம்புழா, நெல்லித்துறை மின் திட்டங்கள்.**

775—(வினா எண் 8899) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு, புன்னம்புழா மற்றும் நெல்லித்துறை மின் திட்டங்கள் அமைய மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டத்தை நிறைவேற்றுவது சம்பந்தமாக கேரள, தமிழக மாநிலங்களுக்கிடையே 1965 ஆம் ஆண்டு ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இத்திட்டத்தின் மீது முடிவெடுக்குமுன் பாண்டியாறு, புன்னம்புழா நதிகளின் நீரைப் பாசனத்திற்கு திருப்பி விட முறையீடுகள் வரப் பெற்றன. இதுகுறித்து கேரள அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு, இரண்டு மாநில அரசுகளும் ஏற்றுக் கொள்ளும் வகையில் ஓர் உடன்பாடு ஏற்படுத்துவது தொடர்பாகமேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



காவிரி நீர்ப் பிரச்சினையில் இறுதித் தீர்வு ஏற்பட்ட பின்னர் நெல்லித்துறை நீர்மின் திட்டம் நிறைவேற்றுதல் பற்றிய செயற் குறிப்பை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாமென அரசு முடிவெடுத்துள்ளது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1965 இல் ஏற்பட்ட ஒப்பந்தம் நீர் மின் திட்டத்திற்கு மட்டுமா? அல்லது பாசனத்திற்கும் ஏதாவது வழிவகை அதில் செய்யப்பட்டதா? இப்பொழுது பேச்சு வார்த்தை நடந்து வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கர்நாடக அரசும் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவதால் விரைவில் அதோடும் கலந்து பேசப்படுமா? பவானி தண்ணீரை கேரள அரசு கேட்பதாகச் சொல்கிறார்களே, அப்படி பவானி ஆற்றில் இருக்கின்ற தண்ணீரை கேரளாவிற்குக் கொடுத்தாவது இந்த பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டத்தை விரைவில் அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா? அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழகம், கேரளம் ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை இது. பாண்டியாறு-புன்னம்புழா ஒப்பந்தப்படி மின்சாரம் மட்டும்தான் தமிழ்நாட்டுக்கு உண்டு. அது மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளாக இருக்கிற காரணத்தினால், அந்த நீர் கேரளத்திற்குச் சொந்தமானது. அதிலே, ஓரளவுக்கு நீரை நம்முடைய பகுதிக்குப் பிரித்துக் கொண்டு வருவதற்கு வழி இருக்குமா என்பதுபற்றித்தான் கேரள அரசோடு நாம் பேசி வருகிறோம். வேண்டுமென்றால், அவர்களுக்குக் கூடுதலாக மின்சாரம் வேண்டுமானாலும் தந்து, ஓரளவு நீரை இந்தப் பக்கம் திருப்பலாம் என்ற யோசனை இருந்து வருகிறது. கேரள அரசும், நம்முடைய அரசும் இது சம்பந்தமாக பேசி வருகின்றன. கேரள பவானியிலிருந்து அவர்களுக்கு ஓரளவு தண்ணீர் எப்படியும் காவேரி ஒப்பந்தத்திலிருந்து கிடைக்கும் என்ற காரணத்தினால், இப்பொழுதே தந்தால் அதையும் இதையும் சேர்த்துப் பேசுவது நன்றாக இருக்கும் என்று சொல்கிறார்கள். கேரள பவானி, காவேரி ஒப்பந்தத்தில் வருகின்ற ஒரு துணை நதி. ஆகவே, அந்தப் பிரச்சினையையும் இதையும் சேர்த்துப் பேசுகிற நிலைமை வருகிறபொழுது இந்தச் சிக்கல் தீராது. தனித் தனியே பேசலாம் என்று கேரள அரசுக்கு நாம் கடிதம் எழுதியிருக்கிறோம்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பவானி ஆற்றுப் பிரச்சினையைத் தனியே பேசலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்,

நெல்லித் துறை நீர் மின் திட்டத்திற்கு 1974 ஆம் ஆண்டே மத்திய அரசு ஒப்புதல் கொடுத்திருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, இந்த நெல்லித்துறை நீர் மின் திட்டத்தை விரைவுபடுத்துவதோடு, பவானி பிரச்சினையை கர்நாடக அரசிடம் தொடர்பு கொண்டு பேசி, ஒரு தீர்வு காண்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நெல்லித் துறை திட்டமும் காவேரி ஒப்பந்தத்தோடு ஒட்டியுள்ள ஒரு பிரச்சினை. காவேரி நீர் தீர்வு ஏற்படுகிற வரையிலே, இதுவும் காலதாமதமாகும்.

**திரு. மு. இராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைப் பொறுத்த வரையிலே, அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே குறிப்பிட்டதைப்போல, 1967-லேயிருந்து, அதற்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற காலத்திலே இருந்து பரிசீலனையில் இருக்கிறது. கழக அரசு இருந்தபொழுதும் கேரள அரசோடு பேசப்பட்டிருக்கிறது. 4,000 டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலிலே கலக்கிறது என்ற கருத்தைத் தமிழக அரசின் சார்பிலே கேரள அரசுக்குத் தெரிவித்து, 400 டி.எம்.சி. தண்ணீர் இங்கே பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்திற்குப் பயன் உடையதாக இருக்கும். அதற்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாட்டைக் கூட, தமிழக அரசின் சார்பிலே, கேரளாவுக்குச் செய்து தருகிறோம் என்ற ஒரு கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலில், கேரள அரசோடு பேச்சு வார்த்தை என்று சொன்னார்கள். இது கோவை மாவட்டத்திற்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம். மின்சாரம் கிடைப்பது மட்டுமல்லாமல், பாசனத்திற்கும் பயன்படுகிற திட்டம் என்ற காரணத்தாலே, தமிழக அரசு விரைந்து கேரள அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி, முடியா விட்டால், மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி, அந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே கேள்வியை பொதுப் பணித் துறை அமைச்சரிடம் ஏற்கனவே கேட்டிருக்கிறார். அவரும் அதற்குரிய பதிலைச் சொல்லியிருக்கிறார். ஒரு விவரத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். 4,000 டி.எம்.சி. தண்ணீர் கேரளாவிலே போய் வீணாகிறது, 400 டி.எம்.சி. என்றெல்லாம் நாம் கணக்குச் சொல்லாமல் இருப்பது நல்லது. இப்பொழுது நாம் இங்கே பேசுவது பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்திலே 24.7 டி.எம்.சி, தான். அதிலிருந்து நாம் 7 டி.எம்.சியை இந்தப் பக்கம் திருப்ப முடியுமா என்று பரிசீலிக்கிறோம் கேரள அரசு, கேரள பவானியிலிருந்து 10 டி.எம்.சி. கொண்டு



போக முடியுமா என்று பார்க்கிறார்கள். கேரள அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், ஏற்கனவே இருக்கக் கூடிய ஒப்பந்தப்படி முழுத்தண்ணீர் எங்களுக்கு வர வேண்டும், அதை இந்தப் பக்கம் மாற்றுவதில் என்ன நியாயம் இருக்கிறது என்று அவர்களுக்குள்ளே அங்கே எதிர்ப்பு இருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, கேரள மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஒரு முக்கியமான பிரச்சினை—மழைக் காலத்தில் வெள்ளம், கோடைக் காலத்தில் தண்ணீர் இருப்பதில்லை: கடலில் இருக்கிற உப்பங்கழி நிலத்தை நோக்கி வந்து, நிலத்தையும் வீணாக்கி விடுகிறது. ஆகையினாலே இந்தத் தண்ணீர் ஒட்டு மொத்த அளவு என்றெல்லாம் பார்க்கிற பொழுது, எந்தக் காலக் கட்டத்தில் என்பதையும் சேர்த்து பார்த்து, அவர்களுடைய பிரச்சினையும் தீரவேண்டும், நமக்கிருக்கிற பிரச்சினையும் தீரவேண்டும். ஆகையினாலே நாம் ஒரு யோசனை சொல்லியிருக்கிறோம். நீர்த் தேக்கங்கள் நாம் அமைத்துக் கொடுக்கிறோம். அவர்கள் பகுதியில். மழைக் காலத்திலே, அங்கே, தண்ணீரைத் தேக்கி வைத்து, கோடைக் காலத்திலே அந்தத் தண்ணீரை அவர்களுக்கு விடுகிற பொழுது அந்த உப்பு வராமல் தடுப்பதற்கும் தண்ணீர் உதவி செய்யும். தேக்கங்கள் அமைக்கிற செலவை நாங்கள் மேற் கொள்கிறோம். நீர்த் தேக்கம் செய்து வைக்கிற வாய்ப்பை உருவாக்கித் தருகிறோம். ஆக அவைகள் மூலம் அந்த பாதகத்தை ஓரளவிற்கு சரிக்கட்டி தண்ணீரை இந்தப் பக்கம் தாருங்கள் என்று சொல்லி வருகிறோம். இது நல்ல கருத்து என்ற அடிப்படையிலேதான் இரு மாநில அரசுகளும் இதைப்பேசி வருகின்றன.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாண்டியாறு-புன்னம்புழா மின் திட்டத்தைப் பற்றி இதே அவையில் பல வருடங்களாக நான் பல முறை பேசி வந்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லியுள்ள அப்ரோச் அந்த முறையிலே தான் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். என்பது. நான் கேட்பதெல்லாம் தண்ணீரை நமக்கு அவர்கள் எவ்வளவு தருவார்கள். நாம் அவர்களுக்கு என்ன கொடுக்க வேண்டும். இது ஒரு சிக்கலான, நீண்ட பிரச்சினை. தொடர்ந்து பேச வேண்டியிருக்கிறது. 100 மெகாவாட் கரண்ட் கொடுக்கக்கூடிய திட்டம். அந்தக் கரண்ட் முழுவதும் கிடைக்கவில்லை. கரண்ட் எடுப்பதற்கு மின் திட்டத்தை அமுலாக்குவதில் என்ன தப்பு? அந்த ஆற்றினுடைய ப்ளோ அந்தப் பக்கம் இருந்தாலும் அந்தத் தண்ணீரை நமக்கு ஒப்பந்தம் ஏற்பட்டால் கொண்டு வர முடியும். அந்த முறையில் தண்ணீருக்கு அமைச்சர் அவர்கள் சொன்னபடி முயற்சி தொடரட்டும். ஆனால் இந்த மின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உடனே அமைச்சர் அவர்கள் 100 மெகாவாட் மின் உற்பத்தி கிடைக்க வழி செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் திட்டம் என்று சொல்லுகின்ற பொழுது அணை கட்டுவது போன்ற காரியங்களை நாம் ஆரம்பிக்க வேண்டும். அப்படி ஆரம்பித்து தண்ணீரை நாம் அதில் அதிக அளவு தேக்கி வைக்கப் போவதில்லை. இந்தப் பக்கம் எடுக்கப் போகிறோம் என்றால் அந்த அணை கூட பயன் இல்லாமல் போகும். ஆகையினால் திட்டங்களை மாற்றியமைக்கின்ற சூழ்நிலை உருவாகும். ஓரளவிற்கு இதிலே இரு அரசுகளும் ஒரு சுமுக முடிவை நோக்கி வந்துக் கொண்டிருக்கின்றன. கடைசியிலே கேரள பவானியோடு சேர்த்து இந்தப் பிரச்சினை பேச வேண்டுமானால் இதிலே சிரமம் இருக்கிறதே தவிர வேறு அல்ல. விரைவிலே ஒரு தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு உண்டு.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நடத்திய பேச்சுக்களில் கேரள அரசாங்கம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அதனுடைய அணுகுமுறை நமக்கு சாதகமாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு நெல்லித்துறை திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏற்கனவே புல்லூரிலிருந்து நீர் மின் நிலையத்திலிருந்து வெளி வருகின்ற நீரும் பவானிசாகருக்கு வருகின்ற நீரைத்தான் நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இதிலே நாம் பெற்று வருகின்ற நீரைக் கொண்டு ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதில் என்ன தடை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நெல்லித்துறைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அதை வற்புறுத்தித்தான் நாம் மத்திய அரசுக்கு எழுதி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அனுமதி தரவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இந்த பாண்டியாறு, புன்னம்புழா திட்டத்தைப் பொறுத்தவரையில் இரு அரசுகளுடைய, அணுகு முறை ஒத்ததாக உள்ளது.

**சாலையோர மரங்கள் வனத்துறை மூலம் பராமரிப்பு.**

**776—(*வினா எண் 24[illegible]) திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைத்துறை சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் இருபுறமும் சிசு, தேக்கு, யூகலிப்டஸ் மரக்கன்றுகள் நட்டு வனத்துறை மூலமாக பராமரித்து பாதுகாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** இல்லை. நெடுஞ்சாலைத்துறை மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் இருபுற



மும் நிழல் அல்லது பலன் தரும் மரங்கள் நட்டு பராமரிக்கும் திட்டத்தை வனத்துறையும் மேற்கொண்டு வருகிறது.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தினுடைய சாலைகள் பூராவும் வரப்பாக இருக்கிறது. இந்தச் சாலைகள் பெரும்பாலும் ஆற்றின் கரையிலே அமைந்திருக்கின்றன. எனவே, ஆற்றினால் ஏற்படுகின்ற அந்த அரிப்பை தடுப்பதற்காகவும் அதே சமயத்தில் பருவ மழையைத் தேக்கி வைத்துக் கொள்ளவும் தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற அந்தச் சாலைகளுடைய இருபக்கமும் மரங்களை நடும் திட்டம் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 1981–82 முதல் 1985–86 வரை தமிழகத்தில் 3,028 கிலோ மீட்டர் நீளத்திற்கு இத்தகைய சாலையோரத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டு உள்ளன. இதைத் தவிர மற்றும் பல துறைகளின் வாயிலாகவும் இந்த மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆனால், இந்தச் சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தினுடைய இரண்டாவது பகுதியிலே சுமார் 800 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலையோர மரங்கள் நடவேண்டும் என்ற திட்டமும் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் ஏற்கெனவே இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இனி எதிர்காலத்திலும் இத்தகைய திட்டங்க்ள் நிறைவேற்றப்படும்.

**சிவகங்கை தேவஸ்தானத்திற்குச் சொந்தமான இடங்கள்.**

**777—(*வினா எண் 4905) திரு. க. பாரமலை :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தேவஸ்தானத்திற்குச் சொந்தமான திருப்புவனம் புஷ்பகேஸ்வரர் சௌந்தரநாயகி அம்மன் கோவிலைச் சேர்ந்த தோப்பு மற்றும் தெப்பக்குளம் தோப்பு ஆகிய இடங்களில் தனி நபர்கள் நிரந்தரக் கட்டிடங்கள் கட்ட முயற்சிப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) ஆம்.

(ஆ) ஆலய நிலத்தில் நிரந்தரக் கட்டிடங்கள் கட்ட முயற்சிப்பதைத் தடுக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சேலத்தில் அறநிலையத்துறை துணை ஆணையர் அலுவலகம்.

778—(*வினா எண் 5176) திரு. செ. செம்மலை : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலத்தில் இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணை யர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சேலத்தில் அற நிலையத்துறை துணை ஆணையாளர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 779 மற் றும் 780 மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் வேண்டு கோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

புளியம்பட்டி அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி.

781—(*வினா எண் 4308) திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டியில் உள்ள அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்காக வாங்கப்பட்ட ஆறு ஏக்கர் நிலத்தில் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரி சீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (ஆ) மற்றும் (இ): இப்பள்ளிக்கு இவ்வாண்டு (1985-86) தமிழ் நாட்டுப்பாட நூல் நிறுவனம் வழங்கிய நன்கொடைத் தொகையிலிருந்து ரூ. 1.50 இலட்சம் செலவில் இரு வகுப்பு அறைகள் கட்ட பள்ளிக் கல்வி இயக்குநர் அளவில் நிர்வாக அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இப்பணியை உடனடியாகத் தொடங்குமாறு கட்ட டத்துறை தலைமைப் பொறியாளருக்குப் பள்ளிக் கல்வி இயக் குநரால் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது.

நாடகத் தமிழை ஊக்குவித்தல்

782—(*வினா எண் 4651) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—



(அ) முத்தமிழில் ஒன்றான " நாடகத் தமிழை " ஊக்கு விக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

(ஆ) நாடகக் கலைஞர்களுக்கு பாதுகாப்பு நிதி வழங்கிட அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) முத்தமிழில் ஒன்றான " நாடகத் தமிழை " ஊக்குவிக்க அரசு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம் பல நடவடிக்கைகளை எடுத் துள்ளது. அவை :—

(1) சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட நாட கங்களை நடத்தும் நாடகக் குழுக்களுக்குப் புதியநாடகத் தயா ரிப்புக்கென்று நிதி வழங்கும் திட்டத்தின்படி மானியம் வழங்கு தல்.

(2) நாடக மேடைப் பொருள்களான காட்சி அமைப்பு, உடைகள், மின் ஒலி, ஒளி கருவிகள் போன்ற தொழிற்சாதனங் களைத் தொழில்முறை நாடகக் குழுக்கள் வாங்கும் வண்ணம் இயன்ற அளவில் நிதியுதவியை வழங்குதல்.

(3) 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடப்பதோடு வெள்ளி விழாக் காணும் நாடகக் குழுக்களுக்கு வெள்ளி விழாவினை சிறப்புடன் நடத்திட உரிய மானிய உதவி அளித்தல்.

(4) ஆண்டுதோறும் சிறந்த நாடகக் குழுக்களைத் தேர்ந் தெடுத்து முன்னாள் ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் நிறுவி யுள்ள சுழற்கேடயம் ஒன்றை 1978 ஆம் ஆண்டு முதல் வழங்கி கௌரவித்து வருதல்.

(5) சிறந்த நாடகங்களை நூல் வடிவில் வெளிக்கொணர மானியம் கொடுத்தல்.

(6) நாடகத் துறையில் இளங்கலைஞர்கள் உருவாகும் வண் ணம் இளைஞர்களை டெல்லியிலுள்ள நாடகப் பள்ளியில் (நேஷனல் ஸ்கூல் ஆப் டிராமா) பயிற்சி பெற உதவி நிதி வழங்குதல்.

(7) நாடகத் துறையில் பல்வேறு வகையில் சிறந்த சேவை செய்து வரும் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் " கலைமாமணி " விருதுகள், பொற்கிழி போன்றவற்றை வழங்கி ஊக்குவித்தல்.

(ஆ) ஆம்.

(இ) நலிந்த வயோதிகக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் வாயிலாக நாடகக் கலைஞர்களுக்கும், மாதந்தோறும் உதவித் தொகை தலா ரூ. 150 அரசினால் வழங்கப்பட்டு வருகின்றது.

(முற்பகல் 9-20)

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் இந்த அரசினுடைய பாதுகாப்பு நிதி பெறும் நாடகக் கலைஞர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், இந்த நாடகக் கலைஞர்கள் எந்த அடிப்படையில் பாதுகாப்பு நிதி பெற தேர்வு செய்யப்படுகிறார்கள். இதற்கென தகுதியுடைய குழுக்கள் ஏதேனும் அமைக்கப்பட்டு இருக்கின்றனவா? இல்லையெனில் இனியாவது அப்படி ஒரு குழு அமைத்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து உதவ, இந்த நிதியினை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்த வயோதிகக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் வாயிலாக தமிழகம் எங்கும் இதுவரையில் 1,761 வயோதிகக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களில் நாடகக் கலைஞர்கள் பெரும்பான்மையானவர்கள். முறைப்படி அவர்கள் விண்ணப்பித்தால் அதை வைத்து தேர்வு செய்து கூடுமான வரையில் வறுமையில் வாடுபவர்களுக்கு உதவி செய்து வருகிறோம்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் நலிந்த நாடகக் கலைஞர்களுக்கு மாதம் 150 ரூபாய் உதவித் தொகை, அதாவது பாதுகாப்புத் தொகை வழங்குவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நாடகக் கலைஞர்கள் அன்னியில் நாதஸ்வர வித்துவான்கள், தவில் வித்துவான்கள், புல்லாங்குழல் வித்துவான்கள் என்ற இப்படிப்பட்ட துறைகளைச் சேர்ந்த வயது முதிர்ந்த, ஒரு காலத்தில் புகழ்படைத்தவராக வாழ்ந்த கலைஞர்களுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுமா? சிலரைப் பொறுத்தவரையில் எத்தனை முறை விண்ணப்பித்தாலும் கிடைக்கவில்லை என்று சொல்கிற நிலைமை இருக்கிறது. அத்தகைய குறைபாடுகள் வராத வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். நாடகக் கலைஞர்களைப் பாதுகாக்க வேண்டும். இதனை அமைச்சர் அவர்கள் பரிவோடு கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே வறுமையிலே வாடுகிற கலைஞர்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்றுதான் இருக்கிறோம். ஆகவே முறைப்படி அவர்கள் விண்ணப்பித்தால் உரிய வகையில் அதற்





கான ஏற்பாடு செய்யப்படும். அதிலே ஏதாவது குறைகள் இருந்தால், என்னுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வந்தால் அதை நான் பரிசீலிக்கிறேன்.

அரூரில் புதிய பாலிடெக்னிக்.

783—(*வினா எண் 5544) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், அரூர் பகுதியில் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தும் செயல் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. பல ஆண்டுகளாக அங்கே ஒரு கலைக் கல்லூரியையாவது ஏற்படுத்த வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கேட்டிருந்தார்கள். இப்போது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அங்கே ஒரு பாலிடெக்னிக்காவது ஏற்படுத்தித் தந்தால் அந்தப் பகுதியில் இருக்கிற, அரூர் வட்டத்தில் இருக்கிற ஏழை எளிய விவசாய மக்கள் அதனால் பயன் அடைய வாய்ப்பிருக்கிறது. அங்குள்ள உயர்நிலைப் பள்ளிக்கு உரிய இடத்தில்—25 ஏக்கர் இடம் அரூரில் இருக்கிறது—மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அங்கே ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய ஆதரவில் புதிய பாலிடெக்னிக் அமைக்கிற கருத்துரு எதுவும் யோசனையில் இல்லை. ஆகவே இப்போது அரூரில் அரசாங்க சார்பில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கிற எண்ணம் இல்லை. தனியார் யாராவது முன்வந்தால் அதுகுறித்து அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, அரூரில் பாலிடெக்னிக் ஆரம்பிப்பது குறித்து அரசிடம் செயற்குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதோடு சேர்த்து கிருஷ்ணகிரியில் நடைபெறுகிற பாலிடெக்னிக்கை என்ஜினியரிங் கல்லூரியாக மாற்றுவதற்கு அரசாங்கத்தினிடம் ஏதாவது செயற் குறிப்பு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரூரில் இல்லை என்று சொன்னதற்குக்

காரணம், அருகில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்காக அப்படிச் சொன்னேன். ஆனால் உண்மை நிலையைச் சொல்ல வேண்டுமென்றால் தமிழ்நாட்டில் எங்கேயும் அரசாங்கத்தின் சார்பில் பாலிடெக்னிக் அமைக்கிற உத்தேசம் இல்லை. அதே போல் என்ஜினியரிங் கல்லூரி கூட நாம் ஆரம்பிப்பதாக இல்லை. சென்னையில் மட்டும் ஒன்று ஆரம்பிக்கலாமா என்ற ஒரு எண்ணம் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதுகுறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை.

### உதகமண்டலத்தில் உள் விளையாட்டு அரங்கம்.

784—(*வினா எண் 6225) திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் உள் விளையாட்டு அரங்கம் (Indoor Stadium) அமைக்கக் கோரிக்கை மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ): உதகமண்டலத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. உச்சி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குதிரைப் பந்தய மைதானத்தை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதால் அங்கே உலக அரங்கில் ஒரு பெரிய விளையாட்டு மைதானத்தை ஏற்படுத்தப் போவதாக நேற்று சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதையனுசரித்து அங்கே ஒரு பெரிய ஸ்டேடியம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதை அரசாங்கம் பரிசீலித்து தக்க முடிவு எடுக்கும்.

### தொழுநோய் ஒழிப்புத் திட்டம்.

785—(*வினா எண் 2847) திரு. எம். செல்லமுத்து; திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



சென்னை-600 008. 136494 501

(அ) தொழுநோய் ஒழிப்பு பற்றி மத்திய அரசு கால இலக்கு நிர்ணயித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) தொழுநோயை ஒழிப்பதற்கு மத்திய அரசு கி.பி. 2,000 ஆம் ஆண்டை இலக்காக நிர்ணயம் செய்துள்ளது.

திரு. கோ. வீரய்யன்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கி.பி. 2000-ம் ஆண்டை இலக்காக வைத்திருந்தாலும் நமது மாநில அரசு அதற்கு ஏதாவது இலக்கு வைத்து அந்தப் பணியைத் தொடங்க இருக்கிறதா ? அவற்றின் விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழுநோயைப் பொறுத்தவரையில் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து நடைமுறைப்படுத்திக் கொண்டுவருகிற ஒரு திட்டமாகும். 1979—80ல் நான்-ப்ளான் எக்ஸ்பென்டிச்சராக தமிழக சர்க்கார் செலவு செய்திருக்கிற தொகை ரூ. 1,79,80,000. அதேமாதிரி ரூ. 7,35,000 ப்ளான் எக்ஸ்பென்டிச்சரில் மத்திய அரசு கொடுக்கிற தொகை. 1985-க்கு ரூ. 3,25,29,000 தமிழக சர்க்கார் செலவு செய்தது. அதே நேரத்தில் மத்திய அரசு ரூ. 27,96,000 செலவழித்தது. ஆகவே, இம்மாதிரி படிப்படியாக இந்தத் தொழுநோய் ஒழிப்பிற்காக தமிழக சர்க்காரும் மத்திய சர்க்காரும் சேர்ந்து செலவழித்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால், மத்திய சர்க்கார் அகில இந்திய ரீதியில் ஒரு இலக்கை வைத்திருக்கிறார்கள். தமிழக சர்க்காரைப் பொறுத்தமட்டில் இதைத் தீவிரமாக நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோய் ஒழிப்புப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாநிலம் முழுவதும் தொழுநோய் எவ்வளவு பேர்களுக்கு இருக்கிறது என்று சென்ஸஸ் ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, 1980-ல் 97,60,000 பெர்ஸன்ஸ்-யை நாம் பரிசோதனை செய்து 29,968 பேர்களுக்கு இருக்கிறது என்று கண்டுபிடித்து இருக்கிறோம். 1985-ம் ஆண்டு 1,45,51,000 பேர்களை பரிசோதனை செய்து 28,821 பேர்களுக்கு இருக்கிறது என்று கண்டு பிடித்திருக்கிறோம். ஆக, இன்ஸிடன்ஸ் இவ்வ

ளவு கேஸ்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த இன்ஸிடன்ஸ் 1980-ல் 1,000க்கு 3 என்றிருந்தது 1985-ல் 1000-க்கு 2 என்ற அளவிற்கு குறைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

786—(*வினா எண் 6668) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் சிவகிரி பகுதியில் தொழுநோய் அதிகமாக உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) சிவகிரியில் ஒரு தொழுநோய் சிகிச்சை மையத்தோடு சங்கரன்கோவிலிலும் புதிய கட்டிடம் கட்டப்பட்டு தொழுநோய்க் கான சிகிச்சை அளிக்கப்படுகிறது.

(முற்பகல் 9—30)

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத் தில்தான் அதிகமாக தொழுநோய் இருக்கின்றது என்று சொல் லப்படுகின்றது. அதிலும் குறிப்பாக கொடிக்கால் வெற்றிலை விளைகின்ற இடங்களிலேதான் இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் சிவகிரியிலும், சேலம் மாவட்டத்தில் ஆத்தூரிலும் இந்தத் தொழுநோய் அதிகமாக இருப்பதற்குக் காரணம் இந்த கொடிக்கால் வெற்றிலை விளைகின்ற இடங்களிலே பணி செய் வதால்தான் என்ற கருத்து நிலவுகிறது. இதை அரசு அறிந் திருக்கிறதா அரசு இதற்காக ஆராய்ச்சி ஏதேனும் ஏற்படுத்தி யுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக தனியாக ஆராய்ச்சி எதுவும் செய்யப்பட வில்லை என்றாலும், திருநெல்வேலி மாவட் டத்தைப் பொறுத்த வரையில், '' பிரிவெலன்ஸ் '' எவ்வளவு பேருக்கு தொழுநோய் இருக்கின்றது என்பதைப் பார்க்கின்ற நேரத்திலே 1,000-க்கு 9.1 தான் இருப்பதாகத் தெரி கின்றது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஆயிரத்திற்கு 13.8 அளவிற்கு உள்ளது. ஆகவே, தமிழகத்திலே இருக்கின்ற சராசரியைவிட திருநெல்வேலி மாவட்டத்தில் குறை



வாக இருக்கிறது. அதே நேரத்திலே சிவகிரியைப் பொறுத்த வரை, There are 7,616 known cases upto the end of October 1985, out of which 5,485 cases are under treatment.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, நம் நாட்டிலே தொழுநோய் பரவலாக இருக் கின்றது. ஹைதராபாத்திற்கு வெளிநாட்டிலே இருந்து வந்த தொழுநோய் நிபுணர் இங்கிலாந்தில் 6,000 பேர்களுக்கு தொழு நோய் இருப்பதாகவும், ஹைதராபாத்தில் 6 இலட்சம் பேர்களுக்கு இருப்பதாகவும் கூறினார். 80 சதவீதம் பரவலாக தொற்று நோய் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தொழுநோய் இருந் தால் சட்டப்படி சட்டசபைக்கு போட்டியிடக்கூடாது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்தச் சட்டம் ரத்து செய்யப் படுமா ? தொழுநோயாளிகளை சமுதாயத்தின் ஒரு அங்கமாகக் கருதி, அவர்களையும் போட்டியிட அனுமதி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை '' ரீப்பீல் '' செய்ய தமிழ்நாடு அரசு கொள்கை ரீதியாக முடிவெடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகிரிப் பகுதியிலுள்ள தொழுநோயை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது என்று இப்போது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதோடு சங்கரன்கோயிலில் அதற்காக ஒரு ஆஸ்பத்திரி கட்டி டமும் கட்டப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். சிவகிரியில் தான் அதிகமாக தொழுநோய் இருக்கிறது. சங்கரன்கோவிலில் அவ்வளவு அதிகமாக இல்லை. நமக்கு மகிழ்ச்சிதான். சிவகிரி யில் இருக்க விரும்பாத டாக்டர்கள் அங்கே தேவையில்லை என்று சொல்லி, அங்கே அமைக்கப்படாமல் அதை சங்கரன்கோவிலுக்கு மாற்ற முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். இதை அரசு அறியுமா ? அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது ? சிவகிரியில் ஆஸ்பத்திரியைக் கொண்டுவர அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களால் சொல் லப்பட்ட அந்தக் குறிப்பு அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒன்றிய அளவில் மருத்துவமனைகளுக்கு லேப்ரஸ்கோப் கருவி.**

**787—(*வினா எண் 7793) திரு. கா. சொர்ணலிங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒன்றியங்கள் அளவில் உள்ள ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் ''லேப்ராஸ்கோப்'' கருவியை அளிக்க அரசு பரி சீலித்து உள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?*

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

**திரு. கா. சொர்ணலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நகரத்திலே உள்ள மக்கள்தான் லேப்ராஸ் கோப் கருவி மூலமாக அறுவை சிகிச்சை செய்து கொள் கிறார்கள். கிராம மக்களுக்கு அதனுடைய பலன் பரவலாக போய்ச் சேருவதில்லை. எனவே, அரசு மறுபரிசீலனை செய்து ஒன்றியங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மகப் பேறு மருத்துவமனைகளிலும் இந்த லேப்ராஸ்கோப் முறையை கையாளும் வகையில் கொண்டுவர அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர் களே, கிராமப்பகுதிகளிலே கூட லேப்ராஸ்கோப்பிக் அறுவை சிகிச்சையை செய்து கொண்டு வருகிறோம்.

In 1981-82, under this Scheme, 7,41,075 acceptance.

லெப்ராஸ்கோப்பிக் முறையினைப் பொறுத்த வரையில், Two lakhs three hundred and three leproscopic sterilisations have been done in this State.

மாநிலம் எங்கும் இரண்டு இலட்சத்து 303 பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இருக்கிறது. அதிலே நிறைய பேர்கள், ஏறக்குறைய 50 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் கிராமப்பகுதி யிலேயிருந்து வரக்கூடியவர்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**நலிந்த பிரிவினருக்கு மலிவு விலையில் அரிசி, கோதுமை.**

**788—(§வினா எண் 7185) திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*





*நலிந்த பிரிவினருக்கு மலிவு விலையில் அரிசி, கோதுமை விநியோகம் செய்வது பற்றி மாநில அரசுகளுக்கு மத்திய அரசு தாக்கீது ஏதேனும் அனுப்பியுள்ளதா ?*

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** ஒருங்கிணைந்த, பழங்குடியினர் மேம்பாடு திட்டம் அமுலில் உள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கு மிகவும் மலிவு விலையில் அரிசி, கோதுமை விநியோகம் செய்வது பற்றிய திட்டமொன்றை மத்திய அரசு மாநில அரசுக்கு அனுப்பி செயல்படுத்த கூறியது. அத்திட்டத்தை செயல்படுத்தும் ஆணையை இவ்வரசு 10-3-1986 அன்று வெளியிட்டது. அத்திட்டத்தின்படி, கோதுமை கிலோ, ரூ. 1.50-க்கும் அரிசி கிலோ ரூ. 1.40-க்கும் அதிக பட்சமாக ஒரு குடும்ப அட்டைக்கு மாதமொன்றுக்கு 30 கிலோ கோதுமை யும், 12 கிலோ அரிசியும் இத்திட்டம் அமுலில் உள்ள பகுதி களில் வழங்கப்படுகிறது. சுமார் 38 ஆயிரம் குடும்பங்கள் இந்தத் திட்டத்தினால் பலன் அடைகின்றனர்.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்த பிரிவினர்களுக்கு மலிவு விலையில் அரிசி மற்றும் கோதுமைப் பொருள்கள் சப்ளை செய்யப்படுவது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுகிறது ? மாவட்டம் முழுவதும் இத்திட்டத்தினால் எவ்வளவு பேர்கள் பயன் அடைகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறி விப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஏற்காடு மலை, கொல்லி மலை, கல்ராயன் மலை, அசனூர் மலை, பச்சை மலை, வட ஆற்காடு மாவட்டத்தில் சவ்வாது மலை, தென்னாற்காடு மாவட்டம் கல்வராயன் மலை, தர்மபுரி மாவட்டம் சித்தேரி மலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் பச்சை மலை ஆகிய பகுதிகளில் இத்திட்டம் அமலில் உள்ளது. இத னால் சுமார் 38 ஆயிரம் குடும்பங்கள் பயனடைகின்றனர் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்த பிரிவினர்களுக்காக குறைந்த விலையில் அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருள்களை வழங்குவதன் மூல மாக அரசு எவ்வளவு இழப்பை ஏற்றுக் கொள்கிறது? மலை வாழ் மக்களுக்கு இப்படிப்பட்ட பொருள்களை வழங்குகிற திட் டத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலையும் அதில் சேர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திலே நான் ஏற்கெனவே சொன்னது போல வெளியே இப்போது நாம் ஒரு கிலோ அரிசி ரூ. 1.75 என்ற விலையில் விற்கிறோம். இந்தத் திட்டத்திலே மைய அரசு கூட கிலோ ரூ. 1.85-க்கு கொடுக்கச் சொன்னது. ஆனால், பொதுமக்களுக்கே சாதாரண விலையிலேயே, ரூ 1.75 என்று கொடுக்கிறபோது, இந்தத் திட்டம் அமலில் இருக்கின்ற பகுதிகளிலாவது மிகவும் குறைவாகத் தரவேண்டும் என்ற உள்ளத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு கிலோ அரிசி ரூ.1.40 என்று குறைந்த விலையில் கொடுக்கலாம் என உத்தரவிட்டு, வழங்கி வருகிறார்கள். நான் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளிலே மட்டும் தான் இந்த திட்டம் அமலில் இருக்கிறது. வேறு பகுதிகளுக்கு வேண்டும் என்று சொன்னால், ஏற்கெனவே சில பகுதிகளைச் சேர்க்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அந்த அனுமதி வந்ததற்குப் பின்னால் இது பற்றி யோசிக்கலாம்.

திரு. இரா. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தின் கீழ் நலிந்த பிரிவினர் என்று எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறது? செங்கை மாவட்டத்தில் எந்தப் பகுதியும் நலிந்த பகுதியாக அறிவிக்கப்படவில்லை. ஆகவே, அரசு மீண்டும் பரிசீலனை செய்து செங்கை மாவட்டத்தை நலிந்த பகுதியாக அறிவிக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்த திட்டம் நலிந்த பிரிவினர்களுக்கோ பின்தங்கிய பிரிவினர்களுக்கோ அல்ல. பழங்குடி மக்களுக்கு, மலை வாழ் மக்களுக்கு. மலைவாழ் மக்கள், பழங்குடி மக்களுக்காக இந்த திட்டம் மைய அரசால் வகுக்கப்பட்டு, மாநில அரசுகளின் மூலமாக அம்மக்கள் எப்பகுதிகளில் வாழ்கிறார்களோ அங்கு போய்ச் சேருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அறிஞர் அண்ணா ஆண்டு கொண்டிருந்த போது, அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்ட நேரத்தில் மைய அரசு அதற்கு மானியம் தர வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் மத்திய அரசை வற்புறுத்தினார்கள். ஆனால், இப்போது நமது அரசு குறைந்த விலையில் நியாய விலைக் கடைகள் மூலமாக அரிசி வினியோகம் செய்வதில், 90 கோடி ரூபாய் இழப்பை ஏற்றுக் கொள்கிறதே, அந்த இழப்பை ஈடுகட்ட மைய அரசு மானியமாகத் தர வேண்டும் என்று நமது அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு சில சமூக நலத் திட்டங்களைச் செய்கிறது. மாநில அரசு சில சமூக நலத் திட்டங்களைச் செய்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை நல்ல யோசனைதான். மைய அரசு அதனை ஏற்றுக் கொண்டு, 90 கோடி ரூபாய் தந்தால் நல்லது. பல்வேறு விதமான நலப்பணிகளை மக்களுக்கு அந்தப் பணத்திலே இருந்து செய்யலாம்.

(முற்பகல் 9—40)

திரு. சைதை சா. துரைசாமி: தலைவர் அவர்களே, நலிந்த பிரிவினருக்குக் குறைந்த விலையில் அரிசி மற்றும் உணவுப் பொருள்கள் வழங்குவதால் மாநில அரசுக்கு ஏற்படுகிற இழப்பு எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மொத்த அளவு என்னிடத்தில் இல்லை. ஏற்கெனவே, சொன்னதைப் போல 38 ஆயிரம் குடும்பங்கள் பலனடைகின்றன. ஒரு குடும்ப அட்டைக்கு ரூ. 1.40-க்கு அரிசி தருகிறோம். இதுவே, பொதுமக்களுக்கு பொது விநியோகத்திற்கு ரூ. 1.75 விலையில் கொடுக்கிறோம். விலை வித்தியாசம் அரிசியைப் பொறுத்தவரையில் 35 பைசா இருக்கிறது. 38 ஆயிரத்தோடு அதைப் பெருக்கிக் கொள்ளலாம்.

திரு. கூடலூர் ?. வி. வேலு: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கல்வராயன் பகுதியில் இருக்கிற மலைவாழ் மக்களுக்கு சலுகை அளிப்பதாகச் சொல்கிறார்கள். அதன் ஓரப் பகுதியாக இருக்கிற என்னுடைய தொகுதியில் 14 கிராமங்களில் மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் அந்தச் சலுகையைப் பெறவில்லை. கிராமத்திலே சொல்லுவார்கள், ஒரு கண்ணுக்கு வெண்ணெய் இன்னொரு கண்ணுக்கு சுண்ணாம்பு என்று. ஆகவே, என்னுடைய தொகுதியில் அந்த 14 கிராமங்களில் இருக்கிற மலைவாழ் மக்களுக்கு அந்தச் சலுகை அளிக்கப்படுமா? மீண்டும் பரிசீலனை செய்து உடனடியாக அதைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல 38 ஆயிரம் குடும்பங்கள் தான் இந்தத் திட்டத்தில் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இது மத்திய அரசின் ஆய்வின் அடிப்படையில் அறிவிக்கப்பட்டிருக்கிற பகுதியாகும். ஆகவே, ஒரு கண்ணுக்கு வெண்ணெய் இன்னொரு கண்ணுக்கு சுண்ணாம்பு என்ற நிலைமை இதிலே கிடையாது. இருந்தாலும் இந்தத் திட்டத்திற்கு வெளியே 3 இலட்சத்து 10 ஆயிரம் பேர்கள், பழங்குடியினர்,

திட்டத்தில் வராதவர்கள் இருக்கிறார்கள். அதிலே சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. அது வந்ததற்குப் பின்னாலே இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதையெல்லாம் சேர்த்து பரிசீலிக்கப்படும்.

**திண்டுக்கல்லில் தோல் ஆராய்ச்சிக் நிலையம்.**

792—(*வினா எண் 4866) திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் தோல் (Fini hing Uni) சம்பந்தப்பட்ட தோல் ஆராய்ச்சி நிலையம் அமைக்க திண்டுக்கல் சிறுமலை அடிவாரத்தில் சர்வே எடுக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பிரேம்குமார்: தலைவர் அவர்களே, தோல் பொருள்களை மிக அதிகமாக ஏற்றுமதி செய்யும் இடமாகவும், பினிஷ்ட் புராடக்ட்சை அதிக அளவிற்கு செய்யக்கூடிய இடமாகவும் திண்டுக்கல் வளர்ந்து வருகிறது. தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் பாதகங்களைத் தடுக்க இப்படிப்பட்ட தோல் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அங்கே அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, திண்டுக்கல்லைப் பொறுத்த வரையில் ஏறக்குறைய 60 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதிலே, 11 தொழிற்சாலைகளில் காலணிகள் மட்டும் தயாரித்து நாட்டிற்கு தந்து கொண்டிருக்கிறார்கள். தொழில் வணிகத் துறை மூலமாக அவர்கள் கட்டுப்பாட்டின்கீழ் வண்ணத் தோல் தொழில் பயிற்சிக்கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் தேசிய சிறுதொழில் நிறுவனம் திண்டுக்கல்லில் தோல் தொழிலை நவீனப்படுத்த துணை நிலையம் ஒரு இலட்சத்து 68 ஆயிரம் ரூபாயில் ஒரு தொழில் கூடத்தை 12–1–1986 முதல் துவங்கி அதிலே பயிற்சி தந்து கொண்டிருக்கிறது. அங்கே ஏறக்குறைய 10 நபர்கள் 3 மாத காலத்திற்கு பயிற்சி பெறுகிறார்கள். அந்த 10 பேரும் ஆதிதிராவிட மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆவார்கள். பயிற்சி முடிந்த பிறகு அவர்களுக்கு ஏறக்குறைய 25 ஆயிரம் ரூபாய் செலவில் இயந்திரங்கள், சாதனங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



**ஆற்காடு வட்டத்தில் புதிய நியாய விலைக் கடைகள்.**

798—(*வினா எண் 9340) திரு. த. பழனி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டம், வி. கே. மாங்காடு, புதேரி-அனத்தாங்கல், கனியனூர்—புதூர், புதுச்சொறையூர், சாத்தூர்—களர் ஆகிய கிராமங்களுக்கு நியாய விலைக் கடைகள் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : வி. கே. மாங்காடு, மல்லிகாபுரம் ஆகிய இரு மதுராக்களுக்கு வி. கே. மாங்காட்டில் ஒரு பகுதி நேரக் கடை திறக்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புதேரி, அனைத்தாங்கல் ஆகிய இரு மதுராக்களில் புதிய கடை திறப்பதற்கு உத்தேசமில்லை.

கனியனூர் புதூரில் உள்ள குடும்ப அட்டைகளை பிண்டித்தாங்கல் நியாயவிலைக் கடையுடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புதூர், சொரையூரில் தனிக்கடை திறக்க உத்தேசமில்லை.

களர் மற்றும் லப்பைபேட்டை மதுராக்களுக்கு களர் என்ற இடத்தில் ஒரு பகுதி நேரக்கடை அமைக்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. த. பழனி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த புதேரி, அனதாங்கல் இரண்டு ஹாம்லெட்களில் ஒன்று புதேரி இசையனூர் பஞ்சாயத்திலிருந்து ஏறக்குறைய 5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. மற்றொன்று அனத்தாங்கல் கிராமமானது அரும்பாக்கம் பஞ்சாயத்திலிருந்து ஏறத்தாழ 10 கி.மீ. தூரம் சுற்றி வருகிற நிலைமை இருக்கிறது. அனத்தாங்கல், புதேரி ஆகியவை தனித்தனி பஞ்சாயத்துக்களாக இருப்பதால், அவை இரண்டும் பெரிய கிராமமாக இருப்பதால், அந்த இரண்டு கிராமங்களையும் ஒன்று சேர்த்து அவைகளுக்கு புதிய பகுதிநேர கடை உருவாக்கி தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புதேரி, அனத்தாங்கல் ஆகிய பகுதிகளில் புதிய கடைகளை ஆரம்பிக்கலாமா என்று சொல்லி, அதிகாரிகள் ஆய்ந்து பார்த்து முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லி இருக்கின்ற பிரச்னைகளை தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் அதை ஆய்ந்து பார்த்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

வினாக்கள்— விடைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்புகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அரசிடமிருந்து அறிக்கைகள் வரப்பெற்றுள்ள கவன ஈர்ப்புகள், அறிவிப்புகளுடன் அவையில் வைக்கப்பட்டு உள்ளன. சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள், அவற்றை உரிய மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தால், அத் தீர்மானத்தில் குறிக்கப்பட்டுள்ள முதல் உறுப்பினர் மட்டும் அதனை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். நேரம் கருதி இன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மீது விளக்கத்திற்காக ஒரு வினா மட்டும் அனுமதிக்கப்படும்.

அரசுத் துறையிடமிருந்து இதுவரை அறிக்கைகள் வராத கவன ஈர்ப்புகள், துறைகளிடமிருந்து அறிக்கைகள் வந்தவுடன், உரிய உறுப்பினர்களின் தகவலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

இன்று கூட்டத்தின் கடைசி நாளானதால், அறிக்கைகள் வரப்பெறாத கவன ஈர்ப்புகளை மட்டும் அவை நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்ய, சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

### (1) சிவகங்கை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன் வெடி குண்டுகள் வெடித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : 'சிவகங்கை கலெக்டர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்தில் 14–4–1986 அன்று குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது குறித்து திரு. கு. சுப்பராயன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (திரு. கு. சுப்பராயன் இருக்கையில் இல்லை).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:



கவன ஈர்ப்புகள்

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

அறிக்கை.

13–4–1986 ஞாயிற்றுக் கிழமை அன்று சிவகெங்கை வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் இளநிலை உதவியாளர் திரு. க. மணி என்பவர் அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, மாலை சுமார் 2-30 மணியளவில் அலுவலகம் முன்பாக பலத்த வெடிச்சத்தம் கேட்டதாகவும் வெளியில் வந்து பார்த்தபோது ஒரு நாய் படுத்திருந்ததாகவும், அந்நாயின் வாயில் ரத்தம் கொட்டிக் கொண்டிருந்ததாகவும்: இச்சம்பவத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்னால் வருவாய் அதிகாரி அலுவலகத்தின் பின்புறம் வெடிச்சத்தம் கேட்டதாகவும் அங்கு சென்று பார்த்தபோது ஒருநாய் இறந்துகிடந்ததாகவும், கொடுத்த புகாரின்பேரில் சிவகெங்கை காவல்நிலைய குற்ற எண். 94/86 இதச. பிரிவு 286 மற்றும் இந்திய வெடிபொருள் சட்டம் பிரிவு 3-ன் கீழ் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து கிடைத்த தடயங்களை வெடிமருந்து நிபுணர் ஆய்வு செய்துவருகிறார். காயம்பட்ட மற்றொரு நாயும் இறந்துவிட்டது.

சிவகெங்கையிலிருந்து கிழக்கே ஒரு கிலோமீட்டர் தொலைவிலுள்ள பையூர் பிள்ளைவயல் என்ற கிராமத்தில் நரிக்குறவர்கள் சொந்தமாக வீடுகட்டி தங்கியுள்ளனர். அவர்கள் சிவகெங்கையைச் சுற்றியுள்ள பகுதிகளில் கரும்புக் கொல்லையிலும், நிலக் கடலை வயலிலும், கதிர்களைச் சேதப்படுத்தும் நரிகளைப் பிடிக்க, 'மாட்டுக் கொழுப்பு' தடவி வைத்திருந்த வெங்காய வெடிகளை நாய்கள் கவ்விக்கொண்டு வந்து, வட்டாட்சியர் அலுவலகத்தின் வளாகத்தில் வைத்துக் கடித்தபோது இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என விசாரணையில் தெரிய வருகிறது.

இருப்பினும் இதுகுறித்து தீவிர புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தச் சம்பவத்தின் தொடர்பாக இப்பகுதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சினையோ, மக்கள் மத்தியில் பீதியோ இல்லை.

### (2) தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பால் பதனிடும் ஆலையில் ஏற்பட்ட அமோனியா வாயுக் கசிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திருவாளர்கள் கு. ரமணி, வி. பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன், டாக்டர் ந. மாசிலாமணி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

கவன ஈர்ப்புகள்

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்ட பால் உற்பத்தியாளர் யூனியனிலுள்ள பால் பதனிடும் ஆலையிலிருந்து திடீரென்று அமோனியா வாயு கசிந்ததைத் தொடர்ந்து அந்த ஆலை அருகே வசிக்கக்கூடிய மக்களுக்கு கடுமையான தலைவலி ஏற்பட்டிருக்கும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய குளிர்சாதனப் பிரிவு சரிவர செயல்பட்டு வந்தது. 28—4—1986 ஆம் தேதி மாலை, கண்டன்ஷேசன் பிளாக் ஏற்பட்டதால் (Condensation Block) அழுத்தம் அதிகரித்தது. அதனால் அமோனியா வாயு பெறப்படும் பாதுகாப்பு வால்வு திறந்து கொண்டது. இதனால் சிறிதளவே அமோனியா வாயு கசிவு ஏற்பட்டது. இதைக்கண்டவுடன் ஒன்றியப் பணியாளர்கள் மழைவரும் முன்பே தண்ணீரில் நனைந்த சாக்குப் பைகளைக் கொண்டு கசிவு ஏற்பட்ட பகுதியை மூடி, அமோனியா வாயு மேலும் கசிவு ஏற்படாமல் நிறுத்தி விட்டார்கள். பத்திரிகையில் வெளிவந்தது போல பாதுகாப்பு வால்வு உடைத்துக்கொள்ளவில்லை. அப்படி உடைபட்டு இருந்தால் 28—4—1986 அன்று மாலை பச்சைப்பால் பதப்படுத்தும் பணி பாதிக்கப்பட்டிருக்கும். பாதுகாப்பு வால்வின் மூலம் வெளியான அமோனியா வாயு சுமார் 5 கிலோ மதிப்பு ரூ. 50 இருக்கும் என்று கணக்கிடப்படுகிறது. இந்தக் கசிவினால் பொது மக்களோ பணியாளர்களோ பாதிக்கப்படவில்லை. தீயணைப்புப் படையினருடைய உதவியின்றியே, அலுவலகப் பணியாளர்கள் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட இந்தச் சிறிய குறையினை தக்க சமயத்தில் நடவடிக்கை மேற்கொண்டு அசம்பாவிதம் ஏற்படாமல் தடுத்துவிட்டனர். குளிர் சாதனப்பிரிவு தடை ஏதுமின்றி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

(3) தருமபுரி மாவட்டம், தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பாக்டரி மூடியிருப்பது குறித்து.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி மாவட்டம், தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பேக்டரி மூன்று ஆண்டுக் காலமாக மூடியிருப்பதன் காரணமாக சுமார் 600 தொழிலாளர்கள் வேலையிழந்து அவதிப்படும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்



கவன ஈர்ப்புகள்

(திரு: டி. தீர்த்தகிரி கவுண்டர்)

துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்;

அறிக்கை.

தற்போதைய தருமபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் லிமிடெட் என்ற நிர்வாகத்தின் முந்தைய பெயரே லாஸ்கோ ஸ்டீல் பாக்டரி என்பதாகும். இந்நிறுவனம் 1962-ல் ஆரம்பிக்கப்பட்டு 1968-இல் மூடப் ட்டது. 1971-ல் மீண்டும் திறக்கப்பட்டு 1975 முதல் டிட்கோவின் நேரடிப் பார்வையில் இயங்கி, 1981 முதல் தருமபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் என்ற பெயரில் பங்குதாரர்களை நிர்வாக இயக்குநராகக் கொண்டு இயங்கி வந்தது. பின்பு பணம் பற்றாக் குறையினால் 1—5—1983 முதல் மூடப்பட்டுள்ளது.

2. இத்தொழில் நிறுவனம் 1976-ம் ஆண்டிலேயே ஒரு நிவாரண நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு மற்ற சட்ட விதிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டது. இறுதியாக, 15—10—1985 வரையில் இந்நிறுவனம் ஒரு நிவாரண நிறுவனமாக அறிவிக்கப்பட்டது. இந்நிர்வாகம் இப்போது 16—10—1985 முதல் 15—10—1986 வரை, மேலும் ஓராண்டுக்கு இதனை ஒரு நிவாரண நிறுவனமாக அறிவிக்க வேண்டுமெனக் கோரி விண்ணப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

3. சென்னையிலுள்ள சூப்பர் போர்ஜிங்ஸ் லிமிடெட், பம்பாயிலுள்ள ஜே.டி. பிர்லா ஆகிய 2 நிறுவனங்களையும், இந்த நிறுவனத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நிர்வாகம் அணுகியதாகவும் அதில் "சூப்பர் போர்ஜிங்ஸ் லிமிடெட்" மற்ற நிதி நிறுவனங்கள் வட்டியில் சலுகைகள் செய்தால் தாங்கள் ஏற்று நடத்த முடியும் என்று கூறியதன் பேரில், நிர்வாகம் நிதி வழங்கும் நிறுவனங்களான டி.ஐ.ஐ.சி., டிட்கோ மற்றும் யு.சி.ஒ. பேங்க் ஆகிய நிதி நிறுவனங்களுடன் பேசியதில், அவர்கள் அம்முறையீட்டைப் பரிசீலிப்பதாகத் தெரிவித்துள்ளார்கள் என்றும், எனவே சூப்பர் போர்ஜிங்ஸ் லிமிடெட் நிர்வாகம் இந்த நிறுவனத்தை ஏற்று நடத்த வாய்ப்புள்ளது என்றும் கூறப்படுகிறது.

4. தொழிலாளர்கள் சார்பில் சூப்பர் போர்ஜிங்ஸ் லிமிடெட், நிறுவனத்தை ஏற்று நடத்த இயலாது என்று திட்டவட்டமாக அறிவித்த பிறகும், நிர்வாகம் வேண்டுமென்றே நாட்களைக் கடத்தி அரசிடம் தங்களை நிவாரண நிறுவனமாக அறிவிக்க

மனு செய்துள்ளது என்றும், எந்த நிறுவனமும் ஏற்று நடத்த முன் வராததால் அரசே ஏற்று நடத்த வேண்டும் என்றும், இல்லையெனில் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய நஷ்டத் தொகையை அளித்து தங்களை வேலையிலிருந்து விடுவித்தால் நலமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

5. நிறுவனம் தயாரிக்கும் வார்ப்புகள், நாட்டில் மிக அத்தியாவசியமான பொருட்களை உற்பத்தி செய்யும் அரசுரிமை பெற்ற ஆலைகளான நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட், தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், பேசின் பிரிட்ஜ் பவர் ஸ்டேஷன், மதராஸ் போர்ட் டிரஸ்ட், பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் மற்றும் இவை போன்ற பல நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது என்றும், எனவே, மேற்கூறிய நிறுவனங்களில் ஏதேனும் ஒரு நிறுவனத்துடன் இணைக்க தமிழ்நாடு அரசும், தொழில் வளர்ச்சிக் கழகமும், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

6. தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளினாலோ அல்லது தொழில் தகராறினாலோ இந்நிறுவனம் மூடப்படவில்லை. நிறுவனம் ஒரு நிவாரண நிறுவனமாக அறிவிக்கப்பட்டு, தொழிற்தகராறு சட்டம் மற்றும் சில தொழிலாளர் துறை சம்பந்தமான சட்டங்களிலிருந்து விதி விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, தொழிற்தகராறு சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கை ஏதுமில்லை.

7. ஆனால் இந்நிறுவனத்தை ஒரு வளம் பெறக்கூடிய நிறுவனமாக ( Viable Unit ) செய்வது பற்றியும், பாதிக்கப்பட்ட சுமார் 350 தொழிலாளர்களின் குடும்ப நலனைக் கருத்திற்கொண்டும், இந்த நிறுவனத்தை இதே நிர்வாகமோ அல்லது வேறு எந்த நிர்வாகமோ ஏற்று நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியும் அரசு ஆராயும்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், தொட்டம்பட்டியில் உள்ள லாஸ்கோ ஸ்டீல் பேக்டரி அங்கே இயங்கி வந்து சுமார் 3 ஆண்டுக்காலமாக மூடப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு அரசாங்கத்தின் அண்டர்டேக்கிங்காக அது எடுக்கப்பட்டு என் போன்றவர்கள் எல்லாம் அதிலே பங்கு மூலதனம் செலுத்தி, இன்றைக்கு அந்த லாஸ்கோ ஸ்டீல் 3 ஆண்டுக்காலமாக மூடப்பட்டு இருப்பதுடன், அரசு நடத்த இயலாது என்று நிர்வாகத்தினுடைய பொறுப்புக்கு கொண்டு வந்து, அந்த நிர்வாகம் அறிவிப்பு கொடுத்த உடனே, சில பங்குதாரர்கள் கோரிக்கை விடுத்து, தாங்கள் பொறுப்பேற்று நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டு, அவர்களிடத்திலே பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு கூட இரண்டு ஆண்டுக்காலமாக அவர்கள் நடத்துவதற்கு எந்தவித



மான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் வட்டி ஏறிக் கொண்டு, பங்கு மூலதனத்திற்கு எல்லாம் இழப்பு ஏற்பட்டு, தொழிலாளர்கள் வேலை இழந்து அந்த ஆலை நடைபெறாமல் மூன்று ஆண்டுக்காலமாக இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே அந்த ஆலையைக் கலைத்துவிட்டு, அதை ஏலம் விட்டால், அந்தத் தொழிலை நடத்தக்கூடியவர்கள் அதை எடுத்து நடத்துவதற்கு முன்வரக்கூடிய நிலைமை இருக்கிறது.

ஆகவே அரசு அதை பரிசீலித்து அதற்கு ஏதாவது ஒரு மாற்று நடவடிக்கையை மேற்கொண்டால்தான், இயங்கவோ அல்லது இயங்காமல் அதைக் கலைப்பதோ, கலைப்பதால்தான் அதை நடத்த முடியும். அது சம்பந்தமாக தொழில் அமைச்சர் அவர்களையும், அரசையும் பரிசீலனை செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9–50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் 37 கவன ஈர்ப்புகள் இருக்கின்றன. ஒரு கேள்வி கேளுங்கள் — சுருக்கமாகக் கேளுங்கள். தயவுசெய்து ஒத்துழையுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளி சம்பந்தப்பட்ட பிரச்சினையினாலோ அல்லது தொழில் தகராறுகளினாலோ அந்த நிறுவனம் மூடப்படவில்லை. அந்த நிறுவனம், நிவாரண நிறுவனமாக அறிவிக்கப்பட்டு தொழிற்தகராறு சட்டம் மற்றும் தொழிலாளர்துறை சம்பந்தமான சட்டத்தின் கீழ் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எப்படியேனும் இந்த நிறுவனத்தை நடத்த இயலுமா என்பதைப் பற்றி தான் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே 350 தொழிலாளர்களுடைய நலன்களை பொறுத்தும் தொழிற்சாலையை இயங்க வைக்க முடியும் என்றால் அதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அல்லது அந்த நிர்வாகமோ அல்லது வேறு நிர்வாகமோ ஏற்று நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்குமேயானால் அதை ஆராய்ந்து நடத்தி செல்வதற்கும் அதற்கு சில பல சலுகைகள் அரசின் சார்பாக வழங்கவேண்டுமானாலும்கூட வழங்கி ஒரு முடிவை செய்ய வேண்டுமென்பது தான். இதுபற்றி தொழிற்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் சாதகமாக இருந்து சில பல உதவிகளை செய்யக்கூடுமானாலும்கூட விரைவுபடுத்தி எப்படியேனும் இந்தத் தொழிற்சாலையை திறப்பதற்கும், எந்த முறையிலாவது நடத்துவதற்கும், தொழிலாளர்களுக்கு வாய்ப்பு ஏற்படுவதற்கும் அரசு முனைப்புள்ளம் கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளிலும் ஈடுபடலாம்.

(4) பெரியார் மாவட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் அ. பொன்னுசாமி, ச. பாலகிருஷ்ணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு அதைக்கொண்டு வருவார்.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெரியார் மாவட்டம், பெருந்துறை மற்றும் ஊத்துக்குளி ஒன்றியப் பகுதிகள் கடுமையான வறட்சியின் பிடியில் சிக்கி உள்ளதால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு நிலவரி, விவசாயக் கடன் மற்றும் மின் கட்டணம் செலுத்த இயலாமலுள்ள நிலை குறித்த' அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பகுதி பற்றிய வறட்சி நிலைமை, அவற்றிற்காக செய்யவேண்டிய சலுகைகள் மற்றவைகளை பற்றிய விரிவான அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வருவாய்த் துறைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆக, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அந்த அறிக்கை கிடைக்கப்பெற்று ஆராய்ந்து பிறகு தக்க நடவடிக்கைகளை எடுக்க இருக்கின்றார்கள். விரைவில் நடவடிக்கை எடுக்கும் படியாக அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதற்கான உரிய நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும்.

(5) சென்னை குடிசைப் பகுதிகள் சிலவற்றில் ஏற்பட்ட தீ விபத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் வி. பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன், மற்றும் கோ. வீரையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1—4—1986 ஆம் தேதியன்று தாம்பரம் ரெங்கநாதபுரம் மற்றும் சென்னை மாம்பலம் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட தீ விபத்துகளினால் பல குடிசை வீடுகள் எரிந்து நாசமாகி பல ஆயிரம் ரூபாய்கள் நஷ்டமேற்பட்டுள்ளதனால் அப்பகுதிவாழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, சைதாப்பேட்டை, வட்டம், கடப்பேரி கிராமத்தைச் சேர்ந்த ரெங்கநாதபுரத்தில் 1—4—1986 அன்று 3-30 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டது. அதில் 35 குடிசைகள் பாதிக்கப்பட்டன. அதன் காரணமாக சட்டப்படி கொடுக்க வேண்டிய நிவாரணங்கள் அங்கே வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மாம்பலம் பகுதியில் அப்படிப்பட்ட தீ விபத்து எதுவும் நடைபெறவில்லை. ஆனால் அந்த 35 குடிசைகளுக்கு முறைப்படி வழங்கப்பட வேண்டிய சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

(6) சென்னை அம்பத்தூர் இந்தியா போர்ஜ் நிறுவனத்தை மீண்டும் திறப்பது குறித்து.

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, "சென்னை, அம்பத்தூர், இந்தியா போர்ஜ் நிறுவனத்தைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளாததோடு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அத்தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படாமையால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னை, அம்பத்தூரிலுள்ள இந்தியா போர்ஜ் அண்டு டிராப் ஸ்டாம்பிங்ஸ் லிமிடெட் என்னும் போர்ஜிங்ஸ் தயாரிக்கும் நிறுவனத்தில் சுமார் 500 தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தனர். திரு. குசேலரை தலைவராகக் கொண்ட இந்தியா போர்ஜ் அண்டு டிராப் ஸ்டாம்பிங்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் என்னும் சங்கம் இந்நிறுவனத்தில் இயங்குகிறது.

2. தொடர்ச்சியாக தொழிலில் மந்தம், அதன் காரணமாக உற்பத்தி பொருள்களுக்கு தேவை ஏற்படாதது, உற்பத்தி பொருள் தேக்கம், தொடர்ந்து ஏற்பட்ட நட்டம் ஆகியவற்றின் காரணமாக இந்நிறுவனத்தை 14–1–1984 முதல் மூடுவதாக நிர்வாகம் அறிவித்து பிறகு 19–1–1984 அன்று முதல்தான் நிறுவனத்தை மூடியது. இத் தொழிற் தகராறில் சென்னை, இரண்டாம் தொழிலாளர் துறை துணை ஆணையர் மேற்கொண்ட சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஒப்பந்தம் ஏற்படாததால் அரசுக்கு அவர் தனது சமரச முறிவறிக்கையை அனுப்பினார். இந்த அறிக்கையின் மீது அரசு ஆணை பிறப்பித்து இத்தொழிற்

தகராறை சென்னை, தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு (Industrial Tribunal) விட்டுள்ளது. (அரசு ஆணை எண். 589, நாள் : 13–3–1984). நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்பார்க்கப் படுகிறது.

3. இந்நிலையில் இருதரப்பினரின் விருப்பப்படி நிறுவனத்தை மீண்டும் திறந்து இயக்குவதற்குண்டான சாத்திய கூறுகள் பற்றி ஆணையர் முன்பும் தொழிலாளர் நல அமைச்சர் முன்பும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. பேச்சுவார்த்தைகளின்போது, நிறுவனத்தை சீராக இயக்குவதற்கு உற்பத்தியை அதிகரித்து சுமார் 200 தொழிலாளர்களுக்கு மேல் ஆட்குறைப்பு செய்ய சங்கம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று நிர்வாக தரப்பில் கூறப் பட்டது. சங்கத்தரப்பில், இப்பிரச்சினைகளை நிறுவனம் திறந்த பிறகு பேசிக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. பேச்சு வார்த்தைகளில் ஒரு இணக்கம் இருதரப்பினர்களிடையே ஏற் படவில்லை. இதன் பிறகு, சங்கம், இந்த நிறுவனத்தின் நிலை பற்றி தெரிவித்து நிறுவனம் நல்ல முறையில் இயங்கக்கூடிய நிலையில் உள்ளதென்றும், அரசால் நியமிக்கக்கூடிய ஒரு திறமை யான நிர்வாகத்தின் கீழ் நிறுவனத்தை ஒப்படைத்து அதை நடத் துவதற்கு ஏற்பாடுகள் செய்யலாமென்றும் தெரிவித்தது. நிறு வனத்தை திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி தொழிலாளர் நல அமைச்சர் மற்றும் தொழில் அமைச்சர் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து தொழிலாளர்துறை ஆணை யர் முன்பு மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வரு கின்றது. நிறுவனத்தைத் திரும்ப இயக்குவதற்கான சாத்தியக் கூறுகளை தொழில் துறையும் ஆய்ந்து வருகிறது.

4. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 200 உதவித்தொகை வழங்க 2–1–1986 நாளைய அரசு ஆணை எண். 6-ல் உத்தரவு கள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. உதவித் தொகையை திரும்ப அர சுக்கு செலுத்துவதற்கு அரசு கோரியவாறு நிர்வாகம் உத்திர வாதம் தரவில்லை. இருப்பினும் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்குமாறு அரசு உத்தரவிட்டு அதன் அடிப்படை யில் 8–4–1986 அன்று 402 தொழிலாளர்களுக்கும் 16–4–1986 அன்று 50 தொழிலாளர்களுக்கும் உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது. மீதமுள்ள தொழிலாளர்களும் இத்தொகையைப் பெற உள்ளனர்.

**(7) புதுக்கோட்டை, மச்சிவாடி குடிசைப்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து.**

**திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், மச்சிவாடியில் 12–4–1986 அன்று 60க்கும் மேற்பட்ட குடிசைகள் தீ விபத்தி னால் எரிந்து போனதால் சுமார் 300 பேர்கள் தங்குவதற்கு இடம் இல்லாமலும், மற்ற நிவாரண உதவிகள் கிடைக்காமலும்





அவதிப்படும் நிலைமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12–4–1986 அன்று ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக பதினாறு குடிசைகளும், ஒரு சிறிய இயந்திரத் தொழிற்சாலையும் சேதமடைந்தன. 16 குடும்பங் களுக்கும் தலா ரூ. 300 வீதம் அரசு அளிக்கும் நிவாரணத் தொகை மொத்தம் ரூ. 4,800 வழங்கப்பட்டிருக்கிறது. அத் துடன் பாதிக்கப்பட்ட 16 குடும்பங்களுக்கும் முறைப்படி, விதி முறைப்படி ஒரு வேட்டி, ஒரு புடவை, 5 கிலோ அரிசி மற்றும் 1 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன. இத் தீ விபத்தில் உயிர்சேதம் ஏதும் ஏற்படவில்லை. மற்றவைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

**திரு. ஜே. முகம்மது கனி :** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்த தீ விபத்திற்குக் காரணம் ஒரு தனியார் தொழிற்சாலை என்பதும் அந்தத் தனியார் தொழிற்சாலையை அங்கிருந்து எடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன். இங்கே பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு தமி ழகத்தினுடைய முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 2 ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கிருந்து வந்த புகாரை ஒட்டி நான் முதலில் கூறியது படி நிலைமைகள் ஆராயப்பட்டு வருகின்றன. அதனை ஒட்டி என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று அங்கிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூல மாக வருகின்ற அறிக்கையை பார்த்துத்தான் மேற்கொண்டு நாம் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஆகவே, தீ விபத்து ஏற்படுமானால் குடிசைகளுக்கு 300 ரூபாய் அளவுக்கும் மற்றும் பல பொருட்களும் சலுகைகளாக தரலாம் என்று விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின் படி தான் ஏற்கெனவே தரப்பட்டு இருக்கின்றன.

**(8) கொடைக்கானலில், தோட்டத் தொழிலாளர்கள் வேலை நீக்கம். செய்யப்படுவது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் வேட்ச் சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மற்றும் கே. குப்புசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச் சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**மாண்புமிகு வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " அண்ணா மாவட்டம், கொடைக்கானல் பகுதியில் ஏற்பட்டுள்ள சில சூழ்நிலை காரணமாக தோட்டங்களிலும் கூப்புகளிலும் வேலை செய்யும் சுமார் 5,000 தொழிலாளர்கள் வேலையின்றி இருப்பதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

கொடைக்கானலில் உள்ள தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படவில்லை. மாறாக கூப்பு ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் சிலர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இப்பிரச்சினை கொடைக்கானல் வருவாய்த் துறை மற்றும் வனத்துறையைச் சார்ந்ததாக இருப்பதால் அவர்கள் முன் நிலுவையில் உள்ளது. கூப்பு ஒப்பந்ததாரர்களிடம் பணியாற்றும் தொழிலாளர்கட்கு தொழிலாளர் நலச் சட்டங்களை அமுல்நடத்த வாய்ப்பு இல்லை.

**(9) விவசாயத் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்படியான வழக்குகளை விசாரிக்க, அண்ணா, மதுரை, திருச்சி மாவட்டங்களுக்கான ஒரே ரெவின்யூ கோர்ட் திருச்சியில் அமைந்துள்ளது,—**

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்ட் " சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க அண்ணா, மதுரை, திருச்சி, ஆகிய மாவட்டங்களுக்கான ஒரே ரெவின்யூ கோர்ட் திருச்சியில் அமைக்கப்பட்டுள்ளதால் அங்கு மிக அதிக எண்ணிக்கையில் வழக்குகள் தேங்கியுள்ளன. மேலும் அம்மாவட்டங்களிலுள்ள மக்கள் மேற்காணும் வழக்குகள் சம்பந்தமாக திருச்சிக்கு வர வேண்டிய கட்டாய சூழ்நிலையின் காரணமாக ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிரமங்களைப் போக்குவதற்காகத்தான் வருவாய் நீதி மன்றங்கள் அமைப்பதிலே



(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

சில மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பதை வருவாய்த்துறை மானிய கோரிக்கையில் பதில் உரைக்கும்போது நான் தெளிவுபடுத்தினேன். மதுரை மாவட்டம், அண்ணா மர்வட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காமராஜ் மாவட்டம் ஆகிய வரம்புக்கு உட்படுத்தி ஒரு புதிய வருவாய் நீதி மன்றம் அமைக்க அரசு முயற்சி எடுத்து வருகிறது. விரைவில் அமைக்கும் சூழ்நிலை ஏற்படும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று திண்டுக்கல் பகுதியில் இருந்து திருச்சிக்கு வரவேண்டிய அவசியம் ஏற்படாது. மதுரையிலேயே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வழி வகை ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒரு ரெவின்யூ கோர்ட் வீதம் அல்லது ஏற்கெனவே விசாரித்தபடி அங்கே இருக்கக்கூடிய சப் கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுத்து இப்படிப்பட்ட இந்த "கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்ட்"—சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே பல்வேறு இடங்களில் சப் கலெக்டர்களுக்கு அந்த அதிகாரம் இருந்து கொண்டு வருகிறது. சப் கலெக்டர்கள் பல்வேறு பணிகளை ஆற்றுவதன் காரணமாக இதில் அதிக கவனம் செலுத்த முடியவில்லை. ஆகவே, வருவாய் நீதிமன்றம் என்று தனியாக ஏற்படுத்தப்பட்டு, கூடுதலாக ஏற்படுத்தப்பட்டு திருச்சியில் ஒன்றும் மதுரையில் ஒன்றும் மற்றும் வேறு பல இடங்களிலும் ஏற்படுத்தப்பட இருக்கிறது. இதன் காரணமாக வருவாய் நீதிமன்றம் என்று அமைத்து விடுகின்ற போது அதில் அமைக்கப்படுகின்ற ஆர்.டி.ஓ., அல்லது சப் கலெக்டர்கள் முழுமையாக இதைப்பற்றி ஆராய்வதற்கு வழி ஏற்படும். அந்த வகையில் அண்ணா மாவட்டத்திற்கும், மதுரை மாவட்டத்திற்கும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு நல்ல வாய்ப்பு ஏற்படும்.

**(10) அரசுப் பணிகளில் தற்காலிகமாக பணியாற்றுபவர்களை நிரந்தரமாக்குவது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் வி. பி. சிந்தன், அ. ரகுமான்கான், டி. ஆர். வேங்கடரமணன், பி. கே. எம். முத்துராமலிங்கம், ஜே. முகம்மது கனி மற்றும் ஆர். செங்காளியப்பன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்

புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. ஜே. முகம்மது கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' தமிழக அரசின் பல்வேறு அலுவலகங்களில் தற்காலிக ஊழியர்களாக பணியாற்றி வெளியேற்றப்பெற்ற இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்தர்கள் ஆகிய சுமார் 3,000 பேரை 22–9–1984 ஆம் தேதியிட்ட, தமிழ்நாடு அரசு ஆணை ஜி.ஓ. 996-ன்படி நிரந்தரம் செய்வதாகக் கூறி விண்ணப்பங்கள் பெற்று இன்னும் அவர்களுக்கு நிரந்தர வேலை அளிக்காதது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட, அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

தற்காலிகமாக அரசு அலுவலகங்களில் பணிபுரிந்த இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க வேலை வாய்ப்பகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணி/தமிழ் நாடு நீதி அமைச்சுப் பணி ஆகியவற்றில் தற்காலிகமாக வேலை பார்த்து வந்த இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்றும் தலைமைச் செயலகப் பணியில் தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் அனைவரையும் 25–6–1984 அன்று அவரவர்கள் பணி புரிந்த துறையிலேயே பணியினை வரன்முறை செய்ய 22–9–1984 ஆம் நாளிட்ட அரசு ஆணையின்படி அரசு உத்திரவிட்டுள்ளது.

(2) 25–6–1984 அன்று பணியில் இல்லாதவர்களும், மேற்கூறிய 22–9–1984 அன்று வெளியிடப்பட்ட அரசு ஆணையின்படி, பணியினை வரன்முறை செய்யப்படாத பணியாளர்களிடமிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்யப்பட்டது.

(3) தேர்வாணையம் சில ஆண்டுகளுக்கு தேர்வு நடத்தாததினால், தேர்வாணையம் மூலம் ஆட்கள் தேர்ந்தெடுக்க முடியாமல் போனதன் காரணமாக வேலை வாய்ப்பகம் மூலம் ஏராளமான துறைகளில் தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்டவர்களின் பணியினை முறைப்படுத்துவதற்கு அரசு இசைவளித்தது. தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிகளுக்கு அண்மையில் தேர்வு



நடைபெற இருப்பதாலும் இந்தக் கடுமையான போட்டித் தேர்வின் மூலம் மிகத்தரமுள்ளவர்களும், கட்டுப்பாடு உள்ளவர்களுமான ஊழியர்களை அரசுப் பணிக்குத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு உள்ளது. அடிக்கடி தற்காலிகப் பணியாளர்களை அரசுப் பணியில் இருந்தமைக்காகவும் இரக்கம் காரணமாகவும் நிரந்தரப் படுத்துவதென்பது முறையான செயலாகாது என்பதால், தற்போது குறிப்பிடப்படுள்ளவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிப்பதற்கில்லையென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(முற்பகல் 10–00)

**(11) தமிழகத்தின் பல பகுதிகளில் நிலவும் றட்சி காரணயாக ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறையைப் போக்குதல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் கு. சுப்பராயன், ச. கோவிந்தசாமி, சி. பழனிமுத்து, என். எஸ். வி. சித்தன், பி. கே. எம். முத்துராமலிங்கம், இரா. தாமரைக்கனி, ப. தீர்த்தராமன், க. சோலைராசு, ஆ. நடராசன், கு. ரமணி, கோ. வீரய்யன், வி. பி. சிந்தன், ப. ந. இராமச்சந்திரன், மு. மாரிமுத்து, ச. பாலகிருஷ்ணன், மா. சுந்தரதாஸ், ஆர். ரெங்கசாமி, த. புஷ்பராசு, டாக்டர் க. நல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, '' தமிழ்நாடு முழுவதும் நிலவிடும் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையினால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் படும் இன்னல்கள், அதனைப் போக்கிட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

பருவ மழை பொய்த்ததின் காரணமாக சில மாவட்டங்களில் பாதக பருவ நிலை நிலவி வருவதாக மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. முதல் கட்டமாக மதுரை, அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கம், பெரியார் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் குடிநீர்ப் பணிகளுக்கென 10–3–1986 அன்று ரூ. 40 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களுக்கு மேற்கொண்டு நிதி

உதவி கோரியும், மற்றும் பாதிக்கப்பட்டுள்ள இதர மாவட்டங்களுக்கு நிதி உதவி கோரியும் வந்துள்ள சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் செயற் குறிப்புகள் அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகின்றன.

மேலும், சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பின், வருவாய்த் துறை அலுவலர்களால் நேரடி ஆய்வு செய்யப்பட்டபின் தகுதியுள்ள நிலங்களுக்கு முறைப்படி நிலவரி ரத்து செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது பற்றிய விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது என்றாலும், அது முழுமையாக வைக்கப்படவில்லை. அதற்குப் பிறகு. பல்வேறு கருத்துக்களை வருவாய்த்துறை மானியக் கோரிக்கைக்கு பதிலளிக்கும்போதே சொன்னேன். அதற்குப் பிறகும் சொன்னேன். அதற்குப் பிறகு தலைமைச் செயலாளர் மூலமாக கூட்டப்பட்ட கூட்டத்திலேயும், பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டிய கூட்டத்திலும் ரூ. 14 கோடிக்கு மேல் இந்தக் குடிநீர் வழங்குவதற்காக பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு, ஆழ்துளைக் கிணறுகளை புதியதாக உருவாக்குவது, ஏற்கெனவே இருக்கின்ற ஆழ்துளைக் கிணறுகளை பழுதுபார்த்தது, செம்மைப்படுத்துவது, குடிநீர் இல்லாத இடங்களில் லாரிகளின் மூலமாக கொண்டுவருவது போன்ற முறைகள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்த மாவட்டத்தினுடைய தேவைக்கேற்ப அமையும் என்பதை குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இன்றைக்கு சற்றேறக்குறைய 42 தீர்மானங்களுக்கு அருள்கூர்ந்து அனுமதி வழங்கியிருக்கிறீர்கள். இது ஒரு முக்கியமான பிரச்சினை. ஆகவே, நேரத்தைக் குறைத்துவிடாமல், கொஞ்சம் என்னைப் பேச அனுமதியுங்கள். ஆக இன்றைக்கு தமிழகம் முழுவதிலுமுள்ள பிரச்சினை, இந்த வறட்சிப் பிரச்சினை. இப்படிப்பட்ட ஒரு அறிக்கையை வைக்க நம்முடைய அரசுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே இதிலே இல்லாத சில விவரங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். நாங்கள் திருத்தம் கொடுத்திருக்கிறோம். தமிழகம் முழுவதும் உள்ள வறட்சியைத்தான் சொல்லியிருக்கிறோம். ஆனால், நான்கு மாவட்டங்களைப் பற்றிய விவரங்கள் தான் இதில் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், புதுக்கோட்டை மாவட்டம், சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம், இன்னும் பல்வேறு மாவட்டங்களைப் பற்றிய எந்தவிதமான குறிப்பும் இதில் இல்லை. ரூ. 40 இலட்சத்திற்கான விவரங்கள் தான் இதில் இருக்கின்றன. நம்



_ய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ரூ. 10 கோடி .று சொன்னார்கள். ஏன் அந்த விவரத்தையும் இதிலே ,சர்த்துப்போட்டிருக்கலாம் அல்லவா ? நான் இந்த அவை ஆரம்பித்த காலத்திலிருந்தே, அதாவது ஜனவரி மாதத்திலிருந்தே சொல்லிக்கொண்டிருக்கிறேன். நிலைமை கடுமையாக இருக்கின்றது. வருகின்ற மாதங்களில் இன்னும் மோசமாக இருக்குமென்று......(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே விவாதிக்கப்பட்டாகிவிட்டது. நீங்கள் அமைச்சரின் கவனத்தை ஏற்கெனவே ஈர்த்து விட்டீர்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், '' மாவட்டங்களுக்கு மேற்கொண்டு நிதி உதவி கோரியும், மற்றும் பாதிக்கப்பட்டுள்ள இதர மாவட்டங்களுக்கு நிதி உதவி கோரியும் வந்துள்ள சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் செயற்குறிப்புகள் அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது. மேலும் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பின், வருவாய்த்துறை அலுவலர்களால் நேரடி ஆய்வு செய்யப்பட்டபின் தகுதியுள்ள நிலங்களுக்கு முறைப்படி நிலவரி ரத்து செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் '' என்று போட்டிருக்கிறது.

நான் கேட்கிறேன். இந்தப் பசலை அடுத்த மாதத்தோடு முடியப் போகிறது. நீங்கள் எப்போது பரிசீலனை செய்து, எப்போது அறிவித்து, எப்போது விசாரணை நடத்தப்போகிறீர்கள் ? வறட்சி என்று அறிவித்தால் தானே அவர்களுக்குக் கடன் வசதிகள் ஒத்திவைக்கப்பட முடியும் ? நான் அதைத்தானே மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறேன். எனவே, நீங்கள் விரைவாக அறிவிக்க வேண்டும். இதிலே பெரிய விவசாயிகளுக்காகவும், வசதி படைத்த விவசாயிகளுக்காகவும் நான் வாதாடவில்லை. இது மிக முக்கியமான பிரச்சினை. (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னபடி, இந்தப் பசலைக்குள்ளாகவே அவர்கள் கூறுகின்ற அந்த கோரிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்து வருகிறது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது. அதற்கான முயற்சிகளை எடுத்து, எந்தெந்த சலுகைகளை எந்தெந்த அளவிலே ஆங்காங்கே வெளியிட வேண்டுமோ, அவ்வாறு வெளியிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்று காலைப் பத்திரிகையில் மதுரை மாவட்டத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இப்படி பல்வேறு மாவட்

டங்களிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இ பசலைக்குள்ளாக எடுக்கவேண்டுமென்பது மாண்புமிகு உறுட ருடைய கோரிக்கை. இது நிறைவேற்றப்படும்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலை அவர்களே................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே சொன் னேன். ஓர் உறுப்பினர் தான் கேள்வி கேட்கலாம் என்று. அனைவரும் ஒத்துழையுங்கள்.. (குறுக்கீடு) முறைப்படி எப்போதும் 2 கவன ஈர்ப்புகளுக்கு மேல் எடுப்பது இல்லை. இன்றைக்கு 42 எடுக்க இருக்கிறோம். (குறுக்கீடு).

**12. குற்றாலம் மலைப் பகுதியில் பன்றிகளால் விவசாய நிலத்திற்கு ஏற்படும் சேதம்.**

**திரு. டி. ஆர். வெங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குற்றாலம் மலைப் பகுதியிலிருந்து, காட்டுப் பன்றிகள் இறங்கி குற்றாலம் புளியரை, வடகரைப் பகுதிகளிலுள்ள நெற்பயிருக்கு விளைக்கும் சேதம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

திருநெல்வேலி மாவட்டத்தில் காடுகளை ஒட்டியுள்ள நிலங்களில் உள்ள பயிர்களைக் காட்டுப் பன்றிகள் அழித்து வருகின்றன என்றும், 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய விலங்கினங்களில் காட்டுப்பன்றிகளும் சேர்க்கப்பட்டுள்ளதால் இவற்றை விவசாயிகள் வேட்டையாடவோ, சுட்டுக் கொல்வதற்கோ முடியவில்லை, என்றும், ஆகவே மேற்கூறிய சட்டத்தின் பட்டியல்கள் III மற்றும் IV ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ள இவ்விலங்கை அப் பட்டியல்களிலிருந்து நீக்கி விட்டால் விவசாயிகள் காட்டுப் பன்றிகளை வேட்டையாடி அல்லது கொன்று தங்கள் பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதால் காட்டுப் பன்றியை வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் பட்டியல்களிலிருந்து நீக்குமாறு அரசுக்கு வேண்டுகோள் வந்தது. இந்த வேண்டுகோள் பரிசீலிக்கப்பட்டு, காட்டுப் பன்றிகளை மேற்படி சட்டத்தின் பட்டியல்கள் III மற்றும் IV இல் இருந்து பட்டியல்



று மாற்ற முடிவு செய்து, 6–12–1982 ஆம் நாளிட்ட சுர்சு மற்றும் மீன்துறை அரசாணை (நிலை) எண் 1594-ல் பித்த ஆணையும், அறிவிக்கையும் வெளியிடப்பட்டன. இந்த செ ாணைப்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் சரணாலயம் ற்றும் ஒதுக்கக் காடுகளுக்கு வெளியே உள்ள நிலங்களில் காட்டுப் பன்றிகளோ, முள்ளம்பன்றிகளோ பயிர்களுக்குச் சேதம் விளைவித்தால் விவசாயிகள் அவற்றைச் சுட்டுக் கொன்று தங்கள் பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம். சரணாலயம் மற்றும் ஒதுக்கக் காடுகளுக்குள்ளே உள்ள நிலங்களில் பயிர்களுக்கு இவ் விலங்குகளால் சேதம் ஏற்படுமாயின் தலைமை வனவிலங்குக் காப்பாளரிடமிருந்து உரிய அனுமதி பெற்று விலங்குகளை வேட்டையாடி அல்லது சுட்டுக் கொன்று பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

2. குற்றாலம் மலைப் பகுதிகளிலிருந்து காட்டுப் பன்றிகள் இறங்கி குற்றாலம், புளியரை, வடகரைப் பகுதிகளிலுள்ள நெற்பயிர்களுக்குச் சேதம் விளைவிப்பது குறித்து அப்பகுதி விவசாயிகளிடமிருந்து விவரங்கள் ஏதும் சமீபத்தில் வனத் துறையினருக்குக் கிடைக்கவில்லை. பொதுவாக காட்டுப் பன்றிகள் இரவு நேரங்களில் விவசாய நிலங்களில் புகுந்து தொல்லை கொடுப்பதுண்டு. அச்சமயங்களில் விவசாயிகள் தாரை, தப்பட்டை மூலம் ஒலியெழுப்பியும், பட்டாசுகள் வெடித்தும் பன்றிகளை விரட்டி விடுவார்கள். வனத்துறையினரின் ஆலோசனையை ஏற்று, சில விவசாயிகள் பழகிய நாய்களைக் கொண்டும் பன்றிகளை விரட்டி பயனடைந்துள்ளனர். இது தவிர, மேலே குறிப்பிட்டபடி திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் பயிர்களைச் சேதப்படுத்தும் காட்டுப் பன்றிகளையும், முள்ளம் பன்றிகளையும் கொல்வதற்கு விவசாயிகளுக்கு அனுமதி உண்டு.

**(13) சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரின் இல்லம் தாக்கப்பட்டுள்ளது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் கே. பி. இராமலிங்கம், திருவாளர்கள் ப. ந. இராமச்சந்திரன், எச். ஜி. ஆறுமுகம், கூடலூர் இ. வி. வேலு, மு. சின்னக்குழந்தை ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''24–4–1986 அன்று நள்ளிரவில் உறங்கிக் கொண்டிருக்கும் போது சிதம்பரம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கே. ஆர். கணபதி அவர்களின் வீட்டிற்குள் நகரசபை தி.மு.க. உறுப்பினர் திரு. ராஜு மற்றும் சுமார்

கவன ஈர்ப்புகள்

(டாக்டர் கே. பி. ராமலிங்கம்)

40 பேர்கள் பயங்கர ஆயுதங்களுடன் சென்று தெரு நுழைவு வாயில்களில் குப்பைத் தொட்டிகளை வைத்து வாகனங்கள் வராமல் தடை செய்து விட்டு எம்.எல்.ஏ. வீட்டுத் தொலைபேசி இணைப்பைத் துண்டித்துவிட்டு, கதவைத் தட்டி எம்.எல்.ஏ. வைக் கொல்ல முயற்சி செய்தபோது அதனைத் தடுக்க வந்த அவரது மைத்துனர் மற்றும் சிலர் காயப்படுத்தப்பட்டுள்ளதால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

பிப்ரவரி 1986 இல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலின் போது திரு. இராசன் என்ற நகர்மன்ற உறுப்பினர் கட்சி மாறியது தொடர்பாக சிதம்பரம் நகர தி.மு.க. மற்றும் அ.இ அ.தி.மு.க. ஆகிய இரு கட்சியினருக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

2. இதன் தொடர்ச்சியாக 24—4—1986 அன்று இரவு திரு. இராசன் என்பவர் அவரது ஆதரவாளர்கள் சிலருடன் சிதம்பரம், புதுப்பேட்டை பிள்ளையார் தெருவில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. ஆர். கணபதியின் இல்லத்திற்குச் சென்றனர். இதைக் கண்ட சட்டமன்ற உறுப்பினரின் மைத்துனர் சட்டமன்ற உறுப்பினர் சென்னை சென்றிருப்பதாய் அவர்களிடம் கூறினார். எனினும் இராசனும் அவருடன் சென்ற கூட்டத்தினரும் கல்வீச்சில் ஈடுபட்டுள்ளனர். அந்தக் கல் வீச்சில் சட்டமன்ற உறுப்பினரின் மைத்துனருக்குக் காயம் ஏற்பட்டு அரசு மருத்துவமனையில் புற நோயாளியாக சிகிச்சைப் பெற்றார். கூட்டத்தினர் தொலை பேசிக் கம்பியைத் துண்டித்ததுடன், தெரு விளக்குகளையும் சேதப்படுத்தினர். அதன் பின்னர் அருகிலுள்ளோர் அங்கு வருவதைக் கண்டதும் இக் கூட்டத்தினர் ஓடிவிட்டனர்.

3. இச் சம்பவத்தில் சட்டமன்ற உறுப்பினரின் மிதி வண்டிக்கும், இரட்டை மாட்டு வண்டிக்கும் சேதம் ஏற்பட்டது. அதன் பின்னர் சட்டமன்ற உறுப்பினரின் உறவினர் ஒருவர் 25—4—1986 அன்று சிதம்பரம் நகரக் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் 238/86 இல் இந்திய தண்டனை சட்டப் பிரிவுகள் 147, 148, 427, 452, 336, 323 மற்றும் 307 இன்கீழ் ர் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சிதம்பரம் காவல் துறை,



கவன ஈர்ப்புகள்

(திரு. ஆர். எம். வீரப்பன்)

துணை கண்காணிப்பாளர் தனது குழுவுடன் சம்பவம் நடந்த இடத்தைச் சென்று பார்வையிட்டார். நடந்த இச்சம்பவம் தொடர்பாக ஐந்து நபர்கள் 25—4—1986 அன்று கைது செயயப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். திரு. இராசன் என்பவர் தலைமறைவாக உள்ளார். சட்டமன்ற உறுப்பினரின் இல்லம் மற்றும் ஏனைய இடங்களில் காவல் துறையின் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற விவர அறிக்கையின் மூலம் இந்த அவை தெரிந்துக் கொண்டிருப்பது என்னவென்றால், எங்கள் இயக்கத்தைச் சார்ந்த வி.ஐ.பி.க்கே, ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய இல்லத்தைத் தாக்குகிற நிலைமை திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்ற இடங்களில் இருக்கிறது. இதுபோன்ற ஒரு பாதுகாப்பின்மை இருக்கிறது என்றால் சாதாரணத் தொண்டர்களுக்கு, இதுபோன்ற சாதாரணத் தேர்தலில் வெற்றி பெற்ற இடங்களில் எப்படிப்பட்ட நிலைமைகளை அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நேரத்தில் அவர்களுக்குப் போதுமான பாதுகாப்புகளை, (குறுக்கீடு) மிகவும் முக்கியமான பிரச்சினை. ஒரு எம்.எல்.ஏ. ......

**திரு. சு. பாலன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு கட்சியைப் பற்றி சொல்வது எப்படி அவைக் குறிப்பிலே இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கனவே என்னிடத்திலே மனு வந்திருக்கிறது. தந்தி கூட வந்திருக்கிறது. (குறுக்கீடு) மாவட்டக் கண்காணிப்பாளரிடத்திலே கேட்டிருக்கிறேன். அறிக்கை கூட வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) அறிக்கை வரப் பெற்றிருக்கிறது. எனவே, இதோடு விடுங்கள். (குறுக்கீடு) அறிக்கையிலேயே தி.மு.க. என்று இருக்கிறது. என்னைச் சொல்ல வைத்து விட்டீர்கள். மாவட்டக் கண்காணிப்பாளர் அனுப்பியிருக்கிறார். அதனால், அது அவைக் குறிப்பில் இருக்கட்டும். ஒரு உறுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச்சனை தாக்கப்பட்டிருக்கிறார் என்றால் அவர் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும். நீங்கள் கட்சிக்காகப் பேசாதீர்கள். உறுப்பினருக்காகப் பேசுங்கள். ஒரு உறுப்பினருடைய இல்லம் தாக்கப்பட்டிருக்கிற காரணத்தால், நான் அவர் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன். 'தேர்ட் பெர்சன்' என்றால் அது கிடையாது. (குறுக்கீடு) மேற்கொண்டு பேச வேண்டியதில்லை. இதோடு முடித்து விடுங்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது ஒரு

கவன ஈர்ப்புகள்

(திரு. ஆர். எம். வீரப்பன்)

அறிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையிலே இருக்கின்ற செய்திகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டால் பிரச்சினையே எழாது. இங்கே தமிழகம் முழுவதும் என்று அவர்கள் சொல்லத் தொடங்கியதற்குப் பிறகு தான் இந்தப் பிரச்சினை எழுந்து இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள், இந்த நிகழ்வின் தொடர்பாக அவர்கள் எந்தத் தகவலைத் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அந்தக் கேள்வியை முறையாகக் கேட்டால் அரசின் தரப்பிலேயிருந்து தெளிவாகவே பதில் தர முடியும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, அந்தச் சம்பவத்தில், இன்று வரை குற்றவாளியான திராவிட முன்னேற்றக் கழக கவுன்சிலர் இராஜன் என்பவரை போலீசார் கைது செய்யாததோடு சுமார் 400 திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கோர்ட்டுக்கே கும்பலாக வந்து, போலீஸ் கையில் நேரடியாகப் பிடிபடாமல், கோர்ட்டில் நேரடியாக ஆஜர் ஆகச் செய்வதற்கு அந்த போலீஸ் உடந்தையாக இருந்து விட்டு, இங்கே என்ன அறிக்கை தந்திருக்கிறார்கள் என்றால், 'இன்னும் தலைமறைவாக இருக்கிறார் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவர் உண்மையிலேயே நேரடியாக கோர்ட்டிலே ஆஜர்படுத்தப் பட்டிருக்கிறார். எனவே, இது தவறான தகவல்......

**மாண்புமிகு பேரதைத் தலைவர்:** இத்துடன் போதும். நான் பார்த்துக் கொள்கிறேன்.

**(14) திருச்சி பாலக்கரையில் திரையரங்கு ஒன்று இடிந்து விழுந்ததால் பலர் காயமுற்றுள்ளது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் கு. ரமணி, வி. பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன், க. சோலைராசு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

(முற்பகல் 10-10)

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "24-4-1986 ஆம் தேதி திருச்சி பாலக்கரை மெயின் பஜார் மக்கள் நிறைந்த பகுதியில் ஒரு சினிமா திரையரங்கு இடிந்து விழுந்து 20-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ள நிலை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



கவன ஈர்ப்புகள்

திரு. ஆர். எம். வீரப்பன்

**அறிக்கை.**

மயிலஞ்சந்தை திரு. பி. ஆர். காசி செட்டியார் அவர்களின் குமாரர் திரு. கா. சுந்தரம் என்பவருக்கு திருச்சிராப்பள்ளி நகரசபை, வார்டு 4, பிளாக் 7, பழைய டி. எஸ். 313 (பகுதி) யில் ஒரு நிரந்தர திரையரங்கு அமைக்க திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் தனது கடித எண். ஆர். சி. டி. 1 183197/79, நாள்: 25-10-1980 அன்று தடையின்மைச் சான்று வழங்கினார். மேற்படி தடையின்மை சான்றின் கால அளவு 24—10—1983 உடன் முடிவடைந்துவிட்டது. மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டிட வரைபடங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரால் 27—5—1981 அன்று சில நிபந்தனைகளுடன் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2. மேலும், மூன்று ஆண்டுகளுக்கு அதாவது 24-10-1986 வரை தடையின்மைச் சான்றின் காலத்தை நீட்டிக்கும் திரு. கா. சுந்தரம் அவர்களின் கோரிக்கை மீது, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொள்ளப்பட்டு அறிக்கை கோரப்பட்டுள்ளது.

3. திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருச்சிராப்பள்ளி நகரசபை பகுதியில் வார்டு 4, பிளாக் 7, டி.எஸ். எண். 313 (பகுதி) யில் புதிதாக அந்த திரை அரங்கு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. 24—4—1986 அன்று மாலை 6 மணி அளவில், ஆர்.சி.சி. திண்காரைக்கட்டிற்கு உதவிக்சாக கொடுக்கப்பட்டிருந்த மரத்தூண்கள் முறிந்த காரணத்தினால் விபத்து ஏற்பட்டது. அதன் விளைவாக கட்டிடப் பணியில் ஈடுபட்டிருந்த கீழ்க்கண்ட 16 பேர்கள் காயமடைந்னர்:—

| | | |
|---|---|---|
| 1. | திரு. தம்பு .. | .. 25 வயது. |
| 2. | திரு. அலெக்சாண்டர் | .. 22 வயது. |
| 3. | திரு. வீராசாமி .. | .. 45 வயது. |
| 4. | திருமதி மரகதம் .. | .. 45 வயது. |
| 5. | திருமதி அங்கம்மாள் | .. 38 வயது. |
| 6. | திருமதி மீனாட்சி .. | .. 30 வயது. |
| 7. | திருமதி கிருஷ்ணம்மாள் | .. 45 வயது. |
| 8. | திருமதி ராஜம்மாள் | .. 18 வயது. |
| 9. | திருமதி ராஜலெட்சுமி | .. 35 வயது. |
| 10. | திருமதி லட்சுமி .. | .. 40 வயது. |
| 11. | திருமதி செல்லமணி | .. 38 வயது. |
| 12. | திருமதி தாயம்மா | .. 40 வயது. |
| 13. | திரு. மாணிக்கம் | .. 48 வயது. |
| 14. | திரு. பழனிச்சாமி | .. 49 வயது. |

கவன ஈர்ப்புகள்
(திரு. ஆர். எம். வீரப்பன்

15. திரு. கருப்பையா .. 40 வயது.
16. திரு. பெருமாள் .. .. 25 வயது.

மேற்குறிப்பிட்ட 16 நபர்களில் முதல் 5 நபர்கள் மருத்துவ மனை
யில் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். மற்றவர்கள்
எம்.எஸ். II மற்றும் எம்.எஸ். I, பிரிவுகளில் சேர்க்கப்பட்
டுள்ளனர். எல்லா நபர்களும் சிறு காயமுற்றனர். தேவையான
சகல உதவிகளும் காயமடைந்தவர்களுக்கு அளிக்கப்
பட்டுள்ளன. அவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு
மருத்துவ சிகிச்சையில் உள்ளனர்.

4. இது சம்பந்தமாக இத்திரையரங்கின் உரிமையாளரான
மயிலஞ்சந்தை திரு. கா. சுந்தரம் என்பவர் மீது இந்திய குற்ற
வியல் சட்டப்பிரிவுகள் 337 மற்றும் 338 கீழ் திருச்சி பாலக்கரை
காவல் நிலையத்தில் (குற்ற எண். 618/86) வழக்கு ஒன்று பதிவு
செய்யப்பட்டு உள்ளது. இது சம்பந்தமாக திரு. கா. சுந்தரம்
25—4—1986 அன்று கைது செய்யப்பட்டு, அன்றே ஜாமீனில்
விடப்பட்டார். இவ்வழக்கு விசாரணையில் உள்ளது. இது
சம்பந்தமாக குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளது.

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, சினிமா தியேட்டரைக்
கட்டுவதற்கு முன்பாகவே, அது இடிந்து விழுந்து சுமார் 20
பேர்கள் காயம்பட்டிருக்கிறார்கள். ஆனால் 16 பேர்களுக்குத்
தான் ஏற்பட்டிருக்கிறது என்று விவர அறிக்கையிலே கொடுத்
திருக்கிறார்கள். ஆனால் அதற்கு வரைப்படங்களெல்லாம்
வைத்து, தகுந்த முறையில் பரிசீலித்துத்தான் லைசென்ஸ்
கொடுக்கப்பட்டிருக்கிறது என்று எப்படியிருந்தாலும், வரை
படத்தைப் பரிசீலித்து அதற்கான கட்டுமானப் பணிகளை
நடத்தலாம் என்று லைசென்ஸ் கொடுத்ததும் உண்மையாகவே
இருந்தாலும், பெரிய குறைபாடு அதில் இல்லை என்றாலும்,
கட்டிடம் கட்டி மேலே போகப்போக அந்தக் கட்டிடம்
அடியோடு இடிந்து விழுந்து இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்
டிருக்க முடியாது. ஆகவே இந்த என்ஜினீயரிங் பகுதியிலே
இப்படிப்பட்ட லைசென்ஸ் கொடுக்கும் நேரத்தில் தகுந்த
முறையில் அந்தக் கட்டிடம் கட்டப்படுவதற்கும், கட்டுகின்ற
காலத்தில் அதைப் பரிசோதிப்பதற்கும் தகுந்த ஏற்பாடுகள்
அரசாங்கத்தால் செய்யப்படுமா? கட்டி முடிந்து அதில் உட்
கார்ந்து சினிமா நடக்கும்பொழுது இப்படி நடந்திருந்தால் என்ன
கதி ஏற்பட்டிருக்கும் என்பதை நினைத்துப் பார்த்து, எதிர்
காலத்தில் இப்படி ஏற்படாமல் இருப்பதற்கு என்ன வழிவகை
களை அரசு செய்யப்போகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலை
வர் அவர்களே, இங்கே ஒரு கட்டிடம் கட்டி, அதற்காக ஆர்.சி.சி
கான்கிரீட் எல்லாம் போடுவதற்காக முட்டுக் கொடுத்து, மேலே



கவன ஈர்ப்புகள்
(திரு. ஆர். எம். வீரப்பன்)

சிமென்ட் எல்லாம் போட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் அந்த
முட்டுக்கொடுத்த கால் முறிந்து விழுந்து, இதனால் இடிந்து
விழுந்திருக்கிறதே தவிர, கட்டி முடிக்கப்பட்ட கட்டிடம், உப
யோகிப்பதற்கான சான்றிதழ் கொடுக்கப்பட்டதற்குப் பிறகு
இங்கே கட்டிடம் இடிந்து விழவில்லை. எல்லாக் கட்டிடமும்
சிலநேரங்களில் இப்படிப்பட்ட கட்டிடங்களைக் கட்டுகின்ற
நேரத்தில் நடக்கும் தவறைப்போல இங்கேயும் நடந்திருக்கிறது.
திரையரங்குக்காகக் கட்டப்படும் கட்டிடம் என்பதுதான் இதில்
இருந்த விசேஷம். ஆகவே, கட்டிடம் நடைபெற்றுக்கொண்
டிருக்கும் போது அங்கே பணியாளர்கள் அல்லது அதற்குப்
பொறுப்பேற்றுக்கொண்டு இருக்கின்ற பொறியாளர்கள் இதைக்
கவனிக்காமல் இந்தக் கட்டிடம் கட்டுகின்ற முயற்சியிலே ஈடு
பட்டிருக்கிறார்கள் என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது. அதற்
காக, கட்டிடத்திற்குச் சொந்தக்காரராக இருக்கின்றவர்
கைது செய்யப்பட்டு, ஜாமீனிலே விடுதலை செய்யப்பட்டிருக்
கிறார். அதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது வழக்குகள்
தொடரப்பட இருக்கின்றன. சிலர் மீது தொடர்வதற்கான
நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, திரை
யரங்கு என்கிற அந்த வகையிலே பார்க்க முடியாது. கட்டி
முடித்ததற்குப் பிறகுதான் அந்தச் சட்ட விதிகளின்படி கட்டி
முடிக்கப்பட்டதா, அது பாதுகாப்பான கட்டிடமா என்றெல்
லாம் பார்க்கப்படுகிறது. இது கட்டிக் கொண்டிருக்கின்ற
கட்டிடங்களிலே ஒன்று, அவ்வளவுதான். இந்த அஜாக்கிரதை
யால் இந்தத் தவறு நிகழ்ந்திருக்கிறது. அதற்குக் காரணமாக
இருந்தவர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு
கின்றன.

**(15) வேலூர் மின் திட்டம் கந்திலி பகுதியில் துணை மின் நிலையம் ஒன்றை அமைத்தல் குறித்து.**

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்,
அவர்களே, "வேலூர் மின் திட்டம், கந்திலி பகுதியில் புதிய
துணை மின் நிலையம் துவக்க அனுமதி வழங்கியும் இதுவரை
பணிகள் துவக்கப்படாததால் இருந்து வரும் மின் அழுத்தக்
குறைவின் காரணமாக அப்பகுதிவாழ் விவசாயிகளுக்கு ஏற்
பட்டுள்ள இன்னல்கள் குறித்து" அவசரப் பொது முக்கியத்து
வம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே,
வடாற்காடு மாவட்டம் வேலூர் மின்திட்டம், கந்திலி
பகுதியில் உள்ள நரியனேரி என்னும் இடத்தில் 31/11 கிலோ
வாட் துணை மின் நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டு அதற்
குத் தேவையான நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடையும்
நிலையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தியவுடன் துணை மின்
நிலையத்துக்கான பணிகள் துவக்கப்படும்.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மின் நிலையம் தொடங்க இருப்பதாக அறிவித்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும், நிலச் சொந்தக்காரர்கள் ஒப்புதல் அளித்தும், துவங்கப்படாமல் இருக்கிறது. ஆனால், இதற்குப் பிறகு தொடங்கப்பட்ட பல திட்டங்கள் முடியும் தருவாயில் இருக்கின்றன. அப்படிப்பட்ட தாமதத்தின் காரணமாகவும் அந்தப் பகுதியில், அதிக அளவு விவசாய மோட்டார்கள் பயன்படுத்துவதாலும், வோல்டேஜ் பிராபிளம் ஏற்பட்டு, அடிக்கடி மோட்டார்கள் எரிந்து, பழுதடைந்து விடுகின்றன. அவற்றைப் போக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுமா ? உடனடியாக, மின் நிலையப் பணியைத் துவங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தியிருப்பது உண்மையாக இருக்குமானால், விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாற்று ஏற்பாடுகளின் மூலம் நிவாரணம் எளிதல்ல.

**(16) உசிலம்பட்டி தாலுகா, தொட்டப்பநாயக்கனூர் கிராமத்தில் கூடுதல் மின்மாற்றி நிறுவுதல்**

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, தொட்டப்பநாயக்கனூர் கிராமத்தில் அப்பகுதி மின்சார இணைப்பு நிலை கருதி புதிதாக நிறுவ திட்டமிட்ட டிரான்ஸ்பார்மர் நிறுவும் பணி கடந்த மூன்றாண்டு காலமாக நடைபெறாமலுள்ளதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுக்கா தொட்டப்ப நாயக்கனூர் மின் விநியோகப் பகுதிகளில் ஐந்து மின் மாற்றிகள் விநியோகம் செய்கின்றன. மேலும் இந்தப் பகுதியில் மின்சார விநியோக நிலையில் சீர்திருத்தம் செய்ய ஒரு புதிய கூடுதல் மின் மாற்றி விரைவில் நிறுவப்பட உள்ளது. இந்த வேலை கடந்த மூன்றாண்டு காலமாக நடைபெறாமல் உள்ளது என்ற கூற்று தவறு.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகாலமாக நடைபெறாமல் உள்ளது என்ற கூற்று தவறு என்று சொல்லியிருக்கிறார்கள். வேண்டுமென்றால், அரசுக்கு அது தெரியப்படுத்தப்படாமல் இருக்கலாம். அது பெரிய துணை மின் நிலையம் ஏற்படுத்துகின்ற திட்டம் அல்ல ; சிறிய டிரான்ஸ்பார்மர் ஏற்படுத்துகின்ற திட்டம். எனவே, அது மிக அவசியமாக இருக்கிற காரணத்தாலே, கடந்த 3 ஆண்டுகாலமாக அந்தப் பிரச்னை அங்கே இருக்கிறது. அது விரைவில் மேற்கொள்ளப்படுமா என்று அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.







**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, விரைவில் தீர்க்கப்படும். 3 ஆண்டுகள் என்று குறிப்பிட்டதுதான் தவறு என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு வேளை 4 ஆண்டுகளாக இருக்கலாம்.

**(17) வேலூர் சர்க்கரை ஆலையில் கரும்பு அரைப்பதில் ஏற்படும் தாமதம் குறித்து.**

**திரு. த. பழனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' வேலூர் சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை ஆலையைப் பயன்படுத்துவோர் கரும்பு அரைக்க சுமார் 15 முதல் 16 மாதங்கள் ஆவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை**

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவைக்காக பதிவு செய்யப்பட்ட 9933 ஏக்கரில் 15–4–1986 முடிய 6,393 ஏக்கர் அறுவடை செய்யப்பட்டு அந்த ஆலையிலேயே அரவை செய்யப்பட்டது. மீதமுள்ள 3,540 ஏக்கர் கரும்பும், ஜூன் 1986 இறுதிக்குள் அறுவடை செய்யப்பட்டு அவ்வாலையில் அரவை செய்யப்பட்டுவிடும். இந்த 3,540 ஏக்கர் கரும்பில் 340 ஏக்கர் கரும்பு கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலும், 1,568 ஏக்கர் கரும்பு ஏப்ரல் மாதத்திலும் நடவு செய்யப்பட்டதாகும். ஆகவே வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை செய்ய 15 அல்லது 16 மாதங்கள் சாதாரணமாக ஆகிறது என்ற கூற்று சரி என்று சொல்வதற்கில்லை. கடந்த ஆண்டு ஆலையின் தேவைக்கதிகமாக கரும்பு சாகுபடி செய்ததன் விளைவாக, மேற்படி கரும்பை வெட்டுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அந்தந்த மாதத் தேவைக் கேற்ப கரும்பை சாகுபடி செய்யாததாலும், தேவைக்கதிகமாக சாகுபடி செய்ததாலும், வெட்டு உத்திரவை சரியான காலத்தில் கொடுக்க முடியவில்லை. மேலும்

திரு. கா. இராசாராம்

1,500 ஏக்கர் உபரி கரும்பை அருகிலுள்ள ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கொடுக்க ஏற்கனவே சர்க்கரைத் துறை இயக்குநர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அளிக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையிலே 15 மாதங்கள், 16 மாதங்கள் ஆகின்றது என்கின்ற நிலைக்கு விளக்கமாக இங்கே பதில் சொல்லவில்லை. இருந்தாலுங்கூட, அங்கே அரவைப் பயன்படுத்துகின்ற அரவையாளர்களுக்கு ஏறக்குறைய 15, 16 மாதங்கள் ஆகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆற்காடு, ஆரணி, செய்யாறு வட்டங்களைச் சேர்த்து, அந்தப் பகுதியிலேயிருக்கிற மாம்பாக்கம் பகுதியிலே, தமிழ் நாடு கூட்டுறவுச் சர்க்க்ரை ஆலைகளுடைய பி. பிளாண்டை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தவைர் அவர்களே, அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

(18) எண்ணூர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட ஏற்பட்ட தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. ரகுமான்கான் அவர்கள், "சென்னை மணலியில் உள்ள எண்ணூர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் கழிவு வாயு வெளியாகும் குழாய் வழியாகத் திடீரென்று திராவகமும் தாரும் வெளியேறி தீப்பிடித்தது குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை தொழில்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர அறிவிப்பு கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லை.

அறிக்கை

29-4-1986 அன்று தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் (Chief Inspector of Factories) எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை பார்வையிட்டு கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:—

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின்—தொழிற்சாலை எண் 1 (Plant I) 17-4-1986 அன்று பராமரிப்புக்காக மூடப்பட்டது. பராமரித்த பிறகு மறுபடியும் தொழிற்சாலையில் இயந்திரத்தை ஆரம்பிக்கும் போது தொழிற்சாலையில் பயன்படாத காற்றுடன் எண்ணெயும் மேல் உச்சிக்கு அனுப்பப்பட்டது. அப்போது, வெளியேற்றும் தொட்டி உடைந்து அதிலிருந்து திரவ எண்ணெயும் பயன்படாத காற்றும் (Waste Gas) எல்லா இடங்களிலும் சிதறி அங்கு வளர்ந்துள்ள புல் தரையில் தீப்பிடித்துவிட்டது. வெளியேற்றும் தொட்டியில் (Knockout Tank) அன்று அளவுக்கு அதிகமான எண்ணெயும் காற்றும் வெளியேறியதுதான் தீப்பிடித்த





மாண்புமிகு பேரவைத் தவைர்:

தற்கான காரணம் ஆகும். மேலும் தீப்பிடித்ததற்கு வெளியேற்றும் தொட்டியின் கொள்திறன் மிகவும் குறைவானது என்றும், திரவம் அளவைக் காட்டும் இயந்திரம் ஒலிக்கும் அலாரம் ஆகியவை சரியாக வேலை செய்யாததும் காரணம் ஆகும். தீப்பிடித்த உடனே தொழிற்சாலையிலுள்ள தீ அணைக்கும் கருவி மூலம் உடனடியாகத் தீ அணைக்கப்பட்டு விட்டது.

(19) பாரதிதாசன் பல்கலைக் கழகத்து தேர்வினர்த் தாள்கள் முன் கூட்டியே வெவியானதால் தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. ரமணி வி. பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பி.காம் முதலாண்டு கணக்குப் பதிவியல் (அக்கவுண்டன்சி) தேர்வுக்கான கேள்வித்தாள் முன் கூட்டியே வெளியானதால் தேர்வு நடத்த முடியாமல் போனதினால் சம்பந்தப்பட்ட மாணவர்களிடமும் அவர்தம் பெற்றோர்களிடமும் ஏற்பட்டுள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே, கேள்வி பேப்பர் வெளியானதாகச் சொல்லப்பட்டு, அந்தப் பிரச்சினையைக் காவல் துறையின் மூலமாக விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 28 ஆம் தேதி நடைபெற இருந்த தேர்வினைப் பல்கலைக் கழகம் ஒத்தி வைத்திருக்கிறது. ஒத்தி வைக்கப்பட்ட தேர்வுக்கான நாள் பல்கலைக் கழகத்தால் விரைவில் அறிவிக்கப்படும். 29 ஆம் தேதி நடைபெறவிருந்த தேர்வு திட்டமிட்டபடி அதே நாள் நடைபெற்றது. வேறு வினாத்தாள் தயாரிக்க கால அவகாசம் இருந்த காரணதால், அதை வைத்து, நடத்தப்பட்டிருக்கிறது. 30 ஆம் நாள் முதல் தேர்வுகள் திட்டமிட்டபடி சுமுகமாக நடத்தப்பட்டன.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வித்தாள் வெளியாவது என்பது இப்பொழுது அதிகமாக இருந்து வருகிறது. வெளியேறாத அளவுக்கு, சரியாக, கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு எடுத்திருந்தால், எப்படிக் கேள்வித்தாள் வெளியாகும்? இது கவனத்திற்குரிய விஷயம். அதுவும் பல்கலைக் கழகம் நடத்தக்கூடிய முக்கியமான தேர்வு

கவன ஈர்ப்புகள்

(திரு. கு. ரமணி)

கேள்வித் தாள்கள் லீக் அவுட் ஆகி, தேர்வுகளை அந்தக் குறிப்பிட்ட நாளில் நடத்த முடியாமல் போவதும் இந்த நிலை நிச்சயமாக மற்ற பாகங்களில் இருக்கக்கூடிய கல்வி அமைப்புகளிலே மோசமான ஒரு நிலைமையை உருவாக்கும்.

ஆகவே கேள்வித் தாள் லீக்-அவுட் ஆகாமல் இருப்பதற்கு ஒரு ஃபுல் பூருஃப் திட்டம் ஏதாவது நம்முடைய அரசினுடைய கவனத்தில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—20)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேர்வுகள் அரசு நடத்துகின்ற தேர்வுகள் அல்ல. பல்கலைக் கழகம் என்கின்ற தன்னாட்சி நிறுவனம் நடத்துகின்ற தேர்வு. நடைபெற்ற குறைபாடு நம்முடைய கவனத்திற்கு வருகின்ற நேரத்தில் அவர்களிடத்தில் சொல்லி அந்த குறைபாட்டை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுகின்ற பொறுப்பைத்தான் அரசு செய்ய முடியும். மற்றபடி தேவையான நடவடிக்கைகளை அவர்கள் எடுக்க வேண்டும். நம்முடைய பிரதிநிதி மூலம் எடுக்கச் செய்ய வேண்டும். ஆனால் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தேர்வுகள் சம்பந்தமாக இந்த ஒரு குற்றம் மட்டும் நடைபெறுவதில்லை. வேறு சில சந்தர்ப்பங்களில் கேட்டதை போல், தேர்வை கண்காணிக்கின்ற ஆசிரியர்களை அடிக்க வருவது, மாஸ்-காப்பியிங் என்று சொல்லுகின்ற அளவிற்கு பார்த்து எழுதுகின்ற குற்றங்கள் நடைபெறுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. இதையெல்லாம் பார்க்கின்றபோது இதற்கு தனி திட்டம் அல்ல தனி சட்டமே கொண்டுவர வேண்டும். அப்படி ஒரு சட்டம் கொண்டுவந்தபோது இந்த மாமன்றத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்புக் காட்டியதன் காரணமாக அதை பின்வாங்கிவிட்டோம். ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தால் இது போன்ற கிரிமினல் குற்றங்களை நாம் தடுக்க முடியும். இதை தடுக்காமல் வேறு எதையும் செய்து பிரயோசனம் இல்லை. காரணம் இது படிப்பு சம்பந்தமானது. படித்துவிட்டு வேலைக்கு போவது சம்பந்தமானது. இவர்கள் வந்துதான் நம்மையெல்லாம் நிர்வாகம் செய்யப்போகிறார்கள். இதிலே மிகவும் கடுமையாக இருந்தாக வேண்டும். இதற்கு திட்டம் அல்ல. சட்டம் வேண்டும்.

(20) தஞ்சை, ஈச்சங்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி, கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது குறித்து

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு பகுதியிலுள்ள ஈச்சங்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள்



கவன ஈர்ப்புகள்

(திரு. ப. பொன்னுரங்கம்)

கடந்த 26—4—1986 அன்று ஆண்டு இறுதித் தேர்வு எழுதிக் கொண்டிருந்தபொழுது பள்ளிக் கட்டிடம் கூரையுடன் இடிந்து விழுந்ததால் நீலமேகம் என்ற முதுநிலை பட்டதாரி ஆசிரியர் இறந்தும், செந்தில்குமார், கோவிந்தராஜ் ஆகிய 2 மாணவர்கள் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும் உள்ளதால் பாதிக்கப்பட்டோர் குடும்பத்தார் மற்றும் ஆசிரியர், மாணவர் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

1986-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ஆம் நாள் அன்று பிற்பகல் சுமார் 3.00 மணிக்கு திடீரென்று எதிர்பாராமல் வீசிய சுழற்காற்றாலும், பெய்த பெருமழையாலும் தஞ்சாவூரிலிருந்து 16 கி.மீ. தொலைவிலுள்ள ஈச்சங்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் கூரை வேயப்பட்ட துணைக் கட்டடம் ஒன்று விழுந்துவிட்டது. அக்கட்டடத்தில் தேர்வு எழுதிக் கொண்டிருந்த மாணவர்களில் ஒன்பதாம் வகுப்பு மாணவன் என். செந்தில்குமாருக்கு இவ்விபத்தினால் இடது கால் எலும்பு முறிவும், 11-ம் வகுப்பு மாணவன் என். கோவிந்தராசனுக்கு சிறு காயமும் ஏற்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் தேர்வைக் கண்காணிப்பு செய்து கொண்டிருந்த வேதியியல் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் திரு. நீலமேகம் என்பவர் கூரை விழுந்ததும் தப்ப முயற்சி செய்ததில் இடிபாடுகளிடையே சிக்கிக் கொண்டு பின்பு தஞ்சை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை அளித்தும் பலனளிக்காமல் இரவு சுமார் 8—00 மணிக்கு மரணமடைந்துவிட்டார். ஒன்பதாம் வகுப்பு மாணவன் என். செந்தில்குமாருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு உடல் நிலை தேறிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 11-ஆம் வகுப்பு மாணவன் என். கோவிந்தராஜனுக்கு சிறு காயமே ஏற்பட்டதால் புறநோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

கூரை சரிந்த கட்டடத்தின் மற்றொரு வகுப்பறையில் தேர்வு கண்காணிப்பு பணியில் இருந்த திரு. இரா. இராதாகிருஷ்ணன் என்பவர் சிறுகாயத்துடன் தப்பியுள்ளார். இவர் மருத்துவ சிகிச்சை பெறுமளவுக்கு பாதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுளளது.

2. விபத்துக்குள்ளான மேற்படி கட்டடம் 1978-ஆம் ஆண்டு பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் பொதுப் பணித் துறையினரால் கட்டப்பட்டது. இவ்வாண்டு மார்ச்சு மாதம் 25-ஆம்

கவன ஈர்ப்புகள்

(திரு. செ. அரங்கநாயகம்)

தேதியன்று பொதுப் பணித்துறையினரால் பழுதுபார்க்கப்பட்டு தளம் செப்பனிடப்பட்டு வெள்ளையடித்து கொடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இச்சம்பவத்தை தொடர்ந்து, மழை மற்றும் பலத்த காற்று அடிக்கும் நேரங்களில் கூரைக் கட்டடங்களிலும் மற்றும் பாதுகாப்பற்ற இடங்களிலும் வகுப்புகளை நடத்த வேண்டாம் என அனைத்துப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்குப் பள்ளிக் கல்வி இயக்குநரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

4. ஆகவே இப்பள்ளியில் ஏற்பட்டுள்ள விபத்து இயற்கையின் சீற்றத்தினாலேயேயன்றி வேறு எந்தக் காரணங்களினாலும் அல்ல.

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கட்டிடத்திலால் ஒரு முதுநிலை ஆசிரியர் இறந்திருக்கிறார். ஒரு மாணவருக்கு ப்ரேக்சர் ஆகியிருக்கிறது. இந்த கட்டிடம் 1978-ல் கட்டப்பட்டது. அதுமட்டுமல்ல. இந்த விபத்து நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால்தான் பழுது பார்க்கப்பட்டு வெள்ளையடிக்கப்பட்டுள்ளது. தனியாரால் அல்ல. பி.டபிள்யூ.டி. டிபார்ட்மென்டால். ஆகவே பொறுப்பற்ற முறையில் பி.டபிள்யூ.டி. கட்டிடம் கட்டி பழுது பார்த்ததால் கல்வித் துறையிலே மாணவர்கள் படிக்கின்ற பள்ளிகளில் இப்படிப்பட்ட உயிர் சேதங்கள் ஏற்படுகின்றன. சம்பந்தப்பட்ட பி.டபிள்யூ.டி. அதிகாரி மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? அந்த பாதிக்கப்பட்டு இறந்த ஆசிரியர் குடும்பத்திற்கும், பாதிக்கப்பட்ட மாணவர் குடும்பத்திற்குப் அரசு நஷ்ட ஈடு வழங்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு விசாரித்து, இதிலே யார் பொறுப்பானவர்களோ அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிகள் எடுக்கப்படும். அந்த பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான முறையில் ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று அரசு பரிசீலிக்கும்.

**(21) தஞ்சை, பந்தநல்லூர் அரசினர் மேல்நிலைப்பள்ளிக் கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. இராசாங்கம், டாக்டர் க. நல்லமுத்து, திருவாளர்கள் கி. கிருஷ்ணமூர்த்தி, துரை கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.



கவன ஈர்ப்புகள்

**திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தாலூகா, பந்தநல்லூர் அரசினர் மேல் நிலைப்பள்ளி கூரை கட்டிடம் கடந்த 28—4—1986 அன்று இடிந்து விழுந்ததால், 7-வது வகுப்பு தேர்வு எழுதிக்கொண்டிருந்த துரை என்கிற மாணவன் மரணமடைந்ததின் காரணமாக ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை**

1986ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் நாள் அன்று பிற்பகல் சுமார் 3—45 மணிக்கு திடீரென்று பெய்த பேய் மழையாலும், சூறைக்காற்றாலும், தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை கல்வி மாவட்டம், பந்தநல்லூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியின் கூரைவேய்ந்த வகுப்பறைக் கட்டிடத்தின் வடபுறமுள்ள மேற்கூரை திடீரென்று விழுந்துவிட்டது. இக்கட்டிடத்தில் 7ஆம் வகுப்பு ஆண்டுத் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இங்கு 10 மாணவர்கள் தேர்வு எழுதிக் கொண்டிருந்தனர். ஒரு ஆசிரியர் மேற்பார்வை செய்து கொண்டிருந்தார். கட்டிடத்தின் மேற்கூரை விழுந்தவுடனே, கண்ணிமைக்கும் நேரத்திற்குள், ஒரு மாணவனைத் தவிர மற்றவர்கள் வெளியேறிவிட்டனர் ஏ. துரை என்னும் 7-ஆம் வகுப்பு மாணவன் மட்டும் வெளியேற முடியாமல் இடிபாடுகளில் சிக்கி அதே இடத்தில் இறந்துவிட்டார். மற்ற மாணவர்களுக்கு எவ்விதக் காயமும் ஏற்படவில்லை. தேர்வு மேற்பார்வை செய்து கொண்டிருந்த இடைநிலை ஆசிரியர் திரு. வி. சௌரிராஜன் என்பவருக்கு சிறிது உள்காயம் ஏற்பட்டு முதலுதவி அளிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டார். இறந்த மாணவனின் உடல் பிரேத பரிசோதனைக்காக அன்றே கும்பகோணம் அரசினர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

2. விபத்து நடந்த கூரைக்கட்டிடம், இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுவதற்கு முன்பு 1976ஆம் ஆண்டில் பொது மக்களால் கட்டிக்கொடுக்கப்பட்ட கூரைக் கட்டிடம் ஆகும்.

3. இச்சம்பவத்தைத் தொடர்ந்து, மழை மற்றும் பலத்த காற்று அடிக்கும் நேரங்களில் கூரைக் கட்டிடங்களிலும் மற்றும் பாதுகாப்பற்ற இடங்களிலும் வகுப்புகளை நடத்தவேண்டாம் என அனைத்துப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், பள்ளிக்கல்வி இயக்குநரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

கவன ஈர்ப்புகள்

[திரு. செ. அரங்கநாயகம்]

4. ஆகவே, இப்பள்ளியில் ஏற்பட்டுள்ள விபத்து இயற்கையின் சீற்றத்தினாலேயேயன்றி வேறு எந்தக் காரணங்களினாலும் அல்ல.

**திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பந்தநல்லூர் மேல்நிலைப்பள்ளியில் சுமார் 700 மாணவர்களும், 300க்கு மேற்பட்ட மாணவிகளும் கல்வி பயின்று வருகிறார்கள். அங்கே 21 வகுப்பு அறைகள் தேவைப்படுகின்றன. இருந்தாலும் 9 வகுப்பறைகளே உள்ளன. மீதம் 12 வகுப்பு அறைகளில் படிக்கக்கூடிய மாணவர்கள் மரத்தடியிலே கல்விப் பயின்றுகொண்டிருக்கிறார்கள். இடிந்து விழுந்த கூரைக் கட்டிடம்போல் மற்றொரு கூரைக் கட்டிடம் பழுதடைந்த நிலையில் இருக்கிறது.

அந்தப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா ? இறந்துவிட்ட ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த துரை என்ற அந்த மாணவனின் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினர் கருத்தை அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(22) சென்னை பல்கலைக் கழக பி.ஏ. இறுதித் தேர்வுக்கான ஆங்கில வினாத்தாளில் பாடதிட்டத்திற்குப் புறம்பாக வினாக்கள் உள்ளது**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், கு. சுப்பராயன், ஜே. ஹேமச்சந்திரன், ஜே. முகம்மது கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை, க்வீன் மேரீஸ் கல்லூரியில் பி.ஏ., இங்கிலீஷ் லிட்டரேச்சர் படிக்கும் மாணவிகள் இந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் எழுதிய இறுதி ஆண்டுத் தேர்வில் தரப்பட்ட பெரும்பாலான வினாக்கள் தங்கள் சிலபசுக்கு சம்பந்தமில்லாமல் வந்ததால் அத்தேர்வில் தேர்ச்சி பெறுவோமா என்ற அச்சமும் வேதனையும் அம்மாணவிகள் மத்தியிலும் மற்றும் அவர்தம் பெற்றோர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



கவன ஈர்ப்புகள்

[திரு. செ. அரங்கநாயகம்]

**அறிக்கை**

சென்னைப் பல்கலைக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி குறிப்பிட்டுள்ள தேர்வு 25–4–1986 அன்று நடைபெற்றதாகவும், இத்தேர்வுகளில் 42 கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டார்கள் என்றும் தேர்வுக்குப்பின் 29–4–1986 அன்று இராணிமேரிக் கல்லூரி மாணவிகள் இந்த கேள்வித் தாளில் பிரிவு ஒன்றில் 3 கேள்விகளும், பிரிவு இரண்டில் 4 கேள்விகளும், மூன்றாம் பிரிவில் இரண்டு கேள்விகளும் பாடத் திட்டத்திற்கு புறம்பாக கேட்கப்பட்டதாக எழுதியுள்ளார்கள். இது போன்று புகார் எத்திராஜ் பெண்கள் கல்லூரியிடமிருந்தும் பெறப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் இரண்டாம் பிரிவில் உள்ள ஒரு கேள்வி மட்டும் பாடத் திட்டத்திற்குப் புறம்பாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

பல்கலைக் கழகம், குறிப்பிட்ட கேள்வித்தாளை அப்பாடத்தின் வல்லுநர் ஒருவருக்கு அனுப்பி வைத்ததில் அவர் தந்த கருத்தின்படி கேள்வி 2(பி)ல் உள்ள ஒரு வினா மட்டுமே பாடத் திட்டத்திற்கு அப்பாற்பட்டது என்று கூறியுள்ளதாகவும், இக் கேள்விக்கு 10 மதிப்பெண்களே ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் பதிவாளர் கூறியுள்ளார்.

சாதாரணமாக இவ்வாறு பாடத் திட்டத்திற்குப் புறம்பாக கேள்விகள் கேட்கப்பட்டதாக வரும் புகார்களின் நகல்கள், திருத்தும் ஆசிரியர் குழு தலைவருக்கு அனுப்பப்படும் என்றும் உண்மையாகவே கேள்விகள் பாடத்திட்டத்திற்குப் புறம்பாக கேட்கப்பட்டிருந்தால், அக்குறிப்பிட்ட தேர்வு எழுதும் மாணவர்கள் பாதிக்கப்படாதபடி மதிப்பெண் வழங்குவதற்கான குறிப்புகளை அனுப்புவார்கள் என்றும் அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பதிவாளர் தெரிவித்துள்ளார். மேலும் இம் மாதிரி புகார் மீண்டும் வராதபடி தகுந்த முன்னேற்பாடு எடுக்கப் படுகிறது என்பதையும் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத்தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான விவகாரம். தேர்விலே அன்றையதினம் மாணவிகள் அமர்ந்து கேள்வியைப் பார்த்தவுடனே அதிர்ச்சியுற்று கண்ணீர் வடித்திருக்கிறார்கள். பெற்றோர்களும் கூட ரெப்ரசண்ட் செய்திருக்கிறார்கள். அந்தக் கல்லூரியைச் சேர்ந்த ப்ரபஸர் மாணவிகளை அழைத்துக் கொண்டு யுனிவர்சிட்டிக்குப் போய் ரெப்ரசன்டேஷன் கொடுத்திருக்கிறார். விவர அறிக்கையில் 10 மார்க் கேள்வி மட்டும் தான் அவுட் ஆப் போர்ஷன் என்ற வகையில் வந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவுட் ஆப் சிலபஸ் வந்திருப்பது உண்மை. மாணவிகள் மத்தியில் உள்ள எண்ணம் எல்லாம் 100-க்கு 80 மார்க் உள்ள கேள்விகள் எல்லாம் அவுட் ஆப் சிலபஸிலே இருந்துதான் வந்திருக்கிறது

கவன ஈர்ப்புகள்

[திரு ப. பொன்னுரங்கம்]

என்று சொல்லப்படுகிறது. அந்த விவரத்தை வேண்டுமானால் நான் படித்து விடுகிறேன்....(குறுக்கீடு) அமைச்சரிடத்திலேயே கொடுத்துவிடுகிறேன். எனவே அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி யுனிவர்சிட்டியோடு தொடர்பு கொண்டு அந்த மாணவிகளுக்குத் தக்க மார்க் கொடுக்க ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன். பிளஸ் 2 தேர்விலும் கூட இதே நிலைமைதான் என்று நான் அறிகிறேன். எனவே இதுபற்றிக் கவனித்து உரிய மார்க் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். அந்த வகையில் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிரச்சினை சம்பந்தமாக ராணி மேரி கல்லூரி மாணவிகள் தான் தங்களுடைய குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதன் பிறகு எத்திராஜ் கல்லூரியில் இருந்தும் புகார் வந்திருக்கிறது. இந்த இரண்டு கல்லூரிகள் தவிர மற்ற கல்லூரிகளில் இருந்து எந்தப் புகாரும் வரவில்லை. ஆகவே தவறுக்குக் காரணம் பல்கலைக் கழகம் அல்ல என்பதும் சம்பந்தப்பட்ட கல்லூரிகளிலே சொல்லித் தந்தவர்கள்தான் குறைபாட்டுக்குக் காரணமாக இருப்பார்கள் என்பதற்கு இடம் இருக்கிறது. எப்படியோ மாணவிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே பாதிக்கப்பட்ட மாணவிகளைப் பொறுத்தவரையில் ஒரு அனுதாபத்தோடு இந்தப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டும் என்று பல்கலைக் கழகத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

**(23) கம்பம், தேனி போன்ற இடங்களில் ஏலக்காய் உற்பத்தி செய்யும் விவசாயிகள் நிலைமை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏலக்காய்க்கு போதுமான விலை இல்லாமையாலும், கம்பம், தேனி போன்ற இடங்களில் ஏலம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமையாலும், தாங்கள் உற்பத்தி செய்துள்ள ஏலத்தை விற்க முடியாமல் ஏல விவசாயிகள் படும் இன்னல்கள் குறித்த'' அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



கவன ஈர்ப்புகள்

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

ஏலக்காயின் விலை உள்நாட்டில் விளையும் உற்பத்தி, தேவை மற்றும் வெளிநாடு ஏற்றுமதி போன்ற பல்வேறு காரண கூறுகளைப் பொறுத்து உள்ளது. ஏலக்காய் உற்பத்தி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | | 1984–85 (மெ. டன்.) |
|---|---|---|
| 1 | கேரளம் .. .. .. | 2,850 |
| 2 | கர்நாடகம் .. .. | 850 |
| 3 | தமிழ்நாடு .. .. | 250 |

தமிழகத்தில் ஏலக்காய் 1984-85 ஆம் ஆண்டில் 6,632 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டிருந்தன. ஏலக்காய் உற்பத்தியில் கேரளம் முதலிடம் வகிக்கிறது. கர்நாடக மாநிலத்தை அடுத்து தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் நடப்பு ஆண்டில் உற்பத்தியானது அண்டை மாநிலங்களைப் போல் உற்பத்தி அதிக அளவில் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் கம்பம், தேனி போன்ற இடங்களில் உள்ள ஏலக்காய் உற்பத்தியாளர்களின் ஏலத் தோட்டம் கேரள மாநிலத்திற்குள் அமைந்துள்ளது. ஏலக்காய் விற்பனை, உற்பத்தி ஆகியவைகள் பதிவு செய்து, ஒருங்கிணைந்த முறையில் விற்பனை, ஏலம் விடுதல் மற்றும் ஏற்றுமதி போன்ற பணிகளை மேற்கொள்ள மைய அரசின் கீழ் இயங்கி வரும் ஏலக்காய் வாரியம் கவனித்து வருகிறது. இந்த வாரியம் கொச்சியினை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. இவ்விலை வீழ்ச்சியை குறித்து நடவடிக்கை எடுக்க ஏலக்காய் வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் இந்த ஏலக்காய் உற்பத்தியைப் வொரியம் வரையில் மைய அரசின் பொறுப்பிலுள்ள ஏலக்காய் கவுறது. தான் கவனித்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டிரு அவா இன்றைக்கு ஏலக்காய் உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு தா... களுடைய உற்பத்திச் செலவு கூட அடங்காத அளவுக்குத் கவ. அவர்கள் இன்றைக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார் டு ஆகவே இது குறித்து மைய அரசின் கவனத்திற்குக் கொண் வந்தோ அல்லது மாநில அரசே கொள்முதல் செய்து அவர்

களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் ஏலம் போடுவதிலும் தமிழகத்திற்குத் தேவையான பிரதிநிதித்துவம் வாங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்துக்களை நாம் ஏலக்காய் நல வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

(முற்பகல் 10-30)

## 24. உசிலம்பட்டி தாலுகா விக்கிரமங்கலம் கிராம மேல்நிலை குடிநீர் தொட்டி செயல்படாதது.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " உசிலம்பட்டி தாலுகா விக்கிரமங்கலம் கிராமத்தில் உள்ள மேல்நிலைத் தொட்டி செயல்படாததால் அப்பகுதி மக்கள் வறட்சிக்காலமான இந்த நேரத்தில் குடிநீருக்காகக் கஷ்டப்படும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

விக்கிமரங்கலம் கிராமத்தில் 1969ஆம் ஆண்டில் ஒரு மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டு தெருக்குழாய்களின் மூலம் கிராம மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. கடந்த ஆண்டில் பருவமழை தவறியதால் ஏற்பட்ட வறட்சி காரணமாக கிணற்றிலுள்ள நீர் குறைந்து விட்டதால் மேல்நிலைத் தொட்டியிலுள்ள நீரைத் தெருக் குழாய்களின் வழியாக உபயோகித்தால், நீர் வீணாவதைத் தடுக்கும் வகையில், மக்கள் தாங்களாகவே கிணற்றிலுள்ள தண்ணீரை வாளிகளை உபயோகித்து பயன்படுத்தி வருகின்றனர். மேலும் தற்போதைய குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும் மாற்று வழியாக மேற்படி மேல்நிலை குடிநீர் கிணறு ஆழப்படுத்தப்பட்டு, தற்போழுது 3* அடி தண்ணீருக்கு மேல் உள்ளது.

மேலும் கடந்த ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வாரியத்தினால் ஆழ்துளை கிணறொன்று அமைக்கப்பட்டு, குழாய்கள் அமைக்கும் பணி தற்போது முடிவுறும் நிலையிலுள்ளது. இப்பணி இன்னும் 15 தினங்களில் முடிக்கப்பெற்று மேல்நிலைத் தொட்டியின் வழியாகக் கிராம மக்களுக்குப் போதுமான குடிநீர் விநியோகிக்கப்படும்.



இது தவிர, இக்கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிக்கொன்றும், பிற பகுதியினருக்கு ஒன்றுமாக இரண்டு கையிறைப்பான்கள் உபயோகத்தில் உள்ளன.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விக்கிரமங்கலம் கிராமம் சுமார் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிற பகுதியாக இருக்கிறது. அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற குழாய் போடும் பணி அத்தனையும் மிகவும் காலதாமதமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் நான் முக்கியமாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே இந்த வறட்சியான நிலையில், கூடிய விரைவிலே அந்தக் குழாய்களைப் போடும் பணியை முடுக்கி அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அந்தப் பணி நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** : நடைபெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

## (25) கூடலூர் பேரூராட்சி பகுதிகளில் குடிநீர் வழங்குதல்.

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " கூடலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக குடிநீர் வழங்கப்படாமல் இருப்பது பற்றியும், இதனால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

கூடலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறட்சியால் கோக்கால், அலஹலா போன்ற நீரோடைகள் வறண்டு விட்டதால் 1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25ஆம் தேதியிலிருந்து தினமும் பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதில் தடை ஏற்பட்டது. கூடலூர் நகர எல்லையிலுள்ள தொரப்பள்ளி ஆற்றிலிருந்து ஒரு லாரி மூலம் தண்ணீர் கொண்டு வந்து 60,000 லிட்டர் குடிநீர், ஹெல்த் கேம்ப் பகுதியில் உள்ள குடிநீர் தேக்கத்தில் விடப்பட்டு ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மூலம் சுற்று முறையில் மூன்று நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[டாக்டர். க. காளிமுத்து]

கூடலூர் நகரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு பம்ப் செட்டுகள் பொருத்தப்பட்டுள்ள கிணறு மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சுங்கம், செவ்வடிப்பேட்டை பகுதிகளுக்கு அதிகாரிவயல் என்ற இடத்தில் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுள்ள கிணற்றிலிருந்து 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14ஆம் நாள் முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25ஆம் நாள் முதல் துப்புக்குட்டிப் பேட்டை பகுதியில் உள்ள காசிம் வயல் என்ற இடத்தில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கட்டப்பட்டுள்ள கிணற்றிலிருந்து தினமும் சுமார் 5,000 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

கூடலூர் நகருக்கு குடிநீர் தேக்கங்களிலிருந்தும் பம்ப்செட்டு பொருத்தப்பட்ட கிணறுகளிலிருந்தும், லாரி மூலமும் தினமும் சுமார் 2,25,000 லிட்டர் சுற்று முறையில் மூன்று நாட்களுக்கு ஒருமுறை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிதண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க, பொது மக்கள் பேரூராட்சி நிர்வாகத்துடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் வழங்குவதில் பொதுமக்களிடமிருந்து புகார் எதுவும் வரவில்லை. கடந்த ஒரு வார காலமாக நகரில் குடிநீர் விநியோகம் செய்யப்படவில்லை என்பது சரியல்ல.

கூடலூர் பேரூராட்சியும்; வழியோர கிராமங்களும் நிலையான குடிநீர் வசதி பெறும் வகையில், உலக வங்கியின் உதவியுடன் ரூ. 1.3 கோடி செலவில், ஹெலன் நதியை ஆதாரமாகக் கொண்டு "ஹெலன் குடிநீர்த் திட்டம்" தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

**திரு. கே. உச்சி:** தலைவர் அவர்களே, குடி தண்ணீர் வழங்கும் கிணறுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள பம்ப் செட்டுகள் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன. அதனால் குடிதண்ணீர் வழங்குவது கஷ்டமாக இருக்கிறது. அந்த பழுதடைந்த பம்ப் செட்டுகளுக்கு பதில் வேகமாக புதிய பம்ப் செட்டுகளை வாங்கி பொருத்தவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உலக வங்கியின் உதவியுடன் ஹெலன் குடிநீர் திட்டத்திற்கு 1.2 அல்லது 1.2 கோடி செலவிடப்படும் என்று ஏற்கெனவே அறிவித்தார்கள். இப்போது அதே திட்டத்திற்கு 1.3 கோடி செலவில் கொண்டு வர அந்த திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் எது உண்மை என்பதை அரசு எனக்கு விளக்குமா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, பம்ப் செட்டுகள் பழுதடைந்த உடனேயே அவைகளை தூக்கி எறிந்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக புதியதாக வாங்கிக்கொள்ள வேண்டும் என்று சொல்வது சரியல்ல. என்ன பழுது ஏற்பட்டிருக்கிறது, அவைகளை சரி செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். அந்த ஹெலன் குடிநீர் திட்டப் பணிகளின் ஆய்வு வெகு விரைவிலே முடிவு அடையும். அது வாரியத்தின் ஆய்வில் உள்ளது. செயலுக்குக் கொண்டு வருவதற்கு வெகுவிரைவிலே அரசு ஏற்பாடு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அவரவர் இடங்களிலே அமைதியாக உட்காருவது நல்லது.

**(26) குமரி மாவட்ட கடற்கரை கிராமங்களின் குடிநீர் பிரச்சனை.**

**திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்திலுள்ள கடற்கரை கிராமங்களான முட்டம், கடியப்பட்டினம், குறும்பனை, வாணியக்குடி, சைமன் காலனி ஆகிய பகுதிகளிலுள்ள குடிநீர் குழாய்கள் அனைத்தும் பழுதடைந்துள்ளதால் அப்பகுதி மக்கள் குடிநீருக்காக கஷ்டப்படும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கடற்கரைக் கிராமங்களான முட்டம், கடியப்பட்டினம், வாணியக்குடி, சைமன்காலனி ஆகிய கிராமங்களில் குடிதண்ணீர் சீராக தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது. கீழ்குறும்பனை கிராமத்தில் உள்ள குடிநீர் திட்ட நீருந்து மோட்டார் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. குடிநீர் குழாய்கள் துருபிடித்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அவைகளை பழுதுபார்க்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். தற்போது மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியின் பக்கத்தில் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் இரு பொதுக் குழாய்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எப். எம். இராசரத்தினம்:** பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் முட்டம், கடியப்பட்டினம், வாணியக்குடி, சைமன் காலனி ஆகிய கிராமங்களில் குடிதண்ணீர் சீராக தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்ப

பட்டிருக்கிறது. ஆனால் கடியப்பட்டினம் பகுதிக்கான குடி நீர் திட்டத்திற்கு 10 நாட்களுக்கு முன்புதான் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. அந்தப் பகுதியில் இன்னும் குடிதண்ணீர் வழங்கப்படவில்லை.

மேலும் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நான் முட்டம் பகுதியிலே இருக்கிற குடிதண்ணீர் பிரச்சினை பற்றி கவனஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்த போது, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் அதற்கு 5 லட்சம் ரூபாய் அளவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அதற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் அந்தப் பகுதியில் அந்தப் பணி நடைபெறவில்லை. மேலும் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் தினமும் பேருந்துகளிலும் கால்நடையாகவும் நடந்து சென்றுதான் குடிதண்ணீர் கொண்டு வருகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும் சைமன் காலனி குடிதண்ணீர் திட்டத்தைப் பொறுத்தவரையில் அசுத்தம் கலந்த ஆற்று நீரும், குடிதண்ணீர் வழங்குகின்ற கிணற்று நீரும் ஒன்றாக கலந்து அந்தப் பகுதி மக்களுக்கு குடிப்பதற்கு பயன் பெறாத நிலையில் இருக்கிறது. அவர்கள் மிகுந்த கஷ்டத்தை அனுபவித்து வருகிறார்கள். வாணியக்குடி, கீழ்குறும்பனை ஆகிய பகுதிகளிலே போடப்பட்ட குழாய்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. இவைகளைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கடலோரக் கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்க தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அனைத்தையும் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**(27) காவேரி படுகை விவசாயிகளுக்கு தமிழ்நாடு வாணிபக் கழகம் வழங்கும் இலவச உரக் கூப்பன்கள்.**

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டத்தில் கடந்த குறுவை அறுவடையின் போது மாநில உணவு வழங்கும் கழகத்தின் கொள்முதல் திட்டத்திற்கு நெல் வழங்கிய விவசாயிகளுக்கு ஊக்கப் பரிசாக உரம் இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கான அடையாள வில்லைகள் கொடுக்கப்பட்டன. அவற்றில் காலவரையறை ஏதும் குறிப்பிடப்படாமல் இருந்த காரணத்தால் தேவையானபோது, இலவச உரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றிருந்த போது எதிர்பாராத வகையில் காலக்கெடுவை நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டதால் பெரும்பாலான விவசாயிகள் அப்பயனை அடைய முடியாமல் போய்விட்டமையால் அக்கால கெடுவை நீட்டித்து அரசாணை வெளியிடுவதன் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகள்







அனைவரும் அப்பயனைப் பெறச் செய்வது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை**

தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் ஏக போக நெல் கொள்முதல் வகைக்கு உற்பத்தி பெருக்கு ஊக்க ஊதிய திட்டத்தின்கீழ் காவிரி படுகை விவசாயிகளுக்கு, அவர்கள் வாணிப கழகத்திற்கு விற்கும் நெல்லின் அளவினைப் பொறுத்து இலவச உரம் பெற்றுக் கொள்வதற்கான கூப்பன்கள் தற்போது வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு வாணிப கழகத்தால் வழங்கப்படும் இக் கூப்பன்களில் எந்த தேதி வரை செல்லுபடியாகும் என்ற கால வரையறை குறிக்கப்படவில்லை. எனினும், அரசு உற்பத்தி பெருக்கு ஊக்க ஊதிய திட்டத்தை முதல் முதலாக கொண்டு வந்தபோதும், பின்னர் இத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் குறுவை மற்றும் சம்பா பருவங்களுக்கு நீட்டித்த போதும், இத் திட்டத்தின் கீழ் எந்தெந்த தேதி வரை உரக் கூப்பன்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கால வரையறையும், அவ்வாறு வழங்கப்பட்ட கூப்பன்களுக்கு எந்த தேதி வரை உரம் வழங்கப்பட வேண்டும் என்று கால வரையறையும் ஒவ்வொரு முறையும் முன் கூட்டியே நிர்ணயித்து அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அந்த வகையில் 1985 குறுவை பருவத்திற்கு இத் திட்டம் நீட்டிக்கப்பட்ட போதே இத்திட்டத்தின் கீழ் கூப்பன்கள் வழங்க கால வரையறை 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் எனவும், அத் தேதி வரை வழங்கப்படும் கூப்பன்களுக்கு உரங்கள் பெற்றுக் கொள்ள காலவரையறை 1986 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31 ஆம் நாள் எனவும் அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

2. மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் இத் திட்டத்தின் கீழ் கூப்பன்களுக்கு உரங்களை கூட்டுறவு விவசாய சேவை சங்கங்கள் மூலம் வழங்கி வரும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் அரசு ஆணைகளுக்கு ஒப்ப அந்த அந்த உற்பத்தி ஊக்கத் திட்ட பருவ காலத்தில் வழங்கப்பட்ட கூப்பன்களுக்கு எந்த எந்தத் தேதி வரை உரங்கள் பெற்றுக் கொள்ளலாம் என்ற விவரத்தினை விவசாயிகள் அறியும் வண்ணம் அவ்வப்போது வானொலி மூலமாகவும் செய்தித் தாள்கள் மூலமாகவும் விளம்பரப்படுத்துகிறது. மேலும், இவ்விணையம் கடந்த குறுவை அறுவடைக் காலத்தில் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை வழங்கப்பட்டு பெறப்பட்ட ரூ. 10.69 கோடி மதிப்புக்கான 3,81,817 கூப்பன்

களில் 3,64,388 கூப்பன்களுக்கு ரூ. 10.52 கோடி மதிப்புள்ள உரங்களை வழங்கியுள்ளது. மீதமுள்ள ரூ. 17.76 இலட்சம் மதிப்புக்கான 17,429 கூப்பன்களுக்கு மட்டுமே விவசாயிகளிடமிருந்து குறித்த கால வரைக்குள் (1986ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31ஆம் நாளுக்குள்) கூப்பன்கள் பெறப்படாத காரணத்தால் உரங்கள் வழங்கப்படாது நிலுவையாக உள்ளது. எனினும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு குறுவை 1985 பருவத்தில் உரங்கள் வழங்கப்படாது நிலுவையாக உள்ள கூப்பன்களுக்கு சம்பந்தப்பட்ட விவசாயிகளும் பாதிக்கப்படாது உரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் 1985 குறுவைப் பருவ உற்பத்தி ஊக்கத் திட்டக் கூப்பன்கள் செல்லுபடியாகக் கூடிய காலத்தை நீட்டித்துத் தர வேண்டும் என்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** தலைவர் அவர்களே, ' நடந்தாய் வாழி காவேரி ' என்று சொல்கிற காவேரிப் படுகையில் காதல் கொண்டிருக்கிற நம்முடைய வேளாண்மையாளர்கள் மற்றும் அவர்கள் மீது காதல் கொண்டிருக்கிற நம்முடைய தாளாண்மை கொண்ட அமைச்சர் பெருந்தகை, வாளாக இருக்காமல், தூளாக ஒரு ஆணை பிறப்பிப்பார்களா ? உரத்தின் கூப்பன்கள் செல்லுபடியாகின்ற வகையில் ஆணை பிறப்பிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய சம்பா சாகுபடியாளர்கள் மீது காட்டுகிற அந்த காதல் உணர்வை குறுவை சாகுபடியாளர்கள் மீதும் காட்ட வேண்டும். குறுவை என்பதே குறுகியது என்று பொருள். ஆகவே குறுகி கிடக்கிற தஞ்சைத் திருநகர வேளாண் பெருங்குடி மக்களுக்கு ரூ. 17.76 இலட்சம் மதிப்பிற்கு கூப்பன்கள் தருவதில் தடையாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தத் தடைகளை நீக்கி அவை செல்லுபடியாகிற அளவிற்கு செய்ய வேண்டும். அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, பாரதியினுடைய கவிதை நடை கருத்தை ஏற்று, இந்தக் கூப்பன்களை வழங்குவதற்கு நாம் 1986ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15ஆம் நாள் வரைக்கும் கால நீட்டிப்பு தந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(28) சென்னை, கொசப்பேட்டை வி. வி. கோயில் தெருவில் தண்ணீர் தட்டுப்பாடு.**

**திரு. ஜே. முகம்மது கனி :** தலைவர் அவர்களே, ' சென்னையில் பல பகுதிகளில் குடிநீர் வேகம் குறைந்து வருவதால் பொது மக்களுக்கு காலை மற்றும் மாலை நேரங்களில் குடிநீர் கிடைப்பதில்லை. எனவே கொசப்பேட்டை மற்றும் அதைச் சார்ந்துள்ள பல வீதிகளுக்கும் குறிப்பாக வி. வி. கோயில் தெருவில் குடிநீர் வசதி செய்து தரவேண்டியது குறித்த ''அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கொசப்பேட்டை மற்றும் அதைச் சார்ந்த பகுதிகளில் 72 பொதுக் குழாய்களும் குடிப்பது தவிர மற்ற தேவைகளுக்கு உதவ 19 ஆழ்குழாய் கிணறுகளும் '' இந்தியா மார்க்-2 '' 21 குழாய் கிணறுகளும் இதைத் தவிர 5 குடிநீர் தொட்டிகள் அமைத்து அவற்றிற்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகின்றது. இப் பகுதியிலுள்ள வி. வி. கோவில் தெருவில் சற்று குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனை நிவர்த்திக்க இத் தெருவிலுள்ள குடிநீர் குழாய்களையும் மற்றும் செங்கல் சூளை தெருவிலுள்ள குடிநீர் குழாய்களையும் பரிசோதித்து அவைகள் சுத்தம் செய்யப்பட்டன. இதனால் வி. வி. கோயில் தெருவிலுள்ள வீடுகளுக்கு அதிகாலையில் குடிநீர் கிடைத்து வருகிறது. மற்றும் இப் பகுதியிலுள்ள நாராயண மேஸ்திரி தெருவிலுள்ள குடிநீர் குழாய்களும் அமைந்தராயன் தெருவிலுள்ள குடிநீர் குழாய்களும் மேலும் கீழே இறக்கி பதிக்கப்பட்டன. நாராயண மேஸ்திரி தெரு மற்றொரு பகுதிக்கும் செங்கற்சூளை 5ஆவது வீதிக்கும், திரு. வி. க. தெருவிற்கும் மாற்று இணைப்பு குழாய்கள் செங்கற்சூளை சாலையிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளன. இப் பகுதியில் சி.ஆர். கார்டன், எதிராஜ் கார்டன், ராமானுஜ கார்டன் ஆகிய பகுதிகளுக்கு புதிதாக துணைக் குழாய் அமைக்கும் திட்டம் ரூ. 1.15 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் இப் பகுதியில் வி. வி. கோயில் தெரு போன்ற பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் முறை மேம்பாடு அடையும்.

மேலும் மேற்கூறிய பகுதிகளில் எல்லா வீடுகளுக்கும் குடி நீர் இணைப்புகள் உள்ளன.

**திரு. ஜே. முகம்மது கனி :** தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெருநகரங்களில் 24 மணி நேரமும் வேகம் குறையாமல் குடி தண்ணீர் வழங்குவதற்கும், சென்னை கொசப் பேட்டையில் உள்ள வி.வி. கோயில் தெரு, நாராயண மேஸ்திரி தெரு போன்ற தெருக்களில் குடி தண்ணீர் வழங்கவும் அரசு ரூ. 1.15 லட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரித்திருப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் எப்போது செயலுக்கு வருமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

கவன ஈர்ப்புகள்

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, புதிய துணைக் குழாய் அமைக்கக்கூடிய திட்டம் ரூ. 1.15 லட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதால் எவ்வளவு விரைவில் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாக அரசு அதை செயல்படுத்தும்.

(29) ஆத்தூர் நகராட்சிப் பகுதியில் உள்ள குடிநீர் தட்டுப்பாடு.

**திரு. சி. பழனிமுத்து :** தலைவர் அவர்களே, " ஆத்தூர் நகராட்சிப் பகுதியில் வாரம் ஒருமுறை குடிநீர் வழங்கப்படுவதால் அப் பகுதி வாழ் மக்களுக்கு சரிவர குடிநீர் கிடைக்காத நிலை குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

1. ஆத்தூர் நகரில் உள்ள இரண்டு நீரேற்று நிலையங்கள் மூலம் சாதாரண நாட்களில் 15,00,000 லிட்டர்கள் குடிநீர் விநியோகம் செய்யலாம். ஆனால் தற்போது வறட்சியால் 3,96,000 லிட்டர்தான் குடிநீர் கிடைக்கிறது. இது தவிர 36 ஆழ்குழாய் கிணறுகள் மூலமும், 30 திறந்த வெளிக் கிணறுகள் மூலமும் ஒரு நாளைக்கு 3,16,800 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. இவற்றின் மூலம் நகரில் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு மொத்தம் 14.78 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது. சாதாரணமாக ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 75 லிட்டர் தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும்.

2. இந்த குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க 1986ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாள் முதல் தற்போது நான்கு தனியார் லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இதன் மூலம் நான்கு நாட்களுக்கு ஒரு முறை வீதம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.

3. கடுமையான குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள சில நகராட்சிகளில் ஆத்தூர் நகராட்சியும் ஒன்று. நகராட்சிப் பகுதிகளில் குழாய் கிணறுகள் தோண்டுவதற்காக அரசாணை நிலை எண் 562, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, 1986ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாளில் ரூ. 80 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் ஆத்தூர் நகராட்சி



கவன ஈர்ப்புகள்

(டாக்டர் கா. காளிமுத்து)

யும் இடம் பெற்றுள்ளது. மேலும் அரசாணை நிலை எண் 561, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, 1986ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாளில் நகராட்சிப் பகுதிகளில், லாரிகள், டிராக்டர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்காக ரூ. 25 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. ஆத்தூர் நகராட்சியும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. சேலம் மற்றும் சில நகராட்சிகளுக்கும் வழியோர கிராமங்களுக்கும் உலக வங்கியிலிருந்து 33 கோடி ரூபாய் உதவியுடன் காவிரி நதியிலிருந்து நீர் கொணரும் திட்டம் ஒன்று தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயலாக்கத்தில் உள்ளது. அத் திட்டத்தில் ஆத்தூர் நகாராட்சியும் சேர்க்கப்பட்டுள்ளது. இத் திட்டம் முடிவடையும்போது ஆத்தூரில் குடிதண்ணீர் பிரச்சினை தீரும்.

**திரு. சி. பழனிமுத்து :** தலைவர் அவர்களே, ஆத்தூர் நகராட்சிப் பகுதியில் வாரம் ஒரு முறைதான் தண்ணீர் கொடுக்கிறார்கள். இந்த அறிக்கையில் நான்கு நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் கொடுக்கப்படுவதாக தெரிவித்திருக்கிறார்கள். கடுமையான குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் அதனை சமாளிக்க 1986ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாளில் நகராட்சிப் பகுதிகளில் குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்காக 80 லட்சம் ரூபாய் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதிலே எத்தனை ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்படும்? ஆத்தூர் நகராட்சியில் பல வார்டுகளில் குடிநீர் விநியோகம் சரியாக செய்யப்படுவதில்லை. ஆகவே குடிதண்ணீர் வழங்க ஆழ்துளை கிணறுகள் குறைந்தது 20வது போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மேட்டூரிலிருந்து ஆத்தூர் வருகிற உலக வங்கி குடிதண்ணீர் திட்டத்தை உடனடியாக செயல்படுத்தவும் வேண்டும். அதற்கான அலுவலர்கள் நியமிக்கப்படவில்லையென்று கூறுகிறார்கள். ஆகவே குடிதண்ணீர் திட்டம் ஆத்தூரிலிருந்து மேலும் தலைவாசலுக்கு நீட்டிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, வறட்சியை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 2,500 ஆழ்துளை கிணறுகள் போடுவதற்கு உத்தேசித்திருக்கிறோம். அதிலே ஆத்தூரினுடைய நிலைமையைக் கருதிப் பார்த்து, எந்த அளவிற்கு ஆத்தூருக்குப் போட வேண்டுமோ, வாய்ப்பு இருக்குமோ அவைகளைப் போடுவதற்கு அரசு முன்வரும். அதைப் போலவே உலக வங்கியினுடைய திட்டமும் செயல்படவிருக்கிறது. அதன் மூலம் ஆத்தூர் பலனடையும.

(திரு ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்)

### (30) விருதுநகர் நகராட்சியில் தண்ணீர் தட்டுப்பாடு

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, '' விருதுநகர் நகராட்சியின் குடிநீருக்கான கோடைக்கால நீர்த்தேக்கம் வறண்டு 'விட்டபடியால் குடிநீர் கிடைக்காமல் அப்பகுதி மக்கள் படும் இன்னல்கள் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

விருதுநகர் நகராட்சியின் மக்கட்தொகை 70,000 ஆகும். அன்றாடம் இம்மக்களுக்கு 15 இலட்சம் லிட்டர் குடிநீர் தேவைப்படுகிறது. பருவமழை இன்மையால் ஆனைக் கோட்டம் என்ற இடத்திலுள்ள நீர்த்தேக்கத்தில் நீர் மட்டம் குறைந்துவிட்டது. எனவே மக்களுக்கு அன்றாடம் 7 இலட்சம் லிட்டர் அளவு குடிநீர்தான் வழங்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக ஒரு நபருக்கு தற்பொழுது ஒரு நாளைக்கு 10 லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. இந்நகராட்சியிலுள்ள 143 கைப் பம்புகளில் தற்பொழுது 92-ம், 43 மின் பம்புகளில் 36-ம் நன்கு வேலை செய்யும் நிலையிலுள்ளன. இவைகள் மூலமாக 4 இலட்சம் லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. ஆனால் இந்த குடிநீர் கூட உவர்ப்பாக உள்ளது.

இந்நகராட்சியில், தற்பொழுது நிலவி வரும் பிரச்சனையை சமாளிக்க ஆனைக்கோட்டம் என்ற நீர்த்தேக்கத்தில் 10 ஆழ்துளைக் கிணறுகள் தோண்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. விருதுநகருக்கு அண்மையிலுள்ள கௌசிக நதிக்கரையில் 5 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவைகளில் ஒரு ஆழ்துளை கிணறு தோண்டும் வேலை முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய கிணறுகளின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பல வறட்சி நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான நிதி வழங்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

தவிர விருதுநகருக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூ. 138 இலட்சத்தில், ஒண்டிபுலிநாயக்கனூர் என்னுமிடத்தில் ஒரு நீர்த்தேக்கம் உருவாக்க ஒரு திட்ட அறிக்கையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. விருதுநகர் நகராட்சியும் இதற்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற அரசின் அனுமதி பெற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.





இந்நகராட்சியில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை போக்கும் வகையில் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(முற்பகல் 10-40)

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் விவரம் ஒன்றுமில்லை. ஆழ் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது என்றால் எப்போது தோண்டுவது ? தண்ணீர் இல்லாத பகுதிகளுக்கு உடனடியாக லாரிகள் மூலமாக சப்ளை செய்யவேண்டும் என்ற எங்களுடைய கோரிக்கைக்கு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறதா ?

அதேபோல் விருதுநகருக்கு குடிநீர் வழங்குவதற்காக 1 கோடியே 38 லட்ச ரூபாயில் ஒண்டிபுலிநாயக்கனூர் என்னுமிடத்தில் ஒரு நீர்த்தேக்கம் உருவாக்க குடிநீர் வடிகால் வாரியம் முயற்சி எடுத்துவருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் இருக்கிற விவரத்தைப் பார்த்துத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைக் கேட்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை வெகு விரைவிலே செயல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யும்.

### (31) பொன்னேரி மாவட்ட முன்சீப் தாக்கப்பெற்றுள்ளது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், கே. உச்சி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சட்ட அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி முன்சீப் கோர்ட்டில் நீதிபதியாக பணியாற்றும், சென்னைக் கீழ்ப்பாக்கம் கார்டன் காலனியில் வசிக்கும் பெரடரிக் கனகராஜ் அவர்கள் கடந்த 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ஆம் நாளன்று எண்ணூர் இரயில்வே நிலையத்தில் மின்சார இரயில் பெட்டிக்குள் அரிவாளால் வெட்டப்பட்டு ஆபத்தான நிலையில் அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால், அவரது குடும்பத்தார், ஏனைய நீதிபதிகள் மற்றும் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சம்

கவன ஈர்ப்புகள்

[திரு. ப. பொன்னுரங்கம்]

குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

பொன்னேரி மாவட்ட முன்சீப் கோர்ட்டில் மாவட்ட முன்சீப் பாக வேலை பார்க்கும் திரு. பெரடரிக் கனகராஜ் என்பவர் சென்னை கீழ்ப்பாக்கம் கார்டன் காலனியில் வசிக்கிறார். அவர் தினசரி சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து ரயில் வண்டி மூலம் பொன்னேரி கோர்ட்டிற்குப் போய் மாலை ரயிலில் சென்னை திரும்புவது வழக்கம். வழக்கம்போல் 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ஆம் தேதி காலை அவர் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து, பொன்னேரிக்கு மின்சார ரயிலில் முதல் வகுப்பு பெட்டியில் பயணம் செய்தார். ரயில் வண்டி விம்கோ நகர் ரயில் நிலையத்தில் வந்தபோது எண்ணூர் அண்ணா நகரில் வசிக்கும் அசோக் லேலண்டு கம்பெனியில் காவலாளியாக வேலைபார்த்து வந்த பலராமன், ஒரு சூட்கேசுடன் அந்த வண்டியில் ஏறினார். காலை சுமார் 9·50 மணிக்கு வண்டி எண்ணூர் ரயில் நிலையத்தில் வந்தபோது மேற்படி பலராமன் தன் சூட்கேசை திறந்து அதி லிருந்து அரிவாளை எடுத்து திடீர் என்று திரு. பெரடரிக் கனகராஜ் அவர்களை தலையிலும், கைகளிலும், உடலில் மற்ற இடங்களிலும் மேற்படி அரிவாளால் சரமாரியாக தாக்கினார். திரு. கனகராஜ் பதறிபோய் தன் உயிரை காக்க ஓடி, நிலைய அதிகாரி அறைக்கு சென்றார். அங்கேயும் பலராமன் துரத்தி வரவே அவர் மறுபடியும் ஓட பலராமன் பின்னால் துரத்திச் சென்றார். வண்டியிலும் பிளாட்பாரத்திலும் இருந்த பயணிகள் மேற்படி பலராமனை மடக்கிப் பிடித்தார்கள். பலத்த காயமடைந்த திரு. கனகராஜ் அவர்களை உடனடியாக தகவல் அறிந்த எண்ணூர் காவல் நிலைய காவல் அதிகாரிகள் ஒரு வேனில் ஏற்றிச்சென்று சென்னை பொது மருத்துவ மனையில் அவசர சிகிச்சை வார்டில் சேர்த்தார்கள். அங்கு அவருக்கு உடனடியாக அவசர சிகிச்சைகளை மேற்கொண்ட பிறகு, வார்டு நம்பர் 29-ல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் உடல் நிலை முன்னேறிவருகிறது. இது விஷயமாக ரயில்வே போலீஸ் அதிகாரிகள் வழக்கு பதிவு செய்து புலன் விசாரித்து வருகிறார்கள். எதிரி பலராமன் என்பவரை ரயில்வே போலீசார் கைது செய்து ரிமாண்டிற்கு அனுப்பி உள்ளார்கள்.



கவன ஈர்ப்புகள்

[திரு. சி. பொன்னையன்]

விசாரணையில் எதிரி பலராமன் மீது மேற்படி பொன்னேரி மாவட்ட முன்சீப் கோர்ட்டில் வீட்டு வாடகை வழக்கு ஒன்று நடந்து வந்ததாகவும், சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு பலராமன் அவர்களுக்கு எதிராக அந்த வழக்கில் தீர்ப்பு கூறிய தாகவும், அதன் பேரில் ஆத்திரமடைந்த பலராமன் கடந்த சில நாட்களாக திரு. பெரடரிக் கனகராஜ் அவர்களை பின் தொடர்ந்து பழிவாங்க திட்டமிட்டதாகவும், சம்பவத்தன்று அத்திட்டத்தை செயல்படுத்தியதாகவும் தெரியவந்துள்ளது. தற்போது திரு. பெரடரிக் கனகராஜ் உடல்நிலை முன்னேறி வருகிறது. அவருக்கு தகுந்த மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நீதிபதி வாடகை சம்பந்தமாக தீர்ப்பு வழங்கிய தாலே தாக்கப்பட்டு இருக்கிறார்கள். தாக்கியவர் பலராமன் என்று போடப்பட்டு இருக்கிறது. ஆகவே நீதிபதிகள் எல்லாம் தீர்ப்பு வழங்கவே அஞ்சுவார்கள் போல் தெரிகிறது. தீர்ப்பு என்று வழங்கினால், ஏதாவது ஒரு பக்கம்தான் செல்லும். ஆகவே பாதிக்கப்படுகின்றவர்கள் இப்படி தாக்கப்படாமல் அவர்களுக்கு முறையான பாதுகாப்பு என்ன கொடுக்கப்படும் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அவர்கள் ரெக்கவர் ஆகி வருகிறார்கள் என்று சொல்லியிருக் கிறார்கள். என்ன பாதுகாப்பைச் செய்திருக்கிறார்கள். அடுத்து இந்த விவர அறிக்கையிலே என்ன காரணத்தால்—எல்லா நீதிபதிகளும் தாக்கப்படுகிறார்களா, நாட்டிலே என்றால் இல்லை—தாக்கப்பட்டார்கள் என்று தெளிவாக இல்லை. அதைக் குறித்தும் அமைச்சர் அவர்கள் விளக்கினால் நல்லதாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகளுடைய உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு தரவேண்டிய முறையில் அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக நீதிபதிகள், குற்றவியல் நீதிபதி களாக இருந்தாலும் சரி, உரிமையியல் நீதிபதிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் வாழ்கின்ற பகுதியில் இரவு நேரங்களில் அந்தப் பகுதியைச் சேர்ந்த காவலர்கள், அவர்கள் இல்லத்திற்கு பாது காப்பு அளிக்கவேண்டும், நீதிபதிகள் இல்லத்திலே இருக்கிற பீட் புத்தகத்திலே அவர்கள் கையெழுத்திடவேண்டும் என்ற ஆணையைக் கூட 1984-லே அரசு இட்டு, அது நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்த குறிப்பிட்ட சம்பவத்தைப் பொறுத்தவரைக்கும் நீதிபதி கனகராஜ் அவர்கள் ஒரு வீட்டு வாடகை சம்பந்தப்பட்ட வழக்கிலே அளித்த தீர்ப்பு அந்த வீட்டிலே வாடகைக்கு இருந்த

வருக்கு பாதகமாக அமைந்துவிட்டது. சட்ட ரீதியாக, சரியான தீர்ப்பை நீதிபதி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஏன் என்றால் மேல் முறையீட்டிலே அது நிருபணம் ஆனது. மேல் முறையிட்டிலே நிருபணம் ஆகி, நீதிபதி அளித்த தீர்ப்பு சரியான தீர்ப்பு என மேல் முறையீட்டிலே உள்ள நீதிமன்றங்கள் அதை உறுதிப்படுத்திய பிறகு, ஆத்திரம் அடைந்த அவர், நீதிபதியைத் தாக்கியிருக்கிறார்கள் என்று விசாரணையிலே. தெரிய வருகிறது. காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

நீதிபதியைப் பொறுத்தவரைக்கும், மருத்துவமனையிலே அவர்கள் விசேசப் பிரிவிலே சேர்க்கப்பட்டு, தக்க மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கூட 2 முறை நேரடியாகச் சென்று அதைக் கண்காணித்து இருக்கிறார்கள். நானும் நேரடியாகக் கண்காணித்து இருக்கிறேன். அவர்களுக்கு ஸ்பெஷல் விடுப்பு கொடுத்தும் கூட, கிட்டத்தட்ட 6 மாதத்திற்கு மேல் அவர்கள் ஓய்வு எடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது ஏன் என்றால் அவர்கள் அந்த அளவிற்கு பாதிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், அதற்கும் பிரத்யேகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(32) திண்டுக்கல்லில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் குறித்து.**

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல்லிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீரால் குடிநீர் மற்றும் விளை நிலங்கள் பாதிக்கப்படுவதோடு கொசுக்களும் உற்பத்தியாவதால் அப்பகுதிவாழ் மக்களுக்கு பலவித வியாதிகள் தோன்றுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தோல் பதனிடும் தொழிற்சாலைகள் திண்டுக்கல்லில், திண்டுக்கல்—மதுரை சாலை, திண்டுக்கல்—திருச்சி சாலை மற்றும் திண்டுக்கல்—நத்தம் சாலை ஆகிய சாலைகளில் அமைந்துள்ளன. தோல் பதனிடும் தொழிற்சாலைகள், தாவர மற்றும் குரோம்







தோல் பதனிடும் முறையைக் கையாளுகின்றன. தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் தோல் ஊற வைத்தல், சுண்ணாம்பு சேர்த்தல், ரோமம் மற்றும் தடை நீக்குதல், சுண்ணாம்பு நீக்குதல், செரி ஊக்கி சேர்த்தல் மற்றும் பதனிடுதல் ஆகிய பல்வகை இயக்கங்களிலிருந்து கழிவுநீர் வெளிவருகின்றது. தொழிற்சாலைகளின் கழிவுநீரானது, கரும்பழுப்பு நிறமுள்ளதாகவும் மிதக்கும் திடப் பொருட்கள், கரையாத திடப்பொருட்கள், உயிர் இரசாயன உயிரகத் தேவை, குரோம் மற்றும் குளோரைடு ஆகியவற்றோடு காரத் தன்மை கொண்டதாயுள்ளது. சுத்திகரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவுநீர் நீர்நிலைகளில் அல்லது நிலத்தில் வெளிவிடப்படும்போது, பிராணவாயு குறைந்து நாற்றம் ஏற்படுவதுடன் நிலத்தடி நீர் மற்றும் நீர்நிலைகள் மாசடைகிறது.

1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளன்று தோல் பதனிடும் தொழிற்சாலைகளைப் பார்வையிட்டபோது, மதுரை சாலையில் உள்ள தொழிற்சாலைகளினின்று வெளிவிடப்படும் தொழிற்சாலைக் கழிவுநீர் செங்கங்குளத்தை வந்தடைகிறது. திருச்சி சாலையிலுள்ள தொழிற்சாலைகளினின்று வெளிவிடப்படும் தொழிற்சாலைக் கழிவு நீரானது பாறக்குளம், பரவைக்குளம் பின்னர் செல்லமாதேவிகுளம் வழியாகச் செல்கின்றது. நத்தம் சாலையில் அமைந்துள்ள தொழிற்சாலைகளிலிருந்து, தொழிற்சாலைக் கழிவுநீரானது அருகிலுள்ள குளங்களை வந்து சேர்கிறது.

திண்டுக்கல் நகராட்சி ஆணையரிடம் தொடர்பு கொண்ட போது, திண்டுக்கல்லுக்கு வழங்கும் குடிநீரானது, தோல்பதனிடும் தொழிற்சாலைகளினின்று வெளிவரும் தொழிற்சாலைக் கழிவு நீரினால் பாதிக்கப்படவில்லை என்பது அறியப்பட்டது.

திண்டுக்கல் பகுதியில் ஏறக்குறைய 43 தோல் பதனிடும் தொழிற்சாலைகள், தங்களுடைய தொழிற்சாலைகளினின்று கழிவு நீரை தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்றுவதற்காக அனுமதி கோரி 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 26 வது பிரிவின் கீழ் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு விண்ணப்பித்திருந்தனர். கழிவுநீரை வெளியேற்றும் முன்னர், வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட வரைமுறைகளுக்கேற்ப தொழிற்சாலைக் கழிவுநீரைத் தொழிற்சாலை சுத்திகரிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் 26 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இரண்டு தொழிற்சாலைகள் சுத்திகரிப்பு நிலையங்களைக் கட்டிக் கொண்டிருக்கின்றன.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க திண்டுக்கல்லிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள், திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுநீர் தொழிலக சேவைச் சங்கம் ஏற்படுத்

தியுள்ளன. குறிப்பிட்ட காலத்திற்குள் அனுமதி கோரி வாரியத்திற்கு விண்ணப்பிக்காத திண்டுக்கல்லிலுள்ள 5 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கெதிராக, 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ்—திண்டுக்கல் உட்கோட்டக் குற்றவியல் நடுவரின் வழக்கு மன்றத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வழக்கு தொடுத்துள்ளது. வாரியம் இப்பொருள் குறித்து கண்காணித்து வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரைச் சுற்றி 43 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் அங்கே நிலத்தடி நீர் கெட்டுவிட்டது என்று சொல்கிறார்கள். மற்றும் நில நீர் நிலையாக மாசு அடைந்து விட்டது என்பதையும் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். மேலும் நகராட்சி ஆணையாளர் அவர்கள் குடிநீர் கெட்டுப் போகவில்லை என்று சான்றிதழ் கொடுத்து இருப்பதாகச் சொல்கிறார்கள். நகராட்சி ஆணையாளருக்கு சான்றிதழ் கொடுப்பதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது. முனிசிபல் அதிகாரி, அதாவது ஹெல்த் ஆபீசர்-இடம் ஒரு ஆய்வு செய்து அதற்குப்பிறகு சான்றிதழ் கொடுத்தாரா ? அல்லது அவரே கொடுத்தாரா ? என்று அறிய விரும்புவதுடன், இவ்வளவு தவறுகள் நடந்திருக்கின்றன. அந்த 43 தொழிற்சாலைகளின் மூலம் அங்குள்ள நிலங்கள் ஊறிய நிலமாக மாறி இருக்கின்றன. அங்கேயுள்ள குளங்களுக்கு கழிவு நீர் போவதாகச் சொல்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதா என்று அறிய விரும்புவதுடன் இந்த நாட்டில் ஏழைக்கு ஒரு சட்டம் பணக்காரனுக்கு ஒரு சட்டமா ? இதுவரை தொழிற் சாலைகளின் நிர்வாகிகள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 டானரிஸ் பொறுத்தவரையிலும் அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. 43 டானரிஸ் அனுமதி கேட்டு இருக்கிறார்கள். 24 டானரிஸுக்குதான் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் திண்டுக்கல்லில் இருக்கக் கூடிய

Dindigul Tannery Effluent Treatmen Co-operative Society.

என்ற ஒரு சொசைட்டி ஏற்படுத்தப்பட்டு இந்த சொசைட்டி மூலமாக கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது மட்டுமில்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இறுதியாக கேட்டுள்ள கேள்விக்கு பதில் சொல்ல வேண்டுமென்றால்,





'The Board has filed cases in the Hon'ble Sub-Divisional Judicial Magistrate Court at Dindigul, against 5 taneries in Dindigul area which did not make the application to the Board for consent within the stipulated time.

எனவே 5 டானரிஸ்மீது நாம் கோர்ட்டுக்கு சென்றிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(33) இராமநாதபுர மாவட்டம் பரமக்குடி வட்ட கிராமங்களில் காலரா நோய் காணப்படுவதாக கூறப்படுகிறது.**

**திரு. அ. பாலுச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம் நயினார் கோயில் ஒன்றியத்திலுள்ள கெட்டக்குடி கிராமத்தில் காலரா காரணமாக ஒருவர் இறந்தும் பலபேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கவலைக்கிடமாக உள்ளதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இராமநாதபுரம் சுகாதார பகுதி மாவட்ட அலுவலரின் அறிக்கையின்படி, பரமக்குடி வட்டம் நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியம் போகலூர் ஆரம்ப சுகாதார நிலைய பகுதியைச் சார்ந்த கெட்டக்குடி கிராமத்தில் 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ஆம் நாளிலிருந்து 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23-ஆம் நாள் வரை சீதபேதியால், 18 பாதிப்புகள் ஏற்பட்டன. 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாளன்று ஒரே ஒரு நபர் இந்நோயினால் மரணமடைந்திருக்கிறார்.

1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ஆம் நாளன்று திரு பொன்னையா (45 வயது) என்பவர் தனது மாடுகளை மேய்த்துவிட்டு வீடு திரும்பிய பிறகு, அவருக்கு பச்சைநிறமான வயிற்றுப் போக்கு ஏற்பட்டதன் காரணமாக, அக்கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள "கார் அடர்ந்த குடி" என்ற கிராமத்தில் உள்ள ஒரு தனியார் ஓமியோபதி மருத்துவரிடம் சிகிச்சை பெற்றார். 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாளன்று அவருடைய கிராமத்திற்கு திரும்பவும் அழைத்துச் செல்லப்பட்டார். அன்று மாலை 6 மணி அளவில் அவர் இறந்துவிட்டார்.

கவன ஈர்ப்புகள்

(டாக்டர் எச். வி. ஹண்டே)

மற்ற 17 நபர்கள் உள்ளூரிலேயே ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்களால் சிகிச்சை அளிக்கப்பட்டதின் காரணமாக அனைவரும் குணமடைந்தனர். பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து தகவல் கிடைத்தவுடன் போகலூர் ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் அவருடைய பணியாட்களுடன், பாதிக்கப்பட்ட கிராமத்திற்குச் சென்று நோய்த்தடுப்பு மருத்துவ நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மேலும் 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாளன்று மாவட்டச்சுகாதார அலுவலரால், சுகாதார ஆய்வாளர் (தனி) பாதிக்கப்பட்ட கிராமத்திற்கு அனுப்பப்பட்டு அவரும் ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்களுடன் சேர்ந்து தகுந்த தடுப்பு மருத்துவப்பணிகளை மேற்கொண்டார். பாதிக்கப்பட்டோரின் மலத்தில் சீதமும், இரத்தமும் காணப்பட்டன. மேலும் மாவட்ட சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார அலுவலர் (தனி) இருவரும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பொது சுகாதாரப் பணியாளர்களால் எடுக்கப்பட்ட கொள்ளை நோய் தடுப்புப் பணிகளை மேற்பார்வையிட்டுள்ளனர்.

1110 மக்கள் தொகையுள்ள இக்கிராமத்தில் 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் வரை 737 நபர்களுக்கு காலரா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. எட்டு பாதிக்கப்பட்ட வீடுகள் பினைல் மற்றும் பிளீச்சிங் பௌடர் கொண்டு ''கிருமிநாசினம்'' செய்யப்பட்டன. மேலும் குடிநீருக்காகப் பயன்படும் இரண்டு கிணறுகள் குளோரினேஷன் செய்யப்பட்டுள்ளன. ஊரணி நீரின்றி வறண்டுள்ளது. எவருக்கும் வாந்திபேதி ஏற்பட்டதாக தகவல் இல்லை.

மாவட்ட சுகாதார அலுவலர் ஆய்வுக்குப் பின் மேற்கூறப்பட்ட 18 நபர்களும், சீதபேதியால் பாதிக்கப்பட்டனர் என்றும், காலரா நோயினாலோ அல்லது தீவிர வயிற்றுப் போக்கினாலோ பாதிக்கப்படவில்லை என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார். தற்சமயம் அக்கிராமம் பொது சுகாதாரப் பணியாளர்களின் நேரடி கண்காணிப்பில் உள்ளது. 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாளுக்குப் பிறகு இந்நோயினால் மேலும் பாதிப்புகள் ஏதும் இல்லை.

திரு. அ. பாலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். காலரா நோயைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதற்கு நன்றி. நயினார் கோயில் ஒன்றியத்திற்கு என்று தனியாக ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. எனவே அப்பகுதிகளில் அடிக்கடி இதுபோன்ற நோய்கள் ஏற்படுகின்றன. உடனடியாக நிவாரணம் தேட முடியவில்லை. எனவே நயினார்கோயில்



கவன ஈர்ப்புகள்

[திரு. அ. பாலுசாமி]

ஒன்றியத்திற்கென உடனடியாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் அங்கே ஏற்படுத்துவதைப் பொறுத்தவரையிலே அதை நாம் பரிசீலனை செய்து நிதிநிலைமைக்கு ஏற்ப ஏற்பாடு செய்ய வேண்டும். 1,110 மக்கள் தொகை உள்ள கிராமத்தில் 737 நபர்களுக்கு காலரா தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிக்றன்.

(34) கேரளாவில் உள்ள மலபார் சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகையால் வாளையார் பகுதி விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவது

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' பேரூர் தொகுதி, வாளையார் பகுதியிலுள்ள விவசாய நிலங்கள் கேரள மாநில எல்லைக்குள் உள்ள மலபார் சிமெண்ட் ஆலையிலிருந்து வெளிவரும் புகை மற்றும் தூசியால் பாதிக்கப்படுவது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

வாளையாரில் உள்ள திருவாளர்கள் மலபார் சிமென்ட் தொழிற்சாலை, கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு அருகில் கேரள எல்லைக்குள் உள்ளது. இத் தொழிற்சாலை நாளொன்றுக்கு 1,200 மெட்ரிக் டன் சிமென்ட் தயாரிக்கிறது.

2. தொழிற்சாலை சிமென்ட் தயாரிப்பதற்கு உலர்ந்த முறையை பின்பற்றுகிறது. சிமெண்ட் தயாரிப்பதற்கு மூலப்பொருள் சுண்ணாம்புக்கல் ஆகும். உடைக்கப்பட்ட சுண்ணாம்புக்கல் களிமண்ணுடன் சேர்ந்து தூளாக்கப்படுகிறது. இந்தத் தூள் தண்ணீருடன் கலக்கப்பட்டு சிறு உருண்டைகளாக்கப்படுகிறது. பின்னர் இவை சூளையில் எரியூட்டப்படுகின்றன. கரி இதற்கு எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது. இவற்றிலிருந்து கிளிங்கர் பெறப்படுகிறது. இந்தக் கிளிங்கர், ஜிப்சத்துடன் சேர்த்து சிமென்ட் பெறப்படுகிறது.

கவன ஈர்ப்புகள்

(டாக்டர் எச். வி. ஹண்டே)

3. தொழிற் சாலையிலிருந்து வெளிவரும் புகைக்கு சிமென்ட் உலை மற்றும் சிமென்ட் மில் முக்கிய ஆதாரங்களாகும். சிமென்ட் உலை மற்றும் சிமென்ட் மில்லில் எலக்ட்ரோஸ்டாளிக்பிசசிபிடேட் டர்களை தொழிற்சாலை அமைத்துள்ளது. தொழிற்சாலை 1986ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ஆம் நாளன்று பார்வையிடப் பட்டது. எலக்ட்ரோஸ்டாடிக் பிரஸ்பிடேட்டரை இயக்குவதற்கு சில பிரச்சினைகள் உள்ளது என்றும், இந்த எலெக்ட்ரோஸ்டாடிக் கருவிகளை அமைத்துள்ளவர்களிடம் அதன் திறனை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தொழிற்சாலை கூறியுள் ளது.

4. எனினும் இது சம்பந்தமாக கேரள அரசுடனும் கேரள மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்துடனும் தொடர்பு கொள்ளப் பட்டு வருகிறது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, வாளையார் பகுதியிலுள்ள மலபார் சிமென்ட் ஆலை துவங்கிய நாளிலிருந்து தூசி பரவி அங்கே வாழ்கின்ற விவசாயி களுக்கும், விவசாய நிலங்களும், கால்நடைகளும் பாதித்து வருவ தால், அந்த ஆலையிலுள்ள இயந்திரங்களை இயக்க சில பிரச் சினைகள் இருப்பதாக விவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த இயந்திரங்களைப் பழுதுபார்த்து சரிசெய்த பின்புதான் ஆலையே ஓட்டப்படவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கேரள அரசை வற்புறுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையைப் பொறுத் தவரையிலே விவர அறிக்கையில் எல்லா விவரங்களும் இருக் கின்றன. இது சம்பந்தமாக கேரள மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

(35) வைகை நதியில் மதுரை நகர சாக்கடை நீர் கலப்பது குறித்து.

*திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, " மதுரையில் வைகை நதியில் சாக்கடை நீரும் தொழிற் சாலைகளின் கழிவுநீரும் கலப்பதால் ஏற்படுகின்ற சுகாதாரக்கேடு குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.



கவன ஈர்ப்புகள்

மாண்மிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மதுரை நகரின் தற்போதைய ஜனத்தொகை 8,83,300 ஆக உள்ளது. வைகை நதி மதுரை நகரை தெற்கு, வடக்கு என இரு பிரிவுகளாக பிரிக்கிறது. தென் பகுதியில் உள்ள வீடுகள், கடை கள் முதலியவற்றிலிருந்து வெளிவிடப்படும் கழிவுநீர் சேகரிக்கப் பட்டு, அவனியாபுரத்தில் கின்னியா புல் வளர்க்க பயன்படுத்தப் படுகிறது.

வட பகுதியில் உள்ள வீடுகள், கடைகளிலிருந்து வெளியாகும் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு, காற்றில் தொட்டிகளில் சுத்திகரிக்கப் பட்டு, சாத்தமங்கலத்தில் பாசனத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. பார்வையிட்டபோது, வைகை ஆற்றின் தென் கரையில் அமைந் துள்ள சிலைமான், வரகனூர், தெப்பக்குளம் பகுதி, குருவிக்காரன் சாலை, சிம்மக்கல் மற்றும் கோச்சடை பகுதி கழிவுநீர் பொறியி யல் நிறுவனம், கைவினை காகிதம் தயாரிக்கும் நிறுவனம், சாய தொழிற்சாலை, அரிசி ஆலைகள் முதலியவற்றில் இருந்து வரும் தொழிற்சாலைக் கழிவு நீர் ஆற்றில் விடப்படுவது தெரிய வந்தது. ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள சாத்தமங்கலம், வண்டியூர், செவிலூர் கல்பாலம் தத்தனேரி பகுதியிலுள்ள கழிவுநீர், பால் பண்ணை மற்றும் ஆஸ்பத்திரி இவற்றிலிருந்து வெளியாகும் கழிவு நீர் வைகையில் கலப்பது தெரிய வந்தது. சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் வைகையில் கலக்கிறது. சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், ஆற்றில் விடப்பட்டால் நிலத்தடி நீரிலும், நீர் நிலைகளிலும் மாசு ஏற்படலாம்.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தில் 26-வது பிரிவின்படி மதுரை மாநகராட்சி மற்றும் பிற தொழிற்சாலைகள் கழிவுநீர்/தொழிற்சாலை கழிவுநீரை வெளியிட தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதியை பெற வேண்டும். மதுரை மாநகராட்சி மற்றும் பால் பண்ணை சாயத் தொழிற்சாலை போன்ற நிறுவனங்கள் கழிவுநீர், தொழிற் சாலை கழிவுநீர், வெளியிட வாரிய அனுமதி கேட்டு விண்ணப் பித்துள்ளன. மதுரை மாநகராட்சியும் தொழில் நிறுவனங்களும் கழிவுநீரை சுத்திகரிக்கும் முறை பற்றிய கருத்துருக்களை அனுப்பு மாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள தொழிற்சாலை களும் வாரியத்தின் அனுமதி கோருமாறு நிர்பந்திக்கப்பட்டுள் ளன. மதுரை மாநகராட்சி மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும்போது வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறை களுக்கேற்ப கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற

கவன ஈர்ப்புகள்

(டாக்டர். எச். வி. ஹண்டே)

வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படும். மதுரை மாநகராட்சி மற்றும் தொழில் நிறுவனங்களில் எடுத்துள்ள நடவடிக்கைகள் முன்னேற்றம் குறித்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவை முன் வைத்துள்ள அறிக்கையில் வைகை நதியினுடைய தென் புறமும், வட புறத்தில் இருக்கின்ற தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவு நீர் வைகை நதியில் கலக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டு உள்ளார்கள் அது மட்டும் அல்லாமல், ஆற்றில் விடப்படுகின்ற அந்த கழிவு காரணமாக நிலத்தடி நீர், மற்றும் நீர் நிலைகளில் மாசு ஏற்படுகிறது என்று சொல்லி யிருக்கிறார்கள். எனவே இந்த நிலையை போக்க ஏற்கனவே கழிவு நீரை இந்த வைகை ஆற்றில் விடுகின்ற தொழிற்சாலைகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன் மேலும் அப்படி இதுவரை எவ்வளவு தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் 3 பகுதிகள் இருக்கின்றன. (Madurai Corpo ation, Industrial Units of Dairy Development Corporation Dyeing Units) என்று 3 பகுதியாக இருக்கின்றன. இதிலே (Dyeing unit Dairy Co po ati n, Madu ai Co po ation) பொறுத்த வரையில் நாம் உடனடியாக (Effluents) ஐ சுத்திகரித்து வெளியே அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதற்கு கொஞ்சம் அவகாசம் கொடுத்து இருக்கிறோம் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை; நோட்டீஸ் கொடுக்கப்படும்.

Madurai Corpo ation Industrial Units of Dairy Devel pment Corporation) இப் பகுதிகளைப் பொறுத்த வரையில் மதுரை கார்ப்பரேஷனுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம். அந்த கார்ப்பரேஷன் அதை சுத்திகரித்த பிறகு தான் வெளியே கழிவு நீரை விடவேண்டும் என்றுசொல்லியிருக்கிறோம். அவர்களிடமிருந்து பதிலை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

(36) சேலம் ஆத்தூரில் ஏற்பட்ட லாரி விபத்து.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " சேலம் மாவட்டம், ஆத்தூரில் ஒரு பீடா கடைக்குள் லாரி புகுந்ததால், ஸ்தலத்திலேயே இரண்டு பேர் இறந்தும் பலபேர் காயம் அடைந்ததால் அப்பகுதி மக்களிடையே ஏற்



கவன ஈர்ப்புகள்

(திரு. இரா. தாமரைக்கனி)

பட்டுள்ள நிலை குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21ஆம் நாளன்று சுமார் பிற்பகல் 12-15 மணியளவில் ஆத்தூர் கடலூர் சாலையில் ஆத்தூர் நகரில் அம்பேத்கார் காலனி அருகில் டி. என்.ஜே. 5137 எண்ணுள்ள லாரி ஒரு தையற்கடையும், முடி திருத்தும் நிலையமும் அமைந்துள்ள ஒரு கொட்டிலில் மோதியதால் விபத்து ஏற்பட்ட இடத்திலேயே இருவர் இறந்தனர். 7 பேர் காயமடைந்தனர். இறந்தவர்களில் ஒருவர் ராஜி என்னும் 18 வயது நிரம்பியவர். இவர் செஞ்சி என்ற தையற்காரனின் மகன் ஆவார். இவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். மற்றவர் 22 வயது நிரம்பிய ஜெயராமன் என்பவர் ஆவார். இவர் சூரன் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரின் மகன் ஆவார். காயமுற்றவர்களில் ஐந்து நபர்கள் ஆத்தூர் அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் நிலைமை சீராகி வருகிறதென்று கூறப்பட்டுள்ளது. காவல் துறையினர் இந்த விபத்து சம்பந்தமாக வழக்கு பதிவு செய்துள்ளனர். லாரி ஓட்டுநரை நீதி மன்றம் பிணையத்தில் விடுவித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லாரிகளை இரவு நேரங்களில் ஓட்டுகிற சில டிரைவர்கள் உழைப்பின் காரணமாக குடித்துவிட்டு லாரியை ஓட்டுகிறார்கள். ஆகவே குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு லாரியை ஓட்டக் கூடாது என்று அரசு தடை விதிக்குமா ? இப்படிக் குடித்துவிட்டு லாரியை ஓட்டுவதால் ரோடு எது, வீடு எது, கடை எது என்று தெரியாமல் ஓட்டுவதில் இந்த மாதிரி விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் இரவில் லாரிகளை ஓட்டுவதற்கு தடை விதிக்கப்படுமா ? இந்த விபத்தில் இறந்த குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து உதவி கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபத்தைப் பொறுத்தவரையில் காயம் அடைந்தவர்கள் 5 நபர்கள். அவர்கள் ஆத்தூர் அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்

கள். இவர்கள் நிலைமை சீராகி வருகிறது என்று நமக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது. குடித்துவிட்டு ஓட்டுவதைப் பற்றி சொன்னார்கள். அதற்கு Alcohal Test என்ற முறையில் எந்த லாரி டிரைவராக இருந்தாலும் அவர்கள் குடித்து விட்டு ஓட்டுகிறார்கள் என்று போலீசார் புகார் கூறுவார்களானால் அவர்களை உடனடியாக மருத்துவ மனையில் டெஸ்டு மூலமாக அவர் குடித்து இருக்கிறார் என்றால் "He is suffering from intoxication. He has taken Alcohol". என்ற 2 பிரிவுகளாக பிரித்து அதற்கு உரிய தண்டனை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. மருத்துவ மனைக்கு அவர்களை அழைத்துக்கொண்டு போய் டாக்டர்கள் பரிசோதனை செய்து அவர்கள் ஆல்கத்கால் எடுத்து இருக்கிறாரா குடித்து இருக்கிறாரா என்பதை தெரிந்து கொள்ள டாக்டர்களால் முடியும். அப்படிப் பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

**(37) சென்னை, 44 ஆவது வட்டம் டாக்டர் அம்பேத்கார் நகரில் டான்பாஸ்கோ ஸ்தாபனம் கட்டிவரும் வீடுகள் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் பரிதி இளம் வழுதி, சு. பாலன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " சென்னை 44-வது வட்டம், டாக்டர் அம்பேத்கார் நகரில் குடிசை மாற்று வாரியம் சுமார் 380 குடும்பங்களுக்கு பட்டா வழங்கி, மாதம் ரூ. 10 அடிப்படை வசதிக்காக வசூல் செய்கிறது. அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க மாநகராட்சி, எம்.எம்.டி.ஏ., மற்றும் குடிசை மாற்று வாரியம் ஆகியவை திட்டம் தீட்டி ஒரு மத சார்புள்ள தனியார் ஸ்தாபனத்திடம் ஒப்படைத்து, அவர்களால் ஒரு சில வீடுகள் கட்டப்பட்டு, அவை தரமானதாக இல்லை என அரசுக்கு புகார் செய்து, மேற்கொண்டு கட்டுவது நிறுத்தப்பட்டது. தற்போது அதே ஸ்தாபனம் அப் பகுதியிலுள்ள காலி இடங்களை தன் வசமாக்கி, மதில் சுவர் எழுப்பி, தனக்கென சில கட்டிடங்களைக் கட்டி வருகிறது. இவ்வாறு மேற்கொண்டு வீடுகள் கட்டிக் கொடுக்காமல், காலி இடங்களைக் கைப்பற்றி தனிக் கட்டிடங்கள் கட்டப்படுவதால்வெள்ளம், தீ விபத்து போன்ற நேரங்களில் அப் பகுதி வாழ் மக்கள் பாதிக்கப் படும் நிலை குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சரின் னத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

சென்னை 44வது வட்டம், டாக்டர் அம்பேத்கார் நகர், குடிசைப் பகுதி அமைந்துள்ள நிலம் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானதாகும். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ள வரைப்படத்தின் படி, சென்னைப் பெரு நகர் வளர்ச்சித் திட்டம் 1ன் கீழ் மேம்பாட்டுப் பணிகள் சென்னை மாநகராட்சியினரால் செய்யப்பட்டது. சென்னைப் பெரு நகர் வளர்ச்சித் திட்டம் 2ன் கீழ், குத்தகை மற்றும் விற்பனை உடன் பாட்டு பத்திரம் முறையில் நில உரிமை வழங்குவது, மற்றும் வீட்டு மேம்பாட்டுக் கடன் வழங்கும் பணி குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டது. இப் பகுதியில் 210 குடும்பங்களுக்கு குத்தகை, மற்றும் விற்பனை உடன்பாட்டு பத்திரம் வழங்கப்பட்டு, 190 குடும்பங்களுக்கு ரூ. 3,500 வரை வீட்டு மேம்பாட்டுக் கடன் வழங்கப்பட்டது. 1981ஆம் ஆண்டு நவம் பர் திங்கள் 4ஆம் நாளன்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இங்கு கூடுதல் மேம்பாட்டுப் பணிகளை டான் பாஸ்கோ என்ற சமூக சேவை சங்கம் செய்யலாம் என முடிவு செய்யப்பட்டது. மேற்குறித்த குடிசைப்பகுதியில் உள்ள ஒரு பகுதியினரே டான் பாஸ்கோ சமூக சேவை சங்கத்தினரை நேரடியாக அணுகி, அவர்களிடம் ரூ. 6,000ஐ மானியமாகப் பெற்று அச் சங்கத்தின் மூலமாக வீடுகளைக் கட்டிக்கொண்டனர். வீடுகள் கட்டும் பணி குடிசை வாசிகளுக்கும் இச் சங்கத்திற்கும் ஏற்பட்ட உடன்பாடே தவிர, குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கும் கட்டுமானப் பணிகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. இருந்தாலும் மேற்படி சங்கததினால் கட்டப்பட்ட வீடு தரமானதாக இல்லை என தனி நபர் ஒருவர் செய்த முறையீட்டின் பேரில், அதனை சரி செய்து தருமாறு அந் நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டது. 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 4 ஆம் நாளன்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் நடந்த கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, சமுதாயப்பணிகளுக்கான வரையறுக்கப்பட்ட திறந்தவெளி மனைகளை ஆக்கிரமிப்புகளிலிருந்து காக்கும் பொருட்டு, இச் சங்கம் மதில் சுவர் எழுப்பி பாதுகாக்கின்றது.

சமுதாயப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட இடம் அப் பணிகளுக்காகவும், இப் பகுதி வாழ் மக்களின் நலனுக்காக மட்டுமே உட்படுத்தப்படும். எனவே இப் பகுதியில் வெள்ளம், தீ விபத்து ஏற்படும் காலங்களில் இவ்விடங்களை குடிசைவாழ் மக்கள் உபயோகிக்க எவ்வித ஆட்சேபணையும் இருக்காது.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த விவர அறிக்கையில் 1981ஆம் ஆண் டுநவம்பர் திங்கள் 4 ஆம் நாள் அன்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திக்

கவன ஈர்ப்புகள்

(திரு. சு. பாலன்)

நடைபெற்ற கூட்டத்தில், மேற்படி அம்பேத்கார் நகர் பகுதியை அந்த டான் பாஸ்கோ ஸ்தாபனம் தத்து எடுத்துக் கொண்டு அங்குள்ள குடிசைகளை அகற்றி அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதாகவும், அதற்காக அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதாகவும், பல இலட்சக்கணக்கான ரூபாயை குடிசை மாற்று வாரியத்திற்கு நன்கொடையாகக் கொடுத்து இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறதே, இது உண்மையா அப்படியானால் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டுள்ளது என்பதோடு, அறிக்கையிலே சொன்னது போன்று, இந்த சமுதாயப் பணிகளுக்காக வரையறுக்கப்பட்ட திறந்தவெளி மனைகளை ஆக்கிரமிப்புகளிலிருந்து காக்கும் பொருட்டு, தாட்கோ மூலமாக, அரசாங்கத்தின் மூலமாகக் கட்டுவதாகச் சொல்கிறார்கள். அப்படி அவர்கள் கட்டுவதாக இருந்தால், ஏற்கனவே மதிற் சுவர்கள் கட்டுவதற்கு முன்னாலேயே அனுமதி பெற்று கட்டுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** அவர்கள் கட்டுகின்ற கட்டிடங்களைப் பொறுத்த வரையில் அனுமதி பெற்று கட்டியிருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காம்பௌண்ட் சுவர் கட்டியிருந்தால், உள்ளேயிருக்கின்ற இடத்தில் சிலர் கட்டிடங்களைக் கட்டியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஏதாவது அனுமதி இல்லாமல் கட்டியிருந்தால் அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சுற்றுச் சுவர்கள் பொறுத்த வரையில், ஏற்கனவே இரண்டு முறை அந்த இடத்திலே மற்ற நபர்கள் ஆக்கிரமிப்பு செய்ததன் காரணமாக குடிசை மாற்று வாரியம் 1982ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் அன்றும், 1983ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 6ஆம் நாள் அன்றும் அங்கே இருந்தவர்களை அகற்றியுள்ளது. அந்த இடத்தினுடைய நிலத்தைப் பாதுகாக்கின்ற தன்மையில் தான் இந்தச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

இறுதியாக மாண்புமிகு உறுப்பினர் கட்டப்பட்ட வீடுகளுக்கு அந்த நிறுவனம் கொடுத்த நிதியைப் பற்றி கேட்டார்கள். 90 வீடுகளைக் கட்ட இந்த சேவைச் சங்கம், ஒரு குடியிருப்பிற்கு ரூ. 6,000 வீதம் மானியம் வழங்கியிருக்கிறது.

### (38) கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் எஸ். சிவராமன், சு. சிவராஜ் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு தொழில்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.





**திரு. எஸ். சிவராமன் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, 'கள்ளக் குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்புசாகுபடி செய்யும் விவசாயிகளின் கரும்பு பதிவு செய்யப்பட மாட்டாது என்று கூறப்படுவதால், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் விஸ்வந்திபுரம் ஆகிய ஒன்றிய பகுதிகளைச் சார்ந்த விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை இன்னும் அந்தத் துறையிடமிருந்து கிடைக்கவில்லை. விவர அறிக்கை வந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த அரசினுடைய பதிலை அளிப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

### (39) நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்டுவரும் நட்டம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் கே. உச்சி, கே. கல்லன், ஆகியோர் ஒரே பொருள் குறித்த் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

**திரு. கே. உச்சி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளும் நட்டத்தில் இயங்கி வருவது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் :** தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் 2 ஏக்கர் முதல் 25 ஏக்கர் வரை சிறு தேயிலை தோட்டங்களை உடைய சுமார் 8,887 சிறு தேயிலை உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளன. இத்தகைய தோட்டங்களிலிருந்து கொண்டு வரப்படும் பச்சை தேயிலைகள் அனைத்தும் ஒரே தரமானதாக இருக்க வாய்ப்பில்லை. எனவே பல்வேறு தரமான பச்சை தேயிலையைக் கொண்டு தயாரிக்கப்படும் தேயிலைத் தூள் முதல் தரமானதாக இருக்காது. ஆனால் டான்டீ மற்றும் தனியார் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்

சாலைகள் தனக்கு சொந்தமான தேயிலை தோட்டங்களில் நல்ல தரமான ஒரே மாதிரியான பச்சைத் தேயிலையை வளர்த்து அதன் மூலம் தேயிலைத்தூள் தயாரிக்கின்றன. எனவே ஒரே மாதிரியான தரமுள்ள தேயிலைத்தூள் தயாரிக்கின்றன. இதனால் நமது தேயிலைத் தொழிற்சாலைகளில் தயாராகும் தேயிலைத் தூளுக்கு அதிக விற்பனை விலையும் கிடைப்பதில்லை. இது நமது தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் நட்டத்தில் இயங்குவதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

தேயிலைத் தூள் விற்பனை, இதர வியாபார பொருள்களைப் போல் இல்லாமல் உலக சந்தை நிலவரத்தைப் பொறுத்ததாகும். உலக சந்தை விலை குறையும் போது சில சமயங்களில் தேயிலைத் தூள் உற்பத்தி விலையை விட குறைவான விலைக்கு தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளால் விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. அதே சமயம் சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் அளிக்கும் பச்சைத் தேயிலைக்கு குறைந்த பட்ச விலை நிர்ணயித்து வழங்க வேண்டியுள்ளது ( Minimum Price ). இதனால் ஏற்படும் இழப்பு சமூக இழப்பாகும் ( Social loss ). இதனை அந்தந்த தொழில் கூட்டுறவு தேயிலை சங்கங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியதாகிறது. பொதுவாக தேயிலைத் தூள் விற்பனை விலையில் உச்சநிலை மற்றும் விலை சரிவு ( Boom and depression ) என்பது சாதாரணமாக நடைமுறையில் உள்ளன. உச்சநிலை கிடைக்கும் போது அனைத்து நஷ்டங்களும் சரி செய்யப்பட்டு (கடந்த ஆண்டு நஷ்டங்கள் உட்பட நிவர்த்தி செய்யப்பட்டு) சங்கங்கள் லாபகரமாக இயங்கும். இத்தகைய நிலை 1984–85ல் ஏற்பட்டது. ஆனால் மீண்டும் விலைச் சரிவின் காரணமாக சங்கங்கள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. தேயிலைத் தூளுக்கு நல்ல விலை கிடைக்கவும் சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும் அதன் மூலம் சங்கங்களை லாபகரமாக இயக்கவும் அரசினால் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அனைத்துத் தேயிலைக் கூட்டுறவு தொழிற்சாலைகளுக்கும் அரசாங்கம் அதிகப் பங்குத் தொகை ஏற்பதோடு ஒவ்வொரு தேயிலைத் தொழிற்சாலைக்கும் கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைக்கான வட்டியை ரத்துசெய்ய முன்வருமா என்பதையும், அந்தத் தேயிலைத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் தேயிலைத் தூள்களை, மார்க்கட்டிங் வசதி செய்வதற்கு 4, 5 புரோக்கர்களை நம்பி நடக்கிறது. அவர்கள் தங்களுடைய பையர்ஸ் மார்க்கெட்டாக உபயோகப்படுத்துகிறார்களே தவிர செல்லர் மார்க்கெட்டாக அங்கு இடமில்லை. ஆகவே அந்த புரோக்கர்களை நிறுத்திவிட்டு, அரசாங்கமே நேரடியாக அந்தத் தேயிலைத் தூள்களை விற்பதற்கு ஏற்பாடுகள் செய்ய முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் :** தலைவர் அவர்களே தொடர்ந்து பல தொழிற்சாலைகள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன என்ற காரணத்தினால், புதிய முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. தென்னிந்திய தேயிலைத் தூள் ஏற்றுமதி உரிமையை வழங்கக் கோரி மத்திய அரசுக்கு அமைச்சரவர்கள் மூலமாக நேர்முகக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தாய் சங்கமான, இன்கோசொவ் மூலமாக நேரடியாக ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மூன்றாவதாக சந்தையில் நல்ல விலை கிடைக்க தேயிலை புரோக்கர் நிறுவனம் ஒன்று நிறுவி, அங்கே நமது தேயிலை மற்றும் டான்டீ தேயிலையை தனி புரோக்கர்கள் மூலமாக விற்பனை செய்ய நமது அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல், இதற்கு முன்னாலே 4, 5 புரோக்கர்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. இப்போது அதை மாற்றி, தொழில் வணிகத் துறை இயக்குநர் அவர்களுடைய தலைமையிலே,

Man ging Director Incoserve

Managing Director; Tantea

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மூவர் கொண்ட ஒரு குழுவை நியமித்து தேயிலை புரோக்கிங் நிறுவனம் என்ற அமைப்பை நிறுவி அதன் மூலமாக விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**(40) கீழ்பவானி அணையிலிருந்து கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் விடுவது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ச. பாலகிருஷ்ணன், டாக்டர் அ. பொன்னுசாமி, கா. செ. பழனிச்சாமி, பு. கோ. நாராயணன், துரை ராமசாமி, கு. அ. செங்கோட்டையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரியார் மாவட்டம், கீழ்பவானி அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் நான்கு முறை தண்ணீர் விடப்

படும் என்ற அறிவிப்பை நம்பி பயிர் செய்துள்ள நிலையில் தற்பொழுது இரண்டு முறையுடன் தண்ணீர் நிறுத்தப்பட்டுவிடும் என்று சொல்லப்படுவதால் அந்தப் பகுதி விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த ' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

***மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

பெரியார் மாவட்டம், பவானிசாகரில் இரண்டாம் முறைப் பாசனத்திற்கு தண்ணீர் 1985ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20ஆம் நாள் முதல் 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் வரை திறந்து விடப்பட்டது. நீர்த் தேக்கத்தில் போதுமான நீரளவு இல்லாததால் எள்ளு பயிர் மட்டுமே பயிரிட வேண்டும் என்றும் மற்ற பயிர்களை பயிரிடக் கூடாதென்றும் அறிவிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது. எத்தனை முறை தண்ணீர் விடப்படும் என்று அறிவிப்பில் குறிப்பிடவில்லை. எள்ளு பயிர் ஒரு குறுகிய காலப் பயிர். முதல் தண்ணீர் 1985ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20ஆம் நாள் முதல் 1986ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 8ஆம் நாள் வரை தரப்பட்டது. பிறகு பாசனப் பரப்பில் மழையும் பெய்தது. இரண்டாவது தண்ணீர் 1986ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ஆம் நாள் முதல் 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3ஆம் நாள் வரை விடப்பட்டது. இவ்வாறு இரண்டு முறை விடப்பட்ட நீரும் மற்றும் பாசனப் பரப்பில் பெய்த மழையும் அறிவிக்கப்பட்ட எள்ளு பயிருக்கு போதுமானது.

இருந்தாலும் பாசனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள 98,692 ஏக்கரில் 57,310 ஏக்கரில் பாசனம் செய்யப்பட்டது. இதில் 22,358 ஏக்கரில் எள்ளு பயிரும் 11,666 ஏக்கரில் கடலையும் மற்றதில் கரும்பு, சோளம், மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளன. கரும்பு, சோளம், கடலை, மஞ்சள் பயிர்கள் கிணற்று நீரைக் கொண்டு சாகுபடி செய்யப்பட்டன. இவை கிணற்று நீரைக் கொண்டே விளைவித்து விடலாம்.

விவசாயிகள் இப் பகுதியில் குடிநீர் பற்றாக்குறை இருப்பதால் மேலும் தண்ணீர் அனுப்புமாறு கோரினார்கள். பவானிசாகர் நீர்த் தேக்கத்தில் தற்போதைய (1986ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7ஆம் நாள்) நீரின் அளவு 2,185 மி.கன.அடி. இதில் கால்வாயில் உபயோகிக்கக் கூடியது சுமார் 750 மி. க.அடி. இது ஒரு முறை தண்ணீர் விட போதுமானதல்ல. இருக்கும் நீரைக் கொண்டு குடிநீர் பற்றாக் குறையை நீக்க தண்ணீர் வழங்குவது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.



**திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் எங்களுக்கு இங்கே வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலே அந்தத் தகவல் எதுவுமில்லை. இருந்தாலும், கீழ்பவானி அணையிலே ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி ஆண்டுதோறும் தண்ணீர் திறந்துவிடப்படும். கடந்த ஆண்டு தண்ணீர் திறந்து விடப்படக்கூடிய தேதியிலே அணையிலே போதுமான தண்ணீர் இருந்தும்கூட, ஏன் திறந்துவிடப்படவில்லை? அணையிலே இருக்கிற தண்ணீரை தஞ்சாவூருக்கு திறந்து விட்டு விட்டு, பெரியார் மாவட்டத்தை வறண்ட பாலைவனமாக்கிய அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா ? இந்த ஆண்டாவது ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி அன்று தஞ்சாவூருக்கு தண்ணீர் விடாமல் பெரியார் மாவட்டத்திலே பாசனம் பெறுகின்ற கீழ் பவானி அணையின் மூலம் பாசனம் பெறுகின்ற பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, கீழ்பவானி அணைத் தண்ணீரை பெரியார் மாவட்டத்திற்கு விடுவதற்கு அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை வரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது அவருக்கு அனுப்பி வைக்கப்படும். ஏற்கனவே அணையில் தண்ணீர் இல்லாத காரணத்தினாலே தண்ணீர் வராது, எனவே, எள் போன்ற பயிர்களைப் பயிரிட வேண்டும் என்று அறிவித்திருக்கிறோம். வேறு பயிர்களைப் பயிரிட வேண்டாம் என்று அரசு அறிவித்திருக்கிறது.

**(41) உடுமலைப்பேட்டை பிரதான கால்வாய் பாசனப் பகுதிக்கு முறைப்படி தண்ணீர் வழங்குவது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் கு. ரமணி, வி. பி. சிந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். இவர்களில் ஒருவர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை பிரதான கால்வாய் பாசனப் பகுதியில் 60,000 ஏக்கர் நிலத்தில் நெல், கடலை, சோளப்பயிர் ஆகியவை சாகுபடி செய்யப்பட்டுள்ளதற்கு

(திரு. கு. ரமணி)

முறைப்படி வழங்க வேண்டிய தண்ணீரை வறட்சியின் காரணமாக குளம், குட்டைகளுக்கு திறந்துவிட்டுள்ளபடியால், அப் பகுதி விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு போதிய அளவு தண்ணீர் கிடைக்காமல் விளைச்சல் பெருமளவு பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் கோவை மாவட்டத்திலுள்ள, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை பல்லடம் வட்டங்களுக்கும், மற்றும் பெரியார் மாவட்டத்திலுள்ள தாராபுரம், காங்கேயம் வட்டங்களுக்கும் பாசன வசதியளிக்க மேற்கொள்ளப்பட்டது. நடப்பு ஆண்டில் ஜனவரி மாதத்தில் பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட நீர்த் தேக்கங்களிலுள்ள நீரின் அளவைக் கொண்டு $3\frac{1}{2}$ மாதங்களுக்கு (105 நாட்களுக்கு) மட்டுமே போதுமானதாக பரம்பிக்குளம் பிரதானக் கால்வாயில் முதல் மண்டலம், மற்றும் உடுமலைப்பேட்டை கால்வாய் ஆகியவற்றின் கீழ் உள்ள பழைய ஆயக்கட்டு நிலங்களாகிய சுமார் 66,103 ஏக்கருக்கு பாசன நீர் அளிக்க அரசு ஆணை வழங்கப்பட்டது. 1986ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10ஆம் நாள் மற்றும் 1986ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23ஆம் நாள் ஆகிய நாட்களில் நடந்த பாசன கூட்டத்தில் மேற்கண்ட ஆயக்கட்டுதாரர்கள் $4\frac{1}{2}$ மாதங்களுக்கு நீர் வழங்க வேண்டுமென்று கோரினர். மேலும் வறட்சி நிலை காரணமாக இவ்வாண்டில் பாசனம் பெறாத பரம்பிக்குளம் பிரதான கால்வாய் இரண்டாவது மண்டலத்திலுள்ள பூலாங்கிணர், மற்றும் குடிமங்கலம் கிராமப் பகுதியிலுள்ள குளம், குட்டைகளுக்கு தண்ணீர் நிரப்பக் கோரினர். விரிவாக்கத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட ஆயக்கட்டுதாரர்களும் பாசன நீர் வழங்க கோரினர். இக் கோரிக்கையினைக் கருத்தில் கொண்டு, ஏப்ரல், மே, ஜூன் திங்களில் மழையையும் எதிர்பார்த்து, பாசனத்திற்காக பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட பிரதானக் கால்வாய் மற்றும் உடுமலை கால்வாய்களில் 1986ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15ஆம் நாள் முதல் தண்ணீர் விடப்பட்டு வருகிறது. ஆயக்கட்டுதாரர்கள் கோரியவாறு இதே தருணத்தில் மேற்குறிப்பிட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட பூலாங்கிணர் மற்றும் குடிமங்கலம் கிராமத்திலுள்ள குளம் குட்டைகளுக்கும் நீர் வழங்க அரசு ஆணை வழங்கியது. அதன் அடிப்படையில் பூலாங்கிணர் கிராமத்தில் உள்ள குளம் குட்டைகளுக்கு ஒரு தரம் முழுமையாக தண்ணீர் விடப்பட்டுள்ளது. மேலும் பாப்பன்குளத்தைச்சேர்ந்த 1,514 ஏக்கர் நிலங்களில் பாசனத்திற்காக கிளவங்காடு கிளை வாய்க்காலுக்கும், தண்ணீர் விடுவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.



திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த விவசாயிகளைப் பொறுத்த வரையில் அறுபதாயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்டு பாசன தண்ணீர் அளிக்க ஆணை வழங்கப்பட்டது என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், கோவை மாவட்டத்தில் வறட்சி நிலை மிகவும் அதிகமாக இருக்கிறது என்று தெரிந்துதான் பாசன ஏரியா விவசாயிகளினுடைய கூட்டம் ஜனவரி மாதம் 10ஆம் தேதியும், 23ஆம் தேதியும் கூட்டப்பட்டு $4\frac{1}{2}$ மாதங்களுக்கு அவர்களுக்கு தொடர்ந்து தண்ணீர் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் இந்த வருஷம் முறைப்படி தண்ணீர் கொடுக்க தகுதி இல்லாத பகுதிகளுக்கு, குளம், குட்டைகளுக்குத் தண்ணீர் விடுகிறோம் என்ற பெயரால் அங்குள்ள அதிகாரிகளாகத் தண்ணீர் விட்டதன் பலனாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் நியாயமாகக் கிடைக்கவில்லை. அவர்கள் பெரிய நஷ்டத்திற்கு ஆளாகி உள்ளார்கள். ஆகவே, இவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அதற்கு வேண்டிய நஷ்டயீட்டைக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புவதோடு, அவர்களுக்கு இப்பொழுது தண்ணீர் முறையாக விளைச்சலுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையின்படி முறையாகத் தண்ணீர் விட வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுதான் அரசு ஆணை வழங்கி, இருக்கின்ற அளவுக்குத் தண்ணீரை வழங்கியிருக்கிறது. குளம், குட்டைகளுக்கும் தண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது. ஏதாவது உறுப்பினர் கூறுவது போன்று தவறு எங்கேயாவது நடந்திருக்கிறது என்று தெரிய வந்தால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**(42) கோவை மாவட்டத்தில் கூட்டுறவுக் கடனை ஒத்திவைத்தல் குறித்து**

**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " கோவை மாவட்டத்தில் தற்சமயம் கடும் வறட்சி நிலையுள்ளதால் கூட்டுறவுக் கடன் வசூலில் மேற்கொள்ளப்படும் கடுமையான நடவடிக்கையின் காரணமாக அம்மாவட்ட விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

கவன ஈர்ப்புகள்

(திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்)

அறிக்கை.

கோவை மாவட்டத்தை பொறுத்த மட்டில் வறட்சி ஏற்பட்டுள்ளதாக அம்மாவட்ட ஆட்சியாளரால் அறிவிப்பு ஏதும் இதுவரை வழங்கப்படவில்லை. கூட்டுறவுக் கடன்களின் வசூலைப் பொறுத்தவரை, கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியின் 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் தேதிய நிலவரப்படி தவணை தவறிய கடன்களின் நிலுவை 77 விழுக்காடு ஆகும். 1986ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாள் உடன் முடிவடையும் காலத்திற்கு இவ்வங்கியின் மொத்த கேட்பு ரூ. 1,360.34 இலட்சம் ஆகும். 1986ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளுக்குள் இவ்வங்கி தனது கேட்பை 40 விழுக்காடு அளவுக்கு குறையாமல் கடன்களை வசூல் செய்தால்தான் 1986–87ஆம் ஆண்டிற்கு தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் வேளாண்மைக்கான வங்கியிடமிருந்து (NABARD) வேளாண்மைக்கான கடன்கள் வழங்குவதற்கான கடன் அளவுகளை பெற இயலும். இந்நிலையில் கடன்கள் வசூல் தீவிரப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனினும் கடன்களின் வசூல் பொதுவாக அணுகு முறையின்மூலமே மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. நீண்டகாலமாக செலுத்தப்படாத கடன்களை வசூல் செய்தாலன்றி, கூட்டுறவு வங்கி "நாபார்டு" வங்கியிடமிருந்து கடன் அளவுகள் பெறுவதற்கு இயலாது என்ற காரணத்தால் கீழ்க் கண்ட பிரிவினரிடமிருந்து மட்டுமே சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு அனுமதித்துள்ளது.

(1) சட்டபூர்வ நடவடிக்கைக்கு பயந்து தமது சொத்துக்களை துண்டுபோடும் உறுப்பினர்கள் ;

(2) கறவை மாடுகள் வாங்குதல், ஆடு வளர்த்தல்; கோழி வளர்த்தல் போன்ற உப தொழில்களை மேற்கொள்ள விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து மத்திய கால கடன் பெற்று வாங்கிய காரியத்திற்கு பயன்படுத்தாதவர்கள் மற்றும் கடன் தொகையை திருப்பிச் செலுத்தும் முன்னர் ஆடுகள், மாடுகள் மற்றும் கோழி போன்றவற்றை விற்க முயலுபவர்கள்/ விற்றவர்கள்:

(3) தொழில், வணிகம் செய்பவர்கள், திரையரங்கு' அரிசி ஆலை உரிமையாளர்கள், மாத சம்பளம் பெறுபவர்கள், மற்றும் வழக்குரைத்தல், மருத்துவம் போன்ற தொழில்களை மேற்கொண்டு உள்ளவர்கள் போன்று உபரி வருவாய் உள்ளவர்கள்;

(4) கடந்த ஐந்தாண்டுகளாக நிலுவையில் உள்ள நிறைவேற்று மனுக்கள் தொடர்புள்ள கடன்தாரர்கள் : மற்றும்



கவன ஈர்ப்புகள்

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

(5) பத்து ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலம் வைத்திருப்பவர்கள்.

இப்பிரிவினர்களுக்கு சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் தகுந்த அறிவிப்புகள் அளிக்கப்பட்டு அவர்கள் குறிப்பிட்டுள்ள காலகெடுவுக்குள் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறுவார்களேயானால், அவர்களின் மேல் சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிவரும்.

சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கும்போதும் விவேகமான முறையில் நடந்து கொள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

1986–87 ஆம் ஆண்டில் கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியின் எல்லையில் 900 இலட்சம் ரூபாய் அளவிற்கு குறுகிய கால வேளாண்மை கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுளளது. 30–6-1986-க்குள் தவறிய கடன்களை வசூல் செய்து "நாபார்டிடம்" இருந்து கடன் அளவு பெறுவும் தகுதியினை இவ்வங்கி பெற்றால் அன்றி 1986-87-ம் ஆண்டுக்காக நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டினை அடைய இயலாது.

**திரு. ஆ. நடராசன் :** : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கோவை மாவட்டத்தை பொறுத்தமட்டில் வறட்சி ஏற்பட்டுள்ளதாக அம்மாவட்ட ஆட்சியாளரால் அறிவிப்பு ஏதும் இதுவரை வழங்கப்படவில்லை என்று குறிக்கப்பட்டுள்ளது உள்ளபடியே வருந்தக்கூடிய நிகழ்ச்சியாகும். கோவை மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயிகள் கடுமையான வறட்சியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தென்னை மரங்களெல்லாம் காய்ந்துள்ளன. அந்த மாவட்டம் முழுவதும் குறிப்பாக, என்னுடைய பேரூர் தொகுதியிலே குடிப்பதற்குக்கூட குடி தண்ணீர் இல்லாத நிலைமை இருந்து வருகிறது. மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நிலைமையில் விவசாயிகளிடமிருந்து கடனை கடுமையான முறையில் வசூலிக்கின்ற நடவடிக்கையை அரசு கைவிடுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே வருவாய்த் துறையிலிருந்து, வறட்சி என்று எங்களுக்கு அறிக்கை வரும் என்று சொன்னாலும், கடனைக் கட்ட வேண்டிய காலத்தை நாங்கள் நீட்டித்து கொடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அங்கே வறட்சி ஏற்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியில் மிக வேகமாக, கடுமையாக இல்லாமல் 40 விழுக்காடு வசூலிக்க வேண்டுமென்ற உணர்வோடு, சரியான அணுகுமுறையிலே வசூலிக்க நடவடிக்கை எடுக்கிறோம்.

கவன ஈர்ப்புகள்

**(43) தஞ்சை மாவட்டத்தில் செயல்படும் பயிர் ஈட்டுறுதித் திட்டம் குறித்து.**

**திரு. பர். மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களிடத்தில் பயிர் ஈட்டுறுதி திட்டத்தில் சேர்க்க கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்காத நிலை குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் 1985 காரீப் பருவ காலத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகளுடன் இணைந்த விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 19 வட்டாரங்களில் செயலாக்கப்பட்டது. இப்பயிருக்கான திட்ட காலத்தில் 13,794 விவசாயிகள் 55,502 ஹெக்டேர் நிலங்களிலுள்ள பயிர்களை 512.37 இலட்ச ரூபாய்க்கு ஈட்டுறுதி செய்து 10.24 இலட்ச ரூபாய் பிரிமியமாக செலுத்தினர். இத்திட்டம் 1985 மானாவாரி நிலக்கடலைப் பயிருக்குத் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியுடன் இணைந்த விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 2 வட்டாரங்களில் செயலாக்கப்பட்டது. இப்பயிருக்கான திட்ட காலத்தில் 123 விவசாயிகள் 811 ஹெக்டேர் நிலங்களிலுள்ள பயிர்களை 2.98 இலட்ச ரூபாய்க்கு ஈட்டுறுதி செய்து 0.03 இலட்ச ரூபாய் பிரீமியமாகச் செலுத்தினர்.

ஒரு வட்டாரத்தில் குறிப்பிட்ட பயிருக்கு, குறிப்பிட்ட பருவகாலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட உறுதியளிக்கப்பட்ட விளைச்சலின் அளவை விட அவ்வட்டாரத்தில் மேற்கொள்ளப்படும் 16 பயிர் அறுவடை பரிசோதனைகள் மூலம் கணிக்கப்படும் சராசரி விளைச்சலின் அளவு குறையும்போது அப்பயிருக்கான திட்ட காலத்திற்கு ஈட்டுறுதி செய்த அனைத்து விவசாயிகளுக்கும் அவர்கள் ஈட்டுறுதி செய்த அளவுக்கேற்ப ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது. பயிர் அறுவடைப் பரிசோதனைகள் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத பகுதிகள் என்ற பாகுபாடு ஏதுமின்றி தோராய அடிப்படையில் வயல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் முதல்



கவன ஈர்ப்புகள்

(திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்)

பயிருக்கு விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் செயலாக்கப்பட்ட 19 வட்டாரங்களில் 16 வட்டாரங்களுக்குப் பயிர் அறுவடைப் பரிசோதனைகளின் விளைவு அறியப்பட்டதில் 4 வட்டாரங்களில் (தஞ்சாவூர், பூதலூர், தலைஞாயிறு மற்றும் முத்துப்பேட்டை) மட்டுமே உறுதியளிக்கப்பட்ட விளைச்சலைவிட சராசரி விளைச்சலின் அளவு குறைந்துள்ளது. இதில் தஞ்சாவூர் வட்டாரத்தில் 31.51 இலட்ச ரூபாய்க்கு ஈட்டுறுதி செய்த 929 விவசாயிகளுக்கு ஈட்டுத் தொகையாக 1.46 இலட்ச ரூபாய் வழங்கப்படவுள்ளது. எஞ்சிய 3 வட்டாரங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஈட்டுத் தொகையின் அளவு பொது காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கணித்து வரப்பெற வேண்டியுள்ளது. இது வரப்பெற்றதும் ஈட்டுத் தொகை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும். தவிர 3 வட்டாரங்களுக்கான பயிர் அறுவடைப் பரிசோதனைகளின் விளைவு வரப்பெற வேண்டியுள்ளது. இம்மூன்று வட்டாரங்களின் சராசரி விளைச்சல் அளவு உறுதியளிக்கப்பட்ட விளைச்சலின் அளவை விட குறைவாக இருந்தால் அதற்கேற்ப ஈட்டுத் தொகை வழங்கப்படும். மானாவாரி நிலக்கடலைப் பயிருக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் திட்டம் செயலாக்கப்பட்ட இரு வட்டாரங்களுக்குப் பயிர் அறுவடைப் பரிசோதனைகளின் விளைவு அறியப்பட்டதில் ஒரு வட்டாரத்தில் (பூதலூர் வட்டாரம்) மட்டும் சராசரி விளைச்சலின் அளவு உறுதியளிக்கப்பட்ட விளைச்சலின் அளவைவிட குறைவாக இருந்தால் இவ்வட்டாரத்தில் 0.06 இலட்ச ரூபாய்க்கு ஈட்டுறுதி செய்த 4 விவசாயிகளுக்கும் 0.01 இலட்ச ரூபாய் ஈட்டுத் தொகையாக வழங்கப்படவுள்ளது.

விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் 1985-86 ராபி பருவ காலத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நெல் இரண்டாம் பயிருக்கு 21 வட்டாரங்களிலும் பாசன நிலக்கடலை பயிருக்கு பத்து வட்டாரங்களிலும் செயலாக்கப்பட்டுள்ளது. நெல் இரண்டாம் பயிருக்கான திட்ட காலத்தில் 849 விவசாயிகள் 3,231 ஹெக்டேர் நிலங்களிலுள்ள பயிர்களை 18.84 இலட்ச ரூபாய்க்கு ஈட்டுறுதி செய்து பிரிமியமாக 0.38 இலட்ச ரூபாய் செலுத்தினர். பாசன நிலக்கடலைப் பயிருக்கு 2,327 விவசாயிகள் 10,119 ஹெக்டேர் நிலங்களிலுள்ள பயிர்களை 65.52 இலட்ச ரூபாய்க்கு ஈட்டுறுதி செய்து பிரிமியமாக 0.655 இலட்ச ரூபாய் செலுத்தினர். இப்பயிர்களுக்கான பயிர் அறுவடைப் பரிசோதனைகளின் விளைவு எதிர்பார்க்கப்படுகிறது. இவை கிடைக்கபெற்றதும் இப்பகுதிகளில் சராசரி விளைச்சலின் அளவு உறுதியளிக்கப்பட்ட விளைச்சலின் அவளை விட குறைவாக இருந்தால் அதற்கேற்ப ஈட்டுத் தொகை வழங்கப்படும்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தரப்பில் வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் யார் யாரிடத்திலே டெஸ்ட் செய்கிறார்கள் என்று பார்த்தால் யார் பணம் கட்டியிருக்கிறார்களோ, அவர்களுடைய வயலில் டெஸ்ட் செய்வதில்லை. ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு அந்தக் கிராமத்திலே யார் யாருக்கு என்று சீட்டுக் குலுக்கிப் போட்டு, இன்ஷ்யூரன்ஸ் செய்யாத வயலிலே அறுவடை செய்து நல்ல நிலையில் இருக்கின்ற வயலை அறுவடை செய்து டெஸ்ட் அறுவடை என்ற பெயரிலே அதைக் கணக்கிட்டு, இழப்பு இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால், உண்மையாகவே இன்ஷ்யூரன்ஸ் செய்து, ஏக்கருக்கு 26 ரூபாய் என்று பணம் கொடுத்த அந்த வயல்களில் பள்ளம் பழுதாக உள்ள வயல்களில் இப்படிப்பட்ட பணத்தைக் கொடுத்ததற்குப் பின்னாலே டெஸ்டை ஆரம்பித்து செய்வது இல்லை. அப்படிச் செய்யாததால் பாதிக்கப்பட்டவர்களின் வயல்களைப்பற்றி அரசுக்கு அறிவிக்கப்படுவதில்லை. அதனால் அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட முடியவில்லை. ஆகவே, அடுத்த ஆண்டு முதலாவது, யார், யார் இன்ஷ்யூரன்ஸ் செய்திருக்கிறார்களோ. அவர்களிடத்தில் பணத்தைப் பிடிக்கின்ற வயல்களிலே டெஸ்ட் செய்ய முடியுமா என்று கேட்பதோடு, அதிலும் குறிப்பாக, ஈரோடு, கோவை மாவட்டங்களில் ஏரி, கிணற்றுப் பாசனம் இருப்பதைப் போன்று இல்லாமல், மேட்டூர் நீரைத் திறந்தால்தான் சாகுபடி செய்ய முடியும் என்ற நிலைமையிலே தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற சில ஒன்றியங்க்ள் விடுபட்டிருக்

(முற்பகல் 11-10)

கின்றன. இப்படித் தண்ணீர் மேட்டூரில் இருந்தால்தான் சாகுபடி செய்ய முடியும். அதுவும் புயல் வந்ததற்குப் பின்னால் அதுவும் பழுதடைந்து விடுகிறது. அப்படிப்பட்ட பல ஒன்றியங்கள் விடப்பட்டிருக்கின்றன. அதிலே, வேதாரண்யம் ஒன்றியம் எல்லாம் விடப்பட்டிருக்கின்றன. அந்த ஒன்றியங்களைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாவைமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இன்ஷூரன்ஸ் திட்டப்படி, அந்தப் பகுதியிலே 8 கிராமங்களில் இருக்கும்போ.து நில அறுவடை பரிசீலனை செய்கிறோம் ஒரு கிராமத்திற்கு இரண்டு என்று செய்கிறார்கள். ஒரு கிராமத்திற்கு இன்ஷூர் செய்தாலும், செய்யாவிட்டாலும், என்று சொல்லி, செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். தனிப்பட்ட ஒருவருடைய நிலத்தை ஆய்வு செய்து கொடுக்கின்ற திட்டம் இன்ஷூரன்ஸ் திட்டத்திலே இல்லை. இது பற்றி மத்திய அரசாங்கத்திற்கு நாங்கள் எடுத்துச் சொல்கிறோம். உறுப்பினர்களுடைய கருத்தை





[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்து வைப்போம். விடப்பட்டிருக்கிற பகுதியை, இந்த ஆண்டு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

**(44) சேலம், தர்மபுரி மாவடங்களில் நோயினால் கால்நடைகள் பாதிக்கப்படுவது.**

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பல பகுதிகளிலுள்ள கால்நடைகளை எதிர்பாராத வகையில் தாக்கியுள்ள இனந்தெரியாத நோயின் காரணமாக அப்பகுதியில் கால்நடைகளின் இழப்பு எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அப்பகுதி வாழ் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை.)

**(45) தென் ஆற்காடு மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் ஊதியத் தொகை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் எஸ். சிவராமன், எஸ். சிவராஜ் ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. சு. சிவராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தென்னாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களில் ஒன்றியத்திலிருந்து பால் உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியத் தொகை கிடைக்கப்பெறாததால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை.)

**(46) நீலகிரி மாவட்டத்தில் பருவ மழை தவறியதால் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டிருப்பது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. உச்சி அவர்கள் '' நீலகிரி மாவட்டம், கூடலூர், உதகை, கோத்தகிரி

மற்றும் கூனூர் வட்டங்களில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து முழுமையாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை.)

**(47) சேலம், ஆத்தூர் வட்டத்தில் பருவமழை தவறியதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. பழனிமுத்து, '' சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து முழுமையாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை.)

**(48) கோவை கழிவு நீர்ப்பண்ணைக்காக நில ஆர்ஜிதம் செய்யப்படுவது குறித்து.**

**திரு. ஆர். செங்காளியப்பன் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே. '' கோவை மாநகர் கழிவு நீர்ப்பண்ணை அமைப்பதற்காக வெள்ளனூர், வெள்ளாளப் பாளையம் இடையர் பாளையம், கஞ்சிக் கோணம் பாளையம், கோணவாய்க்கால் பாளையம், போத்தனூர் ஆகிய ஊர்களில் பெருமளவில் நில ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கை தீவிரப் படுத்தப்படுவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சம் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பற்றி நானே நேரடியாக அறிவேனென்ற காரணத்தினால், விளக்கத்தைச் சொல்லிவிட விரும்புகிறேன். அந்த இடத்தை நானே பார்வையிட்டேன். அந்தக் கழிவுநீர்ப் பண்ணையால் அந்த ஊர்கள்



பாதிக்கப்படும் என்பதை நானும் புரிந்து கொண்டிருக்கிறேன். ஆகவே, வேறு மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வருகின்ற வகையில், அரசு பரிசீலித்துக் கொண்டு வருகிறது. அந்த வகையிலே அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. ஆர். செங்காளியப்பன் :** தலைவர் அவர்களே, அங்கு பக்கத்திலே இருக்கக்கூடிய அதே பகுதியிலே, சக்தி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில், ஏழை எளிய விவசாயிகள், அரிசன விவசாயிகள் வீடு கட்டுவதற்கென, அங்கு அட்வான்ஸ் செய்து, பூமியைக் கையகப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையினாலே, ஏழை, எளிய மக்களுக்கு, அரசாங்கத்தினுடைய வீடு கட்டும் திட்டத்தை மாற்றி, கூட்டுறவுச் சங்கத்தின்மூலமாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்காகவும் அந்த இடத்திலே இருந்து அந்தத் திட்டத்தை மாற்றி, பக்கத்திலேயிருக்கிற பகுதிகளிலே வானம் பார்த்த பூமியிருக்கிறது ; அங்கே மாற்றினால், நமக்குச் சௌகரியமாக இருக்கும் ; விவசாயிகள் வரவேற்கிறார்கள். இந்தக் கழிவு நீர் தங்களுக்குத் தேவை என்று வரவேற்கிறார்கள். ஆகவே, அதைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தின் சார்பாக என்னிடத்தில் விண்ணப்பம் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இப்போது வலியுறுத்தி கூறியிருக்கிறார்கள். ஆகவே மாற்றுவதைப்பற்றி அரசு பரிசீலித்து கொண்டிருக்கிறது. அந்த வீடு கட்டும் சங்கம் பாதிக்கப்படாத வகையில் அரசு உரிய ஏற்பாடுகளைச் செய்யும்.

**(49) தர்மபுரி மாவட்டத்தில் சில நடுவர் நீதிமன்றங்களில் நடுவர் இல்லாதிருப்பது குறித்து.**

**திரு. ப. தீர்த்தராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தர்மபுரி மாவட்டத்திலுள்ள தர்மபுரி, அரூர் மற்றும் ஓசூர் ஆகிய பகுதிகளைச் சார்ந்த நடுவர் நீதிமன்றங்களில் பல மாதங்களாக நடுவர் இல்லாமையால் அப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(பதில் இல்லை.)

**மேரூர் தொகுதியில் சாயநூல் பட்டறையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் குறித்து.**

**திரு. க. நரசிம்மபல்லவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''உத்திரமேரூர் தொகுதியிலுள்ள முத்தியால் பேட்டை, ஐயன்பேட்டை, நாயக்கன்பேட்டை, வண்ணியப் பேட்டை ஆகிய பகுதிகளில் சாயநூல் உற்பத்தி நடைபெறுவதால் வெளிப்படும் கழிவு நீரால் அப்பகுதியில் குடிநீர் மற்றும் சுகாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை)

**(51) தாம்பரம் டி. பி. சானடோரியம் குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு எல்ல. இராச மாணிக்கம் அவர்கள், ''தாம்பரம் எலும்புருக்கி நீக்கு மருத்துவ மனை (டி.பி. சானிடோரியம்) வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு விடுமோ என்ற நிலை குறித்த'' கவன ஈர்ப்பு தீர்மானத்தை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை.)

**(52) உசிலம்பட்டி அரசு மருத்துவ மனையில் ஆம்புலான்ஸ் வசதி ஏற்படுவது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் அவர்கள், ''மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலூகா, உசிலம்பட்டி நகரிலுள்ள அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் வசதி இல்லாததால் கடந்த 11–4–1986 அன்று காலை நடந்த சாலை விபத்தில் சிகிச்சை அளிக்க மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்ல இயலாததால் இரண்டு பேர் இறக்க நேரிட்டதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' கவன ஈர்ப்பு தீர்மானத்தை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர அறிவிப்புக்கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை,

(பதில் இல்லை.)



**(53) திருச்சி சாராயக்கலவைத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் குறித்து.**

**திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரிலுள்ள சாராயக் கலவைத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரின் துர்நாற்றத்தால் செந்துண்ணீர்புரம் குழந்தைகள் மயக்கமடைவதோடு அப்பகுதியிலுள்ள குடிநீர் மற்றும் விவசாயக் கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை)

**(54) தாம்பரபரணி ஆற்றில் கே. டி. சி. கழகப் பணிமனை கழிவு நீர் கலப்பது குறித்து.**

**திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பாளையங்கோட்டை தொகுதி, வண்ணாரப்பேட்டையிலுள்ள கே.டி.சி. போக்குவரத்துக் கழக பணிமனையிலிருந்து வெளிவரும் கழிவுநீர் தாமிரபரணி ஆற்றில் கலப்பதால் அப்பகுதி மக்களுக்கு ஏற்படும் சுகாதாரக்கேடுகள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை)

**(55) பாலாற்றில் தோல் தொழிற்சாலை கழிவுநீர் காப்பது குறித்து**

**திரு. த. பழனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆற்காடு, இராணிப்பேட்டை ஆகிய பகுதிகளில் பாலாற்றில் தோல் தொழில் சம்பந்தப்பட்ட கழிவு நீர் கலப்பதால் அப் பகுதியிலுள்ள குடிநீர் திட்டங்கள் மற்றும் விவசாய நிலங்கள் பாழ்படுவதால் அப்பகுதிவாழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை)

**(56) கூடலூர் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதி.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. உச்சி அவர்கள் ''நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள அரசு

[பேரவைத் தலைவர்]

மருத்துவமனையில் போதுமான படுக்கை வசதிகள் மற்றும் இதர வசதிகள் இல்லாமையால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' கவன ஈர்ப்பு தீர்மானத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை)

**(57) புதுக்கோட்டை பூம்புகார் நிறுவனம் மூடப்பட்டுள்ளது குறித்து.**

**திரு. ஜே. முகம்மது கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''புதுக்கோட்டை நகரில் இயங்கி வந்த கைவினைக் கலைஞர்களை கொண்டு ஒப்பனை பொருள்கள் தயாரிக்கும் பூம்புகார் நிறுவனம் 31–3–1986 முதல் மூடப்பட்டுள்ளதன் பொருட்டு வேலை இழந்த பெண்கள் 1–4–1986 முதல் உண்ணா விரதம் இருந்து வருவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல அந்த தொழிலகம் இப்போது மூடப்பட்டிருக்கிறது. அதில் ஏறக்குறைய 14 பெண்கள் பீஸ் ரேட்டில் வேலை செய்கிறார்கள். ஏறத்தாழ 70,000 ரூபாய்க்கு மேல் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் தேங்கியிருக்கின்றன. தேங்கியிருக்கின்ற பொருள்கள் உடனடியாக விற்பதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. ஒரு பக்கத்தில் பார்த்தால் 14 பெண்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்ற எண்ணம் இருக்கிறது. அதே நேரத்தில் உற்பத்தி செய்த சிறுசிறு பாய்கள், தடுக்குகள் போன்றவை விற்பனைக்கு லாயக்கில்லாமல் இருக்கிறது. என்றாலும் கூட தக்க நடவடிக்கை மூலம் பாதிக்காதபடி, தொடர்ந்து பாதுகாத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பூம்புகார் விற்பனை நிலையம் எப்போது மறுபடியும் துவங்கும் ? இப்போது விற்பனை நிலையத்தை பொறுத்தவரை மாநில அளவிலே இருக்கின்ற பூம்புகார் விற்பனை நிலையத்திற்கு தேவைக்கு அதிகமான அதிகாரிகள் இருப்பதால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தினை சொல்வதன் காரணமாக, இதைப்போல மாவட்டத்தில் உள்ள எல்லா மையங்களிலும் இதே நிலைமை ஏற்படுவதால் இந்த பூம்புகார் விற்பனை நிலையத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட அதிகாரிகள்



[ஜே. முகம்மது கனி]

இல்லாமல் புதுக்கோட்டை பூம்புகார் விற்பனை நிலையத்தை தொடர்ந்து நடத்துவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையத்தை பொறுத்த வரையில் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிகாரி பற்றிய குறிப்பு இல்லை. பீஸ் ரேட் மூலமாக கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு சம்பளம் என்று சொன்னால் நஷ்டமாக இருந்தாலும்கூட மாதம் இவ்வளவு சம்பளம் என்று கொடுத்து விடலாம்.

(முற்பகல் 11—20)

ஒரு வேலையைச் செய்து முடித்தால் அந்த வேலையைச் செய்து முடித்த பிறகு 10 காசு, 15 காசு என்ற வகையில் வேலை செய்வதற்கான மூலப் பொருளுக்குச் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படுகின்றன. அந்தச் சிக்கலைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(58) தஞ்சை ராஜா அரசினர் மருத்துவமனையில் ஆபரேஷன் செய்ததில் ஏற்பட்ட கோளாறு.**

**திரு. துரை கிருஷ்ணமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, '' தஞ்சை ராஜா அரசினர் மருத்துவமனையில் காலில் ஆப்பரேஷன் செய்வதற்குப் பதிலாக வேறு இடத்தில் ஆப்பரேஷன் செய்து அதனால் ஏற்பட்ட நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை.)

**(59) புதுக்கோட்டை காவேரி நூற்பாலைத் தொழிலாளர்கள் போராட்டம்.**

**திரு. த. புஷ்பராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை காவேரி நூற்பாலை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று அங்கே உள்ள தொழிலாளர்கள் 9—5—1986 முதல் பஸ் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு சுமார் 180 பேர் சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறார்கள் என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா உறுப்பினர்களின் கவன ஈர்ப்புத் தீர்மானமும் எடுத்துக் கொள்ளப் பட்டதால் அனைவரும் திருப்தி அடைந்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அடுத்து அரசினர் தீர்மானம்.

### 3. அரசினர் தீர்மானங்கள்

#### (ஆ) விதி 33 ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப் பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

### 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்

**கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986**

**(ஆ) கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு 1986**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1986) மற்றும் 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1986) ஆகியவை ஒன்றாக எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 50/1986)*† ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ".



[த. வீராசாமி]

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும். "

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்துக்களுக்கும், முனிசிப்பாலிட்டிகளுக்கும் வருவாயை அதிகப் படுத்துவதற்காக அதாவது 10 சதவீதம் காம்பவுண்டிங் என்ற வகையில் அதிகப்படுத்துவதற்காகக் கொண்டு வரப் படுவதாக, காரண நோக்க விளக்கத்தில் சொல்லப்பட்டிருக் கிறது. இவ்வாறு அந்த பஞ்சாயத்துக்கள் மற்றும் முனிசிப் பாலிட்டிகளின் வருவாயை அதிகப்படுத்துவதற்காக என்று சொல்லி மக்களின் தலையில் வரியை அதிகப்படுத்துவது என்ற அந்தக் கொள்கை, அந்த எண்ணம், அந்தப் போக்கு நியாய மானது அல்ல, சரியல்ல என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் அல்லது ஊராட்சி களைப் பொறுத்தவரையில் அவை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கான நிதியாதாரத்தைத் தேடித் தர வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அந்த வகையில் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு என்டர்டெய்ன்மென்ட் டாக்ஸ்லே 10 சதவீதம் உயர்த்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் அது நடைமுறையில் எங்கே போய்ச் சேருகிறது? அது 10 சதவீதத்தை விட அதிகமாகப் போகிறது. நான் ஒரு எடுத்துக் காட்டு சொல்ல விரும்புகிறேன்.

நான்காவது திருத்தச் சட்டப்படி, செலெக்ஷன் கிரேட் பஞ்சாயத்துக்களாக மாற்றப்பட்ட சில பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் உள்ள நிலைமைகளைச் சொல்ல விரும்பு

** 1986-ம் ஆண்டு மே 13-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

கிறேன். அதாவது பெர்மனன்ட் அன்ட் செமி பெர்மனன்ட் தியேட்டர்ஸ் என்பதைப் பொறுத்தவரையில் டவுன்ஷிப்பிலே அல்லது பஞ்சாயத்துக்களிலே 28 பெர்சன்ட். ஆனால் இன்றைக்கு செலக்ஷன் கிரேடு பஞ்சாயத்து என்று வரக் கூடிய நிலைமையிலே 30 பெர்சென்ட் என்று உயர்த்தப்பட்டி ருக்கிறது. அதிலே டெம்பரரியாக வரக்கூடிய நிலையிலே 23 பெர்செனட் என்பது, அது பெர்மெனன்ட் ஆக வரக்கூடிய நிலையில் 30 பெர்சென்டாக மாறுகிறது. அப்படி என்றால் டெம்பரரியாக இருக்கக்கூடிய பஞ்சாயத்து பகுதியிலே இருக்கிற 23 சதவீதம் வரி என்பது, அது செலக்ஷன் கிரேடு பஞ்சாயத்தாக ஆக்கப்பட்ட அந்த அளவில், நிரந்தரப்படுத்தப் பட்ட தியேட்டராக மாறக்கூடிய அளவில் 30 சதவீத வரியாக மாறி ஏறக்குறைய 6 சதவீதம் அதிகமாகக் கொடுக்கக் கூடிய நிலை இன்றைக்கு ஏற்படுகிறது.

ஆகவே இன்று நடைமுறையில் இந்த திரையரங்குகளைப் பொறுத்த அளவிலே 23 சதவீதம் வரி வசூலிக்கக் கூடிய நேரத்தில் எந்த வசதிகள் முன்பு இருந்ததோ அதே வசதிகள் தான் 30 சதவீதமாக மாற்றப்பட்டிருக்கிற நிலையிலும் இருக்கிறது. ஆகவே மக்களுடைய வசதிகளை அதிகப்படுத் தாமல், மக்களிடமிருந்து அதிகமாக வசூலிக்கக் கூடிய நிலைதான் ஏற்படுகிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் சொல்லலாம், இந்த வரியை பொறுத்த அளவிலே அந்த தியேட்டர் உடைய வருவாயிலிருந்துதான், 'G oss coll c:ion compa:ity for eve.y show என்ற வகையில் அதிலிருந்துதான் இது வசூலிக்கப்படுகிறது என்று. ஆனால் இந்த வரி விதிப்பு காரணமாக இன்றைக்கு கட்டணத்தையும் ஆங்காங்கே உயர்த்தியிருக்கிறார்கள். நேற்றையதினம் கூட இங்கே ஜனதா கட்சியினுடைய தலைவர் ஆறுமுகம் அவர்கள் பேசக் கூடிய நேரத்தில் 4 ரூபாய் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

ஆகவே நான் என்ன பார்க்கிறேன் என்றால் இன்று பஞ்சாயத்தினுடைய அல்லது ஊராட்சிகளுடைய வருவாயை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, இந்தச் சட்டம் வழியாக மக்களுக்கு அதிகமான சுமையை கொடுக்கக் கூடிய முறையிலே தான் இந்தச் சட்டம் அமைகிறது. ஆகவே இப்படி அதிகமான அளவில் மக்கள் பணத்தை கொடுக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்துகிற நேரத்திலே, அந்த அளவுக்கு மக்களுக்கு வசதி செய்யப்பட்டி ருக்கிறதா என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கான பொறுப்பிலே இருக்கக் கூடிய அந்த இலாகா இந்த மாதிரி பிரச்சினைகளைப் பொறுத்த அளவிலே... பெரிய அளவுக்கு



[திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

கவனிப்பதாக தெரியவில்லை. இன்று பல இடங்களிலும் திரை அரங்குகளைப் பொறுத்த அளவிலே அங்கே இருக்கின்ற இருக்கைகள் போதுமான அளவிற்கு வசதி படைத்ததாக செய்யப்படவில்லை. அதேபோன்று சுகாதார வசதிகளும் போதுமான அளவுக்கு செய்யப்படவில்லை. அப்படிப்பட்ட நிலையில் மக்களிடமிருந்து அதிகமான பணத்தை வசூலிப்பது என்ற போக்கு மட்டும் சரியாக இருக்காது. குறைந்த பட்சம் தேவைகளையாவது திரையரங்குகளிலே பூர்த்தி செய்து தருவதற்கான பொறுப்பு இந்த அரசுக்கும் இந்த இலாகா விற்கும் இருந்துக் கொண்டிருக்கிறது. அதைச் செய்வதற்கான நடவடிக்கையை எடுத்தாக வேண்டும்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை

அதேபோல கிராஸ் கலெக்ஷனைப் பொறுத்த அளவிலே எப்படி நிர்ணயப்படுத்தப்படுகிறது. இன்று பல இடங்களிலே பத்திரிகைகளிலே கூட அதுபற்றி பேசப்பட்டிருக்கிறது. பல இடங்களில் டியூப்ளிகேட் டிக்கட்டுகள் அல்லது திருட்டுத் தனமான டிக்கெட்டுகள் அச்சடித்து விற்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பல இடங்களிலே அது கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. அத்தோடு கிராஸ் கலெக்ஷனைப் பொறுத்த அளவிலே அந்த இலகாவினுடைய அதிகாரிகளோடு கொல்லூயூட் பண்ணிக் கொண்டு, அல்லது அந்த அதிகாரிகளுடைய உறவினர் களோடு கொல்லுயூட் பண்ணிக் கொண்டு, தியேட்டர் முதலாளிகள் அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடிய முறையிலே உள்ள நடவடிக்கைகளை, தடுக்கக் கூடிய வகையிலே நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்த கிராஸ் கலெக்ஷனிலிருந்து என்ன வருவாய் அரசுக்கு கிடைக்க வேண்டுமோ அது கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கிறது.

(முற்பகல் 11-30)

ஆகவே இந்தச் சட்டத்தை கொண்டு வருகிற நேரத்தில் இப்படிப்பட்ட நடவடிக்கைகைள எடுக்க வேண்டும். ஏழை, நடுத்தர மக்களுக்கு ஓரளவிற்கு வசதிகளை செய்து கொடுக்கிற வகையில் இதன்மூலம் நடவடிக்கையெடுக்க வேண்டும். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இதிலே கொண்டு வரப் பட்டிருக்கிற வரி உயர்வு சதவீதத்தை நடுத்தர மக்களுக்கு, ஏழை மக்களுக்கு நிவாரணம் அளிக்கிற முறையில், ரிலீப் அளிக்கிற முறையில் குறைவாக கொண்டு வர வேண்டும், ஹையர் கிளாசைப் பொறுத்தவரையில் இதனை உயர்த்துவதில் தவறில்லை. அந்த மாதிரி உயர்ந்த வகுப்புகளில் 10 சதவீத உயர்வு, 12 சதவீதம் அல்லது 15 சதவீதமாக்கப்பட்டாலும்,

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இந்த 10 சதவீதத்தை பர்ஸ்ட், செகண்ட் கிளாசைப் பொறுத்தவரையில் அதனை கம்மிப்படுத்துவதற்கு அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரிகள் மூன்றாம் திருத்த, நான்காம் திருத்த சட்டமுன்வடிவுகள், கேளிக்கை வரி இணக்கவரிமுறை இருக்கிற திரையரங்கங்களில் நடைமுறைப்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்ட சட்டமுன்வடிவுகளாகும் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு இவ்வாண்டு இங்கே தாக்கல் செய்யப்பட்டு, அந்த அடிப்படையில்..................
.....................

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** துணைத் தலைவர் அவர்களே அவையில் ' கோரம் ' இல்லாமல் இருக்கிறது. அதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கோரம் இருக்கிறது. பத்திரிகையில் வர வேண்டுமென்பதற்காக சரியாகப் பார்க்காமல் சொல்லக் கூடாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, இந்த மூன்றாம் திருத்த சட்டமுன்வடிவு அந்த வகையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இணக்க வரி முறை இருக்கிற இடங்களில் மூன்று பட்டியல்களின்கீழ், 5.ஏ, 5.பி என்ற விதிமுறையின்கீழ், இணக்க வரி வசூலிக்கப்படுகிறது என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். 5-ஏ, 5-பி ஆகியவற்றின்கீழ், மூன்று இணக்க வரி பட்டியலின் அடிப்படையில் திரையரங்கங்கள் பாகுபாடு படுத்தப்பட்டு அதற்கேற்ப வரி விதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு வரிகள் வசூலிக்கப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால், இன்றைக்கு 10 விழுக்காடு என்று சொல்கிற நேரத்தில் அந்த 10 விழுக்காடு இணக்க வரி திரையரங்கங்களில் இருக்கிற இருக்கைகளின் அடிப்படையில் வசூலாகிற மொத்த தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை திரையரங்க உரிமையாளர்கள் அரசாங்கத்திற்கு வரியாக செலுத்தி வருகிறார்கள். அப்படி செலுத்தப்படுகிற அந்த குறிப்பிட்ட சதவீதத்தின்மீதுதான் இப்போது 10 விழுக்காடு வரி போடப்படுகிறது. மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதைப் போல திரையரங்கங்களுக்குச் சென்று படங்களை காண்கின்ற பார்வையாளர்களின் டிக்கட்மீது, பொதுமக்களை பாதிக்கிற வகையில் வரி போடப்படவில்லை என்பதைக் கூறிக் கொள்கிறேன்.



அரசினர் சட்ட முன் வடிவுகள்

(திரு தா. வீராசாமி)

1982 ஆம் ஆண்டு இணக்க வரியை சீரமைத்து சட்டம் கொண்டு வந்த நேரத்திலே கேளிக்கை இணக்க வரி முறை இருக்கிற திரையரங்கங்களில் வரி உயர்வு செய்கிறபோது, மக்கள் வாங்குகிற டிக்கட்மீது வரி போடக் கூடாது என்று விதியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த அடிப்படையில் கொண்டு வரப்படுகிற 10 சதவீத உயர்வு திரையரங்கங்களின் உரிமையாளர்கள் இருக்கைகளின் அடிப்படையில் வசூலாகிற மொத்தத் தொகையில் 10 சதவீதம் அல்லாது, அவர்கள் அரசுக்குச் செலுத்துகிற இந்த ஒரு சதவீதத்தில் 10 சதவீதம் என்பதை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் இதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடுத்து கள்ள டிக்கட் அச்சடிக்கப்படுவதாகச் சொன்னார்கள். கேளிக்கை இணக்க வரி இருக்கிறபோது அந்த இடத்தில் கள்ள டிக்கட் அச்சடித்து விற்க முடியாது. காரணம் திரை அரங்கத்தினுடைய இருக்கைகள் இங்கே நிர்ணயிக்கப்படுகின்றன. அப்படி நிர்ணயித்த பிறகு, அங்கே டிக்கட்டுகளுக்கு வேலை இல்லை. 300 இருக்கைகள் என்று சொல்லிவிட்டு, பிறகு அதற்கு மேல், அங்கே இருக்கைகளை போட்டு தவறான முறையிலே அங்கே திரையரங்குகளை நடத்துகின்ற நிலைமை ஏற்படக்கூடும். இந்த இணக்க வரி முறையிலே. அதை எல்லாம் பார்த்து, நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்திலே இடம் இருக்கிறது. அந்த வகையிலே விற்பனை வரித்துறையைச் சேர்ந்த அதிகாரி பெருமக்கள் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நான்காம் திருத்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் ராமநாதபுரம் மாவட்டம், மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டதன் விளைவாகவும், மதுரை மாவட்டம், அண்ணா மாவட்டம் என்று பிரிக்கப்பட்டதன் விளைவாகவும், அதனுடைய விவகார எல்லைக்குள் பழைய மதுரை மாவட்டம், பழைய ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இணக்க வரி முறையிலே, கேளிக்கை வரி இருக்கின்ற இடங்களில் இருக்கின்ற பட்டியலில் இருக்கின்ற அந்த நிலை மாறாது, பழைய மாவட்டங்களில் இருக்கின்ற அத்தகைய இணக்க வரிப் பட்டியலில் இருக்கின்ற அந்த ஊர்களை புதிய மாவட்டத்தின்கீழ் சேர்க்கவும், பழைய மாவட்டங்களில் இருந்து நீக்கவும் இந்தச் சட்டம் திருத்தம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதுபோல், ஒரு ஊராட்சி, பேரூராட்சியாக மாறுகிற நேரத்தில், பேரூராட்சி நகரியமாக மாறுகிற நேரத்தில், நகரியம் தேர்வு நிலை ஊராட்சியாக மாறுகிற

(திரு. தா வீராசாமி)

நேரத்தில், தேர்வு நிலை ஊராட்சிகள் நான்காம் நிலை நகராட்சியாக மாறுகிற நேரத்தில், அங்கே இருக்கின்ற திரை அரங்குகளினுடைய அந்த உள்ளாட்சித் துறையினுடைய தகு நிலைக்கு ஏற்ப இங்கே வணிகத் துறையிலே கேளிக்கை வரி, இணக்க வரி முறைப் பட்டியல் மாற்றங்கள் கொண்டு வரப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லி, அந்த வகையிலே அங்கே இருக்கின்ற வசதிகளை, பேணிக் காக்கவும் அங்கேயுள்ள சுகாதாரக் கேடுபாடுகளைக் களையவும், அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லி, இந்த இரண்டு திருத்தச் சட்ட முன்வடிவுகளையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**(அ) கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவகர்ளே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 51/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 5. அறிவிப்புகள்

**(அ) கதர் கிராமத் தொழில் வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ.).**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(முற்பகல் 11.40).

## 4. அரசினர் சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி.

### (இ) கதர் கிராமத் தொழில் வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1986

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/1986)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

**திரு. ஜெ. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய காரிய காரணங்கள் நோக்கங்களிலே என்ன சொல்லப்படுகிறது என்றால், Khadi and Village Industries Commission, Bombay, இன்றைக்கு Programme implementation பண்ணுவதற்காக கொடுக்கக் கூடிய பணங்களைப் பொறுத்த அளவில் அதை அட்வான்ஸாக Commission-லிருந்து Khadi and Village Industries Board-க்கு அட்வான்ஸாக கொடுக்கப்படுகிறது. ஆகவே அதைப் பொறுத்த அளவிலே அரசு உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும் அல்லது அரசுக்கு கொடுக்கப்பட்ட அட்வான்ஸ் என்ற முறையில் கணக்கிடப்பட்டு அரசுக்கு உத்தரவாதம் செய்ய வேண்டுமென்று முறையிலே, அதற்கிணங்க இந்தச் சட்டத் திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. இன்று இந்தப் பிரச்சினையிலே அரசு உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிற நேரத்தில் இந்த Khadi and Village Industries Board, சம்பந்தமாக இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு சில நிலைமைகளை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நேற்றைய தினம் இந்த அவையிலே வைக்கப்பட்ட Tamil Nadu Khadi and Village Industries Board Madras, Annual Accounts for the year 1983-84/—லே, இந்த ரிப்போர்ட்-லே குறிப்பிட்டிருக்கின்ற சில பகுதிகளை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

---

@ 1986ஆம் ஆண்டு மே 13-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





பேஜ் 27-லே என்ன சொல்லப்படுகிறது என்றால்

As on 31-3-84, the following were the sums pending realisation from Khadi & Village Industries Commission and Tamil Nadu Government towards Khadi Sales Rebate, and other subsidies such as processing subsidy, weaving wages subsidy, khadi stock subsidy etc. In case of the claims pending realisation from Khadi and Village Industries Commission, most of the dues relate to oid periods and the claims had been disallowed. However the Board is still keeping these disallowed claims open without taking any action to regularise the same.

According to Khadi and Village Industries Commission's Circular No. DKC/P/P/W/S dated 7-2-1975, the State Khadi and Village Industries Board should have claimed these old subsidy amounts, relating to the period prior to 1974–75 on or before 30-9-75. Since the Board had not put forth the claims in time as stipulated by Khadi and Village Industries Commission. It is doubtful whether the sums could be realised at this distance of time.

அப்படி என்று சொல்லி, என்ன சொல்லப்பட்டிருக்கிறது? அதாவது இன்றைக்கு இந்த Khadi and Village Industries Commission ஐப் பொறுத்த அளவிலே 16,36,098.18 லட்சம் ரூபாய் இன்றைக்கு அவுட்ஸ்டான்டிங்-காக இருக்கிறது. இதைப் பொறுத்த அளவிலே இப்படிப்பட்ட பணத்தை இன்றைக்கு அரசே உத்தரவாதம் கொடுக்க முடியுமா? இன்றைக்கு இந்தப் பணத்தைப் பொறுத்த அளவிலே 75ஆவது வருடத்திற்கு முன்னே கிளெய்ம் பண்ணப்படாததன் காரணமாக இன்றைக்கு இது ரியலைஸ் பண்ணப்படவில்லை. இந்த ரியலைஸ் பண்ணப்படாத அந்தப் பணத்தைப் பொறுத்த அளவில் இந்தச் சட்டத் திருத்தப்படி அரசு பொறுப்பேற்கக் கூடிய நிலைமை வராதா?

அதேபோன்று இன்னொன்றையும் இது சம்பந்தமாக நான் சுட்டிக் காட்ட விரும்புவது என்னவென்றால், இந்தத் துறையினுடைய செயல்முறைகளைப் பொறுத்த அளவிலே அது சரியான முறையிலே இல்லை; அது சரியான திசை வழியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறதா என்ற நியாயமான சந்தேகம் இந்த ஆடிட் ரிப்போர்ட்டை படித்துப் பார்த்தாலே ஏற்படுகிறது. அதற்கு நான் உதாரணமாக ஒரு சில கருத்துக்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

'Loans from Khadi and Village Industries Commission and Tamil Nadu Government Discrepancies in the outstanding balances and other defects'

அரசினர் சட்ட முன் வடிவுகள்

(திரு. ஜே. ஹேமச்சந்திரன்)

என்று அப்படி சொல்லி, என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால், ஏறத்தாழ ஒரு மிகப் பெரிய அமௌண்டு இன்று இது சம்பந்தமாக டிபரன்சில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோல் 34-வது பக்கத்தில் பார்க்கிற நேரத்தில்,

'Funds allotted for Agreed Programmes by Khadi and Village Industries Committee—Village Oil Industry — Registers showing the utilisation not maintained.'

அதாவது அதற்கு ஒதுக்கிய பணம் ஏறத்தாழ 4 லட்சத்து 30 ஆயிரத்து 750 ரூபாய் கிராண்டு என்ற முறையிலும், ஒரு கோடியே 39 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய் லோன் என்ற முறையிலும் ஒதுக்கிய பணத்தைப் பொறுத்தவரையில் சரியான முறையில் உபயோகப்படுத்தப்பட்டதா என்பதற்கான ரிஜிஸ்தர் வைக்கப்படவில்லை.

அதேபோல் 84-வது பக்கத்தில் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால்,

'Grants and Loans — Utilisation — Records not produced to Audit.'

அதாவது இன்றைக்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கிராண்டு லோன் சம்பந்தமாக என்ன சொல்லப்படுகிறது என்பதை ஆடிட் பண்ணுவதற்குகூட சரியான முறையில் ரெக்கார்டுகள் புரடுஸ் செய்யவில்லை. இப்படி என்றால் இந்த Khadi and Village Industries Board என்ன செய்து கொண்டிருக்கிறது? இன்று இந்த நாட்டிலுள்ள நலிந்த பிரிவு மக்கள் நலனை பாதுகாப்பதற்காகவும், அவர்கள் வளர்ச்சிக்காகவும் ஒதுக்கிய பணத்தை அவர்கள் எந்த அளவுக்கு உபயோகம் செய்து இருக்கிறார்கள் என்பதை Audit Comment ஐ-2 பொறுத்த வரையில் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால்,

'This was brought to the personal notice of the Chief Executive Officer during discussion on the Audit Report and the C. E. O. promised to arrange for the production of the files for audit scrutiny. The production of these files is purused separately by the residential audit party. Comment if any will be incorporated in the next audit report.

ஆகவே இன்று ஒதுக்கப்பட்டு இருக்கக் கூடிய கிராண்டு, லோன் எந்த அளவுக்கு மக்களுக்கு பயன்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை இன்று இந்த Khadi and Village Industries Board



அரசினர் சட்ட முன் வடிவுகள்

(திரு ஜே. ஹேமச்சந்திரன்)

சரியான முறையில் பயன்படுத்தி இருக்கிறதா என்பதைகூட பார்க்கும்போது சந்தேகிக்கக் கூடிய ஒரு பிரச்சினை இருக்கக் கூடிய நேரத்தில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணத்திற்கு இன்றைக்கு அரசு உத்திரவாதம் வகிக்கக் வேண்டும் என்று சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வருவது எவ்வளவு அரசினுடைய நிதி ஆதாரத்தை பாதிக்கும் என்பதைப் பொறுத்த வரையில் எந்த அளவுக்கு அரசுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும்.

அதேபோல் இன்னொரு விஷயத்தை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த ஆடிட் ரிப்போர்ட்டில் 17-வது பக்கத்தில் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால்

Rural Textile Centres—Production of Yarn—slackness—causes to be examined.

அதாவது இதிலே தேவையான நேரத்திலே அவர்கள் ரிப்பேட் கொடுத்து அதிகமான விற்பனையை ஏற்படுத்திக் கொள்வதற்கு உள்ள நடவடிக்கை எடுக்காததன் காரணமாக இன்று அதிலே நோய் ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே வியாபாரம் எந்த நேரத்தில் அதிகமாக நடக்கும். எந்த நேரத்திலே அதிகமான மக்களை அது ஈர்க்கும் என்று அதற்கு தகுந்த அளவில் உள்ள நடைமுறைய எடுத்து செயல்படுத்துகின்ற முறையில் உள்ள ஒரு பார்வையில் இந்த போர்டு செயல்பட்டு இருக்கிறதா என்ற சந்தேகம் இந்த ரிப்போர்ட்டில் ஏற்பட்டிருக்கிறது.

அதேபோல் 23-வது பக்கத்தில் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால்,

Value of raw materials and finished goods kept in Excess of limits fixed by Government.

The value of closing stock of khadi finisehd goods as on 31.3.84 exceeded the ciling fixed by the Government by nearly 300 per cent and that of village industries by 100%.

ஆகவே நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால் 31—3—1984-ல் முடியக்கூடிய அந்த வருடத்தில் எந்த அளவுக்கு ஸ்டாக் வைத்து இருக்க வேண்டுமோ அதைவிட 300 சதவீதம் உயர்ந்து ஸ்டாக் இருந்தது என்று அந்த ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 11-50)

நான் எதற்காகச் சுட்டிக் காட்டுகிறேன் என்று சொன்னால் அரசும், அமைச்சர்களும், இந்த போர்டினுடைய நடவடிக்கை

பற்றி, செயல்முறைகள்பற்றி, அவர்களுடைய வியாபாரத் துறை பற்றி, அவர்கள் எந்த அளவிற்கு சாமர்த்தியமாக இந்த விஷயங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நிச்சயமாக நாம் ஆராயக் கூடிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த ரிப்போர்ட் சுட்டிக் காட்டுகிறது.

இன்றைக்கு காதி அண்டு விலேஜ் இண்டஸ்ட்ரீஸ் போர்டை பொறுத்தவரையில், ஏழை மக்களுடைய, அதுவும் குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடிய மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக கிராமப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கப்படக் கூடிய பணம், இந்த நோக்கத்தினுடைய அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கக் கூடிய காதி அண்டு விலேஜ் இண்டஸ்ட்ரீஸ் கமிஷன், அகில இந்திய ரீதியிலே மத்திய அரசினுடைய ஈடுபாட்டோடு இயங்குகின்ற இந்த ஸ்தாபனம், இங்கே கொடுக்கக்கூடிய பணத்தைப் பொறுத்தவரையில் இன்று இந்த போர்டு சரியான முறையில் நடந்து கொள்ளவில்லை அல்லது அந்த நோக்கத்தோடு அவர்கள் நடந்து கொள்ளவில்லை. அந்த முறையில் அவர்களுடைய செயல்முறைகள் அமைந்துவிடவில்லை என்ற சந்தேகம் ஏற்பட்டதன் காரணமாக, அதன் விளைவாகத்தான் ஒருவேளை காதி அண்டு விலேஜ் இண்டஸ்ட்ரீஸ் கமிஷன் இன்று அவர்கள் கொடுக்கக்கூடிய கணக்கைப் பொறுத்தவரையில், இந்த போர்டினுடைய உத்தரவாதம் அறிந்து அரசு இந்தப் பணத்திற்காக உத்தரவாதம் கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிர்பந்தத்தை கொடுத்தார்களா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஸ்டேட்மெண்டில் 'ஆப்ஜெக்ட்ஸ்' அண்டு ரீசன்ஸ்-ல்' என்ன சொல்லப்படுகிறது என்று சொன்னால், இந்தக் கமிஷன் அவர்கள் கொடுக்கின்ற பணத்தைப் பொறுத்தவரையில், அதை அட்வான்சாகத்தான் கணக்கில் எடுக்க முடியும். அதற்கு அரசே உத்தரவாதம் கொடுக்க வேண்டுமென்று அன்றைக்கு வலியுறுத்தியிருக்கிறது என்றால், அந்த போர்டினுடைய செயல்முறையைப் பொறுத்தவரையில், அவர்களுடைய மற்ற ஏற்பாடுகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு காதி அண்டு விலேஜ் இண்டஸ்ட்ரீஸ் கமிஷனுக்குக்கூட திருப்தி இல்லாத முறையில் இந்த இந்த விஷயங்கள் இருந்து கொண்டிருக்கின்றன என்ற நியாயமான சந்தேகம் ஏற்படுகிறது, ஆகவே காதி அண்டு விலேஜ் இண்டஸ்ட்ரீஸ் போர்டினுடைய இந்த நடைமுறைகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்காக நடைமுறைப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய திட்டங்களை அந்த அளவிற்கு சரியான முறையில் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்படுகிறதா அதனுடைய உண்மையான நோக்கம் இன்றைக்கு கிராமங்களுக்குப் போய்ச் சேர்கிறதா? ஆடிட் ரிப்போர்ட்டில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கக் கூடிய குறைபாடுகளை நீக்குவதற்கு என்ன முறையில் நடவடிக்கை



எடுக்க வேண்டுமோ, அந்த முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வரவில்லை என்றால், இன்று அந்தச் சட்டத்தை நிறைவேற்றி, அரசே அந்தப் பணத்திற்காக பொறுப்பு ஏற்பது என்பது அரசைப் பொறுத்தவரையில் இன்னொரு பாத்யதையாக அமையும், என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே இது அரசைப் பொறுத்தவரையில் பாத்யதையாக முடியாத அளவிற்கு போர்டினுடைய செயல்முறைகளை மாற்றியமைக்க வேண்டும். அதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அவைகளை எடுப்பதற்கு அமைச்சரவர்களும் அரசும் முன்வர வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட அபாயகரமான ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டி நான் அமர்கிறேன்.

**மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் சட்டத் திருத்தம், சட்ட முன் வடிவைக் கொண்டு வந்திருக்கின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில் தமிழ் நாட்டில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் செயல்முறை நல்ல முறையில் நடைபெறவில்லை, அதனால்தான் இன்றையு தினம் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்கின்ற வகையில் இங்கே பேசுகின்ற நேரத்தில் எடுத்துக் கூறினார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்தில் எடுத்துக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் ஏற்கனவே பலமுறை இந்த அவையில் பேசுகின்ற நேரத்தில் எடுத்துக் கூறி இருக்கிறேன். இன்றைய தினம் இந்தியாவிலேயே கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுவது, தமிழகம் தான் கிராமத் தொழிலில் முதலாவதாகவும், கதரில் இரண்டாவது இடமாகவும், சிறப்பான முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அந்த முறையில், 'ஹை லெவல் கமிட்டி' நம்முடைய தமிழ் நாட்டிற்கு வருகை தந்திருந்த நேரத்திலே, நம்முடைய தமிழ் நாட்டில் கதர் கிராமத் தொழில் வாரியம் சிறப்பான முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதனை அவர்கள் பாராட்டுக் கடிதம் கூட, இங்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு அனுப்பி வைத்திருக்கின்றார்கள்.

அதே நேரத்தில், மத்திய தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு திவாரி அவர்களும் கதர் கிராமத் தொழில் வாரியம் தமிழ் நாட்டில் சிறப்பான முறையில் செயல்படுவதைப் பாராட்டி, மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதி இருக்கிறார் என்பதை நான் ஏற்கனவே நடந்து

முடிந்த இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுகிறபோது எடுத்துக்கூறி, இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், கதர் ஆணைக் குழுவின் மூலம் கொடுக்கப்படும் தொகையினை, கடன் மற்றும் மானியங்களை எல்லாம் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம், அந்தந்தப் பகுதியிலுள்ள கிராம வாழ் மக்களுக்கு நல்ல முறையில் பயன்படுத்துவது இல்லை என்பதைப் போல் கருத்துக்களை பேசும்போது எடுத்துக் கூறினார்..................

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : நான் சொல்லவில்லை ஆடிட் ரிப்போர்ட்டிலே சொல்லியிருக்கிறது.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மேலும் இன்றைய தினம் கதர் கிராமத் தொழில் வாரியம் அந்தந்த கிராமத்தில் கிடைக்கக் கூடிய மூலப் பொருட்களைக் கொண்டு அந்தந்தப் பகுதியில் அவரவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இன்றைய தினம் கிராமங்களி லுள்ள ஏழை எளிய மக்களுக்கும், பெண்களுக்கும், அருந்ததி யர்களுக்கும் வேலை வாய்ப்புக் கொடுக்கின்ற வகையில் இன்றைய தினம் மிகச் சிறப்பான முறையில் கிராமத் தொழில்களை நிறைவேற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கதர் கிராமத் தொழில் ஆணையத்தின் மூலம் வரம்புக்குட்பட்டு கதர் மற்றும் கிராமத் தொழில் பல்வேறு திட்டங்களை வளர்ச்சியில் ஊக்குவித்து, அந்தத் திட்டங்களை எல்லாம் சிறப்பான முறையில் இப்போது செயல்படுத்திக் கொண்டு வருகின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த வகையில், இன்றைய தினம், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கதர் ஆணைக் குழுவின் மூலம் பெறப்படு கின்ற கடன் மற்றும் மானியமாகப் பெறக்கூடிய தொகைக்கு அரசு உத்தரவாதம் கொடுக்க வேண்டும் என்பதை கதர் ஆணைக் குழு கேட்டிருக்கிறது. அதுபோல கதர் ஆணைக் குழு மற்ற மாநிலங்களையும் உத்தரவாதம் கேட்கின்ற நேரத்தில், குஜராத், ஆந்திரா போன்ற மாநிலங்களில் இதுபோன்ற உத்தரவாதத்தை அந்த மாநில அரசுகள் கொடுத்திருக்கின்றன. அந்த வகையில், இன்றைய தினம் தமிழக அரசையும் கதர்



ஆணைக் குழு உத்தரவாதம் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறது. அப்படிக் கேட்கின்ற நேரத்தில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் சட்டத்துறையைக் கலந்தாலோசிக்கும்போது, நம்முடைய தமிழ்நாடு சட்டத்துறை இதுபோன்ற உத்தரவாதம் அரசு கொடுக்கத் தேவையில்லை என்றும், வாரியச் சட்டத்தை தக்கவாறு திருத்தி அமைத்தாலே போதும் என்ற கருத்தினைத் தெரிவித்திருக்கின்றது. அந்தக் கருத்தினை கதர் ஆணைக் குழுவிடம் நாம் தெரிவிக்கும்போது கதர் ஆணைக் குழுவும் இந்தச் சட்டத் திருத்தத்தினை ஏற்று இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் இங்கு கொண்டு வந்திருக்கிற சட்டத் திருத்தத்தைப்போல், ஏற்கனவே மகாராஷ்டிரா மாநில அரசும் இதுபோன்ற சட்டத் திருத்தத்தினை கொண்டு வந்து கதர் ஆணைக் குழுவிற்கு கொடுத்து இருக்கிறார்கள். அதனால், இந்த கதர் ஆணைக் குழு கேட்கின்ற அரசு உத்தரவாதத்திற்கு நம்முடைய வாரியச் சட்டத்தினை தக்கவாறு திருத்தினால் போதும் என்ற வகையில், இன்றைய தினம் இந்தத் திருத்தத் தினை நாம் கொண்டு வந்து இருக்கிறோம். எனவே, இந்த அரசு எடுத்துள்ள முடிவின் தொடர்பாக இயற்ற உத்தேசித்துள்ள தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத் திருத்த முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுஎண். 52/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

(திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி)

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானப் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**(ச) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1986**

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 53/1986)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வணிக வரித் துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட எட்டு சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன. 53-லிருந்து 60 வரையில் இருக்கின்றன. விவாதத்தில் பங்கு கொள்ளும் உறுப்பினர்கள் ஒட்டு மொத்தமாக இந்த எட்டு சட்ட முன்வடிவுகளின் மீதும் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்களால் எட்டு சட்டத் திருத்தங்கள் இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதிலே பெரும்பாலானவை மாண்புமிகு நிதியமைச்சரவர்களால் நிதி நிலை அறிக்கையிலே சொல்லப்பட்ட சலுகைகள் அல்லது விதிக்கப்பட வேண்டிய வரிகள் போன்றவற்றிற்காகக் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் ஆகும். மேற்கொண்டு அமைச்சரவர்கள் என்ன திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், விற்பனை வரி அப்பீல் மன்றம் வேண்டும் என்றும், அதைப்போன்று சைக்கிளில் மூட்டை ஏற்றிச் செல்பவர்கள், மாட்டு வண்டியில் மூட்டை ஏற்றிச் செல்வோர் ஆகியவர்களைச் சோதனைச் சாவடிகளில் சோதனை செய்ய வேண்டும் என்றும் இந்த இரண்டு தீர்மானங்கள் அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

* 1986-ம் ஆண்டு மே 14-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



(திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்)

நான் சொல்ல விரும்புவது, இந்த விற்பனை வரி அப்பீல் மன்றம் நிறுவ யோசனை இருக்கும்பொழுது, வழக்குகள் நீதிமன்றத்திற்குச் செல்வதற்குத் தடை விதிப்பதாக இருக்கிறது. அப்பீல் நீதிமன்றங்கள், நீதிமன்றங்களைப்போல செயல்படுமா என்பது எங்களுக்குத் தெரியாது. ஏனென்று சொன்னால், வரி அப்பீல் நீதிமன்றங்கள்— In Tribunals என்ன நடக்கிறது என்று எங்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. தீர்ப்புகள் எப்பொழுது எழுதப்படுகின்றன என்பதையும் தெரிந்து கொள்ள முடியவில்லை. இதற்கு என்று இருக்கின்ற ஒரே வழி, மிகவும் பாதிக்கப்படுகின்ற வணிகர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு வழிவகை இருந்து கொண்டு இருக்கிறது. அந்த வழிகளை இப்பொழுது அடைக்கின்றீர்கள். அப்பீல்மன்றம் என்று நிறுவ இருப்பதாகச் சொல்கிறீர்கள். நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, அப்பீல்மன்றம் நிறுவினாலும், அதிலேயும் நீதி கிடைக்காதவர்கள், நீதிமன்றத்திற்குச் செல்வதற்கான வழிவகைகளை வகுத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, இந்த சோதனைச் சாவடிகளைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. ஆனால், சோதனைச் சாவடிகளை நிறுவியிருக்கின்ற முறைகள்தான், ஊருக்கு ஊர், நகரத்திற்கு நகரம் வித்தியாசப்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், விருதுநகரில் நான்கு பக்கங்களிலேயும் சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. இதைப்போல வேறு எந்த ஊரிலேயும் இல்லை. பக்கத்திலே இருக்கின்ற வியாபார நிறுவனங்கள் இருக்கின்ற எந்த ஊரிலே பார்த்தாலும் கூட இருப்பது ஒரு பக்கம்தான். நேஷனல் ஹைவேஸிலேதான் இந்தச் சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. அப்படி இருக்கின்றபொழுது விருதுநகரில் மட்டும் நான்கு பக்கங்களிலேயும் இருப்பதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. அங்குள்ள வணிகர்கள்மீது நம்பிக்கை இல்லையா? அல்லது அவர்கள் வரி ஏய்ப்பு செய்வதாக ஏதாவது தகவல் கிடைத்திருக்கிறதா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆதலால், விருதுநகரில் நான்கு பக்கங்களிலேயும் இருப்பதை நீக்கிவிட வேண்டுமென்றும், உள்ளபடியே நீங்கள் சோதனைச் சாவடிகள் அமைக்க வேண்டுமென்றால் ஏதாவது ஒரு நேஷனல் ஹைவேஸில் சோதனைச் சாவடியை வைத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, சைக்கிளில் செல்பவர்களுக்கு, அதைப்போல மாட்டு வண்டிகளில் கொண்டு வருபவர்களுக்கு அவர்கள் சோதனைச்சாவடிகள் மூலமாக வர வேண்டுமென்று சொல்லு

அரசினர் சட்ட முன்வடிவுகள்

(திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்)

கின்றபொழுது அவர்கள், விற்று முதலுக்குச் சரக்கை சந்தைக்குக் கொண்டு வருபவர்கள் என்றால் என்ன நிலைமை? யார் அவர்களுக்கு 20B கொடுப்பார்கள் ஆகவே அந்தச்சோதனைச் சாவடிகளை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கமிஷன் மண்டிகளுக்கு வந்து, பார்ம் 20 (பி) விவசாயிகள் வாங்கிச் சென்றுதான் சரக்கை ஏற்ற வேண்டுமா? அப்படிச் செய்ய வேண்டுமென்றால், இரண்டு மூடை வைத்திருக்கிற விவசாயி, தன்னுடைய மாட்டு வண்டியைப் பூட்டிக் கொண்டு வந்து, வியாபாரப் பொருளை எப்படி விற்பனை செய்ய முடியும்? 15 மைல் தள்ளியிருக்கிற விவசாயி ஒரு வியாபார நிறுவனம் இருக்கிறது என்றால், அந்த விவசாயி இரண்டு மூடை கொண்டு வந்து விற்பதற்கு, கமிஷன் மண்டிகளுக்கு வந்து, பார்ம் 20 (பி) வாங்கிச் சென்று, அதற்குப் பிறகு இரண்டு மூடையைக் கொண்டு வந்து விற்றுச் செல்ல வேண்டுமென்றால், அது நடக்கக் கூடிய காரியமா? அந்த நிலையைப் போக்க வேண்டுமென்று விவசாயிகள் போராட்டங்கள் எல்லாம் நடத்தி, அங்கங்கே மாட்டு வண்டிகளைப் பூட்டி, தகராறு எல்லாம் செய்த பிறகு, அது தவிர்க்கப்பட்டது. இப்பொழுது அந்தச் சட்டத்தை மறுபடியும் புதிதாகக் கொண்டு வருகிறீர்கள். எங்களுக்கு அதைப்பற்றி கவலை இல்லை. நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, வரி வசூல் கூடும் என்ற நிலையிலே நீங்கள் கொண்டு வருகிறீர்கள். வரி வசூல் கூடும்; யாருக்கு? உங்களுக்கு இல்லை, அரசுக்கு இல்லை, என்பதுதான் என்னுடைய கருத்து. வரி வசூல் கூட இருப்பது, அதிகாரிகளுக்கு—இன்னும் அதிகப்படியான ஆதாயத்தை அவர்களுக்கு உண்டாக்கும் என்றுதான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு சைக்கிளில் ஒரு மூடை, இரண்டு மூடை கொண்டு செல்பவர்களிடம் நீங்கள் தடுத்து நிறுத்தி; அவர்களிடம் உரிய பார்ம் 20 (பி) வேண்டுமென்று கேட்பது என்றால், அது முடியக் கூடிய காரியமா? அது தேவைதானா என்று நான் கேட்க விரும்புகிறேன். அகவே, இதெல்லாம் உங்களுக்குக் காரியச் சாத்தியபடி ஆகாது. விவசாயப் பெருமக்களுடைய கோபத்திற்கு நீங்கள் ஆளாக வேண்டாம் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், விவசாயிகள் கிராம முன்சீப்பிடம் சர்ட்டிபிகேட் வாங்க வேண்டுமென்றால், அது முடியுமா? அதற்கு ஒரு தொகை செலவழிக்க முடியுமா? என்பதையெல்லாம் நீங்கள் எண்ணி பார்க்க வேண்டும். விவசாயிகள் செக் போஸ்டிலே 4 மூடைகள் கொண்டு, வந்தால் 2 மூடை வைத்து விட்டுப் போ, அங்கே போய் பார்ம் 20(பி) வாங்கி வா என்றெல்லாம் வற்புறுத்தப்பட்டார்கள். அது முன்பு நீக்கப்பட்டது. மறுபடியும் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால், இது காரிய சாத்தியமா



அரசினர் சட்டமுன் வடிவுகள்

(திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்)

என்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்றும் மன்றத்தின் துணைத் தலைவர் மூலமாகக் கேட்டு, அதை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், ரூ. 75,000க்கு வியாபாரம் செய்கின்ற சிறு வியாபாரிகள் பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது முன்பு ரூ. 50,000 ஆக இருந்தது. இப்பொழுது, ரூ. 75,000 ஆக உயர்த்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். விலைவாசி எவ்வளவு கூடியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டாமா? அரை மூடை ரூ. 250 என்றால், சிறிய பலசரக்குக் கடைக்காரர்—எல்லா சரக்குகளும் சேர்ந்து 1/2 மூடை சரக்கு விற்கிறார் என்பதோடு மட்டுமல்ல, ஒரு கிலோ ரூ. 5க்குக் குறைவாக எந்த வியாபாரமும் இல்லை, உளுந்து பருப்பாக இருந்தாலும், துவரம் பருப்பாக இருந்தாலும் எதை எடுத்துக் கொண்டாலும் ரூ. 8 ரூ. 7 ஒரு கிலோ விற்கிறது. ரூ. 250க்கு ஏதாவது, அரை மூடை விற்கக் கூடிய வியாபாரி, ஆர்.சி. எடுத்தாக வேண்டும். அதுவும் ரூ. 10 ஆர்.சி. கட்டணமாக இருந்தது. இப்பொழுது ரூ. 100 ஆக்கியிருக்கிறார்கள். நீங்களே 10 மடங்கு விலைவாசி ஏற்றம் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளும்போது, ரூ. 50,000 என்று இருப்பதை, சட்டத் திருத்தத்திலே, ஏன் ரூ. 2 இலட்சமாகக் கொடுக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி. ரூ. 50,000 உற்பத்தியை ரூ. 75,000 ஆக்கிக் கொடுக்கிறார்கள். அதை ரூ. 2 இலட்சமாக ஆக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரூ. 10 என்று இருக்கும் ஆர்.சி. கட்டணத்தை, ஒரேயடியாக, ரூ. 100 என்று உயர்த்தியிருக்கிறார்கள். சாதாரண சில்லறைக் கடையிலே இருக்கிற ஒருவன் ஒரு நேரத்திலே ரூ. 100 கட்ட முடியுமா? அதையெல்லாம் நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுச் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கை வந்தவுடனே, அவசர, அவசரமாக, வியாபாரிகளிடம், வணிகர்களிடம், ரூ. 100 வசூல் செய்யப்பட்டு விட்டது. அதை மறுபரிசீலனை செய்து, ஏதாவது கூட்டித்தான் ஆக வேண்டுமென்றால், ரூ. 10-ஐ ரூ. 20 ஆகவோ, ரூ-20ஐ ரூ. 30 ஆகவோ, ஆக்கி, மீதியைத் திரும்பக் கொடுக்க வேண்டுமென்றும் அடுத்த வருஷத்திலேயிருந்து அதை நீங்கள் குறைத்து அமுல் செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.10)

மேலும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புவது இன்னும் பல சரக்குகளுக்கு ஒரு முனை வரி விதிப்பினை

அரசினர் சட்ட முன்வடிவுகள்

(திரு. ஏ. எஸ். எ. ஆறுமுகம்)

அமைச்சர் அவர்கள் கொண்டு வர வேண்டும். எத்தனையோ விதமான சரக்குகள் இன்னும் பலமுனை வரியிலே இருந்து கொண்டிருக்கிறது. அதையெல்லாம் ஒரு முனை வரியாக்க வேண்டும். அப்படி செய்யும்போது, பலமுனை வரியிலே எவ்வளவு இருந்ததோ அதைத்தான் அமைச்சர் அவர்கள் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இந்த வியாபாரத்திற்கு ஒரு தடவை தவிர மறு தடவை வரி கட்டுவதில்லை. அமைச்சர் அவர்களுக்கே தெரியும். எந்த சரக்குக்குமே ஒரு தடவைக்கு மேலே அரசுக்கு வரி வருவது கிடையாது. பலமுனை வரியை ஒருமுனை வரியாக்கும்போது அதே நிலையை உண்டாக்கினால் ஒழுங்காக கணக்குகளை காண்பித்து, ஒழுங்காக அரசுக்கு வரி கட்டி, வணிகர்கள் வியாபாரத்தைச் செய்வார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒழுங்காக அரசுக்கு வரி கட்டுவதாக ஆக்குவது இந்த அரசினுடைய கடமை என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னால் வணிக வரித்துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 3ம் திருத்த சட்ட முன்வடிவு, 4ஆம் திருத்த சட்ட முன்வடிவு, 5ஆம் திருத்த சட்ட முன்வடிவு, 6ஆம் திருத்த சட்ட முன்வடிவு, அதேபோல 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி திருத்த சட்ட முன்வடிவு, 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் மற்றும் தங்கு விடுதிகளின் ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி ஆகிய 8 சட்டங்களின்மீதும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை கூற விழைகிறேன். குறிப்பாக அரசாங்கம் முன்மொழிந்த இந்த புதிய வரவு-செலவுத் திட்டத்திலே சொல்லப்பட்ட அவைகளையெல்லாம் செயல் வடிவத்தில் கொடுக்கக் கூடிய முறையிலே இந்த சட்ட திருத்தங்களை நம்முடைய வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே முன் மொழிந்திருக்கிறார்கள். முதலிலே நான் கூற விரும்புவது இந்த உணவகங்கள் மற்றும் தங்கு விடுதிகளின் ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி உயர்த்தி திருத்தப்படும் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அது சரியானது என்று சொல்கிறோம். அதேபோல இந்த அளவு 50,000 என்று இருப்பதை 75,000 என்று உயர்த்திருப்பதை சரியென்று ஏற்றுக் கொள்கிறோம்.

அதோடு வேறு சில விஷயங்களும் இதிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. குறிப்பாக இந்த புதிய வரிகளை நாம் அறிவிக்கும்போது, பலமுனை விற்பனைவரிகளை ரத்து செய்து ஒருமுனை விற்பனை வரியாக கொண்டு வரக்



அரசினர் சட்ட முன் வடிவுகள்

(திரு கோ. வீரய்யன்)

கூடிய காலத்தில் குறிப்பாக சில பொருள்களான, மிளகாய், புளி, மஞ்சள், கொத்தமல்லி, மிளகு, சீயக்காய், வெல்லம் இது போன்ற பொருள்களுக்கு பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றும்போது, 5 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக உயர்த்தியிருப்பது சரியல்ல. அந்த பலமுனை வரி என்ன விழுக் காட்டில் இருந்ததோ, அதே முறையிலே ஒருமுனை வரியாக மாற்றும்போது அதே விழுக்காடு இருக்க வேண்டும். வரிச் சலுகையை ஒருமுனையாக மாற்றுவதன் மூலமாக அந்த பொருள் களை உபயோகிக்கக் கூடிய மக்களுக்கு அதனுடைய பயன் நுகர்வோர்களுக்கு சேரக் கூடிய முறையிலே இருக்குமே தவிர அது இல்லாமல் நிச்சயமாக எவ்வளவு பலமுனை வரி வசூலிக்க முடியுமோ அதைவிட கூடுதலான தொகைக்கு ஒருமுனை விற்பனை வரியாக மாற்றுவதன் மூலமாக வசூலிப்பதன் மூலமாக அரசுடைய வருமானத்தை குறைக்காமல், அதிகப் படுத்திக் கொண்டு. ஒருமுனை வரியாக மாற்றியிருக்கிறோம் என்று கூறுவது பொருத்தம் அல்ல. எனவே அதை உயர்த் தாமல், பழைய நிலையிலே வைத்து, இந்த சாதாரண மக்கள் உபயோகிக்கக் கூடிய அந்த பொருள்களுக்கு ஒருமுனை வரியாக மாற்றுவதோடு அதை உயர்த்துவதை அரசு கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி உயர்த்துவதன் மூலமாக மக்கள் பாதிக்கக் கூடிய நிலை இருக்கிறது. அது மேலும் விலை உயர்விற்கு உதவி செய்து அதனால் சாதாரண மக்கள் பாதிக்கப்படக் கூடிய நிலை ஏற்படும். அடுத்தபடியாக சில பொருள்களுக்கு வரிகள் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். அதாவது ஏறத்தாழ 20 கோடி ரூபாய்க்கு வரிகள் ரத்து செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். உண்மை தான். 20 கோடி ரூபாய்க்கு வரிகள் ரத்து செய்யப்பட்டிருக் கிறது. ஆனால் அந்தப் பயன் நுகர்வோருக்குக் கிடைக்கக்கூடிய முறையில் இல்லை. விலையைக் குறைக்க நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை வரி உயர்ந்தால் உடனே விலை உயர்கிறது. ஆனால் வரி குறைக்கப்பட்டால் அந்த அளவுக்கு விலைகள் குறைக்கப்படவில்லை. என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சூழ்நிலை காரணமாக வரி குறைப்பின் பலன் நுகர்வோ ருக்குக் கிடைக்கவில்லை. எனவே நுகர்வோருக்கும் பலன் கிடைக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

வரி வசூலிக்கும் முறைகள் பற்றி பல்வேறு திருத்தங்கள் செய்யப் பட்டிருந்தாலும் கூட நடைமுறையில் சிறு வியாபாரிகள் மிகவும் துன்புறுத்தப்படுகிறார்கள். கணக்கு இருக்கிறதா என்று நிர்ப்பந்திக்கப்பட்டு அச்சுறுத்தப்படுகிறார்கள். இப்படி துன் புறுத்துவதால் சிறு வியாபாரிகளுக்கு ஏற்படக் கூடிய செலவுகள் முழுவதையும் பொருட்களின் மீது வைத்து வாங்குவோர் தலை யில்தான் சுமத்தக்கூடிய நிலைமை ஏற்படுகிறது.

(திரு. கோ. வீரய்யன்

1986ஆம் ஆண்டு விற்பனை வரி திருத்தச் சட்டத்திலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதாவது வர்த்தகர்களுக்குத் தான் இந்த வரி என்று குறிப்பிட்டு இருந்தாலும் கூட முன்னாலே இருந்த சட்டத்தில் 4 பகுதிகளாக பிரிக்கப்பட்டு இருந்தது. 5 இலட்சம் வரையில் 0.5 விழுக்காடு என்றும் 5 இலட்சத்திலிருந்து 7 இலட்சம் வரையில் 0.7 விழுக்காடு என்றும், 7 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரை ஒரு விழுக்காடு என்றும் 10 இலட்சத்திற்கு மேலே 1.25 விழுக்காடு என்றும் இருந்த வரிகள் முழுவதும் சேர்க்கப்பட்டு 40 இலட்சம் வரையில் 1.25 விழுக்காடு என்றும் 40 இலட்சத்திற்கு மேலே 1.5 விழுக்காடு என்றும் திருத்தங்கள் செய்யப்பட்டு இருக்கிறது. இவ்வாறு இந்த 4 பகுதிகளாக இருந்தது ஒன்றாக மாற்றப்படும் போது அந்த வரி உயர்வினால் ஏற்படக் கூடிய பளு முழுவதையும் வியாபாரிகள் கொடுக்கிறார்கள் என்று டெக்னிக்கலாக சட்டத்தின் படி வேண்டுமானால் நாம் சொல்லிக்கொள்ளலாம். உண்மையிலே என்ன நிலைமை என்றால் நுகர்வோர் தலையில்தான் அந்தப் பளுவையும் சேர்த்து வியாபாரிகள் வைக்கிறார்கள். அவ்வாறு வைத்து அதனை வசூலித்துக் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. எனவே சாதாரண மக்களுக்குப் பயன் கிடைக்கக் கூடிய முறை இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இந்தச் சோதனைச் சாவடிகளைப் பொறுத்த மட்டில் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். சோதனைச் சாவடிகளில் சாதாரண ஏழை எளியவர்களைத் துன்புறுத்தக் கூடிய முறையில் இருக்கிறது. லாரிகளின் மூலமாக கடத்திச் செல்லப்படுவது என்பது ஊர் அறிந்த ரகசியமாக நடை முறையில் இருக்கிறது. ஆனால் சாதாரண ஏழை எளிய மக்கள் பக்கத்திலே இருக்கின்ற கிராமங்களுக்கு, வட்டங்களுக்குச் சென்று உழைத்து வருமானமாகப்பெற்று வருகின்ற தானியங்களைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அது தங்களுக்கு கூலிதான் என்று சர்ட்டிபிகேட் வாங்கிக்கொண்டு வந்தாலும் கூட சோதனைச் சாவடிகளில் அவற்றைப் பறிமுதல் செய்கிறார்கள். அவர்களைத் துன்புறுத்துகிறார்கள். அவர்கள் பணம் கொடுத்து விட்டுத் தான் அந்தப் பொருளை வாங்கவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இது அன்றாட நிகழ்ச்சியாக வந்திருக்கிறது. இந்த நிலைமை பற்றி வணிக வரித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகவே தெரியும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கக் கூடிய மக்களுக்கு தஞ்சை மாவட்டத்தில் நிலம் இருக்கிறது அல்லது சிறு விவசாயிகளாக இருக்கிறார்கள் என்றால் அங்கே அவர்கள் விவசாயம் செய்கிறார்கள். அவர்கள் அவ்வாறு விவசாயம் செய்து அந்த தானியத்தை வாங்கிக்கொண்டு செல்கின்ற நிலைமையில் அல்லது தங்களுடைய சொந்த நிலத்திலிருந்து அதாவது பட்டுக்கோட்டை



(திரு. கோ. வீரய்யன்)

வட்டத்திலிருந்து புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆலங்குடிக்கு எடுத்துச் செல்லும்போது அது சொந்த நிலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற தானியம் தான் என்று சான்றிதழ் பெற்று வந்தாலும் சோதனைச் சாவடிகளில் அவர்கள் தடுத்து நிறுத்தப்படுகிறார்கள். துன்புறுத்தப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை வந்தபோது எல்லோரும் சேர்ந்து தங்களை இவ்வாறு நிர்ப்பந்திப்பது சரியில்லை என்று வற்புறுத்தியதற்குப் பிறகு தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரும், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரும் தலையிட்டு சமரசம் செய்து வைக்கக்கூடிய நிலை ஏற்பட்டது என்பதை மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களும் அறிவார்கள். இப்படி சோதனைச் சாவடிகளில் லாரி, லாரியாக, மூட்டை மூட்டையாக கடத்திச் செல்பவர்களை விட்டு விட்டு சாதாரண விவசாயத் தொழிலாளர்களையும், சிறு விவசாயிகளையும் தடுக்கின்ற நிலைமை இருக்கிறது. சொந்த நிலத்திலே இருந்து எடுத்துச் செல்கின்ற தானியங்களைக் கூட பறிமுதல் செய்கின்ற நிலைமை இருக்கிறது. இப்படிப் பட்ட தொல்லைகள் ஏற்படுகின்றன.

(பிற்பகல் 12-20)

அப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படக் கூடிய முறையை தவிர்க்க வேண்டும். அந்தக் கடத்தல்காரர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி ஆட்சேபணை இல்லை. அதைத் தடுப்பதோ கைப்பற்றுவதோ அல்லது அதன்மீது அரசு நடவடிக்கை எடுப்பது பற்றியோ ஆட்சேபணை இல்லை. ஆனால் சாதாரண மக்கள், ஏழை எளிய விவசாய மக்கள் பாதிக்கக் கூடிய முறையில் நடவடிக்கை எடுப்பது நிறுத்தப்பட வேண்டும்.

அந்த வரி தள்ளப்படுவதனால், அதாவது ரத்து செய்யப்படுவதனால் ஏற்படக் கூடிய பலன் நுகர்வோர்களுக்குப் போக வேண்டும். அதேபோல ஒரு முனை வரியாக மாற்றப்பட்டிருக்கிற பொருள்களுக்கு அதனுடைய விழுக்காடு உயர்த்தப்படாமல் பழைய அளவிற்கே இருக்கப்பட வேண்டும். அந்த முறையில் சட்டங்களை மாற்றுவதற்குரிய முறையிலே வணிக வரித்துறை அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் இங்கு 8 திருத்த சட்ட முன்வடிவுகள் கொண்டு வரப்பட்டு அதன் மீது 2 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அனுபவம் மிக்க ஆக்கபூர்வமான ஆலோசனைகளை இந்த அரசுக்கு வழங்கியிருப்பதற்கு உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன். நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசினர் சட்ட முன் வடிவுகள்

(திரு. தா. வீராசாமி)

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் இன்று இந்த 8 சட்ட முன் வடிவுகளில் வருகிற கருத்து திருத்தங்கள் எல்லாம் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டு வரப்பட்ட நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட, அறிவிப்புகளை சலுகைகளை சட்டமாக்கித் தருகின்ற வகையிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே இப் பொருள்கள் பற்றி இந்த கண்ணியம் மிக்க அவையிலே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பல நிலைமைகளிலே விவாதித்ததன் காரணமாக, அவை குறித்து அதிகமாக நான் கருத்துக்களை எடுத்து வைக்க தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல பல்வேறு சலுகைகளை இந்த அரசு அறிவித்திருக்கிறது.

(1) பொருள்களுக்கு அறவே வரியை நீக்கியும்.

(2) இருக்கின்ற வரியை குறைத்தும்,

(3) இருக்கின்ற வரிகளை சீரமைத்து செம்மைப்படுத்தி வணிகர்களுடைய, தொல்லைகளை, இன்னல்களை துன்பங்களை களைகிற வகையிலும்,

இன்னும் இந்த நாட்டிலே பல்வேறு தொழிற் கூடங்கள் வளர வேண்டும், தொடங்கப்பட வேண்டும்-அவைகளின் மூலம் தொழில் உற்பத்தி பெருக வேண்டும் என்ற எண்ணத்தோடு தொழிற்சாலைகளுக்கு என்று பல்வேறு வகையான சலுகைகளை அளித்து, அந்த அடிப்படையிலும் இந்த சட்டத் திருத்த முன் வடிவுகள் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த திருத்த சட்ட முன்வடிவுகளில் 2வது திருத்த சட்டமுன் வடிவு மிக முக்கியமானது. அது வணிகர்களுக்கு வழங்கப்படுகிற ஒரு வரப்பிரசாதம் அல்லது இதுவரையில் விற்பனை வரிச் சட்டத்திலே இல்லாத ஒரு சலுகை என்றே குறிப்பிட நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவுகளிலே, அந்த தமிழ் நாடு வரிவிதிப்புச் சட்ட விதி 12-ன் கீழ் வரி விதிப்புக்கு, அசெஸ் செய்து விதிக்கப்படுகிற அந்த வரி விதிப்புக்குத்தான், அதிலே வியாபாரிகள் தவறான முறைகேடுகள் இருக்கிறது என்று சொன்னால், அதற்கு மேல் முறையீடு செய்வதற்கு இதிலே வழி வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த வியாபாரிகள் அண்டர் இன்வாய்ஸ் என்று சொல்லக் கூடிய அளவிற்கு ஒரு பொருளினுடைய மதிப்பை மிகவும் குறைத்து அவர்கள் பலவாறாக கணக்கு போடுகிற நேரத்தில், அப்போது அங்கே வரி விதிப்பை அசெஸ் பண்ணுகிற துணை ஆணையாளர் அல்லது



அரசினர் சட்ட முன் வடிவுகள்

(திரு. தா. வீராசாமி)

ஏ.சி.டி.ஓ., டி.சி.டி.ஓ. போன்றவர்கள், மறுபடியும் அதனை அசெஸ் செய்து வரி விதிக்கின்ற நிலைமை, வரிவிதிப்புச் சட்டம் 12இன் கீழ் வருகிறது. அப்படி வருகிற நேரத்தில் அந்த வணிகர்கள் பாதிக்கப்படலாம். அப்போது அதை மேல் முறையீடு செய்வதற்கு, அல்லது அப்பீல் செய்வதற்கு தற்போது இருக்கின்ற பழைய சட்டத்திலே வழி வகை இல்லை. எனவே இந்த அரசு வியாபாரிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகவும், இன்னலண்டான வியாபாரிகள் தங்களுடைய குறை போக்கப்படவேண்டும் என்று, வரிவிதிப்பிலே ஏற்படுகிற தவறினால் அவர்கள் பாதிக்கப்பட்டால் அந்தக் குறை போக்கப்பட வேண்டும் என்று மேல் முறையீடு செய்வதற்கு அவசிய வழி வகை செய்வதற்கான முறையிலே, ஏற்கெனவே இருந்த 31 (ஏ) என்ற பிரிவிற்கு, 12 (எ) ஐக் கொண்டு வந்து, அவர்கள் மேல் முறையீடு செய்யலாம் என்று வழி வகைகளை இந்த அரசு செய்து தந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு ஜனதா கட்சி உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பேசுகிறபோது நீதிமன்றத்திற்குச் செல்கிற வழியை இந்த அரசு தடுத்து நிறுத்தி விட்டது என்று சொன்னார்கள். அரசு அப்படிப்பட்ட எண்ணத்தில் இருந்திருக்குமானால் நிச்சயமாக இரண்டாம்திருத்த சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக்காது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

அதே போல இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதியதாக அரசியல் சாசன சட்டம் 323-பி யின் கீழ் நிறுவப்படவிருக்கிற சிறப்பு தனி மேல்முறையீடு தீர்ப்பாயத்தைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டு இருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அதன் சார்பாக ஒரு விளக்கத்தைத் தர கடமைப்பட்டிருக்கிறேன். வரி விதிப்பில் தவறுகள், குறைகள் அல்லது குறைபாடுகள் இருக்கிறதென்றோ, அல்லது நியாயமற்ற முறையில் வரி விதிக்கப்படுகிறது என்றோ எண்ணுகிற போது, அப்படி பாதிக்கப்பட்டிருக்கிறதுஎன்று எண்ணுகிற வியாபாரிகள் உடனடியாக மேல்முறையீடு செய்யலாம். ' அப்பலெட் ' அசிஸ்டெண்ட் கமிஷனர்', உதவி ஆணையரிடத்தில் மேல் முறையீடு செய்யலாம். அதிலே அவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லையென்று எண்ணினால் அதற்கு மேலே ட்ரிப்யூனலில் மேல் முறையீடு செய்யலாம். அங்கேயும் நியாயம் கிடைக்கவில்லையென்று கருதினால் அவர்கள் நேராக உயர் நீதிமன்றத்துக்குச் சென்று நியாயம் கோரி வழக்காடலாம். இந்த விதிமுறை இப்போது இருந்து வருகிறது. அந்த அடிப்படையில் பார்க்கிற போது வணிக வரித் துறையில் நியாயம் கிடைக்கவில்லையென்று உயர் நீதிமன்றத்திற்குச் செல்கிறபோது, அங்கே வழக்குகள் ஆயிரக் கணக்கில் தேங்கி விடுகின்றன. அதன் காரணமாக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

அரசினர் சட்ட முன் வடிவுகள்

)திரு. தர. வீராசாமி)

அதுமட்டுமல்லாமல், புதிய வரிகளை சட்டம் கொண்டு வந்து போடுகிற போது அது தங்களுடைய அடிப்படை உரிமைகளை பாதிக்கிறது, சட்டத்திலே இடமில்லையென்று அவர்கள் சொல்லி உயர்நீதிமன்றத்திற்குச் சென்று ரிட் பெடிஷன்ஸ் வாங்கி விடுகிறார்கள். அதனால் வரி விதிப்பின் மூலம் தனிப்பட்ட நபர் ரிட் பெடிஷன்ஸ் வாங்கினாலும், நாடு தழுவிய அளவில் வணிகத்தில் ஈடுபட்டிருக்கிற வியாபாரிகள் வரி கட்ட முடியாத சூழ்நிலை இன்றைக்கு இருந்து வருகிறது. அதை உணர்ந்து வேகப்படுத்துகிற வகையில், அப்படி வேகப்படுத்துவதன் மூலம் அரசுக்கு வருவாய் பெருகுகிற முறையில் வழி செய்கிற ஒரு முறை தான் 'சிறப்பு மேல் முறையீடு தீர்ப்பாயம்' 'Speci l Appellate Tribunal' என்று இந்த அமைப்பை இந்த அரசு உருவாக்க சட்டம் கொண்டு வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

தற்போது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பிரிவு 37 மற்றும் 38-ன்படி உயர்நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு அல்லது வழக்கு தொடர வழி செய்யப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்குகள் மிக அதிகமாள விழுக்காடு இருப்பதால், பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் ஒரு சிறப்பு மேல் முறையீடு தீர்ப்பாயம் ஏற்படுத்த இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுறது. இந்த மாதிரி தீர்ப்பாயம் ஏற்படுத்த இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவு 323பி யின்படி இவ்வரசுக்கு அதிகாரம் உள்ளது. மேலும் இந்தத் தீர்ப்பாயத்திற்கு இந்திய அரசியல் சட்டத்தின் 226-வது பிரிவிலே அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் தற்போது உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிற வழக்குகளை துரிதமாக முடிக்க இயலும். எனவே அந்த வகையில், இப்போது உயர் நீதி மன்றத்திற்கு இருக்கிற அனைத்து அதிகாரங்களும் இந்தச் சிறப்பு மேல் முறையீடு தீர்ப்பாயத்திற்கு இந்தச் சட்டத்தின் மூலம் கொடுக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன். இங்கே ஒரு புள்ளி விவரத்தைச் சொன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சிறப்பு தனி மேல்முறையீடு தீர்ப்பாயம் அமைக்கப்படுவது நியாயமென்று ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1ஆம் நர்ளில் நிலுவையில் உள்ள நீதி பிரேரணை மனு 'ரிட்' பெடிஷன்ஸ்' 3139.

(பிற்பகல் 12-30)

1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1ஆம் நாளில் நிலுவையில் உள்ள வரி வழக்குகள், டாக்ஸ் கேசஸ் மொத்தம், 2,585. மொத்த வழக்குகளில் உயர் நீதிமன்றத்தில் தேங்கிக் கிடப்பவை 5,724 என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்பு



அரசினர் சட்ட முன்வடிவுகள்

(திரு. தா. வீராசாமி)

கிறேன். இந்த வழக்குகளினால் மொத்தம் அரசுக்கு வரவேண்டிய நிலுவையில் உள்ள வருவாய் 38 கோடி என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்படி எல்லாம் வழக்குகளை நாம் துரிதப்படுத்தி அரசுக்கு வரவேண்டிய மொத்த வருவாயை நாம் பெருக்கினால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொன்னதைப் போல வியாபாரிகளுக்கு இன்னும் பல சலுகைகளைச் செய்வதற்கு முடியும் என்ற அடிப்படையில்தான் இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் செய்கிறோம் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு முக்கியமான சட்ட முன்வடிவைப் பற்றி பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் பேசவில்லை என்ற காரணத்தால், நாட்டு மக்களுக்கு குறிப்பாக இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இந்த மன்றத்தின் மூலமாக நான் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன். ஒப்பந்தப் பணிகள், அரசியல் நிர்ணயச் சட்டம் 46வது திருத்தத்தின் விளைவாக ஒப்பந்தப் பணிகளுக்கு 1984ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாள் முதல் வரி விதிப்பு செய்யப்பட்டு வருகிறது. இந்த வரி விதிப்பின் விளைவாக வணிகர்கள் மத்தியில் வரி விகிதம் 'ரேட் ஆப் டாக்ஸ்' மற்றும் வரி விதிப்பு மேற்கொள்ளப்படும் தொகை 'டாக்ஸபில் டர்ன் ஓவர்' அவர்களுக்கு விலக்கு அளிக்கப்படும, உழைப்பு அளவுக்கு 'லேபர் கண்டென்ட்' ஆகியவற்றில் பலவிதமான ஐயப்பாடுகளும், இடர்பாடுகளும் நிலவி வருகிறது. அவற்றை சீராக்கும் வகையாக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. ஒப்பந்தப் பணிகளில் பொருள்களை வணிகர்கள் இடத்திலே தயாரித்து, அவ்வாறு தயாரித்த பொருட்களை ஒப்பந்தப் பணிகளுக்கு ஒப்பந்த இடத்தில் பயன்படுத்தல், ஒரு வகை. உதாரணமாக மின் தூக்கி (குறுக்கீடு).

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஓர்க்ஸ் கான்ட்ராக்ட்' பற்றி உறுப்பினர்கள் பேசவில்லை என்று ஆதங்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், ஏற்கனவே மானியக் கோரிக்கையிலே நான் பேசுகின்றபோது, இந்த ஓர்க்ஸ் கான்ட்ராக்டில், பலவிதமான ஐயப்பாடுகள் இருக்கின்றன, பலவிதமான சிக்கல்கள் இருக்கின்றன, எனவே ஓர்க்ஸ் கான்ட்ராக்ட் பற்றி எங்களுக்கு விளக்கம் சொல்ல வேண்டும் என்று கேட்டேன். அந்த விளக்கத்தின் காரணமாக தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது

(திரு. டி. ஆர். வெங்கடரமணன்)

என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்த காரணத்தால்தான் இந்த ஓர்க்ஸ் காண்ட்ராக்ட் பற்றி நாங்கள் பேசவில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்களைப் பற்றி நான் கூறவில்லை. நீங்கள் நிதி நிலை அறிக்கையிலே பேசியபோது, அதைக் கவனித்ததால்தான் நான் அதற்கு இப்போது பதில் சொல்கிறேன். ஆனால் இன்று பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இதைப் பற்றி ஞாபகப்படுத்தவில்லை என்பதால்தான் சொன்னேன். உங்களை அல்ல.

எனவே ஒப்பந்தப் பணிகள், பொருட்களை வணிகர்களிடத்திலே தயாரித்து, அவ்வாறு தயாரித்த பொருட்களை.......

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 9 சட்டங்களைக் கொண்டு வந்துவிட்டு, 2 நிமிடங்களிலே பேசி முடிக்க வேண்டும் என்று தலைவர் அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டுவிட்டு, ஒவ்வொரு சட்டத்தைப் பற்றியும் நாங்கள் விளக்கமாகப் பேசவில்லை என்று அமைச்சர் அவர்கள் ஆதங்கப்படுவது பொருத்தமாக இருக்காது. அதற்கான அவகாசம் எங்களுக்கு அளித்து, இந்தச் சட்டங்களைப் பற்றி பேசுங்கள் என்று கூறி இருந்தால் நாங்கள் விளக்கமாகக் கூறியிருப்போம். ஆகவே 9 சட்டங்களைப் பற்றி 2 நிமிடங்களில் பேசுங்கள் என்று சொல்லிவிட்டு, இப்படிச் சொல்வது சரியாக இல்லை.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எங்களை ஜாக்கிரதைப்படுத்துவதை நாங்கள் வரவேற்கிறோம். எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் ஒவ்வொரு சட்டத்தையும் படித்து, எங்களுக்கு முடிந்த அளவிற்கு நாங்கள் வாதம் பண்ணுகிறோம். ஆனால் ஒரு குறை, அந்தப் பக்கத்திலே, அமைச்சர்கள் பக்கத்திலே இருப்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. நான் குற்றத்திற்காக பதில் சொல்லவில்லை. நீங்கள் இப்படி சட்டத்தைக் கொண்டு வந்து முன்னால் வைக்கும் போது, (Pre-Explanation over these legislations) ஏன் நீங்கள் அதைக் கொடுக்க வில்லை? நீங்கள் அதைக் கொடுக்க வேண்டும். அது ஒன்றும் தவறானது அல்ல. * அதுதான்நியாயமானதாக இருக்கும். எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் படித்து இங்கே வந்து மேதாவிலாசத்தோடு பேசுவார்கள் என்று சொல்ல முடியாது. அதனால்தான் சொல்கிறேன், நீங்கள் அப்படிக் கொடுப்பதிலே எங்களுக்கு உதவியாக இருக்கும். அப்படிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு உறுப்பினர்கள் நான் சொன்ன கருத்தை தவறாக எடுத்துக் கொண்டார்கள். நான் இது ஒரு முக்கியமான பிரச்சினை, நாட்டிலே பல்வேறு சம்பவங்கள் நிகழ்கின்றன அதனால் சொல்கிறேன் என்று சொன்னேன். எனவே என்னுடைய பதிலைத் தொடருகிறேன். ஒப்பந்தப் பணிகளில் பொருட்களை வணிகர்களிடத்திலே தயாரித்து அவ்வாறு தயாரித்த பொருட்களை ஒப்பந்தப் பணிகளுக்காக ஒப்பந்த இடத்தில் பயன்படுத்துதல் ஒரு வகை, உதாரணமாக மின் தூக்கி, பொருளை வாங்கி அவ்வாறு வாங்கிய பொருளை ஒப்பந்த பணிகளுக்குச் செய்யும் போது அப்படியோ அல்லது வேறு விதமாகவோ பயன்படுத்துதல் மற்றும் ஒரு வகையாகும். உதாரணமாக கட்டிடம் கட்டுதல். இவ்வாறு செய்யும்போது ஒவ்வொருஒப்பந்தப் பணிக்கும் வரிவிகிதம் என்ன என்பதை இந்தச் சட்டத்தின் மூலம் திட்டவட்டமாக தனி அட்டவணையாக—அட்டவணை—4 கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறை ஏற்கெனவே கடைபிடிக்கப்பட்டு வரும் முறையிலிருந்து முற்றிலும் மாறு பட்டது. சாதாரணமாக நடைமுறையிலுள்ள ஓரளவிற்கு எதிர்பார்க்கக் கூடிய அனைத்து ஒப்பந்தப் பணிகளும் இந்த அட்டவணைக்குக் கொடுத்து ஒவ்வொன்றும் உபயோகப்படுத்தும் பொருளின் அடிப்படையில் வரி விகிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அனைத்து ஒப்பந்தப் பணிகளுக்கும் 50 ஆயிரம் ரூபாய் வரை வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் மேற்கூறியவாறான குழப்பங்கள் திட்டவட்டமாக விலகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சில ஒப்பந்தப் பணிகளில் 'லேபர் கன்டென்ட்' பெருமளவில் பொருளின் உபயோகம் மிகவும் சிறிய அளவிலே இருக்கும் வாய்ப்பு உண்டு. உதாரணமாக திருச்சியிலுள்ள பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் என்கின்ற மத்திய அரசு நிறுவனத்தை நம்பி செயல் படும் தொழிற் கூடங்களாகும். ஏற்கனவே உள்ள சட்டத்தின்படிஇந்த தொழில் கூடங்களில் உபயோகப்படுத்தப்படும் பொருளின் அடிப்படையில் அல்லாது பெருமளவில் வரி விதிப்புக்கு உட்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனை சரிசெய்யும் வகையான இந்தச் சட்டம் ஏற்பளிப்பு செய்யப்பட்ட உடனே விதிமுறைகளில் மாற்றங்கள் செய்ய அரசு உத்தேசித்துள்ளது. வணிகர்களின் கணக்கில் உழைப்பு சம்பந்தமான லேபர் டிடெயில்ஸ்—விவரங்கள் சரியாகவும் முழுமையாகவும் இருந்தால் அதை அப்படியே வரி விதிப்பு அலுவலர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற அளவிற்கு விதிமுறைகள் கொண்டுவரப் படவிருக்கின்றன. ஒப்பந்தப் பணிகளுக்காக தயாரிக்கப்படும் பொருளில் உபயோகப்படுத்தப்படும் பொருள்களுக்கு குறைந்த அளவிலான வரிவிகிதம் 4 விழுக்காடு கடைபிடிக்கப்படும். இவ்வாறு ஒப்பந்தப் பணிகளுக்கான வரி விகிதமும் ஒப்பந்தப் பணியில் அடங்கியுள்ள உழைப்பின் அளவும் திட்டவட்டமாக நிர்ணயம் செய்யப்படுவதால் ஒப்பந்தப் புள்ளி வரிவிதிப்பு முறை சரிவர செய்யப்படுமென உறுதியாக நம்பப்படுகிறது. சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒப்பந்த பணி சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்குகளையும்

அரசினர் சட்ட முன் வடிவுகள்

(திரு. தா. வீராசாமி)

வணிகர்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலை இச் சட்டத்தின்மூலம் ஏற்படும் என நம்பப்படுகிறது. இந்தச்சட்டம், மகாராஷ்டிரம்' குஜராத், கர்நாடகம், மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள ஒப்பந்தப் பணி வரிவிதிப்புக்கான சட்டங்களையெல்லாம் தீவிரமான பரிசீலனை செய்து அவற்றிலுள்ள நல்ல அம்சங்களை மேற்கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். இந்தச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்தும் போது சற்றும் எதிர்பாராத சிலபிரச்சினைகள் எழ வாய்ப்புண்டு. அவற்றை துறையின் அனுபவம் மற்றும் வணிகர்களின் வரி நடைமுறை இடர்பாடுகள் ஆகியவற்றை கருத்தில்கொண்டு சரி செய்ய இந்த அரசு ஆவன செய்யும் என்பதை இந்த அவையில் நான் கூறிக்கொள்கிறேன். எனவே அந்த வகையிலே மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே ஒப்பந்தப் பணிகள் சீர் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த வகையிலே இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்கிறேன். மேலும் சில இடர்பாடுகள் வருகின்ற நேரத்தில் அவைகளிலும் அப்போதைக்கப்போது துறையினுடைய அனுபவத்தின் மூலமாக இந்த அரசு களையமுற்படும் என்பதனை இந்த நேரத்திலே குறிப்பாக அந்தத் தொழிலிலே ஈடுபடுகின்ற பெருமக்களுக்கு நான் எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு சலுகைகளை இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டது பற்றி வரவேற்று இன்னும் பல தீர்மானங்களை நல்ல முறையிலே நடைமுறைகளையும் வழிமுறைகளையும் வகுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக இங்கே ஆலோசனைகளை எடுத்துச் சொன்னார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஜனதா கட்சியைச் சேர்ந்தவர் வியாபார பெருங்குடி மக்கள் பெரிதும் வாழ்கின்ற நகரத்தில் இருந்து வந்தவர். அப்படிப்பட்ட தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர், வியாபாரிகளுடைய நலன் கருதி, நன்மை கருதி அவர்களுடைய பாதுகாப்புக்காக நல்ல பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள்.

(பிற்பகல் 12-40)

அவர்கள் சொல்கிறபோது மாட்டு வண்டிகளில், சைக்கிளில் சரக்குகளை கொண்டு வரும் நேரத்தில் இருக்கின்ற சிரமங்களைப் பற்றி சொன்னார்கள். இப்போது சோதனைச் சாவடிகளில் எப்படி வரி விதிக்கப்படுகிறது என்று சொன்னால், Tamil Nadu Motor Vehicles Act, என்ற அந்த அடிப்படையில் Goods Vehicle என்ன சொல்கிறதோ அந்த விதிமுறைக்கு உட்பட்டு வரி விதிக்கப்படுகிறது. அப்படி வரி விதிக்கப்படுகின்ற நேரத்தில் வண்டிகளிலோ அல்லது இன்னும் சைக்கிள்களிலோ அல்லது கடவில்



அரசினர் சட்ட முன் வடிவுகள்

(திரு. தா. வீராசாமி)

செல்லக்கூடிய போட்டுகளிலோ பொருள்களை எடுத்துச் செல்லுகிறபோது, கடத்திச் செல்லுகிறபோது அவர்கள் தடுத்து நிறுத்தப்படுகிறார்கள். அப்படி தடுத்து நிறுத்தி அவைகளுக்கு வரி விதிக்க சட்டத்திலே இடம் இல்லை. அதனால் தான் இப்போது சட்டம் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அவர்கள் ஒரு ஐயப்பாட்டை கிளப்பினார்கள். வேளாண்மை பெருங்குடி மக்கள் எல்லாம் சிரமப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் வேளாண்மைப் பொருட்களுக்கு அறவே வரி விதிக்கப்படவில்லை என்பதை நீங்கள் நன்கு உணர்வீர்கள். அந்த வகையில் வேளாண்மை பெருங்குடி மக்கள் பாதிப்புக்கு உள்ளாக மாட்டார்கள் என்பதை சொல்லிக்கொள்கிறேன். ஆனால் வியாபாரிகள் சிறு சிறு சைக்கிள் என்ற பெயரால், வண்டி என்ற பெயரால் சிமென்ட் போன்ற விற்பனை வரிக்கு உட்படக்கூடிய பொருட்களை அங்கே வேண்டிய சான்றிதழ் இல்லாமல், வரிகட்டியிருக்கக்கூடிய ரசீது இல்லாமல் எடுத்துச் செல்லும்போது இப்படிப்பட்ட முறையில் தடுத்து நிறுத்தப்பட்டு, சோதனைக்கு உள்ளாக்கி உரிய உரிமங்கள் கேட்டு முறையாக இருந்தால் விட்டு விடுகிறார்கள். முறைகேடாக இருந்தால் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளை துன்புறுத்தவேண்டும் என்பதற்காக இவைகள் கொண்டுவரப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அருமை அண்ணன் திரு. வீரய்யன் அவர்கள் பேசும்போது சோதனை சாவடிகள் பற்றி சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கிக்கும், புதுக்கோட்டைக்கும் இடையில் உள்ள ஆவணம் சோதனைச் சாவடியை மனதில் வைத்துக்கொண்டு பேசியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆவணத்தில் இருப்பவர்கள் புதுக்கோட்டையில் வாழ்கிறார்கள். அப்படி அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற நிலத்தில் விளைகின்ற பொருட்களை எடுத்துச் செல்லும்போது துன்பத்திற்கு ஆளாகிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கும் வணிக வரிததுறைக்கும் சம்பந்தம் இல்லை. சோதனைச் சாவடிகள் வணிக வரி துறையில் மட்டும் இப்போது நடைமுறைப்படுத்த வில்லை. உணவுத் துறை மூலமாக, கலால் துறை மூலமாக, சுங்கத் துறை மூலமாக, காவல்துறை மூலமாக பல்வேறு சோதனை சாவடிகள் இருக்கின்றன. அந்த சோதனைச் சாவடிகளில் ஏற்படுகின்ற நிகழ்வினை வைத்து அருமை அண்ணன் திரு. வீரய்யன் அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படி எங்கேனும் இந்த வணிக வரி துறையின் மூலமாக இயங்குகின்ற சோதனை சாவடிகளில் அப்படிப்பட்ட குறைபாடுகள், தவறுகள், தொந்தரவுகள், இன்னல்கள் இருக்கு

மானால் அதை களைவதற்கு இந்த அரசு எல்லாவிதமான உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய மரியாதைக்குரிய திரு ஏ. எஸ். எ. ஆறுமுகம் அவர்கள் சொல்லும் போது மெயின் சாலைகளில் National Highways, Highways District and other roads, O. D, A. roads—இந்த மாதிரி சாலைகளில் தான் சோதனை சாவடிகளை வைக்கவேண்டும், அதுவும் எல்லை ஓரத்தில் இருக்கவேண்டும் என்றும், எங்கள் விருது நகரில் சுற்றி சோதனை சாவடிகள் அதிகமாக இருக்கின்றன. என்ன காரணம் என்று கேட்டு, அங்கே உள்ள வணிகர்களை நம்பவில்லையா என்று ஒரு ஐயப் பாட்டை எழுப்பினார்கள்.

யாரையும் அப்படி கிஞ்சிற்றும் எண்ணியது கிடையாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். வியாபாரி கள் பெருங்குடி மக்களை நம்பிதான் இந்த மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியில் நிதிநிலை அறிக்கையில் 20 கோடி ரூபாய்க்கு வரி சலுகையை இங்கே அறிவித்து இருக்கிறார்கள். அறிவித்ததன் நோக்கம் என்ன என்றால், வாங்கி உண்ணுகின்ற ஏழை எளிய வர்களுக்கு இந்த சலுகை சென்று சேரவேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் அறிவித்து இருக்கிறார்கள் என்பது உங்களுக்கு நன்கு தெரியும். இந்த நம்பிக்கை எப்படி வந்தது என்று கேட்டால் வியாபாரிகள் எல்லாம் நல்லவர்கள், நல்ல முறையில் நடந்துகொள்வார்கள் என்ற அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் இந்த அறிவிப்பு வந்தது என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

சமுதாயத்தில் யாரையும் நம்பாமல் இருக்க முடியாது. நம்பிக் கையின் அடிப்படையில் தான் வாழ்க்கை சிறந்து கொண்டிருக் கிறது. நம்பிக்கை இல்லை என்று சொன்னால் எந்த காலத் திலும் எந்த வளர்ச்சியும் இல்லை, காரியம் நடைபெறாது என்பது உங்களுக்கு எல்லாம் நன்கு தெரியும். எனவே இந்த அரசு வியாபார பெருங்குடி மக்களை நம்பித்தான் முழுக்க முழுக்க இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

எனவே, விருதுநகரில் இருக்கின்ற வியாபார பெருங்குடிமக்கள் மேல் அப்படி எல்லாம் தப்பான கண்ணோட்டத்தோடு, எண்ணத் தோடு அந்த சோதனை சாவடிகள் நிறுவவில்லை என்பதை கூறி சோதனை சாவடிகள் இருப்பதற்கு காரணம் இங்கே







சொல்லுகிறேன். விருதுநகர் ஒரு முக்கியமான வியாபார ஸ்தலம். திருச்சி, கோவை, மதுரை, சேலம் மற்றும் சென்னை போன்ற அனைத்து முக்கிய வியாபார ஸ்தலங்களிலும் தேவையான அளவுக்கு சோதனை சாவடிகள் உள்ளன. எனவே அந்த வகையில் தான் அங்கே சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிடுகிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். ரூ. 50,000-லிருந்து ரூ. 75,000 பதிவிற்குரிய வரி விதிப்பை, வரி விதிப்புத் தொகையை உயர்த்தியிருக்கிறார்களே, தற்போதுள்ள விலையேற்றத்திற்கேற்ப இது பொருந்துமா என்று கேட்டார்கள். நிச்சயமாக இது பொருந்தும். 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று சொல்வார்கள். எனவே இந்த அரசாங்கம் முடிந்ததைச் செய்திருக்கிறது. ஆனால் செய்யாமல் இல்லை, ரூ. 50,000-ஐ ரூ. 75,000 ஆக ஆக்கி இருக்கின்றது. அதற்குள்ளே ஒரு சலுகை இருக்கிறது. ரூ. 50,000 இருக்கின்ற நேரத்திலே, பதிவிற்குரிய விற்பனைத் தொகை, ரூ. 50,000 ஆக இருந்தால், அதன்படி பதிவு செய்துகொள்ளவேண்டும். அப்படி இருக்கின்ற நேரத்திலே ஒரு வியாபாரி இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து ரூ. 30,000-க்குள் விற்பனை இருக்கக் கூடியநிலையில், பதிவு செய்துகொள்ளத் தேவையில்லை என்று விதிமுறை இருந்தது. இப்போது இருக்கின்ற நிலையில் ரூ. 75,000 இரண்டு ஆண்டு களாகத் தொடர்ந்து ஒரு வியாபாரியினுடைய டாக்சபிள் டர்ன்-ஓவர் குறைந்திருக்குமானால், தொடர்ந்து இரண்டு ஆண்டு களுக்கு அவர் தன்னை வியாபாரியாக பதிவு செய்து கொள்ளத் தேவையில்லை என்ற ஒரு விதி முறையை அரசு கொண்டு வந்திருக் கிறது. அதனை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம், போன்ற வியாபாரப் பெருங்குடி இனத்திலிருந்து வந்திருப்பவர்கள் நிச்சயமாக மனதார வரவேற்பார்கள், இந்த அரசைப் பாராட்டு வார்கள் என்று நான் இந்த நேரத்தில் குறிப்பிடுகிறேன்.

இன்னொன்றையும் சொல்கிறேன். இரண்டு இலட்சம் ரூபாய் ஆக்கினால் என்ன என்று கேட்பார்கள். எனக்கு ஆக்குவதற்கு மனம் உண்டு, ஆனால் அதற்கு மார்க்கம் இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன். அப்படி ஆக்கினால் என்னவாகும் என்று கேட்டால், தமிழக அரசைப் பொறுத்தவரையில், வருகின்ற வருவாயில் 67, 70 விழுக்காடு வணிகவரித்துறையின் மூலமாகத்தான் வருகிறது. அதனை ஆக்குவோமானால், வருவாய் போய்விடும் என்ற அந்த அச்சத்தின் காரணமாகத்தான் செய்ய முடியவில்லை. ஆனால் வருவாய் யாருக்கு என்று கேட்பீர்கள். நாட்டு மக்களுக்கு, நல்ல பல பணிகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்கிறேன். (குறுக்கீடு) அந்த

வகையில் பதிவுக் கட்டணத்தை ரூ. 10-லிருந்து ரூ. 100 ஆக உயர்த்திவிட்டீர்களே என்று கேட்டார்கள். ஐயோ நியாயம் வழங்கவில்லை என்று சொன்னார்கள். நீங்கள் திரும்ப ரூ. 10-க்குக் கொண்டுவரவேண்டும் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன். வியாபாரியாக இருக்கக்கூடியவர் ஆயிரக்கணக் கான ரூபாயை, இலட்சக்கணக்கான தொகையை இலாபத்திலே பார்க்கக் கூடியவர், ரூ. 10, ரூ. 100 கொடுப்பதற்கு தயங்கு வார்களா என்பதை இந்த நேரத்தில் நான் கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன். எனவே தயவுசெய்து இதை அரசியல் ஆக்க வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் நடராசன் அவர்கள் ஏற்றுக்கொள்கிறேன் என்பதாக தலையை அசைக்கிறார். இதை ரூ. 10-லிருந்து ரூ. 100 ஆக ஆக்கியிருப்பது, சில பினாமி விய பாரிகள் ரிஜிஸ்ட்ரேஷன் மூலமாக வர்த்தகர்கள் பதிவு செய்து கொண்டு, ‘ பில் டிரேடிங் ’ செய்து விடாமல் இருப்பதற்காக ஒரு எச்சரிக்கையாக எடுக்கப்படுகின்ற ஒரு நடவடிக்கை என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் தனிப்பட்ட மனிதனாக இருப்பேனானால், என்னுடைய எண்ணத்தை வெளி யிடுவேன். ரூ. 10, 100-ஆக இருப்பது போதாது. ரூ. 1,000 ஆக ஆக்க வேண்டும். இதன் நோக்கம் என்ன ? பினாமி பெயராலே பதிவு செய்துகொண்டு, வரி ஏய்ப்பு செய்யக்கூடிய சமூக விரோதச் செயல்களைச் செய்யக் கூடிய வர்த்தகர்களை தடுத்து நிறுத்த இந்த முறை என்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில்தான் இது கொண்டு வரப்பட்டது.

இப்போது ஒரு முனையிலிருந்து பல முனைபற்றி சொன்னார்கள். இந்த அரசுக்கு எந்த முனை பற்றியும் கவலை யில்லை. எல்லா முனையும் ஒன்று தான், என்கிற கருத்து வந்ததினால், இதை ஏற்றுக்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது. ஆனால் ஒரு முனை ஆக்குவதிலே அரசுக்கும் வரி வசூலிப்பதிலே சில அனுகூலங்கள் இருக்கின்றன.

(பிற்பகல் 12-50)

இந்த அரசு கசக்கிப் பிழிந்து வரியை வசூலிக்கின்றது என்ற தவறான எண்ணத்திற்கு ஆட்படாது. அதே நேரத்தில் வியா பாரிகளும் நல்லமுறையில் வரிகளைக் கட்டிவிடலாம். அப்படி நல்லமுறையில் வரிகளைக் கட்டி எப்படியும்ஏமாற்றலாம் என்கின்ற எண்ணம் இல்லாத நிலையில்தான் வரியைக் கட்ட. கட்டத் தான் ஒரு முனை வரி அரசுக்கும், நாட்டுக்கும் நன்மை பயக்கிறது. வியாபாரிகள் ஏமாற்றினால் எமாற்றுவதற்கு நிறைய வாய்ப்புக்கள் ஒருமுனை வரியிலே இருக்கிறது. இந்த அரசினுடைய நோக்கம், பல முனை வரியிலிருந்து ஒரு முனை வரி ஆக்க வேண்டும் என்பதுதான். எனவே தான், மாண்புமிகு உறுப்பினர்களும்



நன்கு அறிவார்கள், நிதிநிலை அறிக்கையில், ஆண்டுக்காண்டு படிப்படியாக ஒருமுனை வரியாக, வேளாண் பொருட்களுக்கு பல முனை வரியிலிருந்து ஆக்கிக்கொண்டு வருகிறது. இந்த ஆண்டு 6 பொருட்களுக்கு பல முனை வரியிலிருந்து ஒரு முனை வரி ஆக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அருமை அண்ணன் வீரய்யன் அவர்கள் பேசுகிற நேரத்தில் 5 விழுக்காடு பல முனை வரியை 8 விழுக்காடு ஒரு முனை வரி ஆக்குகிறீர்களே, இது நியாயமா, நியாயம் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு, அநியாயம் செய் கிறீர்களே—என்று கேட்டார்கள். பலமுனை வரியிலே 3 இடத் திலே வரி வருகின்ற வாய்ப்பு இருக்கிறது. ஏய்ப்பு குறைவாக இருக்கிறது. அப்படிப் பார்த்தால் 3 இன்டு 5—15 விழுக்காடு வருகிறது.

எனவேதான் ஒரு முனை வரியிலே ஏய்ப்பு அதிகமாக இருக்கின்றது. அதையும் இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது, வியாபாரிகளுடைய நலனைக் கருதி. அதே நேரத்தில், 15 ஐ 8-ஆக ஆக்கி, பாதியாக்கி, இந்த அரசு வரி விதித்து இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், 3 இடத்திலே ஒரே பொருளுக்கு வரியின் காரணமாக விலையை கொடுத்து விட்டு 15 சதவிகிதமாக கொடுத்துவிட்டுள்ளதையும், 8-ஆகக் குறைத்திருக்கிறது என்று சொன்னார். உண்மையாக அவரிட மிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புவது ஒன்றே ஒன்றுதான். அப்படியானால், இந்தப் பொருளை உபயோகிப்பவர்களுக்கு இந்த வரி 15-இலிருந்து 8 ஆக குறைந்ததனால் 7 சதமானத் தினுடைய நன்மை அந்த மக்களுக்குக் கிடைக்குமா ? அப்படிக் கிடைக்கவில்லை என்பது, நான் இங்கே பேசும்போது நேற்றோ, முந்தையதினமோ பேசும்போது குறிப்பிட்டேன். 10 பொருள் களை சொன்னதிலே கொத்தமல்லி, சீரகம் போன்றதினுடைய விலைகளை நான் சொன்னேன். வியாபாரிகள் சொல்கிற வாதம், உங்களுக்கு முன்னால் நான் சொன்னால், நீங்களும் அதற்கு நடவடிக்கை எடுக்க உதவும் என்று நான் நினைக்கிறேன்.

வரி சம்பந்தப்பட்ட உயர்வு, மாற்றம், தாழ்வு அது வரி சம்பந்தப்பட்டது. வசூல் சம்பந்தப்பட்ட சில முறைகள், அது குறைத்தாலும், உயர்த்தினாலும், அதைப் பற்றி பொருளை பாதிக்காது. பொருளினுடைய விலை ஏறுவது ஏறிக் கொண்டு தான் இருக்கும் என்று தைரியமாக வியாபாரிகள் சொல்கிறார்கள். நீங்கள் அந்த விலை மக்களுக்கு குறையும் என்று சொல்வது உண்மையா, குறைந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய தலைவர் அவர்களே, பல முனையிலிருந்து ஒரு முனையாகக் கொண்டு வருவது வரி கட்டுகின்ற முறையிலே இருக்கின்ற இன்னல்களை, இடர்ப்பாடுகளை, சிக்கல்களை போக்குவதற்காகவும், அதற்குமேலாக, நான் முன்பே சொன்னேன், வரி ஏய்ப்பு அதிகமாக இருக்கும் என்று இந்த அரசு தெரிந்தே இதைக் கொண்டு வருகிறது என்று சொன்னால், அதனால் வாங்கி உண்கின்ற மக்களுக்கு நன்மை கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் கொண்டு வருகிறது. விலை குறையவேண்டும். குறையா விட்டாலும்கூட, இருக்கின்ற விலை அப்படியே இருக்கவேண்டும். அதற்குமேல் உயரக்கூடாது. அதை இந்த அரசு பார்த்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், இங்கே இருக்கின்ற மன்றத்தினுடைய உறுப்பினர்கள் எல்லாம் அப்போதைக்கப் போது இந்த அரசுக்கு உதவி புரியவேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ளுகிறேன்.

அந்த வகையில் நீங்கள் உதவி புரிந்தால், அரசு உரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்கிறேன். அடுத்து ஒன்றைச் சொன்னார்கள். இங்கே இப்போது மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே கூடுதல் விற்பனை வரியினை இப்போது முன்பு இருந்த முறையை மாற்றி அமைத்து ஒரு புதிய முறையினை அறிவித்திருக்கிறார்கள்.

முன்பு கூடுதல் விற்பனை வரியிலே 4 கட்டமாகப் பிரிக்கப் பட்டு 10 இலட்சம் ரூபாய்க்குமேலே வருகின்ற விற்பனைக்கு உள்பட்ட விற்பனைத் தொகை உள்ளவர்களுக்கு 1.25 விழுக்காடு வரி விதிக்கப்பட்டது என்று அந்த முறை இருந்தது. ஆனால் இப்போது 10 இலட்சம் ரூபாய்வரை வரி விதிப்பதற் குட்படக் கூடிய விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. முன்பு 3 இலட்சம்; இப்பொழுது 10 இலட்சம். இப்படிப்பட்ட முறை இந்திய உப கண்டத்தில், பிற மாநிலங்களில் உண்டா, இருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்று நான் கூறுவேன். தமிழ்நாட்டில்தான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்களின் அரசுதான் முதன்முறையாக இந்தியத் திருநாட்டிலே இப்படிப்பட்ட சலுகையினை அறிவித் திருக்கிறது என்பதனை இந்த நேரத்தில் நான் குறிப்பிடுகிறேன். இதன் மூலமாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வியாபார நிறுவனங்கள், வியாபாரப் பெருங்குடிமக்கள் பயன் அடை வார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிடுகிறேன்.

அந்த வகையிலேதான் இந்தக் கூடுதல் விற்பனை வரி முறை இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன். அந்த வகையிலே இந்த



அரசு விற்பனை வரியைப் பொறுத்தவரையில் வியாபாரப் பெருங்குடி மக்கள் மகிழ்ச்சியோடும், உற்சாகத்தோடும், விரும்பி வியாபாரம் செய்கின்ற வகையிலே, காலச் சூழ்நிலை களுக்கு ஏற்ப, அனுபவத்தின் காரணமாக ஏற்பட்ட இடர்ப் பாடுகளையும், இன்னல்களையும், சிக்கல்களையும் கண்டு அறிந்து, இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்து, வியாபாரப் பெருங்குடி மக்களை, வியாபாரிகளை உற்சாகப்படுத்துகின்ற முறையிலே இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதையும், அந்த வகையிலே இப்பொழுது இப்படி எட்டு சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்திருக்கிறது என்று கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்டத் திருத்த முன்வடிவுகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** தலைவரவர்களே, ஒரு விளக்கம் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரமாகிவிட்டது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** நேரத்தைச் சொல்லி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**—சில நேரத்தில் சில உறுப்பினர்கள் அப்படிச் சொல்வது இல்லையா? எனவே, மற்ற உறுப்பினர்களோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி : ''1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

## அரசினர் சட்ட முன் வடிவுகள்

(திரு. தா. வீராசாமி)

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**(உ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.**

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

** 1986ஆம் ஆண்டு மே 14ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



## அரசினர் சட்ட முன் வடிவுகள்

(பிற்பகல் 1-00)

**(ஊ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.**

**மாண்புமிகு திரு. தா. வீராராசமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

** 1986ஆம் ஆண்டு மே 14ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(எ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1986) நிறைவேற்றப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஏ) பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை

** 1986ஆம் ஆண்டு மே 14ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



சட்ட முன்வடிவு எண் 57/1986) ** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 57/1986) நிறைவேற்றப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஐ) பொது விற்பனை வரி (ஏழாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1986) ** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

** 1986ஆம் ஆண்டு மே 14ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**(ஓ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.**

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

---

** 1986ஆம் ஆண்டு மே 14ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**(ஔ) உணவகங்கள் மற்றும் தங்கு விடுதிகளின் ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.**

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் மற்றும் தங்கு விடுதிகளின் ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

---

** 1986ஆம் ஆண்டு மே 14ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

அரசினர் சட்ட முன் வடிவுகள்

(திரு. தா. வீராசாமி)

''1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் மற்றும் தங்கு விடுதிகளில் ஆடம்பரப் பொருட்கள் மீதானவரி (திருத்த) சட்ட முன் வடிவு சட்ட மன்றப் பேரவுவ கூட்ட முன்வடிவு எண் 60/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 6. அரசினர் தனித் தீர்மானங்கள்.

(அ) மற்றும் (ஆ) நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1986 வரைவு அறிக்கைள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசினர் தனித் தீர்மானங்கள் இரண்டும் ஒன்றாக எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ழ்க்கண்ட அரசினர் தனித் தீர்மானங்களை மொழிகிறேன் :

(1) தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின்கீழ் வெளியிடப்பட விருக்கும் பின்வரும் வரைவு அறிக்கை மேற்சொன்ன பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளபடி ஏற்பளிக்கப்பட வேண்டும்.

### வரைவுத் தீர்மானம்

தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின்கீழ் வெளியிடப்படவிருக்கும் பின் வரும் வரைவு அறிவிக்கை, மேற்சொன்ன பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளபடி ஏற்பளிக்கப்பட வேண்டும்.

### அறிவிக்கை

தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் 1981 ஆம் ஆண்டு சூலை 8 ஆம நாள் வெளியிடப்பட்ட அரசிதழின் பக்கம் 435, பகுதி II, பரிவு-2இல் வெளியிடப்பட்ட 1981 ஆம் ஆண்டு



அரசினர் தனித் தீர்மானங்கள்

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

சூன் 25 ஆம் நாளிட்ட வருவாய் அறிவிக்கை எண் II (2) வரு/2787/81 இல் சீழ்க்கண்ட திருத்தம் கொண்டு வரப் பட்டுள்ளது :—

### திருத்தம்.

மேற்கண்ட அறிவிக்கையில் உள்ள அட்டவணைக்குப் பதிலாக கீழ்க்கண்ட அட்டவணையைச் சேர்த்துக் கொள்ளலாம். அதாவது :—

### அட்டவணை.

| நகர்ப்புறக் கூட்டுப் பகுதியின் பெயர். | பகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| சேலம் நகர்ப்புறக் கூட்டுப் பகுதி. | 1. சூரமங்கலம் நகராட்சி. |
| | 2. சேலம் நகராட்சி எல்லையில் இருந்து 16 கி.மீ-க்கு உட்பட்ட பகுதி— |
| | ஜாரி கொண்டாலம்பட்டி ஊராட்சி. |
| | அன்னதானப்பட்டி ஊராட்சி |
| | அம்மாபாளையம் ஊராட்சி. |
| | அம்மாபேட்டை வடக்கு ஊராட்சி. |
| | அம்மாபேட்டை தெற்கு ஊராட்சி. |
| | புதூர் ஊராட்சி. |
| | கொண்டாலம்பட்டி ஊராட்சி. |
| | தாதம்பட்டி ஊராட்சி. |
| | அனகாபரம் ஊராட்சி. |
| | ஃபேர்லாண்ட்ஸ் சுவர்ணபுரி ஊராட்சிகள். |
| | நெய்க்காரப்பட்டி ஊராட்சி |

அரசினர் தனித் தீர்மானங்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

| நகர்ப்புறக் கூட்டுப் பகுதியின் பெயர். | பகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| சேலம் நகர்ப்புறக் கூட்டுப் பகுதி—தொடர்ச்சி. | சௌதாபுரம் ஊராட்சி.<br>மெய்யனூர் ஊராட்சி.<br>குமாரசுவாமிபட்டி ஊராட்சி.<br>சுந்தம்பட்டி ஊராட்சி.<br>ரெட்டிப்பட்டி ஊராட்சி.<br>நரசோஜிப்பட்டி ஊராட்சி.<br>பள்ளப்பட்டி ஊராட்சி.<br>சேலம் வட்டத்திலுள்ள வருவாய் கிராமங்கள்—<br>29. ரெட்டிப்பட்டி.<br>54. அனகாபுரம் புதூர். |
| கோயம்புத்தூர் நகர்ப்புறக் கூட்டுப் பகுதி. | 1. மதுக்கரை நகரியம்.<br>கோயம்புத்தூர் நகராட்சி எல்லையிலிருந்து 16 கி.மீ-க்கு உட்பட்ட பகுதி.<br>குறிச்சி ஊராட்சி.<br>குனியமுத்தூர் ஊராட்சி.<br>வெள்ளலூர் ஊராட்சி.<br>கவுண்டம்பாளையம் ஊராட்சி.<br>பேரூர் செட்டிபாளையம் ஊராட்சி.<br>பேரூர் ஊராட்சி.<br>சின்னவேடம்பட்டி ஊராட்சி.<br>விளாங்குறிச்சி பேரூராட்சி.<br>கோயம்புத்தூர் வட்டத்திலுள்ள வருவாய் கிராமங்கள்—<br>14. சரவணம்பட்டி.<br>19. வெள்ளைக்கிணர்.<br>20. துடியலூர். |



அரசினர் தனித் தீர்மானங்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

| நகர்ப்புறக் கூட்டுப் பகுதியின் பெயர் | பகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| திருச்சிராப்பள்ளி நகர்ப்புறக் கூட்டுப் பகுதி. | 1. ஸ்ரீரங்கம் நகராட்சி.<br>2. பொன்மலை நகராட்சி.<br>3. திருச்சிராப்பள்ளி நகராட்சி எல்லையிலிருந்து 16 கி.மீ-க்கு உட்பட்ட பகுதி—<br>அரியமங்கலம் ஊராட்சி.<br>ஆலத்தூர் ஊராட்சி.<br>அபிஷேகபுரம் ஊராட்சி.<br>பிராட்டியூர் ஊராட்சி.<br>உள்கடை அரியமங்கலம் ஊராட்சி.<br>கோல்டன் ராக் ரயில்வே. குடியிருப்பு.<br>(தெற்கு ரெயில்வே நிர்வாகம்). |
| மதுரை நகர்ப்புறக் கூட்டுப் பகுதி. | 1. ஹார்விபட்டி நகரியம்.<br>2. மதுரை நகராட்சி எல்லையில் இருந்து 16 கி.மீ-க்கு உட்பட்ட பகுதி—<br>அவனியாபுரம் ஊராட்சி.<br>திருப்பரங்குன்றம் ஊராட்சி.<br>பரவை ஊராட்சி.<br>விளாங்குடி ஊராட்சி.<br>சமயநல்லூர் ஊராட்சி.<br>தத்தனேரி ஊராட்சி.<br>தியாகராஜர் குடியிருப்பு.<br>மதுரை (தெற்கு) வட்டத்திலுள்ள வருவாய்க் கிராமங்கள்-<br>15/2 புதுக்குளம் 2ஆம் பகுதி. |

| நகர்ப்புறக் கூட்டுப் பகுதியின் பெயர். | பகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| திருநெல்வேலி நகர்ப்புறக் கூட்டுப் பகுதி. | 1. திருநெல்வேலி நகராட்சி. |
| | 2. பாளையங்கோட்டை நகராட்சி. |
| | 3. மேலப்பாளையம் நகராட்சி. |
| | 4. சங்கர் நகர் நகரியம். |
| | 5. திருநெல்வேலி நகராட்சி எல்லையிலிருந்து 16 கி.மீ-க்கு உட்பட்ட பகுதி— |
| | தச்சநல்லூர் ஊராட்சி. |
| | நாரணம்மாள்புரம் ஊராட்சி. |
| | தாழையூத்து ஊராட்சி. |
| | பாளையங்கோட்டை (நகராட்சியல்லாதது). |
| | அழகனேரி ஊராட்சி. |
| | மேல்நத்தம் ஊராட்சி. |
| | பேட்டை ஊராட்சி. |
| | திருநெல்வேலி வட்டத்திலுள்ள வருவாய் கிராமங்கள்— |
| | 134. இனாம் கரையிருப்பு. |

**விளக்கக் குறிப்பு.**

1981-ஆம் ஆண்டு சூலை 8ஆம் நாள் வெளியிடப்பட்ட அரசிதழின் பக்கம் 435 பகுதி II பிரிவு 2இல் வெளியிடப்பட்ட வருவாய்த் துறை அறிவிக்கை எண். II (2)/வரு/2787/81-இல் "பகுதியின் பெயர்கள்" என்ற தலைப்பின்கீழ் நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் கிராமப் பகுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த அறிவிக்கையின்படி ஒவ்வொரு ஊராட்சியும் ஒரு தனிப்பட்ட நகர்ப்புற பகுதி என்றும், நகர்ப்புற நில உடைமையாளர் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் நிலம் வைத்திருந்தால்







அவைகளுக்கு ஒவ்வொரு ஊராட்சியிலும் இரண்டு கிரவுண்டு வீதம் வரி விதிவிலக்கு கோருவார். இதைத் தவிர்ப்பதற்காக, தமிழ்நாடு அரசிதழில் ஏற்கெனவே அறிவிக்கை பிரசுரிக்கப்பட்டதை சரியான முறையில் மாற்றியமைக்கலாம் என்று கருதப்படுகிறது.

2. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின்கீழ் பிறப்பிக்கக் கருதப்பட்டுள்ள எந்தவொரு அறிவிக்கையின் வரைவும் மேற்படிச் சட்டத்தின் 1-ம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்கீழ் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட வேண்டும். அந்த அறிவிக்கை மாற்றம் அல்லது சேர்க்கையின்றி அல்லது மாற்றத்துடன் அல்லது சேர்க்கையுடன் சட்டமன்றப் பேரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றபடி அவ்வறிவிக்கை பிறப்பிக்கப்படக் கூடாது. அவ்வாறு ஒப்புதலளிக்கப்படுவதன் பேரில், அறிவிக்கை எவ்வடிவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதோ அவ்வடிவில் பிறப்பிக்கப்பட வேண்டும். அவ்விதம் பிறப்பிக்கப்பட்டதன் பேரில், அத்தகைய அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட வேண்டும். அதன் பின்னர், அவ்வறிவிக்கை எல்லா வகையிலும் செல்திறன் உடையதாய் இருக்கும்.

3. எனவே இது குறித்து அரசு தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரக் கருதியுள்ளது.

(2) தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின்கீழ் வெளியிடப்படவிருக்கும் பின்வரும் வரைவு அறிக்கை மேற்சொன்ன பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளபடி ஏற்பளிக்கப்பட வேண்டும்.

**வரைவுத் தீர்மானம்.**

தமிழ்நாடு 1966ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின்கீழ் வெளியிடப்படவிருக்கும் பின்வரும் வரைவு அறிவிக்கை மேற்சொன்ன பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளபடி, ஏற்பளிக்கப்பட வேண்டும்.

அரசினர் தனித் தீர்மானங்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அறிவிக்கை.

தமிழ்நாடு 1966ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு அரசிதழில் இந்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளன்று, மேற்சொன்ன சட்டம், சென்னை மாநகராட்சி எல்லைகளுக்குள் சில ஊராட்சிகளைச் சேர்த்திருப்பதால், சென்னை மாநகர எல்லையோரப் பகுதியில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளதும், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான பகுதிகளில் செயலுக்கு வரும் என்று இதனால் கட்டளையிடுகிறார்.

அட்டவணை.

பகுதிகள்.

செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டத்திலுள்ள வருவாய்க் கிராமங்களில் அடங்கியுள்ள பகுதி.

43. மோரை
44. புலிக்குத்தி
45. காரம்பாக்கம்
47. ஆரம்பாக்கம்
55. முக்தா புதுப்பட்டு
56. மிட்னமல்லி
167. பெருங்களத்தூர்
179. வெங்கப்பாக்கம்

செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரி வட்டத்திலுள்ள வருவாய்க் கிராமங்களில் அடங்கியுள்ள பகுதி.

23. பழைய எருமைவெட்டிப் பாளையம்
24. புது எருமை வெட்டிப் பாளையம்
26. காரனோடை
30. செக்கஞ்சேரி
31. நெற்குன்றம்
34. நாயர்
57. குதிரைப்பள்ளம்





செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டத்திலுள்ள வருவாய்க் கிராமங்களில் அடங்கியுள்ள பகுதி.

90. சிங்கிலிக்குப்பம்
91. ஆயல் சேரி
92. புதுக்குப்பம்

செங்கல்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்திலுள்ள வருவாய்க் கிராமங்களில் அடங்கியுள்ள பகுதி.

16. திருமணம்
17. அமுதூர்மேடு
18. கருணாகரச் சேரி
19. தண்டரை
20. நெமிலிச் சேரி
38. திருக்கோயில் பத்து
39. ஆதனூர்
40. கீழ்மணம்பேடு
43. திருமழிசை
76. செம்பரம்பாக்கம்

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்திலுள்ள வருவாய்க் கிராமங்களில் அடங்கியுள்ள பகுதி.

9. நெடுங்குன்றம்
22. ரத்ன மங்களம்
23. வேங்கட மங்களம்
30. பொன்மார்
32. போலச்சேரி
33. தாழம்பூர்
35. நாவலூர்
36. ஏகாட்டூர்
37. கானத்தூர் ரெட்டிகுப்பம்
38. முட்டுக்காடு

அரசினர் தனித் தீர்மானங்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

விளக்கக் குறிப்பு.

சென்னை மாநகராட்சி எல்லைகளுக்குள் சில ஊராட்சிகளைச் சேர்த்ததன் விளைவாக சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளில் புதிதாகச் சேர்க்கப்பட்ட கிராமங்களில் தமிழ்நாடு 19[illegible]ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம் செயலில் இல்லை.

2. சென்னை மாநகர எல்லைக்குள் 19 வருவாய்க் கிராமங்கள் அடங்கிய 12 ஊராட்சிகளைச் சேர்ப்பதற்கு, ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் 29—5—1978ஆம் நாளிட்ட 790ஆம் எண் அரசாணையில் அரசு ஆணை பிறப்பித்தது. இதன் விளைவாக சைதாப்பேட்டை வட்டத்தைச் சேர்ந்த 8 கிராமங்கள், பொன்னேரி வட்டத்தைச் சேர்ந்த 7 கிராமங்கள், திருவள்ளூர் வட்டத்தைச் சேர்ந்த 3 கிராமங்கள், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தைச் சேர்ந்த 10 கிராமங்கள், செங்கல்பட்டு வட்டத்தைச் சேர்ந்த 10 கிராமங்கள் ஆகிய 38 கிராமங்கள் சென்னை மாநகரின் 16 கி.மீ. எல்லையோரப் பகுதிக்குள் அடங்கும்.

3. தமிழ்நாடு 1966ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்படி, மேற்சொன்ன சட்டத்தின் 1ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின்கீழ் பிறப்பிக்கக் கருதியுள்ள யாதொரு வரைவு அறிவிக்கை சட்டப் பேரவையில் வைக்கப்பட வேண்டும். அந்த அறிவிக்கைக்கு மாற்றம் அல்லது சேர்க்கை இன்றியோ அல்லது மாற்றம் அல்லது சேர்க்கையுடனோ சட்டப் பேரவை ஒப்புதல் அளித்தாலன்றி மற்றபடி அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்படக் கூடாது. அவ்வாறு ஒப்புதல் அளிக்கப்படுவதன் பேரில், ஒப்புக் கொள்ளப்பட்ட வடிவிலேயே அத்தகைய அறிவிக்கை பிறப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட வேண்டும். அதன் பின்னர் அவ்வறிக்கை முழுமையாகச் செயலில் இருக்கும்.

4. எனவே, அவ்வாறு செயல்படுத்துவதற்காகத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அரசு கருதுகிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் இப்பொழுது இரு தீர்மானங்களை மொழிந்தார்கள். அவை வழிமொழியப்பட வேண்டுமா என்பதுபற்றி விதியிலே என்ன இருக்கிறது என்பது எனக்கு தெரியாவிட்டாலும் கூட ஒரு தீர்மானம் முன் மொழியப்பட்டு நாம் இந்த அவையிலே ஏற்றுக் கொள்வதற்கு முன்னாலே அது வழிமொழியப்பட வேண்டாமா என்பது பற்றிய விளக்கத்தை எனக்கு தர வேண்டும்.



அரசினர் தனித் தீர்மானங்கள்

(பிற்பகல் 1-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் ஒருவரால் அரசின் சார்பாக ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டுமென்றால் விதிமுறைகளில் வழிமொழியப் பெற வேண்டிய அவசியம் இல்லை என்று விதி இருக்கிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த விதிகளிலே இரண்டு பகுதிகளைச் சேர்ப்பதற்காக இங்கே அரசின் மூலமாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இந்த விதிகளைப் படிக்கும் போது அதிலே சொற்குற்றமும், பொருள் குற்றமும் இருப்பதாக அதாவது நான் வழக்கறிஞர் என்பதால் என்னுடைய கண்ணிலே பட்டது.

பழைய கால இலக்கியங்களைப் படிக்கிறபோது அகப்பொருள் கண்ட இறையனார் அவர்கள் ஒரு பாடலை எழுதி நெடுஞ்செழியனுடைய அவையிலே கொண்டு வந்தபோது நெற்றிக் கண் காட்டினாலும், குற்றம் குற்றமே என்று சொன்ன நக்கீரன் பரம்பரையிலே வராவிட்டாலும்கூட இந்த அவையிலே பாண்டியனும், நெடுஞ்செழியனும் இருக்கிற காரணத்தாலே குற்றங்களைச் சுட்டிக் காட்டினால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும், ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையினால் அதைச் சுட்டிக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். பொருள் குற்றம்பற்றி வருவதற்கு முன்னாலே சொற் குற்றம் சிறியதாக இருப்பதன் காரணத்தாலே அதைச் சொன்னால் உடனே ஏற்றுக் கொள்ளப்படலாம் என்ற காரணத்தாலே நான் சொல்கிறேன்.

**திரு. இரா. முத்தையா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்களை அழைக்கிறபோது அவருடைய திருத்தத்தை முன்மொழிவதற்காகத்தான் அழைத்தீர்கள். ஆனால் அவர் அதை முன்மொழியப் போகிறாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் என் திருத்தத்தை வலியுறுத்தித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமென்ட்மென்ட் கொடுத்திருக்கிறீர்கள். அதைத்தான் முதலிலே நீங்கள் மொழிய வேண்டும்.

THIEU T.R. VENKATARAMANAN : I am speaking on the Resolution. I am entitled to explain what the mistakes are.

Mr. SPEAKER : The hon. Member cannot have a full-discussion.

Thiru. T.R. VENKATARAMANAN : I am entitled to say what the mistakes the Government have committed in the notification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொடுக்கப்பட்டிருக்கிற அமென்ட்மென்ட் முதலிலே முன்மொழியப்பெற வேண்டும். அதன் பின்னர் அது வழிமொழியப் பெற வேண்டும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே என்ன தப்பு இருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமென்ட்மென்டை செகண்ட் பண்ணாமல் பேச முடியாது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** பேரவைத் தலைவர் அவர்களே, நக்கீரர் இந்த குற்றத்தைச் செய்யலாமா?

Thiru T.R. VENKATARAMANAN : Sir, I move

'That in the Table, omit the word "Agglomeration" where-ever it occurs under column (1),

2. In the Table, against "Coimbatore Agglomeration" under column (2) for the words, "Coimbatore Municipal Town" substitute the words, "Coimbatore Corporation".

3. In the Table, item 3, under column (1) for the word, 'Maurai substitute the word "Madurai"

Thiru E.V.K.S. ILANGOVEN : Sir. I second the amendment.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ரூலை ஃபாலோ பண்ணவேண்டும். சொற்குற்றம் இருக்கிறது. அதாவது மதுரை அக்ளமரேஷன் என்பதில் இருக்கக்கூடிய எழுத்துப் பிழையை நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.... (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, மன்னன் பாண்டியன் நெடுஞ்செழியன் செய்த குற்றத்தைத்தான் நக்கீரன் சுட்டிக் காட்டிக் கொண்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஒரு குற்றமும் செய்யவில்லை (சிரிப்பு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனோ, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனோ, நம்பி நெடுஞ்செழியனோ வாழ்ந்த காலத்தில் நக்கீரர் வாழவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. ரரமநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இது பாண்டியன் அவையா அல்லது சட்டமன்றமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாண்டியன் சபாநாயகராக இருக்கக் கூடிய அவை. முன்னவராக நாவலர் நெடுஞ்செழியன் இருக்கக் கூடிய அவை இது (சிரிப்பு).



**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். பாண்டியனும், நெடுஞ்செழியனும் சேர்ந்திருக்கக் கூடிய அவை என்று நான் முதலிலேயே அதறகாகத் தான் குறிப்பிட்டேன். எழுத்துப் பிழையான சொற் குற்றத்தைத் திருத்திக் கொண்டால் அதற்குப் பிறகு பொருள் குற்றம் பற்றிப் பேசுகிறேன். ஒன்றல்ல, மூன்றுக்கு மேல் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பழைய விதிகளின் பேரிலே இப்போது புதிதாக நீங்கள் அக்ளமரேஷன என்ற வார்த்தையைச் சேர்க்க வேண்டுமென்று ரெசலூஷனிலே முதலிலே சொல்கிறீர்கள். இன்னும் சரியாகச் சொல்லவேண்டுமென்றால் சேலம் அக்ளமரேஷன், கோயம்புத்தூர் அக்ளமரேஷன், திருச்சிராப்பள்ளி அக்ளமரேஷன் மதுரை அக்ளமரேஷன் என்றெல்லாம் நீங்கள் சேர்க்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள். ஆனால் மூலச் சட்டத்தில் அக்ளமரேஷன் என்ற வார்த்தையே கிடையாது.

The expression not used in the Main Act, you are trying to inroduce in the Table.

இன்னும் சொல்லப் போனால், அர்பன் லேண்ட் டாக்ஸ் ஆக்ட் என்பது வேறு, அர்பன் லேண்ட் சீலிங்ஆக்ட்என்பது வேறு. அர்பன் லேண்ட் சீலிங் ஆக்டிலேதான் அக்கிளாமரேஷன் வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் நீங்கள் அர்பன் லேண்ட் டாக்ஸ் ஆக்டிலேயே அக்கிளாமரேஷன் என்று மூலச் சட்டத்திலே சொல்லப் படாத ஒரு விஷயத்தை, இந்த திருத்தத்திலே கொண்டு வருவதை நான் முதலிலே கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

அடுத்தபடியாக அர்பன் லேண்ட் டாக்ஸ் ஆக்ட் என்று சொல்லுகிறபோது, அந்தச் சட்டம் எந்தப் பகுதிகளுக்கு செல்லும் என விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், பழைய சட்டத்திலே அவைகள், சிறுநாச்சேரி, தச்சாநல்லூர், நாராயண்புரம், தாலையுத்தூ போன்ற அத்தகைய பகுதிகள் எல்லாம் முனிசிபாலிடியாக இருந்தது என்றுசொல்லுகிறார்கள். இப்போது அவற்றையெல்லாம் பஞ்சாயத்தாக திருத்தியிருக்கிறார்கள்.

1981ஆம் ஆண்டிலே 25 ஜூன் மாதம் 1981ஆம் தேதி அன்று இடப்பட்ட அரசு ஆணை எண் 1465லே செங்கற்பட்டு மாவட்டத்திலே இருக்கக்கூடிய தச்சாநல்லூர் முனிசிபாலிடி, நாராணம்மாள்புரம் முனிசிபாலிடி, சிறுநாச்சேரி முனிசிபாலிட்டி என்று சொல்லி 3 முனிசிபாலிட்டிகளுக்கு, அந்த சட்டத்தை விஸ்தரிப்பதற்காகச் சொல்லி, அவற்றை நீங்கள் பஞ்சாயத்து என்று திருத்தியிருக்கிறீர்கள். என்னவென்று சொன்னால் உள்ளபடியே இன்றைய தேதி வரையில் அவைகள் பஞ்சாயத்து தான். முனிசிபாலிட்டிகள் அல்ல. அப்படி என்றால் 1981வது ஆண்டு முதல் 1986வது ஆண்டுவரை, இப்போது நீங்கள் திருத்தம் கொண்டு வருகிற இன்றுவரை அந்தப் பகுதிகளில் வாங்கப்பட்ட அல்லது வசூலிக்கப்பட்ட வரியானது சட்டவிரோதமாக வசூலிக்கப்பட்டிருக்கிறது.

அப்படி என்று சொன்னால் நீங்கள் டேக்ஸ் வேலிடேஷன் ஆக்ட் போடாமல் எப்படி இந்தச் சட்டத்தை திருத்த முடியும். அப்படி என்று சொன்னால், இன்றைக்கு நீங்கள் அந்தச் சட்டத்தை திருத்துகிறீர்கள் என்று எடுத்துக் கொண்டால், இதுவரையில் அந்தச் கட்டணத்தை வசூலித்தது தவறு என்று ஆகிறது. எனவே அந்த வரியை நீங்கள் திருப்பிச் செலுத்துவீர்களா என்பதை அமைச்சர் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இன்னொரு கருத்தை நீங்கள் பார்ப்பீர்களேயானால், இந்தச் சட்டம் எந்தெந்த இடங்களுக்கு எல்லாம் பொருந்தும் என்று பார்ப்பீர்களேயானால்,

Chapte I Prel minary Section 1 (b) : The Government may by notification direct that this Act shall come in force on such date as may be prescribed in the Notification in any other Municipal Town, or any other Township or areas specified in the notification within 16 k.ms. of the City of Madras o such Town, Municipal Town or Township.'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு சொல்லப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தை மூலச் சட்டத்தோடு வைத்து பார்ப்பீர்களேயானால் சென்னை மாநகரத்திற்கும், அரசால் அறிவிக்கப்பட்ட முனிசிபாலிட்டிகளுக்கும், அரசால் அறிவிக்கப்பட்ட டவுன் ஷிப்புகளுக்கும், அந்த 3 இடங்களில் உள்ள இடங்களிலிருந்து 16 கிலோ மீட்டர் வரையில் மட்டும் தான் இந்தச் சட்டம் செல்லும். அப்படி என்று வைத்துக் கொண்டால், இந்த மூலச் சட்டத்தைப் போடுகிற போது சென்னை மாநகரம் கார்ப்போரேஷனாக இருந்த காரணத்தாலே சென்னை கார்ப்போரேஷன் என்று அந்தச் சட்டத்திலேயே சரியாக சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் நீங்கள் இன்றைக்குக் கொண்டு வருகிற திருத்தத்திலே எடுத்துக்கொண்டு பார்ப்பீர்களேயானால் ஒரு இடத்திலே கோயம்புத்தூர் முனிசிபாலிட்டி என்றும், ஒரு இடத்திலே மதுரை கார்ப்பொரேஷன் என்றும் சொல்லியிருக்கிறீர்கள். அப்படிச் சொல்லி, இன்றைய தேதியிலிருந்து மதுரை கார்ப்பொரேஷன் என்று ஒரு இடத்திலே எடுத்துக் கொள்கிற போது, கோயம்புத்தூரை எப்படி நீங்கள் முனிசிபாலிட்டி என்று சொல்லலாம், என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

கோயம்புத்தூர் அக்களாமரேஷன் என்ற இடத்திலே மதுக்கரை டவுன்ஷிப், "Areas within 16 K.ms, Outer limit of Coimbatore Town comprising the following."



என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அதையே மதுரைக்கு சொல்கிறபோது, "Areas within 16 K.ms. Outer limit of Madurai Corporation"

என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு மதுரையும் கோயம்புத்தூரும் கார்ப்பொரேஷனாக ஆகிவிட்ட நிலைமையிலே, இந்த அர்பன் லேண்ட் டாக்ஸ் ஆக்ட் என்பதே மதுரை கார்ப்பொரேஷனுக்கும், கோயம்புத்தூர் கார்ப்பொரேஷனுக்கும் செல்லவே செல்லாது. ஏனென்று சொன்னால் ஏற்கெனவே நம்முடைய உயர் நீதிமன்றம் இது குறித்து பல தீர்ப்புகளை வழங்கியிருக்கிறது. ஒரு முனிசிபாலிட்டியானது கார்ப்போரேஷனாக ஆகிறபோது Extension of Law Act என்று எந்தச் சட்டம் விதிக்கப்பட்ட போதிலும், இதுபோன்ற தனிச் சட்டங்கள் எல்லாம் அந்தக் கார்ப்பொரேஷன்களுக்கு பொருந்தாது என்று பல தீர்ப்புகளிலே வழங்கப்பட்டிருக்கிறது. தெளிவாக சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே இன்றைய நிலையில் இந்தச் சட்டம் விஸ்தரிக்கப்படுகிற முனிசிபாலிட்டிகளுக்கும், விஸ்தரிக்கப்படுகிற டவுன்ஷிப்புகளுக்கும் சென்னை மாநகரத்திற்கு மட்டும் தான் பொருந்துமே தவிர, கோயம்புத்தூர் முனிசிபாலிட்டிக்கோ, அல்லது கோயம்புத்தூர் கார்ப்பொரேஷன் என்று சொன்னாலும் சரி—கோயம்புத்தூர் கார்ப்போரேஷனாக ஆகிவிட்ட நிலையில், கோயம்புத்தூர் கார்ப்பொரேஷன் என்றே சொல்லுவோம்—அந்த கோயம்புத்தூர் கார்ப்பொரேஷனுக்கும், அதே போன்று நம்முடைய மதுரை கார்ப்பொரேஷனுக்கும் இந்தச் சட்டம்செல்லாது அதற்கு நீங்கள் தனியாக அமெண்ட்மெண்ட் கொண்டு வராமல் மூலச் சட்டத்திலே இல்லாத ஒரு பொருளை நீங்கள் ஷெட்யூல் மூலமாக கொண்டு வர முடியாது என்று ஆணித்தரமாகச் சொல்கிறேன்.

(பிற்பகல் 1-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு முடித்து விடுங்கள். கோர்ட்டில் வாதாடுவதைப் போல இங்கே கருத்துக்களைச் சொல்லமுடியாது. You can't argue as in a court.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: சட்டப் புத்தகத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். சட்டத்திலே இல்லையென்று சொல்கிறது. I have to explain the position. I am speaking on a notion. There are glaring mistakes.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: It is an amendment not a Motion. இதையே நான் பார்த்தேன். நகர் என்பதற்கு முன்னால் ஒரு 'கேப்' இருக்கிறது. 'மா' என்பது விடுபட்டிருக்கிறது. வேறொன்றும் இல்லை. அதைச் சேர்த்தால் 'மாநகர' என்று ஆகிவிடும். இதிலே வேறு விவகாரம் கிடையாது. (குறுக்கீடு) It is not going to affect Materially.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** சென்னை நகரத்திற்குப் பொருந்தக் கூடிய ஒரு சட்டத்தை திருத்தி நீங்கள் கோயம்புத்தூர் கார்ப்பொரேஷனுக்கும், மதுரை கார்ப்பொரேஷனுக்கும் 'எக்ஸ்டென்ஷன் ஆப் கிளாஸ்' கொண்டு வராமல், ஷெட்யூல் மட்டும் திருத்தி, இந்தச் சட்டத்தை விஸ்தரிக்க முடியாது. எனக்குத் தெரிந்த வரையில் இந்த நிலைதான். அதற்கு சாதகமாக உயர்நீதிமன்றத்தின் பல தீர்ப்புகள் இருக்கின்றன. நீங்கள் அவகாசம் தருவீர்களானால், என்னென்ன சட்டங்கள் அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்று என்னால் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதெல்லாம் இப்போது வேண்டாம். நீங்கள் விரிவாகப் பேசினால் அதற்கான விவரங்கள் அமைச்சர் சொல்ல முடியாது. முன்னவர் அவர்களை காலையிலிருந்து பார்க்கிறீர்கள். இது போன்ற சட்டம் இருக்கிறது. அதில் இப்படி பேசப் போகிறேன் என்ற விவரத்தைச் சொல்லியிருக்க வேண்டும்.

THIRU. T.R. VENKATARAMANAN : There are some legal lacunae in it and there fore, I have to speak.

Mr. SPEAKER :–Let it go on record and it will not be answered Yon have to give him advance information, if you are so interested.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எந்த நோக்கத்தின் அடிப்படையில், எந்த அளவிற்கு திருத்தம் கொண்டு வந்திருக்கிறோமோ அந்த அளவிற்கு தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். இது செல்லாது போகுமென்றால், பின்னாலே வழக்கு மன்றத்திலே வருகிற போது அதைப் பார்த்துக் கொள்வோம். இப்போதே யூகித்து, இது சரியில்லை, அது சரியில்லையென்று சொன்னால் அது முறையாக இருக்காது. அதற்கான அமென்ட்மெண்டும் கொண்டு வரவில்லை. கொண்டு வந்திருக்கிற சட்ட திருத்தத்தைப் பொறுத்த வரையில் என்ன திருத்தம் தரலாமோ அதைத் தான் தரவேண்டும். அந்த அளவிற்குத் தான் இப்போது பேச வேண்டும். மற்ற கருத்துக்களைச் சொல்வது சரியாக இருக்காது. அவற்றை இப்போது எடுத்துக் கொள்கின்ற தன்மையிலும் வராது. ஆகவே இந்தச் சட்ட திருத்தத்திற்கு ஏற்ற அளவில் மட்டும் பேச வேண்டுமென்று தான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** '' அக்ளாமரேஷன் '' என்ற ஒரே ஒரு வார்த்தை தான். எப்படி கோயம்புத்தூர் முனிசிபல் டவுன் என்பதை கோயம்புத்தூர் கார்ப்பொரேஷன் என்று சப்ஸ்டிடியூட் பண்ணுவது என்று. அடுத்து மதுரை என்பதில் ஒரு ஸ்பெல்லிங் மிஸ்டேக் இருக்கிறது. இதை பெரிய தவறாக கருத வேண்டாம். அமருங்கள்.



**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** முதலில் இந்த தவறுகளை கண்டுபிடித்து நான் அமென்ட்மென்ட் கொடுத்த போது அதிகாரிகள் இதுபோன்ற நெகடிவ் அமென்ட்மென்ட் கொடுக்கக் கூடாது என்று ரிஜெக்ட் பண்ணி விட்டார்கள். அதற்கு பிறகு ஏதாவது அமென்ட்மென்ட் கொடுக்க வேண்டுமென்று 'ஆர்' விட்டு விட்டார்கள், மதுரை சரியாக இல்லையென்று கொடுப்பதற்கு சிறுபிள்ளை அல்ல.

THE HON. Thiru S. RAMACHANDRAN: Mr. Speaker, it is a question of relevance to the motion before the House. He questions the very scope of the Act. He says that it is an Act confined to the Madras Corporation and has nothing to do with any other places. He questions the very basis of the Act. But now the matter before the House is only an amendment. Let him confine himself to the amendment. But he is questioning the very scope of the Act, which we cannot accept here.

MR. SPEAKER: You speak on the amendment only.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டத்தை கொஸ்டியன் பண்ணவில்லை. நான் உங்களுடைய தீர்மானத்தைத் தான் கொஸ்டியன் பண்ணுகிறேன். தீர்மானம் சட்டத்தினுடைய சார்பாக இருக்க வேண்டும் ஆனால் உங்களுடைய தீர்மானம் சட்டத்தினுடைய சார்பாக இல்லை. மதுரை கார்ப்பொரேஷனுக்கும், கோயம்புத்தூர் கார்ப்பொரேஷனுக்கும் மட்டுமல்ல, இன்னொன்றையும் நான் சொல்கிறேன். சென்னை நகரத்தினுடைய முழு எல்லைக்கு இந்தச் சட்டம் பொருந்தும் என்று மூலச் சட்டத்திலே சொல்லப்பட்டு இருக்கிறது. மூலச் சட்டத்திலே சென்னை நகரத்தினுடைய எல்லைகளைப் பற்றி ஏன் விவரிக்கப்படவில்லை.

Mr. SPEAKER: Do not go to the root of the matter.

THIRU T.R. VENKATARAMANAN: In the Madras Corporation Act, in sub-section (9) of section 3, the City of Madras or the City means the area declared by the State Government by Notification to be the City of Madras—I stand corrected—but excludes....

Mr. SPEAKER : Who is going to correct it? You should give advance information. There is no Petitioner and Respondent here., Only the House.

THIRU T. R. VENKATARAMANAN : I would say that it is unsustainable in law.

Mr. SPEAKER : I am not here to reply to your arguments. I am not sitting here as a Judge. You tell me whether you are pressing the amendment when I put to vote.

THIRU T. R. VENKATARAMANAN: Do you feel embarassed when I say ?

Mr. SPEAKER : No. I feel that there is no mistake.

**திரு. டி.ஆர். வெங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரம் என்பது. சென்னை நகரச் சட்டத்திலே, அரசு நோடிபிகேஷனிலே அறிவிக்கின்றதுதான் சென்னை நகரம் என்று சொல்லப்பட்டு விட்டு, பிறகு சென்னை நகரத்தினுடைய எல்லைகள் எல்லாம் விஸ்தரிக்கப்படுகிற போது இந்தச் சட்டத்திற்கு அமென்ட்மென்ட் கொண்டு வந்தால், எவ்வாறு அந்த அமென்ட்மென்ட் என்பதை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்திருக்கின்ற திருத்தத்திலே 'அக்ளமேரேஷன் என்ற சொல் வேண்டாம் என்கிறார். அது வேண்டாம் என்று சொன்னால், என்ன ஆகும் என்று சொன்னால், சேலம் நகர்ப்புற கூட்டுப் பகுதி என்பது பெருகி வருகிறதாகும். இல்லாவிட்டால் இந்த 'அக்ளோமரேஷன்' என்ற சொல்லை எடுத்துவிட்டால். சேலம் என்று நிற்கும். சேலம் என்று போட்டு விட்டதற்குப் பிறகு, சூரமங்கலம் நகராட்சி எப்படி அடங்கும், சேலம் நகராட்சி எல்லைக்குள்ளே இருந்து 16 கி.மீ. எப்படி அடங்கும். ஜாரிகொண்டலாம்பட்டி எப்படி அடங்கும். அன்னதானப்பட்டி எப்படி அடங்கும். அதற்குத்தான், சேலம், அதனுடைய சுற்றுப்புறப் பகுதி என்று போட்டால்தான் 'அக்ளமேரேஷன்' என்று போட்டால் தான் இந்தப் பகுதிகளில் எல்லாம் உள்ளே அடக்க முடியும். இந்தச் சொல்லை எடுத்துவிட்டால், சேலம் என்று தான் இருக்கும். சேலம் என்று போட்டு, சூரமங்கலம் நகராட்சி, ஜாரிகொண்டலாம்பட்டி என்று சொன்னால், உடனே என்ன கிளப்புவார்கள். ஜாரிகொண்டலாம்பட்டி சேலத்திற்கு உள்ளே எங்கேயிருக்கிறது என்று சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பிரச்சினைகளைக் கிளப்புவார்கள். அது இருப்பதிலே ஒன்றும் தவறு இல்லை.

மற்றொன்று, கோயம்புத்தூர், முனிசிபல் டவுன் என்பதற்குப் பதிலாக கோயம்புத்தூர் கார்ப்பொரேஷன் என்று இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். 1981 ஆம் ஆண்டில் இந்தச் சட்டத்தினுடைய அடிப்படை வந்துவிட்டதன் காரணமாக அப்போது மதுரை கார்ப்பொரேஷன் மட்டும் இருந்தது. அதற்குப் பிறகு கோயம்புத்தூர் கார்ப்பொரேஷன் உருவாக்கப்பட்டது. ஆகையினாலே கோயம்புத்தூர் முனிசிபல் டவுன் என்று இருந்தது. ஆகவே கோயம்புத்தூர் கார்ப்பொரேஷன் என்று மாற்றிக்கொள்ளலாம் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு



உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். கோயம்புத்தூர் முனிசிபல் டவுன் என்பதை கோயம்புத்தூர் கார்ப்பரேஷன் என்று மாற்றிக் கொள்ளலாம்.

அதேபோல் மதுரை என்பதிலே 'டி' விட்டுப் போய்விட்டது. அது போனதற்குக் காரணம் அச்சுப்பிழைதானே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆகவே, 'மவுரை' என்று இருக்கிறது 'டி' போய்விட்டது. 'டி' சேர்த்துக் கொள்ள வேண்டியது தான். 'டி' என்ற ஒன்றை விடக் கூடாது. ஆகவே மதுரை என்று இருக்கலாம். அந்தத் திருத்தத்தையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே கோயம்புத்தூர் டவுன் என்பதை. கோயம்புத்தூர் கார்ப்பரேஷன் என்ற தன்மையிலே ஏற்றுக்கொள்ளலாம். மதுரையிலே, அந்த எழுத்துப் பிழையோடு இருப்பதை மதுரை என்று மாற்றிக் கொள்ளலாம். 'அக்ளமெரேஷன்' என்பதை மாற்றி விடுவோமானால், அந்த ஊர் பெயர் மட்டும்தான் நிற்கும். அதைச் சேர்ந்த புறநகர்ப் பகுதி எல்லாம் விட்டுப் போய்விடும். இது இருப்பதிலே தவறு இல்லை என்பதைச் சொல்லி, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கக் கூடிய இரண்டு திருத்தங்களிலும் குறிப்பாக, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி, கோவை மாநகராட்சி, சேலம் போன்ற நகரங்களில் உள்ள சுற்றுப்புற கிராமங்களை இந்த மாநகராட்சிகளுடன் இணைக்கக் கூடிய இந்தத் தீர்மானத்தில் நாங்கள் கூறிக்கொள்ள விரும்புவது வருவாய்த் துறையை மட்டும இணைத்து விட்டு அந்தக் கிராமங்களைச் சார்ந்திருக்கக் கூடிய மற்றைய துறைகளை, குடிநீர் வழங்கக் கூடிய துறையோ அல்லது காவல்துறையோ அல்லது நிதித் துறையோ, அதற்கு முன்னாலே இருக்கக்கூடிய நிர்வாக மாவட்டங்களோடு வைத்துவிட்டு அந்தப் பகுதிகளில் வாழக்கூடிய மக்களுக்கு இந்தத் தொல்லைகள் ஏற்படுகின்றன. வருவாய்த் துறை சென்னை மாநகராட்சியிலும் அங்கிருக்கக் கூடிய காவல் துறையோ அல்லது நிதித் துறையோ செங்கற்பட்டு மாவட்டத்திலே இருக்குமேயானால் அங்கே வாழக் கூடிய மக்களுக்கு தொல்லைகள் ஏற்படுகின்றன. அதே மாதிரி அங்கே இணைக்கப்பட்டதற்குப் பிறகு, இந்த மாநகராட்சியில் வரி விதிப்பது போன்ற அந்தப் பகுதி மக்களுக்கு விதிக்கப்படுகிறது. ஆனால் மாநகராட்சியிலிருந்து பெறக் கூடிய சலுகைகள் முழுவதும் அந்தப் பகுதியில் வாழக்கூடிய மக்களுக்கு வழங்கப்

படுவது என்பது தவிர்க்கப்படுகிறது. எனவே வரி விதிப்பதோடு மட்டுமல்லாமல் சலுகைகளும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதேபோல் அந்த வருவாய் கிராமங்களை இணைக்கப் படும்போது அந்த மாவட்டங்களில் இருக்கக் கூடிய மற்றைய துறைகளும் இந்த மாநகராட்சியோடு சேர்த்து இணைக்கப்படக் கூடியநிலையிலே, திருத்தக் கூடிய முறையில் இந்தத் தீர்மானத்தை அரசு நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென்று கோரி நான் முடிக்கின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,' இதிலே முக்கியமான நோக்கம் என்னவென்று கேட்டால், இந்த அறிக்கையுடைய முக்கியநோக்கம் ஒவ்வொரு ஊராட்சியையும் ஒரு தனிப்பட்ட நகர பெரும்பகுதி என்றும் நகர நில உடைமையாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சியில் நிலம் வைத்திருந்தால், அவர்கள் ஒவ்வொன்றிலேயும் இரண்டு இரண்டு மனைகள் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. அதை தவிர்ப்பதற்காகத் தான் ; இல்லாவிட்டால் ஒவ்வொன்றையும் தனித் தனியாக கருதி, இதிலே ஒரு இரண்டு மனை, அதிலே ஒரு இரண்டு மனை என்று சொல்லி பல மனைகளை நிலவுடைமைக்காரர்கள் வைத்துக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. அதைத் தவிர்க்கவேண்டுமென்பது தான் இந்தச் சட்டத்தினுடைய முக்கிய நோக்கம். ஆகவே இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி. ஆர். வெங்கடராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே பதில் சொல்கின்றபோது என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொண்டதன் காரணமாக அவற்றை அவைக் குறிப்பிலே நீங்கள் ஏற்றிக் கொள்ளலாம் என்ற கருத்தை நான் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திருத்தத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் சொன்ன அந்த இரண்டு பகுதியையும் ஏற்றுக்கொள்கிறேன். கோயம்புத்தூர் முனிசிபல் டவுன் என்பதை கோயம்புத்தூர் கார்ப்பொரேஷன் என்று மாற்றிக்கொள்ள அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதைப் போன்று 'மதுரை' என்ற சொல்பிழையையும் மாற்றிக்கொள்ள அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. டி. ஆர். வெங்கடராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே அரசு பிரேரணையாக அவற்றை ஏற்றுக்கொள்வதன் காரணமாக நான் என்னுடைய தீர்மானத்தை வாபஸ் பெறுகிறேன்.



திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1966ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின்கீழ் வெளியிடப்படவிருக்கும் பின் வரும் வரைவு அறிக்கை. மேற்சொன்ன பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளபடி ஏற்பளிக்கப்படவேண்டும்."

**பேரவைத் தலைவர்**

**அறிக்கை.**

தமிழ்நாடு 1966ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் 1981ஆம் ஆண்டு சூலை 8ஆம் நாள் வெளியிடப்பட்ட அரசிதழின் பக்கம் 435, பகுதி II, பிரிவு 2-இல் வெளியிடப்பட்ட 1981ஆம் ஆண்டு சூன் 25ஆம் நாளிட்ட வருவாய் அறிவிக்கை எண் II (2)/வரு 2787/81இல் கீழ்க்கண்ட திருத்தம் கொண்டுவரப் பட்டுள்ளது :

**திருத்தம்.**

மேற்கண்ட அறிவிக்கையில் உள்ள அட்டவணைக்குப் பதிலாக கீழ்க் கண்ட அட்டவணையை சேர்த்துக் கொள்ளலாம், அதாவது :—

**அட்டவணை.**

| நகர்ப்புற கூட்டுப் பகுதியின் பெயர். | பகுதியின் பெயர். |
| --- | --- |
| (1) | (2) |
| சேலம் நகர்ப்புறக் கூட்டுப் பகுதி. | 1. சூரமங்கலம் நகராட்சி. |
| | 2. சேலம் நகராட்சி எல்லையில் இருந்து 16 கி.மீ.-க்கு உட்பட்ட பகுதி— |
| | ஜாரி கொண்டாலம் பட்டி ஊராட்சி. |

அரசினர் தனித் தீர்மானங்கள்

(பேரவைத் தலைவர்)

| நகர்ப்புறக் கூட்டுப் பகுதியின் பெயர். | பகுதியின் பெயர். |
| --- | --- |
| (1) | (2) |
| சேலம் நகர்ப்புறக் கூட்டுப் பகுதி—தொடர்ச்சி. | அன்னதானப்பட்டி ஊராட்சி. |
| | அம்மாப்பாளையம் ஊராட்சி. |
| | அம்மாப்பேட்டை வடக்கு ஊராட்சி. |
| | அம்மாப்பேட்டை தெற்கு ஊராட்சி. |
| | புதூர் ஊராட்சி. |
| | கொண்டாலம்பட்டி ஊராட்சி. |
| | தாதம்பட்டி ஊராட்சி. |
| | அனகாபுரம் ஊராட்சி. |
| | பேர்லாண்ட்ஸ் சுவர்ணபுரி ஊராட்சிகள். |
| | நெய்க்காரப்பட்டி ஊராட்சி. |
| | சௌதாபுரம் ஊராட்சி. |
| | மெய்யனூர் ஊராட்சி. |
| | குமாரசுவாமி பட்டி ஊராட்சி |
| | கந்தம்பட்டி ஊராட்சி. |
| | ரெட்டிப்பட்டி ஊராட்சி. |
| | நரசோஜிப்பட்டி ஊராட்சி. |
| | பள்ளப்பட்டி ஊராட்சி. |
| | சேலம் வட்டத்திலுள்ள வருவாய்க் கிராமங்கள்— |
| | 29. ரெட்டிப்பட்டி. |
| | 54. அனகாபுரம் புதூர். |
| கோயம்புத்தூர் நகர்ப்புறக் கூட்டுப் பகுதி. | 1. மருக்கரை நகரியம். |
| | கோயம்புத்தூர் நகராட்சி எல்லையிலிருந்து 16 கி.மீ.க்கு உட்பட்ட பகுதி : |
| | குறிச்சி ஊராட்சி. |
| | குனியமுத்தூர் ஊராட்சி. |



அரசினர் தனித் தீர்மானங்கள்

(பேரவைத் தலைவர்)

| நகர்ப்புறக் கூட்டுப் பகுதியின் பெயர். | பகுதியின் பெயர் |
| --- | --- |
| (1) | (2) |
| கோயம்புத்தூர் நகர்ப்புறக் கூட்டுப் பகுதி—தொடர்ச்சி. | வெள்ளலூர் ஊராட்சி. |
| | கவுண்டம்பாளையம் ஊராட்சி. |
| | பேரூர் செட்டிப்பாளையம் ஊராட்சி. |
| | பேரூர் ஊராட்சி. |
| | சின்னவேடம்பட்டி ஊராட்சி. |
| | விளாங்குறிச்சி பேரூராட்சி. |
| | கோயம்புத்தூர் வட்டத்திலுள்ள வருவாய் கிராமங்கள்— |
| | 14. சரவணம்பட்டி. |
| | 19. வெள்ளைக்கிணர். |
| | 20. துடியலூர். |
| திருச்சிராப்பள்ளி நகர்ப்புறக் கூட்டுப் பகுதி. | 1. ஸ்ரீரங்கம் நகராட்சி. |
| | 2. பொன்மலை நகராட்சி. |
| | 3. திருச்சிராப்பள்ளி நகராட்சி எல்லையிலிருந்து 16 கி.மீ.க்கு உட்பட்ட பகுதி— |
| | அரியமங்கலம் ஊராட்சி. |
| | ஆலத்தூர் ஊராட்சி. |
| | அபிஷேகபுரம் ஊராட்சி. |
| | பிராட்டியூர் ஊராட்சி. |
| | உள்கடை அரியமங்கலம் ஊராட்சி. |
| | கோல்டன் ராக் ரயில்வே குடியிருப்பு. |
| | (தெற்கு ரெயில்வே நிர்வாகம்) |

அரசினர் தனித் தீர்மானங்கள்

(பேரவைத் தலைவர்)

| நகர்ப்புறக் கூட்டுப் பகுதியின் பெயர். | பகுதியின் பெயர். |
| --- | --- |
| (1) | (2) |
| மதுரை நகர்ப் புறக் கூட்டுப் பகுதி. | 1. ஹார்விபட்டி நகரியம். |
| | 2. மதுரை நகராட்சி எல்லையில் இருந்து 16 கி.மீ.-க்கு உட்பட்ட பகுதி— |
| | அவனியாபுரம் ஊராட்சி. |
| | திருப்பரங்குன்றம் ஊராட்சி. |
| | பரவை ஊராட்சி. |
| | விளாங்குடி ஊராட்சி. |
| | சமயநல்லூர் ஊராட்சி. |
| | தத்தனேரி ஊராட்சி. |
| | தியாகராஜர் குடியிருப்பு. மதுரை (தெற்கு) வட்டத்திலுள்ள வருவாய்க் கிராமங்கள்— |
| | 15/2 புதுக்குளம் 2. ஆம் பகுதி. |
| திருநெல்வேலி நகர்ப்புறக் கூட்டுப் பகுதி. | 1. திருநெல்வேலி நகராட்சி. |
| | 2. பாளையங்கோட்டை நகராட்சி. |
| | 3. மேலபாளையம் நகராட்சி. |
| | 4. சங்கர் நகர் நகரியம். |
| | 5. திருநெல்வேலி நகராட்சி எல்லையிலிருந்து 16 கி.மீ.-க்கு உட்பட்ட பகுதி. |
| | தச்சநல்லூர் ஊராட்சி. |
| | நாரணம்மாள்புரம் ஊராட்சி. |
| | தாழையூத்து ஊராட்சி. |
| | பாளையங்கோட்டை (நகராட்சியல்லாதது). |



அரசினர் தனித் தீர்மானங்கள்

(பேரவைத் தலைவர்)

| நகர்ப்புறக் கூட்டுப் பகுதியின் பெயர். | பகுதியின் பெயர். |
| --- | --- |
| (1) | (2) |
| திருநெல்வேலி நகர்ப்புறக் கூட்டுப் பகுதி—தொடர்ச்சி. | அழகனேரி ஊராட்சி. |
| | மேல்நத்தம் ஊராட்சி. |
| | பேட்டை ஊராட்சி. |
| | திருநெல்வேலி வட்டத்திலுள்ள வருவாய் கிராமங்கள்— |
| | 134. இனாம் கரையிருப்பு. |

விளக்கக் குறிப்பு.

1981 ஆம் ஆண்டு சூலை 8 ஆம் நாள் வெளியிடப்பட்ட அரசிதழின் பக்கம் 435 பகுதி II பிரிவு 2-இல் வெளியிடப்பட்ட வருவாய்த் துறை அறிக்கை எண். 11(2)/வரு/2787/81-இல் '' பகுதியின் பெயர்கள் '' என்ற தலைப்பின் கீழ் நகராட்சிகள் ஊராட்சிகள் மற்றும் கிராமப் பகுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த அறிவிக்கையின்படி ஒவ்வொரு ஊராட்சியும் ஒரு தனிப்பட்ட நகர்ப்புற பகுதி என்றும், நகர்ப்புற நில உடைமையாளர் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் நிலம் வைத்திருந்தால் அவைகளுக்கு ஒவ்வொரு ஊராட்சியிலும் இரண்டு கிரவுண்டு வீதம் வரி விதிவிலக்கு கோருவார். இதைத் தவிர்ப்பதற்காக, தமிழ்நாடு அரசிழில் ஏற்கெனவே அறிக்கை பிரசுரிக்கப்பட்டதை சரியான முறையில் மாற்றியமைக்கலாம் என்று கருதப்படுகிறது.

2. தமிழ்நாடு 1966–ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின்கீழ் பிறப்பிக்கக் கருதப்பட்டுள்ள எந்தவொரு அறிவிக்கையின் வரைவும் மேற்படிச் சட்டத்தின் 1-ம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்கீழ் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட வேண்டும். அந்த அறிவிக்கை மாற்றம் அல்லது சேர்க்கையின்றி அல்லது மாற்றத்துடன் அல்லது சேர்க்கையுடன் சட்டமன்றப் பேரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றபடி அவ்வறிவிக்கை பிறப்பிக்கப்படக் கூடாது. அவ்வாறு ஒப்புதலளிக்கப்படுவதன் பேரில், அறிவிக்கை எவ்வடிவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதோ அவ்வடிவில் பிறப்பிக்கப்பட வேண்டும். அவ்விதம் பிறப்பிக்கப்பட்டதன் பேரில், அத்தகைய அறிவிக்கை

தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படவேண்டும். அதன் பின்னர், அவ்வறிவிக்கை எல்லா வகையிலும் செல்திறன் உடையதாய் இருக்கும்.

3. எனவே, இது குறித்து அரசு தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரக் கருதியுள்ளது.

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின் கீழ் வெளியிடப்படவிருக்கும் பின்வரும் வரைவு அறிவிக்கை மேற்சொன்ன பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளபடி, ஏற்பளிக்கப்பட வேண்டும்.

அறிக்கை

தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கியுள்ள அதிகாரங்களைக்கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு அரசிதழில் இந்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளன்று, மேற்சொன்ன சட்டம், சென்னை மாநகராட்சி எல்லைகளுக்குள் சில ஊராட்சிகளைச் சேர்த்திருப்பதால், சென்னை மாநகர எல்லையோரப் பகுதியில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளதும், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான பகுதிகளில் செயலுக்கு வரும் என்று இதனால் கட்டளையிடுகிறார்.

அட்டவணை.

பகுதிகள்.

செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டத்திலுள்ள வருவாய்க் கிராமங்களில் அடங்கியுள்ள பகுதி.

43. மோரை
44. புலிக்குத்தி
45. காரம்பாக்கம்
47. ஆரம்பாக்கம்



55. முக்தா புதுப்பட்டு
56. மிட்னமல்லி
167. பெருங்களத்தூர்
179. வெங்கப்பாக்கம்

செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரி வட்டத்திலுள்ள வருவாய்க் கிராமங்களில் அடங்கியுள்ள பகுதி.

23. பழைய எருமை வெட்டிப்பாளையம்
24. புது எருமை வெட்டிப்பாளையம்
26. காரனோடை
30. செக்கஞ்சேரி
31. நெற்குன்றம்
34. நாயர்
57. குதிரைப்பள்ளம்

செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டத்திலுள்ள வருவாய்க் கிராமங்களில் அடங்கியுள்ள பகுதி :

90. சிங்கிலிக்குப்பம்
91. ஆயல்சேரி
92. புதுக்குப்பம்

செங்கல்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்பூதூர் வட்டத்திலுள்ள வருவாய்க் கிராமங்களில் அடங்கியுள்ள பகுதி.

16. திருமணம்
17. அமுதூர்மேடு
18. கருணாகரச்சேரி
19. தண்டரை
20. நெமிலிச்சேரி
38. திருக்கோயில்பத்து
39. ஆதனூர்
40. கீழ்மணம்பேடு
43. திருமழிசை
76. செம்பரம்பாக்கம்.

பேரவைத் தலைவர்

செங்கல்பட்டு மாவட்டம், செங்கற்பட்டு வட்டத்திலுள்ள வருவாய்க் கிராமங்களில் அடங்கியுள்ள பகுதி.

9. நெடுங்குன்றம்
22. ரத்னமங்களம்
23. வேங்கடமங்களம்
30. பொன்மார்
32. போலச்சேரி
33. தாழம்பூர்
35. நாவலூர்
36. ஏகாட்டூர்
37. கானத்தூர்ரெட்டிகுப்பம்
38. முட்டுக்காடு

விளக்கக் குறிப்பு.

[redacted] சென்னை மாநகராட்சி எல்லைகளுக்குள் சில ஊராட்சிகளைச் சேர்த்ததன் விளைவாக சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளில் புதிதாகச் சேர்க்கப்பட்ட கிராமங்களில் தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம் செயலில் இல்லை.

2. சென்னை மாநகர எல்லைக்குள் 19 வருவாய்க் கிராமங்கள் அடங்கிய 12 ஊராட்சிகளைச் சேர்ப்பதற்கு, ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 29–5–1978 ஆம் நாளிட்ட 790 ஆம் எண் அரசாணையில் அரசு ஆணை பிறப்பித்தது, இதன் விளைவாக சைதாப்பேட்டை வட்டத்தைச் சேர்ந்த 8 கிராமங்கள் பொன்னேரி வட்டத்தைச் சேர்ந்த 7 கிராமங்கள், திருவள்ளூர் வட்டத்தைச் சேர்ந்த 3 கிராமங்கள், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தைச் சேர்ந்த 10 கிராமங்கள், செங்கல்பட்டு வட்டத்தைச் சேர்ந்த 10 கிராமங்கள் ஆகிய 38 கிராமங்கள் சென்னை மாநகரின் 16 கி. மீ. எல்லையோரப் பகுதிக்குள் அடங்கும்.

3. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்படி, மேற்சொன்ன சட்டத்தின் 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் (b) பகுதியின் கீழ் பிறப்பிக்கக் கருதியுள்ள யாதொரு வரைவு அறிவிக்கை சட்டப் பேரவையில் வைக்கப்பட வேண்டும். அந்த அறிவிக்கைக்கு மாற்றம் அல்லது சேர்க்கை இன்றியோ அல்லது மாற்றம் அல்லது சேர்க்கையுடனோ சட்டப்பேரவை ஒப்புதல் அளித்தாலன்றி





மற்றப்படி அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்படக் கூடாது. அவ்வாறு ஒப்புதல் அளிக்கப்படுவதின் பேரில், ஒப்புக்கொள்ளப்பட்ட வடிவிலேயே அத்தகைய அறிவிக்கை பிறப்பிக்கப்படவேண்டும், அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட வேண்டும். அதன் பின்னர் அவ்வறிவிக்கை முழுமையாகச் செயலில் இருக்கும்.

4. எனவே, அவ்வாறு செயல்படுத்துவதற்காகத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அரசு கருதுகிறது.

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

இ) மின்சார வாரியம் கடன் வாங்குவதற்கான வரம்பு அதிகரிப்பு,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் —மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன் :

1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65வது பிரிவின் (1) உட்பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக எண்ணூறு கோடி ரூபாய் இருக்கலாமென்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற் குறிப்பு ஏற்கப்படலாம்.

விளக்கக் குறிப்பு.

மாநில அரசு, மாநில சட்டமன்றப் பேரவையின் அனுமதியுடன் உயர் அளவுத் தொகையை முடிவு செய்தாலொழிய 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படியும் 22–9–1982 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில். தனி வெளியீட்டின் II-வது பாகத்தின் 1 ஆம் பிரிவில் 1ஆம் பக்கத்தில் வெளியாகிய பொதுப்பணித் துறை 22—9—1982 நாளிட்ட எண் II (1) / PWE/ 254 (a) / 82 ஆம் அறிவிப்பின்படியும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மேற்படி பிரிவின் (1) உட்பிரிவின்கீழ் ஒரு சமயத்தில் கடனாகக் கிடைக்கக்கூடிய ரூபாய் அறுநூறு கோடியாகும்.

தமிழ்நாடு மின்சார வாரியம் தனது மூலதன செலவுக்குத் தனது நிதிவாயிலிருந்தும், வெளிச்சந்தைக் கடன்களிலிருந்தும் தொகை பெறுகிறது. மேலும் ஆயுள்

ஈட்டுறுதிக் கழகத்திடமும், வணிக வங்கிகளிடமும் கிராமப்புற மின் வசதிக் கழகம் மூலமும் கடன் தொகை பெறுகிறது. எஞ்சிய தொகையை மாநில அரசுக்கடன் மூலம் பெறுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் திரட்டிய பல்வேறு கடன்களில் திருப்பிக் கொடுக்கப்படாமல் 1986 பிப்ரவரி திங்கள் இறுதிவரை எஞ்சியுள்ள மொத்த நிலுவைத் தொகை ரூ. 551.14 கோடியாகும். 1986–87-ம் அதற்கு அடுத்து வரும் ஆண்டுகளிலும் திரட்டக் கருதியுள்ள வெளிச்சந்தைக் கடன்கள் மற்றக் கடன்கள் ஆகியவற்றின் அளவைக் கொண்டு பார்க்கும் பொழுது தற்போதுள்ள அறுநூறு கோடி ரூபாய் என்கிற மேல் வரம்பு உயர்த்தப்பட வேண்டும். ஆகவே, மாநில அரசு மாநிலச் சட்டமன்ற பேரவையின் இசைவுடன் தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் வாங்கக்கூடிய மேல் வரம்பை அறுநூறு கோடியிலிருந்து எண்ணூறு கோடி ரூபாயாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளது.

திரு. கு. ரம்ணி: தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தினுடைய முக்கிய நோக்கம் 600 கோடி ரூபாய் நமது மின்வாரியம் கடன் வாங்குவது என்பது 800 கோடி ரூபாயாக அனுமதிக்க வேண்டுமென்று, அந்தக் கடனுடைய எல்லையை தூக்கி வைப்பதற்காகக் கொண்டு வந்திருக்கும்படியான ஒரு தீர்மானம். இப்போதே அந்த மின்வாரியத்திற்கு 551 கோடி ரூபாய்க்கு மேலே கடன் நிலுவை—கொடுக்கவேண்டிய பாக்கி இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான் சுருக்கமாக ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

முதலாவது மின்வாரியத்தினுடைய நடவடிக்கையிலே லாபம் சம்பாதிப்பது என்பது ரொம்ப கஷ்டமான வேலைதான் என்பது நான் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். நாடு முழுவதும் அநேகமாக அப்படித்தான் இருக்கிறது மின்வாரியங்கள். ஆனால் இவ்வளவு பெரிய கடனாளியாக ஆகக்கூடிய நிலைக்கு போகிறது என்று சொன்னால் இதனுடைய அட்மினிஸ்டிரேடிவ் செட் அப் இருக்கிறதே அதைப்பற்றி ஒரு ஆழமான பரிசீலனை நடத்தித் தீரவேண்டியிருக்கும். மின் வாரியமும், அரசினுடைய சொத்தாக இருக்கக் கூடியது. ஆகவே, அந்தப் பரிசீலனையை நடத்தித் தீரவேண்டும்.

முதலாவது அதில் ஏற்படக்கூடிய வேஸ்டு இருக்கிறதே அந்த வேஸ்ட்டை தடுக்கவேண்டும். இன்றைக்கு ஏராளமான வேஸ்டு ஏற்படுகிறது என்பது பொதுமக்கள் இடத்திலே அந்த கருத்து இருக்கிறது. அது மட்டும் அல்ல, இந்த மின் திருட்டு இருக்கிறதே அதைத்தடுத்து விட்டால் 10 லட்சம் ரூபாய் அரசுக்கு வருமானம் வரும். ஆனால் அதை நாம் பேசிக்கொண்டு இருக்கிறோமே தவிர இன்று வரை அதைத் தடுக்க முடியவில்லை. ஒரு கட்டத்திலே எனக்குத் தெரியும் இதே மன்றத்திலே நான் பேசியிருக்கிறேன். மின்சாரத்தினுடைய வரவு செலவுத்



திட்டத்தை வைத்து இங்கே பேசும்போது—நமக்கு பேசுவதற்கு மட்டும் தான் உரிமை— Physical Verification of the Assets of the Tamil Nadu Electiical Board அதுவே இல்லாமல் இருந்தது. பிசிகல் வெரிபிகேஷன் நடந்து மொத்த சொத்துக்கள் எவ்வளவு என்பதே தெரியாமல் இருந்ததை இதே மன்றத்தில் கிளப்பி பின்னால் அதை அரசின் அதிகாரிகள் பரிசீலனை செய்து இருக்கலாம் என்று நினைக்கிறேன். அப்போது பிசிக்கல் வெரிபிகேஷன் நடந்தது என்று எனக்கு அப்போது பதில் கொடுத்து இவ்வளவு சொத்து இருக்கிறது என்று பதில் சொன்னார்கள். ஏன் இதை நான் குறிப்பிடுகிறேன் என்றால் அந்த அளவுக்கு இந்த மின் வாரியம் வளர்ந்து இருக்கிறது. ஏராளமான சொத்துக்கள் கொண்டு இருக்கக் கூடிய மின் வாரியம் அது சரியானமுறையில் நிர்வாகம் இருக்குமானால் வேஸ்டை குறைக்க முடியும். அனாவசியமான பல்வேறு செலவுகளை குறைக்க முடியும், என்னைப் பொறுத்தவரையில் இது ஒரு Top heavy Administration என்பது எங்களுடைய கருதது. இதில் ஏராளமான மேல்மட்டத்தில் இருக்கிற பெரிய உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை பெருகி செலவு ஏற்படுகிறது. ஆனால் கீழ் மட்டத்தில் இருக்கக்கூடிய உழைப்பாளிகளை வீட்டுக்கு அனுப்புகிற ஒரு தப்பும் நடக்கிறது. அதையும் ஈடுகட்டுவதற்கு இதை செய்கிறார்களோ என்னமோ தெரியவில்லை. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், நான் தொழிலாளர்கள் கோரிக்கையை முன் வைக்க வரவில்லை. எப்படி இவைகள் செலவுகள் கண்காணிக்கப்படுகிறது எப்படி நிர்வகிக்கப்படுகிறது என்பதை பற்றி ஒரு ஆழமான பரிசீலனை செய்து இன்றைக்குள்ள செலவுகள் பலதையும் குறைக்க முடியும். அப்படி குறைத்து இருக்கிறோம் என்று சொன்னால் இந்த 800 கோடிக்கு போகவேண்டிய அவசியம் இல்லை. 511 கோடி ரூபாய் கடன் பாக்கியும் இருக்காது. இன்னொரு முக்கியமான விஷயம் அரசு எடுக்கக்கூடிய சில நல்ல முடிவுகளுக்கு பொதுமக்களுக்கு உதவி செய்யக்கூடிய அப்படிப்பட்ட முடிவுகளுக்கு மின்சார சப்ளை செய்யக்கூடிய முடிவுகளுக்கு ஒன்றை உதாரணமாக சொல்லுகிறேன். சிறு நில விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் தருகிறோம். வரவேற்கத்தக்க நல்ல முடிவை இந்த அரசு எடுத்து அதை அமலுக்குக் கொண்டுவந்திருக்கிறது. அது நாம் எல்லோரும் கோரியிருந்த கோரிக்கை தான். ஆனால் அதற்கு அரசு மின் வாரியத்திற்கு பணம் கொடுக்கிறார்களா? அரசு செய்யக்கூடிய நல்ல நடவடிக்கைகளுக்கு செலவாகக்கூடிய 10 லட்ச ரூபாய் கணக்கில் செலவாகக்கூடிய பணத்தை மின் வாரியத்திற்கு கொடுக்கவேண்டும். அரசு கொடுக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. அப்படி கொடுக்கிறார்கள் என்று சொன்னால் அதைச் சொல்லலாம். இல்லை என்று சொன்னால் அரசு அதற்கு பணம் கொடுக்கவேண்டும்.

அரசின் தனித் தீர்மானங்கள்

(திரு. கு. ரமணி)

குடிசைகளுக்கு, அரிசன மக்கள் வாழக்கூடிய குடிசைகளுக்கு விளக்கு போடுகிற ஒரு நல்ல திட்டம் இந்த நாட்டில் அமல் செய்து இருக்கிறார்கள். அதனால் பல லட்சக்கணக்கான அரிசன மக்கள் குடிசைவாசிகள் இந்த மின்சாரத்தினால் விளக்குகளை போட்டு பட்டனி கிடந்தாலும் மின்சார விளக்கின் அடியில் பட்டினி கிடக்கக்கூடிய ஒரு நல்ல அந்தஸ்தை அவர்களுக்கு கொடுத்து இருக்கிறோம். அப்படிப்பட்டவர் களுக்கு பல லட்சக்கணக்கான பணம் செலவழிக்கப்படுகிறது, அது அரசினுடைய Welfa e Pclicy ஒரு நல்ல நடவடிக்கை. அதற்குப் பணம் மின்சார வாரியத்திற்கு கொடுக்கப்படுகிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. ஏன் என்று சொன்னால் இது மின் வாரிய பிரச்சினையாக இருப்பதால் சொல்லுகிறேன். இவைகள் எல்லாம் அரசின் Welfa e Pclicies களுக்காக செலவழிக்கப்படுகிறது. அதற்கு எல்லாம் அரசு பணம் கொடுக்கவேண்டும். வேஸ்ட்டைக் குறைக்கவேண்டும், மின்சார திருட்டை பரிபூரணமாக தடுக்கவேண்டும். அதற்கு பொதுமக்கள், தொழிலாளர்கள் எல்லோரும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு அரசு சரியான வழிவகை களை காட்ட வேண்டும்.

அடுத்து, இந்த Top Heavy Administration இருக்கிறதே அதைக் குறைக்கவேண்டும். எத்தனை இன்ஜினி யர்கள், மேல் மட்டத்தில் இருக்கிறார்கள்? அவர்களை விட்டு கீழ் மட்டத்தில் இருப்பவர்களை வீட்டுக்கு அனுப்பு கிறார்கள். இதைக் குறைத்தாலே இந்த அளவுக்கு தொகை வராது. அந்த முறையில் அரசு செய்ய வேண்டும் என்று நினைத்தால் அப்படி ஒரு உத்திரவாதம் கொடுத்தால் அவர்கள் கடன் வாங்க வேண்டாம். வேறு என்ன செய்வது என்ற முறையில் நான் இதை முடிக்கிறேன்.

(பிற்பகல் 1-40)

திரு. பெர். உத்திரர்பதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற திருத்தத்தை நான் ஆதரித்தே பேச விரும்புகிறேன்.

ஆனால் இன்றைக்கு மின்சாரத் துறை என்பதுதான் நாட்டிலே, தமிழகத்திலே, பல்வேறு துறைகளை விஞ்ஞான ரீதியில் கொண்டு போகக்கூடிய ஒரு பெரிய துறையாகும். ஆனால் இந்தத்துறையில் ஒரு நிர்வாக சீர்திருத்தம் என்பது வர வர அது பலஹீனப்பட்டு வருகிறதே தவிர, நிர்வாக சீர்திருத்தம் வலுப்பெற்று வரவில்லை. குறிப்பாக இன்றைக்கு கிராமங் களிலே கூட திருட்டு நடக்கின்றது. புயலிலே விழுந்த அந்தக் கம்பிகள் பூராவும் திருடுபோய்விட்டது. ஆனால் அதிகாரிகள்



அரசின் தனித் தீர்மானங்கள்

(திரு பொ. உத்திராபதி)

கண்டு பிடிக்கிறார்கள். காவல்துறைக்கு அனுப்புகிறார்கள். ஆனால் திருடிய குற்றவாளிகளைப் பிடிப்பது கிடையாது. இப்படி கோடிக்கணக்கான ரூபாய் மின்சாரத் துறையில் இருக்கக் கூடிய உபகரணங்கள் அதிகமான அளவில் கிராமங் களில் திருடுபோய்க் கொண்டிருக்கிறது.

அதே போன்று மின் இணைப்பு கொடுக்கக் கூடிய நேரத்தில், இன்றைக்கு பெரிய தொழிற்சாலைகள் அல்லது பெரிய வசதி படைத்தவர்கள் இன்றைக்கு அந்த லைனிலிருந்து வேறு ஒரு கம்பி போட்டு அதிகமாக திருடுபோய்க் கொண்டிருக்கிறது. ஆகவே நம்முடைய மின் துறைக்கு இப்படி பல கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் வருகின்றது. ஆனால் இயற்கையாக நஷ்டம் வருவது ஒரு பகுதி. இந்தத் திட்டம் பொறுத்தவரையில் இந்தத் துறை நஷ்டம் அடைவதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் அந்த சம்பந்தப்பட்ட சேர்மன் அல்லது அமைச்சர், பெரிய அதிகாரிகளை எல்லாம் அழைத்து வைத்து, அந்த நிர்வாகத்தைச் சீரமைக்கவேண்டும். கிராமங்களிலே பார்த்தால், ஜனங்கள் பொதுவாக மின்துறை என்று சொன்னாலே ஒரு மனக் கசப்பு வரக்கூடிய அளவிற்கு இன்றைக்கு இந்தத் துறை இருக்கிறது.

இன்றைக்கு விவசாயிகளுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. குடிசைகளுக்கு ஒரு விளக்குக்கு அனுமதி வழங்கப் பட்டு மக்கள் அதை வரவேற்கிறார்கள். ஆனால் இன்றைக்கு ஆயிரக்கணக்கான அளவில் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த ஒரு விளக்கு வழங்கக் கூடிய வேலைகளில் இன்றைக்கு இடையில் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. அதையெல்லாம் முழுமையாக பேசமுடியவில்லை. எனவே மின்துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் பல்வேறு சம்பந்தப்பட்ட அதிகாரி களைக் களை எடுத்து, இந்தத் துறையை நீங்கள் செம்மைப் படுத்தாத நிலை இருக்குமானால், ஒவ்வொரு ஆண்டும் மின் துறைக்கு கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டமாக வளர்ந்து கொண்டு இருக்குமே தவிர, அந்த நஷ்டத்திலிருந்து மீளுவதற் கான நிலைமை ஏற்படாது. இதில் மாண்புமிகு அமைச்ச ரவர்களுக்குத் தெரியாத விவரத்தை நான் சொல்லிவிடவில்லை. இருந்தாலும் இன்றைக்கு வெளியில் இருக்கக் கூடிய அந்தக் குறைபாடுகள் அதிகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. அதைப் பார்த்து சுத்தப்படுத்துவதற்கு அமைச்சரவர்கள் தீவிரமான கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முதலாவதாக கடன் வாங்குவது தவறல்ல. வாங்குகின்ற கடன் எப்படி செலவழிக்கப்படுகிறது என்பது தான் முக்கியம்.

அரசின் தனித் தீர்மானங்கள்

[திரு. ச. இராமச்சந்திரன்]

இதே மன்றத்திலே ஒரு முறை அறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றை அழகாகக் குறிப்பிட்டார்கள். வாங்கிய கடனை வைத்து நல்ல பசுவும் கன்றுமாக வாங்கி பால் கறந்து, தானும் உண்டு, மற்றவர்களுக்கும் விற்று, வருகின்ற லாபத்தில் வாங்கிய கடனைத் திருப்பி அடைப்பதும் ஒரு வகை. அதே கடனை வைத்து, அல்சேஷன் நாய் வாங்கி அதற்கு மேல் பிஸ்கட் வாங்குவதற்கு மேலும் மேலும் கடன் வாங்கி கடைசியில் பெரும் கடனாளி ஆவதும் ஒரு வகை. ஆகவே கடன் வாங்குவது தவறல்ல. வாங்குகின்ற கடன் எவ்வாறு செலவழிக்கப் படுகிறது என்பதுதான் முக்கியம் என்று குறிப்பிட்டார்கள்.

கடன் வாங்கவேண்டுமென்று இங்கே வந்திருக்கின்ற தீர் மானத்தில், அதைக் கொள்கை அளவில் இந்த மன்றத்தில் உள்ள அனைவரும் ஏற்றுக் கொள்வீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. செலவுகளை எவ்வாறு குறைக்கமுடியும், வீண் செலவுகளை எவ்வாறு தவிர்க்க முடியும், சிக்கனத்தை எவ்வாறு உருவாக்க முடியும், லாபத்தை எப்படி ஈட்டமுடியும், திருட்டை எப்படி தடுக்க முடியும் என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் யோசனைகளை வழங்கினீர்கள். அதற்காக நன்றி. அதனுடைய நிதிநிலை அறிக்கை வருகின்றபோது இவற்றைப்பற்றியெல்லாம் பேசுவோம். விவாதத்திற்கு பதில் தரவும் வாய்ப்பு உள்ளது.

இன்னொன்று, கடனின் எல்லை கூடுகிறது என்று சொல்கிற போது அந்த நிறுவனம் வளர்கிறது என்று தான் அதற்குப் பொருள். மூலதனச் செலவு கூடுகிறபோது அந்த மூலதனச் செலவை சரிக்கட்டுவதற்காக பல்வேறு நிறுவனங்களிலிருந்து கடனைப் பெறுகின்றபோது அது கூடத்தான் செய்யும். ஆகவே கடன் கூடுகின்றது என்கின்ற காரணத்தினால், ஒரு நிறுவனத்தைப் பொறுத்தவரையில் அதனுடைய நிதிநிலை நெருக்கடிக்கு ஆளாகிறது என்று பொருள் அல்ல. தனி நபருக்கு வேண்டுமானால், அது அத்தகைய நிதி நெருக்கடியை உருவாக்கலாம். ஆனால் ஒரு நிறுவனம் கடன் வாங்குகிறது என்று சொன்னால், அது வளர்கிறது என்று தான் அதற்குப் பொருள் என்பதை நான் இங்கே நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குடிசைகளுக்கு விளக்கு, ஏழை எளியோருக்கு இலவச மின் இணைப்பு போன்றவைகளிலே இலவசமாக தருவதனால் இழப்பு ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். வாரியத்திற்கு ஏற்படுகிற மொத்தமான இழப்பை ஆண்டுதோறும் அரசு சரிகட்டுகிறது. ஒவ்வொரு பிரிவினருக்கும் ஏற்படுகிற இழப்பு என்பதல்ல. மொத்தமாக ஏற்படுகிற இழப்புக்கு அரசு சப்சிடி என்ற வகையிலே தருகிறது. ஆகையால் குடிசை களிலே இருக்கின்றவர்களுக்கு......(குறுக்கீடு)



திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, எவ்வளவு தொகையை அரசு சப்சிடியாக இதற்குத் தருகிறது என்பது எங்களுக்குத் தெரியாது. அதைத் தெரிவித்தால் நல்லது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ஆண்டுதோறும் தரப்படுகிறது. இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம் வருகின்றபோது நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் களுக்கு அதுபற்றி தெரிவிக்கப்படும். விளக்கு வெளிச்சத்தில் பட்டினி கிடக்கக்கூடிய அளவிற்காவது விளக்கு வெளிச்சத்தை நீங்கள் தந்திருக்கிறீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொன்னார்கள்.

எனக்குக் கிடைத்திருக்கிற தகவல், குடிசை வாழ்வோர் இன்று விளக்கு வெளிச்சத்தை நாம் இலவசமாகத் தந்து இருக்கிற காரணத்தினால், மண்ணெண்ணெய்க்கு செலவு செய்கிற காசை வைத்து, டீ சாப்பிட்டு விட்டு நிம்மதியாகப் படுத்து இருக்கிறார்கள் என்றுதான் கேள்வி. இந்த தனித் தீர் மானத்தை நிறைவேற்றித் தரும்படி அவையை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

1948ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65ஆவது பிரிவின் (1) உட்பிரிவின் படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக எண்ணூறு கோடி ரூபாய் இருக்கலாமென்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்.

விளக்கக் குறிப்பு..

மாநில அரசு, மாநில சட்டமன்றப் பேரவையின் அனுமதி யுடன் உயர் அளவுத் தொகையை முடிவு செய்தாலொழிய, 1948ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65ஆவது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் படியும் 22-9-82ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் தனி வெளியீட்டின் IIஆவது பாகத்தின் 1ஆம் பிரிவின் 1ஆம் பக்கத் தில் வெளியாகிய பொதுப்பணித் துறை 22-9-1982 நாளிட்ட எண் II (1)/PWE/254(II)/82ஆம் அறிவிப்பின்படியும் தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு மேற்படி பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் ஒரு சமயத்தில் கடனாகக் கிடைக்கக்கூடிய ரூபாய் அறுநூறு கோடியாகும்.

அரசினர் தனித் தீர்மானங்கள்

(பேரவைத் தலைவர்)

தமிழ்நாடு மின்சார வாரியம் தனது மூலதனச் செலவுக்குத் தனது நிதிவாயிலிலிருந்தும், வெளிச்சந்தைக் கடன்களிலிருந்தும் தொகை பெறுகிறது. மேலும் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமும் வணிக வங்கிகளிடமும் கிராமப்புற மின் வசதிக் கழகம் மூலமும் கடன் தொகை பெறுகிறது. எஞ்சிய தொகையை மாநில அரசுக் கடன் மூலம் பெறுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் திரட்டிய பல்வேறு கடன்களில் திருப்பிக் கொடுக்கப் படாமல் 1986 பிப்ரவரி திங்கள் இறுதிவரை எஞ்சியுள்ள மொத்த நிலுவைத் தொகை ரூ. 551.14 கோடியாகும். 1986–87-ம் அதற்கு அடுத்து வரும் ஆண்டுகளிலும் திரட்டக் கருதியுள்ள வெளிச்சந்தைக் கடன்கள் மற்றக் கடன்கள் ஆகியவற்றின் அளவைக் கொண்டு பார்க்கும் பொழுது தற்பொழுதுள்ள அறுநூறு கோடி ரூபாய் என்கிற மேல் வரம்பு உயர்த்தப்பட வேண்டும். ஆகவே, மாநில அரசு மாநிலச் சட்டமன்ற பேரவையின் இசைவுடன் தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் வாங்கக்கூடிய மேல் வரம்பை அறுநூறு கோடியிலிருந்து எண்ணூறு கோடி ரூபாயாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளது.

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

7. தகவல் கோரல்.

கார்த்திகேயன் குழு அறிக்கை வெளியிடுதல் குறித்து.

திரு. என். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழக அரசினால், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர் பிரச்சினை குறித்து ஒரு நபர் குழு என்று சொல்லி திரு. கார்த்திகேயன் அவர்களை நியமித்து, அதனுடைய விசாரணை முடியப்பெற்று, அரசுக்கு அறிக்கை வந்திருப்பதாக அறிகிறேன். அது குறித்து சட்டமன்றக் கூட்டம் முடியும் நேரத்தில் அவை முன்னவர் நாவலர் அவர்கள் விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நபர் குழுவினுடைய அறிக்கையை இன்று பகல் 12 மணி அளவுக்கு திரு. கார்த்திகேயன் அவர்கள் என்னிடத்திலே தந்து இருக்கிறார்கள். அரசு அது பற்றி ஆராயும். ஆராய்ந்ததற்குப் பிறகு அமைச்சரவைக்கு இந்த அரசினுடைய பரிந்துரைகள் செல்லும். பிறகு அமைச்சரவை முடிவு செய்ததற்குப் பிறகு அது வெளியிடப்படும். அதுவரையில் அந்த ஒரு நபர் குழுவினுடைய சிபாரிசுகள் என்ன என்று வெளியிடப்படமாட்டாது.

திரு. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 22 சட்ட மன்ற



அறிவிப்புகள்

[திரு. கு. தமிழரசன்]

உறுப்பினர்கள் கூட கையெழுத்திட்டு, உங்களிடத்தில் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறோம். நடந்து முடிந்திருக்கிற உள்ளாட்சித் தேர்தல்கள் செல்லுமா, செல்லாதா. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கெனவே சொன்னேன். பெரிய சட்டப்பிரச்சினை இருக்கிறது (குறுக்கீடு). அது வேண்டாம். சபைக் கூட்டம் முடியும் நேரத்தில், மகிழ்ச்சியோடு அமருங்கள் (குறுக்கீடு).

(5) அறிவிப்புகள்.—தொடர்ச்சி.

(ஆ) கூட்டத் தொடரில் நடைபெற்ற அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேதகு ஆளுநர் அவர்கள் 8–1–1986ஆம் நாளன்று இரு அவை உறுப்பினர்களும் கலந்து கொண்ட கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

| | |
|---|---|
| 8ஆவது சட்ட மன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டம் தொடங்கியதிலிருந்து அதாவது 8–1–1986 முதல் இன்றுவரை பேரவை கூடிய மொத்த நாட்கள் .. .. .. | 53 நாட்கள் |
| மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் .. | 8 நாட்கள். |
| அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் .. .. .. .. | [illegible] மணி 10 நிமிடங்கள். |
| ஆளுநர் உரை மீது விவாதம் நடைபெற்ற நாட்கள் .. .. .. | 6 நாட்கள். |
| பங்குகொண்ட உறுப்பினர்கள் | 55 |

(பிற்பகல் 1-30)

நிதி அலுவல்கள் :

| | |
|---|---|
| 1986–87ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் பேரவையில் அளிக்கப்பெற்ற நாள் .. | 17–3–1986 |
| வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் .. .. | 8 |
| பங்குகொண்ட உறுப்பினர்கள் .. .. | 72 |

## அறிவிப்புகள்

[பேரவைத் தலைவர்]

மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள். 25

கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள். 2,193

அவையின் முன் வைக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் 165

விவாதித்து நிறைவேற்றப் பெற்ற மானியக் கோரிக்கைகள் .. .. .. .. 58

உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரை 325

**வினாக்கள்-விடைகள் :**

குறுகிய கால வினாக்கள் .. .. 13

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 786

உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 950

துணை வினாக்கள் .. .. 2,324

இக்கூட்டத் தொடரில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் துணை வினாக்கள் கேட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சைதை சா. துரைசாமி அவர்கள் 109 துணை வினாக்கள் கேட்டிருக்கிறார்கள். திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் 73 துணை வினாக்கள் கேட்டிருக்கிறார்கள்.

**கவன ஈர்ப்புகள் :**

அனுமதிக்கப் பெற்றவை. 247 (162 பொருள் பற்றி)

அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை 214 (142 பொருள் பற்றி)

**ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் :**

பேரவையின் அனுமதி மறுக்கப்பெற்றவை. 25 (5 பொருள் பற்றி)



## அறிவிப்புகள்

[பேரவைத் தலைவர்]

**உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் :**

அறிவிப்பு வரப் பெற்றவை .. .. 7

இசைவு மறுக்கப் பெற்றவை .. .. 7

உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றவை. இல்லை.

உரிமைக் குழுவின் பரிந்துரையையொட்டி எடுக்கப்பெற்ற நடவடிக்கை .. .. .. இல்லை.

**அரசினர் சட்ட முன்வடிவுகள் :**

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பெற்றவை. 59

நிறைவேற்றப்பெற்றவை .. 59

நிலுவையில் உள்ளவை .. .. ..

**தீர்மானங்கள் :**

(அ) அரசினர் தனித் தீர்மானங்கள் வரப் பெற்றவை .. .. .. 4

நிறைவேற்றப்பெற்றவை .. .. 4

நிலுவையில் உள்ளவை .. .. ..

(ஆ) தனியார் தீர்மானங்கள் வரப் பெற்றவை .. 25

அனுமதிக்கப்பெற்றவை .. .. 21

## அறிவிப்புகள்

[பேரவைத் தலைவர்]

சட்டமன்றப் பேரவை குழுக்கள் :

| | 26–7–1985 முதல் 15–5–1986 வரை (1985–86) கூடிய நாட்கள். | 26–7–1985 முதல் 15–5–1986 வரை (1985–86) அளித்துள்ள அறிக்கைகள். |
|---|---|---|
| மதிப்பீட்டுக் குழு .. | 41 | 4 |
| பொதுக் கணக்குக் குழு .. | 42 | 24 |
| பொது நிறுவனங்கள் குழு | 42 | 18 |
| உரிமைக் குழு .. | 1 | .. |
| அவைக் குழு .. .. | 4 | .. |
| அரசு உறுதிமொழிக் குழு | 20 | 2 |
| அலுவல் ஆய்வுக் குழு .. | 7 | .. |
| சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 28 | 3 |

காமன்வெல்த் பாராளுமன்றக் குழு (தமிழ்நாடு கிளை) :

கூட்டம் நடைபெற்ற நாட்கள் .. .. .. 5

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் :

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் .. .. .. .. .. 259

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள் .. .. .. .. .. 252

பார்வையாளர்கள் :

மாடத்தில் அனுமதிக்கப்பெற்ற—

ஆண்கள் .. .. .. .. 19,246

பெண்கள் .. .. .. .. 2,132



## அறிவிப்புகள்

[பேரவைத் தலைவர்]

தலைவர் மாடத்தில் அனுமதிக்கப்பெற்றவர்கள் .. .. .. .. .. 15,870

பேரவை நிகழ்ச்சிகளைக் காண வருகை தந்தோர் மொத்த எண்ணிக்கை .. .. 37,248

நூலகம் :

சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர். 1,648

வழங்கப்பெற்ற நூல்கள் .. .. 1,155

நடவடிக்கைக் குறிப்புகள் :

தட்டச்சு செய்யப்பெற்ற மொத்த பக்கங்கள் .. .. .. .. 11,715

இந்தக் கூட்டத் தொடரில், அரசின் சார்பாக 'குதிரைப் பந்தய ஒழிப்பு' பற்றிய அறிவிப்பும், மற்றும் 'மேலவை நீக்கம்' பற்றிய முக்கிய அரசினர் தனித் தீர்மானமும் குறிப்பிடத் தக்கவை.

மூன்று புதிய குழுக்களை இவ்வாண்டு முதல் நியமித்துள்ளோம், அவையாவன—

(1) மனுக்கள் குழு.

(2) சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு.

(3) நூலகக் குழு.

பேரவை நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் நடத்திச் செல்ல ஒத்துழைப்புத் தந்த மாண்புமிகு முதல் அமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவைமுன்னவர் அவர்களுக்குச் சிறப்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

## அறிவிப்புகள்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையை நடத்திச் செல்வதில் உதவியாக இருந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கும், மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் மா. சின்னராசு, செ. செம்மலை, சைதை சா. துரைசாமி, டி. ஆர். வேங்கடரமணன், பொன். முத்துராமலிங்கம் ஆகியோருக்கும் என் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எல்லா கட்சித் தலைவர்களுக்கும் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவை நிகழ்ச்சிகள் சீரிய முறையில் நடப்பதற்கு உதவியாக இருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் என்னுடைய இதயங்கனிந்த நன்றியோடு பாராட்டுதலையும் வாழ்த்தையும் சேர்த்து தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்துக் கட்சிகளின் கொறடாக்களுக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுத் துறைகள் மற்றும் பத்திரிகைகள், வானொலி, தொலைகாட்சி ஆகியவற்றின் செய்தியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

பேரவைச் செயலகத்தின் ஆணையர் மற்றும் செயலர் திரு. சி. கு. இராமசாமி அவர்கள் என்னுடன் மிகவும் ஒத்துழைத்தார். அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவை அலுவலர்கள் அனைவருக்கும், சட்டப் பேரவை பாதுகாப்பு அலுவலர் அனைவருக்கும், பேரவை மூலம் அவர்களின் சீரிய பணிகளுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவையை ஒத்தி வைத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெற வேண்டும்.''



## அறிவிப்புகள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பிற்பகல் 1-56 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப்பெற்றது.

### 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

116. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 21—11—1985 ஆம் நாளிட்ட 1061 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 27/1975) 58 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

### (ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

187. ' எய்ட்ஸ் ' பற்றிய வெள்ளை அறிக்கை (ஆங்கிலம்).

188. கீழ்க்காணப்பெறும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 27–8–1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப்பெறுகிறது)

31-3-1985-ல் உள்ளபடி .

1. திரு. எம். சிவகுமார்
2. திருமதி தா. இராசாம்பாள்
3. திரு. அ. க. ஆறுமுகம்
4. ,, மு. சின்ன குழந்தை
5. ,, துரை அன்பரசன் என்கிற இராமலிங்கம்
6. ,, எ. எஸ். ஏ. ஆறுமுகம்

## அறிவிப்புகள்

[பேரவைத் தலைவர்]

7. திரு. செ. மாதவன்
8. ,, மா. கதிர்வேலு
9. ,, கோ. வீரய்யன்
10. ,, எல்ல. இராசமாணிக்கம்
11. ,, கு. சுப்பராயன்
12. ,, கி. எத்திராசன்

31-3-1986-ல் உள்ளபடி.

1. திரு. எஸ். என். இராமசாமி
2. திரு. அ. க. ஆறுமுகம்
3. மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்
4. திரு டி. தீர்த்தகிரி கவுண்டர்
5. திரு. ஆர். கோவிந்தசாமி.

136494
Y211,51 N86
N86.28-3